# கைராட்டை

## அதன் சரித்திரமும் புத்துயிரும்

---

ஆசிரியர்கள் :

ஸ்ரீமான் புன்தாம் பேக்கர்,

ஸ்ரீமான் வரதாச்சாரியார்.

ரா. கிருஷ்ணமூர்த்தி

மொழிபெயர்த்தது

---

அகில இந்திய சர்க்கா சங்கம்

தமிழ் நாட்டுக் காரியாலயம்

—0

T004520

Sarasvati Mahal Library. Thanjavur

# நூன்முகம்

சென்ற ஆண்டின் ஆரம்பத்தில் காங்கிரஸ் மகாசபையின் பொக்கிஷதாரரில் ஒருவரான ஸ்ரீமான் ரேவாசங்கர ஜகஜ்ஜீவன் அவர்கள், இராட்டைத் தொழிலைப்பற்றிச் சிறந்த கட்டுரை எழுதுவோருக்கு ஆயிரம் ரூபாய் பரிசளிப்பதாகத் தெரிவித்தது பலருக்கு நினைவிலிருக்கலாம். பரிசுக்காக எழுதப்படும் கட்டுரைகளைச் சீர்தூக்கிச் சிறந்தது எதுவென்று முடிவுசெய்ய ஸ்ரீமான்கள் அம்பாலால் ஸாராபாய், சங்கரலால் பாங்கர், மகனலால் காந்தி ஆகிய இவர்களும் நானும் நியமிக்கப்பட்டோம். மொத்தம் அறுபத்தெட்டு கட்டுரைகள் கிடைத்தன. பெரிதும் ஆலோசனை செய்தபின்னர், தற்போது காசி ஹிந்து சர்வகலாசாலையில் ஆசிரியராகவிருக்கும் ஸ்ரீமான் எஸ். வி. புண்தாம்பேக்கருக்கும், ஸ்ரீமான் என். எஸ். வரதாச்சாரியாருக்கும் மேற்படி பரிசைப் பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்று நாங்கள் தீர்மானித்தோம். பரிசு பெற்ற இருவரையும் தங்கள் கட்டுரைகளின் முக்கியாம்சங்களைச் சேர்த்து ஒரே கட்டுரையாக்கித் தரும்படி கேட்டுக்கொண்டோம். அவ்விருவருடைய முயற்சியின் பயனே இப்புத்தகமாகும். ஆசிரியர்கள் முதலில் தனித் தனியே எழுதிய கட்டுரைகளைவிட இது எவ்வளவு தூரம் மேம்பட்டதென்று கூறுதல் எளிதன்று. கதர் இயக்கத்தில் ஈடுபட்டு வேலைசெய்யும் தொண்டர்கள் தங்கள் கொள்கையைப் பலப்படுத்திக்கொள்ள இந்நூலில் வேண்டிய ஆதாரங்கள் காண்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்தப் பெரிய இயக்கத்தில் அவ்வளவு நம்பிக்கை இல்லாதவர்களும் இப்புத்தகத்தைப் படிப்பதினால் தங்கள் ஐயங்கள் நீங்கப்பெறவில்லையெனின் நான் பெரிதும் ஆச்சரியமே அடைவேன்.

இந்நூலாசிரியர்கள் சிறப்பாகப் பின்வரும் வினாக்களைக் குறித்து ஆராய்ந்து விடைகூற முயன்றிருக்கிறார்கள் :—

இந்தியாவில் கோடிக்கணக்கான மக்களுக்கு ஒழிந்த வேளையில் செய்யக்கூடிய துணைத்தொழில் ஒன்று அவசியமாயிருக்கிறதா? அம்மக்களில் பெரும்பான்மையோர் அத்தகைய துணைத்தொழில் ஒன்று இல்லாத காரணத்தினால் வருஷத்தில் குறைந்தது நான்கு மாதகாலம் வேலையில்லாமல் உட்கார்ந்து காலங் கழிப்பது உண்மையா?

கோடிக்கணக்கான ஜனங்களுக்குப் பயன்படக்கூடிய அத்தகைய துணைத்தொழில் இராட்டையில் நூற்றல் ஒன்றுதானா? அப்படியானால் ஜனங்கள் அதை எளிதில் கைக்கொள்ள முடியுமா?

பரதேசித் துணி, இந்திய ஆலைத் துணி இவற்றின் போட்டிக்கு ஈடு கொடுத்து, கைநூலால் நெய்த கதர்த் துணியை ஜனங்களிடையே விற்பது சாத்தியமாகுமா?

இம்முக்கியமான கேள்விகள் எல்லாவற்றிற்கும் இந்நூலாசிரியர்கள் "ஆம்" என்னும் விடை தந்திருப்பதை வாசகர்கள் காணலாம். இந்திய ஏழை மக்களின் முன்னேற்றத்தில் கவலையுள்ள ஒவ்வொருவரும் இவ்வாசிரியர்கள் கூறுவதைக் கவனமாகப் படிக்கவும், அவர்களுடைய முடிவுகளைத் தாங்கள் ஏற்றுக்கொண்டால் கதர் இயக்கத்தை முழு மனதுடன் ஆதரிக்கவும் கடமைப்பட்டவ ராவர். அவ்வாறின்றி இப்புத்தகத்தில் கூறப்பட்டிருக்கும் ஆதாரங்களை அவர்களால் மறுக்க முடியுமாயின் அப்போது கதர் இயக்கத்தை வீண் முயற்சி யென்று கண்டிக்க அவர்கள் முன் வருவார்களாக.

சாபர்மதி,<br>
16-11-1926.

மோகனதாஸ் கரம்சந்த் காந்தி.

---

# கைராட்டை.

---

## முதல் அத்தியாயம்

## பழைய சரித்திரம்

பாரத தேசத்தின் கிராமங்களில் வசிக்கும் கோடிக் கணக்கான மக்களின் வாழ்க்கை பல நூற்றாண்டு காலமாக எவ்வித மாறுதலுமின்றி நடந்து வருவதாய் அடிக்கடி சொல்லப்படுவதைக் கேட்கிறோம். மேலெ ழுந்தவாரியாக நோக்குவோர் இவ்வாறு கூறுகிறாரேனும் உண்மை இதற்கு நேர் மாறானதாகக் காணப்படுகிறது. எவ்வாறெனில், ஒரு காலத்தில் நமது கிராமங்களில் தொழில் திறமை மிகுதியும் வாய்ந்த ஜனங்கள் பலவகைக் கைத்தொழில்களைச் செய்து எவ்விதக் குறைவுமின்றி மனத் திருப்தியுடன் வாழ்ந்து வந்தார்கள். இவ்வாறு வளம் நிறைந்திருந்த கிராமங்களின் தற்போதைய நிலைமை என்ன? கொடிய வறுமையும், கடன் சுமையும் நாளுக்குநாள் அதிகமாகி ஜனங்களை அமுத்தி வருகின்றன. வருஷத்தில் சில மாத காலம் கண்ணியமான தொழில் எதுவும் இன்மையால் அவர்கள் சோம்பிக் காலங் கழிக்க வேண்டி யிருக்கிறது. இதன் பயனாக இன்னும் எத்தனையோ வகைத் துன்பங்களுக்கு ஆளாகித் தலை தூக்க முடியாது தவிக்கும் ஏழை மக்களையே இந்தியாவின் கிராமங்களில் தற்போது நாம் காண்கிறோம். ஏதோ ஒரு பயங்கரமான, கொடிய சாபக்கேட்டினால் நாளடைவில் இப்பெரிய மாறுதல் நிகழ்ந்து விட்டதுபோல் தோன்றுகிறது. வெளிப்படையாகப் பார்க்குங்கால் இந் நாட்டின் கிராமங்களில் இன்றும் அமைதி நிலவுவதுபோல் காணப்படுமாயினும், சிறிது ஆழ்ந்து நோக்கினால், பண்டை நாளில் தன் தேவைகளையெல்லாம் தானே பூர்த்தி செய்துகொண்டு பிறர் கை நோக்காமல் வாழ்ந்த அதி ஆச்சரியமான கிராம சமுதாயம் இப்போதில்லை யென்பதை நன்கறியலாம். முற்காலத்தில் கிராமங்களின் செல்வப் பெருக்குக்குக் காரணமாயிருந்த கைத்தொழில்களும், வர்த்தகமும் நசித்துவிட்டபடியால், கிராமவாசிகள் தங்கள் பரம்பரைச் செல்வத்தை இழந்து பிறரை அண்டிப் பிழைப்பு நடத்துவோ ராகிவிட்டனர். தற்போது அவர்கள் பெரும்பாலும் மூலப்பொருள்களை விளைவித்து ஏற்றுமதி செய்வோரா யிருந்து வருகின்றனர். முற்காலத்தில் அவர்கள் நிலைமை இவ்வாறில்லை. அப்போது அவர்களுடைய வீடு ஒவ்வொன்றும் ஒரு கைத்தொழிற்

சாலையாக விருந்தது. பிரிட்டிஷார் வருகைக்குப் பின்னர் பல ஆண்டு காலம் வரையில் கூட, இந்திய கிராமங்களில் கைத்தொழில்கள் பல செழித்தோங்கி யிருந்தன. இவற்றுள் தலைமையானவை கைராட்டையில் நூற்றலும், கைத் தறி நெசவுமே யாகும். இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு ஒவ்வொரு குடும்பத்திலும் ஸ்திரீகள், புருஷர்கள், குழந்தைகள் எல்லாரும் இத்தொழில்களை சர்வ சாதாரணமாகச் செய்து வந்தனர். அதெல்லாம் இப்போது மறந்துபோன பழங் கதையாகி ஜனங்களுக்கு அதை நினைவூட்டும் கடமை நமக்கு ஏற்பட்டிருக்கிறது. அழிந்துபோன அப் புராதனத் தொழில்களுக்கு நாம் புத்துயிர் தரவேண்டியவர்களா யிருக்கிறோம். அதிசயமான திறமையோடு நூலிழைத்த நமது பெண்மணிகளின் விரல்கள் இப்போது பஞ்சுத் திரியைப் பிடிக்கவும் தடுமாற்ற முறுகின்றன. அத்திறமையை அவர்கள் மீண்டும் பெறுவதற்கு உதவி புரிந்து, பண்டை நாளில்போல் இன்றும் இந்நாட்டில் இராட்டினத்தின் நல்லோசை எழும்பொருட்டு வேலை செய்யும் கடமையை மேற்கொண்டுள்ளோம்.

## பண்டைச் செல்வம்

**கை** ராட்டை கை நெசவுத் தொழில்களின் சரித்திரத்தை அடியிலிருந்து கூறவேண்டுமானால் மிகப் பண்டைக் காலத்துக்கு நாம் போகவேண்டும். ஆதிகாலத்திலிருந்து இன்றுவரை அதைத் தொடர்புள்ள வரலாறாகக் கூறுவது எளிதன்று. கைராட்டையும், கைத்தறியும் வேதங்களுடன் கூடப் பிறந்தவை. ஹிந்துக்களின் அறிவு என்னும் மரத்தில் முதன்முதலாகத் தோன்றிய அற்புதக் கனிகளெனத் தக்கவர் வேதாந்தியும் நெசவுகாரனுமேயாவர். வேதாந்தியின் பிரம சூத்திரங்களைக்கொண்டு தத்துவ சாஸ்திரம் நிர்மாணிக்கப்பட்டது. நெசவு காரனின் பருத்தி சூத்திரங்களைக்கொண்டு இணையற்ற நயம்பொருந்திய வஸ்திரங்கள் நெய்யப்பட்டன. எகிப்தியர் பிரமாண்டமான கோபுரங்களைக் கட்டுவதற்கு முன்னும், பாபிலோனியாவின் மன்னன் ஹமுராபி என்பான் அவனது பெயர்பெற்ற சட்ட முறையை வகுப்பதற்கு முன்னும் பாரதநாடு வேதாந்தியையும் நெசவுகாரனையும் பெற்றுப் புகழோங்கிநின்றது. வேதாந்தி "தத்வவாய" என்றும், நெசவுகாரன் "தந்துவாய" என்றும் பெயர் பெற்றனர். வேதாந்தி மனிதனுடைய ஆத்மாவுக்கு ஒளியாடை நெய்தான்; நெசவுகாரன் மனிதனுடைய உடலுக்குப் பருத்தியாடை நெய்தான். ஒருவன் உண்மை ஞானியாய் விளங்கினான்; மற்றவன் உண்மைக் கலைஞனாய்த் திகழ்ந்தான். பாரத நாட்டின் மகோந்நத தசைக்கும், அதன் அழிவற்ற நாகரிகத்துக்கும் வேதாந்தியும், நெசவுகாரனுமே உண்மையான பிரதிநிதிகளாவர். புராதன இந்

தியாவின் கைத்தொழில்களும், வர்த்தகமும் நெசவுகாரனின் அரிய கைத்திறனை அடிப்படையாகக்கொண்டு செழித்தோங்கின. இவ்வளவு பெருமை வாய்ந்த தொழிலாளியின் வரலாற்றை இங்கு விரிவாக ஆராயத் தொடங்குகின்றோம்.

## வேதத்தில் நேசவு

நெசவுத்தொழில் நூற்றல் தொழிலுக்கும் முற்பட்டதா யிருந்திருத்தல் கூடும். முதன்முதலில் பருத்தித் துணிதான் நெய்யப்பட்டிருக்க வேண்டுமென்றும் சொல்வதற்கில்லை. மனிதன் நாகரிகமடையத் தொடங்கிய காலத்திலேயே நெசவுத்தொழிலையும் கண்டுபிடித்துவிட்டான். ஆனால் அப்போதே அதை அபிவிருத்திக்கு இடமின்றிப் பரிபூரண நிலையில் அமைத்துவிட்டது குறிப்பிடத்தக்கதாகும். மனிதன் நெசவு செய்ய ஆரம்பித்து ஆயிரமாயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆயினும் நூலைப் பாவு போடுதல், பின்னர் ஊடை எறிதல், பாவில் ஒன்றுவிட்டு ஓர் இழையை மேலுங் கீழும் இழுத்தல் ஆகிய தொழில் முறைகளில் இன்றுவரை புதியது எதுவும் செய்யப்படவில்லை. ரிக்வேதத்தில் "பாவு அமைத்து ஊடை எறிந்து நெசவு செய்த" பெரியோர்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ் வரிய கலை முனிவர்களின் உள்ளத்தில் நன்கு பதிந்திருந்தமையால், அவர்கள் சிருஷ்டி இரகசியத்தை விளக்க நெசவுத் தொழிலையே உவமையாகக் கொண்டார்கள். ரிக்வேதத்தில் நெசவுத் தொழிலைப்பற்றிய குறிப்புகள் ஏராளமா யிருக்கின்றன. "நெசவு செய்யும் இரு மாதரைப்போல் இரவும் பகலும் சேர்ந்து யக்ஞமென்னும் ஆடையை நெய்து வருகின்றன" என்று ஓரிடத்தில் காணப்படுகிறது. பிரஜாபதியானவர் ஜகத் சிருஷ்டியின்பொருட்டுச் செய்த யக்ஞம் நூற்றல், நெசவு உவமைகளைக்கொண்டே வர்ணிக்கப்படுகிறது. வேதத்தில் நெசவுத்தொழில் குடும்பக் கடமைகளில் ஒன்ருகச் சொல்லப்பட்டிருக்கிறது. இரவு நேரத்தில் நூல் இழைகளை எலிகள் துண்டித்துவிடுதல் அக்காலத்தில் மிகவும் சாதாரண அநுபவமா யிருந்திருக்க வேண்டும். "நெசவுகாரனின் நூல் இழைகளை எலிகள் தின்பதுபோல் என்னைக் கவலைகள் தின்றுகொண்டிருக்கின்றன" என்று ரிக்வேதத்தில் ஒரு வாக்கியத்தைக் காண்கிறோம். இவ்வாறு நெசவு சர்வ சாதாரணமான வீட்டுத் தொழிலாயிருப்பினும் அதற்குக் கைத்திறமை நிரம்பவேண்டும் என்பதை அக்காலத்தவர்கள் நன்குணர்ந் திருந்தார்கள். "கைத்திறமையுள்ளார் ஆடைகளை நெய்வதுபோல் நீங்கள் கவிதை புனைகிறீர்கள்" என்றும், "ஒளி பொருந்திய முனிவர்கள் ஆகாய வெளியிலும், ஆழ்கடலின் அடியிலுங்கூட, என்றும் புத்தப் புதிதான வஸ்திரத்தை நெய்கிறார்கள்" என்றும் கூறும் வாக்கியங்களில் மேற் சொன்ன உண்மை நன்கு வெளியாகின்றது.

## நூற்றல் உவமை

**வே**தம், உபநிடதம் முதலிய புராதன நூல்கள் எல்லாவற்றிலும் நூல் நூற்றல் அடிக்கடி உவமையணியாக உபயோகிக்கப்பட்டிருக்கிறது. நமது மூதாதைகளின் வாழ்க்கையில் நூல் நூற்றல் எவ்வளவு முக்கியமான இடம் பெற்றிருந்ததென்பதைப் பின்வரும் உதாரணங்கள் நன்கு விளக்கும். நூற்றல் சர்வ சாதாரணமான தொழிலாயிருந்தாலும் வைதிக காரியமாகவே கருதப்பட்டு வந்தது. தேவ தேவரான மகாவிஷ்ணு "ஸுதந்து" என்றும் "தந்துவர்த்தன்" என்றும் அழைக்கப்படுகிறார். அக்கினி பகவானை ஸ்தோத்திரம் செய்யும் ரிஷி "பழமையான நூல் இழையை நூற்கும்"படி வேண்டுகிறார். உயிர்க்குலம் வாழையடி வாழையாகத் தழைப்பதற்கு, நன்கு நூற்கப்படும் நூலிழை இடையறாது நீளுதல் உவமையாகக் கூறப்பட்டிருக்கிறது. "இடையறாமல் நூற்கப்படும் நூலிழையேபோல் தந்தைமார்கள் இப்பூமியில் தங்கள் சந்ததிகளை விட்டுச் சென்றார்கள்." (**तन्तु माततं**-ரிக்வேதம்.) மற்றொரு பாசுரம் மூன்றுமுறை முறுக்கேற்றப்பட்ட நூலிழையைக் குறிப்பிடுகின்றது. "சூரியனுடைய கிரணங்களைத் தன் ஆடையாகத் தரித்தவனும், மும்முறைமுறுக்கேற்றி நூல் நூற்கத் தெரிந்தவனும் (**तन्तुं तन्वानः त्रिवृतं**) ஆகிய அவன் காலை, மத்தியான, மாலை யக்ஞங்களில் தன் கடமையை ஆற்றுகிறான்." (ரிக்வேதம்.) விவாகத்தின் முதல் தினத்தில் மணமகன் மணமகளால் நெய்யப்பட்ட ஆடையை யணிந்தான் என்று அதர்வ வேதத்தில் சொல்லப்படுகிறது. சாதாரணமாக ஜனங்கள் எல்லாரும் நூற்றல், நெசவுத் தொழில்கள் செய்துவந்தார்கள் என்பதற்கு இது சான்றாகும். இவ்வழக்கம் ஒரிஸ்ஸாவிலுள்ள ஸம்பல்பூர் ஜில்லாவிலும், அஸ்ஸாமில் சில பகுதிகளிலும் இன்றளவும் அனுஷ்டானத்தில் இருந்துவருகிறது. இவ்விடங்களில் மணமகள் கணவன் வீட்டுக்கு வந்த முதல் ஆண்டில் அவளுக்கு நூல் நூற்றலைத் தவிர வேறு வேலை கொடுக்கப்படுவதில்லை. மேற்படி பண்டை வழக்கத்தின் மற்றும் ஓர் அம்சத்தை இக்கால மணச் சடங்குகளில் காணலாம். நுகத்தடி, உலக்கை, மத்து, கதிர் ஆகிய நான்கு பொருள்களுடன் மணமகன் வரவேற்கப்படுவதின் கருத்து, இப்பொருள்களே இல்வாழ்க்கையில் சந்தோஷத்துக்கும் திருப்திக்கும் இன்றியமையாதவை என்பதை அவனுக்கு அறிவுறுத்துவதேயாகும். இப்போது போலவே வேதகாலத்திலும் வீட்டு உபயோகத்துக்கு நூற்றல், வாழ்வுக்கு அத்தியாவசியமான ஒரு தேவையைப் பூர்த்தி செய்வதா யிருந்தது. ஆதலின் பாலர் முதல் விருத்தர் வரையில் அனைவரும் நூல் நூற்று வந்தார்கள். பிராமணர்கள், இக்காலத்திலும் செய்வதுபோல், தங்களுடைய பூணூலுக்குத் தாங்களே நூல் நூற்றுக்கொண்டார்கள். சமூகத்தில் மிக

உயர்ந்த அந்தஸ்து வகித்தவர்கள்கூட நூல் நூற்கும் கடமையிலிருந்து விலக்குப் பெறவில்லை.

## வேத காலத்து உடைகள்

**வே**த காலத்திலும் இதிகாச காலத்திலும் வாழ்ந்திருந்த ஸ்திரீ புருஷர்கள் ஆடையணிதலை ஓர் அருங்கலையாக அபிவிருத்தி செய்திருந்தார்கள். ஆண்மக்கள் மூவகை ஆடை அணிந்திருந்தனர். 'நீவி' என்ற அரையாடையும், 'பரிதான' அல்லது 'அதிவாஸஸ்' என்னும் மேலாடையும், 'வஸ்திர' என்னும் மூன்றும் ஆடையும் அவர்கள் தரித்திருந்தார்கள். 'உஷ்ணீஷ' என்னும் தலைப்பாகையும் அணியப்பட்டு வந்தது. (அதர்வ வேதம்.) தைத்திரீய பிராஹ்மணத்தில் சுவர்ணத்தினாலான ஆடையைப் பற்றி ஒரு குறிப்பு இருக்கிறது. தங்க வேலைப்பாடமைந்த ஆடைகளை மருத்துக்கள் அணிந்திருந்ததாக ரிக்வேதம் கூறுகிறது. மற்றொரு பாசுரத்தில் "வானத்தைப்போல் பார்ப்பதற்கு அழகான ஆடைகளை அணிந்தவர்" என்ற வாக்கியம் காணப்படுகிறது. நிகரற்ற அழகும், மென்மையும் வாய்ந்த ஆடைகள் அக்காலத்தில் உண்டென்று இவற்றினாலெல்லாம் நன்கறிகின்றோம். செல்வர்கள் அரையில் அணிந்த மெல்லிய ஆடைகள் "ப்ராவார" என்றும், மேலாடைகள் "உத்தரீய" என்றும், தலையணி "உஷ்ணீஷ" என்றும் அழைக்கப்பட்டன. ஸ்திரீகள் இருவகை ஆடைகளை அணிந்தார்கள். அவர்கள் உடம்பில் அணிந்ததற்கு "உத்தரீய" என்றும், தலையைச் சுற்றித் தரித்ததற்கு "அந்தரீய" என்றும் பெயர் வழங்கின. இதிகாச காலத்தில் பட்டு வஸ்திரங்களும், கம்பளித் துணிகளும், பருத்தியாடைகளும் ஏராளமாக அணியப்பட்டன என்பது நன்கு விளங்குகிறது. கம்பளி ஆடைகள், வெண்சாமரங்கள், விலையுயர்ந்த இரத்தினங்கள், பட்டுகள், பலவர்ண ஆடைகள், ஆபரணங்கள், உயர்தர வாகனங்கள் முதலியவை சீதா தேவியிடம் இருந்தன என்று வால்மீக ராமாயணத்தில் சொல்லப்படுகிறது. (பால காண்டம், 1,743.) யுதிஷ்டிரருக்கு இந்தியாவின் பற்பல பகுதிகளிலிருந்தும் வந்த காணிக்கைப் பொருள்களில், ஆட்டுரோமத்தினால் நெய்து தங்கத்தினால் பூவேலை செய்த (இரத்தின) கம்பளங்களும், கூர்ஜர நாட்டு அபிரேயர் அளித்த பலவகை ஜமக்காளங்களும், பூச்சிகள் நூற்ற நூலிலான (பட்டுத்) துணிகளும், சணல் முதலிய நாரினால் நெய்த ஆடைகளும், மைசூரிலும் கர்நாடகத்திலும் உற்பத்தியான மெல்லிய சல்லாக்களும் இருந்தனவென்று மகாபாரதம் கூறுகிறது. (சபாபர்வம், 51, 52.) பாண்டியர்களும், சோழர்களும் தங்கக்கரைகள் போட்ட மெல்லிய வஸ்திரங்கள் கொணர்ந்து தந்ததாகவும் அறிகின்றோம். அந்தப் பழைய காலத்திலேயே இந்நாட்டில் நெசவுத் தொழில் மகோந்நத நிலை எய்தியிருந்ததென்பதற்கு இவையே போதிய சான்றுகளாகும்.

## தொழில் அமைப்பு

நூற்றலும் நெசவும் குடும்பத்தொழில்களாக நாடெங்கும் வேரூன்றி யிருந்தன. அவை முக்கியமாக இல்லாளின் கடமைகளாகக் கருதப்பட்டன. இப்போதுங் கூட அஸ்ஸாமில் சில பகுதிகளில் அவை அவ்வாறு கருதப்படுகின்றன. நூற்றுக்கணக்கான வருஷங்களாய் அனுஷ்டிக்கப்பட்டு வந்த வழக்கத்தையே வாத்ஸாயனர் விதியாகச் செய்தார். "மனையாள் செய்யவேண்டிய முக்கிய வீட்டுக்காரியங்களில் நூற்றலும் நெசவும் அதி அவசியமானவை" என்று அவர் கூறியுள்ளார். (காமசூத்திரம்-பாரியாதிகரணம்.) நெசவுத் தொழில் கிரஹ கிருத்தியங்களில் ஒன்றாயிருந்தபடியினால், நெசவுக்கென்று தனி வகுப்பு ஒன்று அப்போதில்லையென்பதாக முடிவு செய்து விடக்கூடாது. கிராம சமுதாய வாழ்வு ஏற்பட்ட காலத்திலிருந்து நெசவுத் தொழிலையே ஜீவனோபாயமாகக் கொண்ட ஒரு தனி வகுப்பார் இருந்தனர் என்று கருத ஆதாரங்கள் இருக்கின்றன. பிற்பட்ட சம்ஹிதைகள், பிராஹ்மணங்கள் இவற்றில் நெசவுத் தொழிலாளரும், சாயத் தொழிலாளரும் சிறந்த அமைப்பும் கட்டுப்பாடும் பெற்றிருந்தனர் எனக் காண்கிறது. தனி மனிதர்கள் கைத்தொழில்களும், வியாபாரமும் செய்து வந்ததோடல்லாமல், தொழிற் சங்கங்களும், வியாபாரச் சங்கங்களும் ஏற்பட்டுச் செழித்தோங்கி யிருந்தன. இச்சங்கங்களின் தலைவர்கள் அரசர்களின் நண்பர்களாயும், அமைச்சர்களாயும் இருந்து வந்தனர். தென்னிந்தியாவிலிருந்த நெசவுச் சங்கங்கள் சில சமயம் 'பாங்கி'கள் போல் உபயோகிக்கப்பட்டு வந்தன. ஜனங்கள் பந்தோபஸ்துக்காகத் தங்களிடமுள்ள பணத்தை அச்சங்கங்களில் கொடுத்து வைத்தார்கள். இதிலிருந்து அவற்றின் பணப்பொறுப்பும், நாணயமும் எவ்வளவென்று அறியலாம். அரசர்களுங்கூடத் தங்கள் பணத்தை நெசவுச் சங்கங்களிடம் கொடுத்துப் பத்திரப்படுத்தியதாக பௌத்த சிலாசாஸனங்கள் சிலவற்றால் தெரியவருகிறது. புத்தர் ஜாதகக் கதைகள் மேற்படி நெசவுச் சங்கங்களைப்பற்றியும், அவற்றின் 'பிரமுக,' 'ஜியேஷ்டக,' 'பாண்டாகாரிக' என்னும் உத்தியோகஸ்தர்களைப்பற்றியும் குறிப்பிடுகின்றன. இச்சங்கங்களின் உள் நிர்வாகத்தைக் குறித்தும், புதிதாய்த் தொழில் கற்றுக்கொள்ள விரும்புவோரைச் சேர்த்துக்கொள்வதைக் குறித்தும் விதி முறைகள் ஏற்பட்டிருந்தன. தொழிலாசிரியன், தொழில் மாணக்கன் இவர்களின் கடமைகள் நாரதஸ்மிருதியில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

## கூலிக்கு நூற்றல்

அக்காலத்தில் நாட்டு மக்களில் பெரும்பான்மையோர் உணவு தானியங்களோ, அணிமணிகளோ விலைக்கு வாங்குவது கிடையாது.

உணவுக்கும் உடைக்கும் வேண்டியவைகளை அவரவர்களே உற்பத்தி செய்துகொண்டார்கள். அரசர்கள், ஜமீன்தார்கள், நகரங்களில் வசித்த பெருஞ்செல்வர்கள் முதலியோர் மட்டுமே கூலிக்கு நூற்பவர்களை அமர்த்திக்கொள்ள வேண்டியிருந்தது. இவர்கள் மெல்லிய நூல் நூற்கும் கலையைப் பெரிதும் ஆதரித்து வந்தார்கள். வெளி நாடுகளுக்கு சல்லாத் துணிகள் ஏற்றுமதி செய்த வியாபாரிகள் சந்தைகளில் நூல் வாங்கி நெய்வித்தார்கள். ஆனால் அரசர்கள் இவ்வாறு செய்வதில்லை. ஒவ்வோர் அரண்மனையிலும் நூற்பதற்கும் நெய்வதற்கும் தொழிலாளர் சம்பளம் கொடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்களின் மேற்பார்வை உத்தியோகஸ்தரான "ஸூத்திராத்தியட்சர்" என்பவரின் கடமைகளைப் பற்றி கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்தில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. அவ்விதிகளில் சில பெரிதும் கவனித்தற்குரியனவாகும். அவற்றிலிருந்து அக்காலத்தில் கூலிக்கு நூல் நூற்றல் எவ்வாறு நடந்ததென்று நன்கறிந்துகொள்ளலாம். "பஞ்சின் தரத்திற்கேற்ப, குறிப்பிட்ட அளவு பஞ்சுக்கு நூல் குறைவாயிருந்தால் கூலியில் பிடித்துவிடவேண்டும்" என்று ஒரு விதி சொல்கிறது. இதிலிருந்து, பஞ்சின் தரத்துக்கேற்ப நூல் இத்துணை நயமாயிருக்க வேண்டுமென்று திட்டம் செய்திருந்தார்களென்றும், குறிப்பிட்ட நிறையுள்ள பஞ்சுக்கு உரிய நீளமுள்ள நூல் நூற்கப்படாவிட்டால் கூலி குறைக்கப்பட்டதென்றும் தெரியவருகின்றன. அரண்மனையில் கூலிக்கு நூற்பவர்கள் விஷயத்தில் கண்டிப்பான சட்ட திட்டங்கள் கையாளப்பட்டன. நூல் நீளத்தைப் பொறுத்துக் கூலி கொடுக்கும் சிறந்த முறையின் காரணமாக, பஞ்சின் தரத்தை யொட்டி எவ்வளவு நயமான நூல் இழைத்தல் சாத்தியமோ அத்தகைய உயர்தர நூல் நூற்கப்பட்டது. நூல் நயத்தின்மீது பெரிதும் கவனம் செலுத்தியதுடன், நூற்ற நூலை வைத்துப் பாதுகாப்பதற்கும் தக்க முறை கையாண்டார்கள். ஐந்து பலம் (கொட்டைப்) பருத்தியிலிருந்தும், ஐந்து பலம் சணலிலிருந்தும், ஒரு பலம் நூல் உற்பத்தி செய்யலாமென்று அர்த்த சாஸ்திரத்தில் ஒரு வாக்கியம் காணப்படுகிறது. இத்தகைய பல அளவு முறைகள் தேசமெங்கும் தெரிந்திருக்கவேண்டும். நெசவுகாரர்களுக்கும் இத்தகைய அளவு முறைகள் ஏற்பட்டிருந்தன. பத்து தோலா நூலுக்கு, கஞ்சிப் பசையுள்பட பதினொரு தோலா துணி கொடாத நெசவுகாரன் தண்டனைக்குரியவன் என்று மனு தருமசாஸ்திரத்தில் கூறி யிருப்பதை அர்த்த சாஸ்திரமும் வலி யுறுத்துகிறது. நெசவுத் தொழிலை மிகவும் எச்சரிக்கையுடன் கவனித்து, கஞ்சிப் பசை அதிகம் போடுதல், இழை நெருக்கமின்றி நெய்தல் முதலிய மோசங்களைக் கண்டுபிடித்துத் தண்டனை விதித்தார்கள். அர்த்த சாஸ்திரத்தைவிடப் பழமையான நூலாகிய சுக்கிர நீதியில் "வஸ்திரப" என்னும் அதிகாரியைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்

கிறது. கம்பளி, பட்டாடை, பருத்தித் துணி முதலியவற்றின் உற்பத்தி இடங்களையும், அவற்றின் மென்மை, உறுதிப்பாடு முதலியவற்றையும் கவனித்து விலை நிர்ணயிப்பது மேற்படி அதிகாரியின் வேலையாகும். ஒவ்வோர் இராஜ்யமும் ஒவ்வொருவகை ஆடைக்குப் பெயர் போனதாயிருந்தது. 'துகூல' என்னும் தூய வெள்ளைத் துணி வங்க நாட்டில் உற்பத்தியாயிற்று. இரத்தினக் கல் போல் வழுவழுப்பான கருநிற ஆடைகளைப் பாண்டிய நாடு அளித்தது. மதுரை, அபரந்தை, கலிங்கம், காசி, வத்ஸம் (கௌஸாம்பி), மாகிஷ்மதி முதலிய இராஜ்யங்கள் பலவகைப் பருத்தி ஆடைகளுக்குப் பிரசித்தி பெற்றிருந்தன.

## ஏழைகளின் கற்பகம்

வேறு தொழில் இல்லாதபோது நூற்றலையே ஜீவனோபாயமாகக் கொள்ளலாமென்று ஜனங்கள் நன்கறிந்திருந்தார்கள். இராட்டினம் ஏழை எளியவர்களின் கற்பகத் தருவாயும், திக்கற்றவர்கள் எல்லாருக்கும் ஓர் அருந்துணையாயும் இருந்தது. புத்தர் ஜாதகக் கதை யொன்றில் இவ்வுண்மை நன்கு வெளியாகின்றது. மரணத்தறுவாயிலிருந்த கணவன் ஒருவன் தன் மனைவி மக்களை நிர்க்கதியாக விட்டுப்போகிறோமே என்று மனம் வருந்தினன். அப்போது அவன் மனைவி "நாதா! தாங்கள் கவலையுற வேண்டாம். பஞ்சிலிருந்து நூல் நூற்கும் வித்தை எனக்குத் தெரியும். அதைக்கொண்டு நமது குழந்தைகளை நான் காப்பாற்றி வருவேன்," என்று தேறுதல் கூறினள். இவ்வாறு கதியற்றவர்களுக்கெல்லாம் இராட்டை கதியாக இருந்து வந்ததென்பது அர்த்த சாஸ்திரத்திலிருந்தும் தெரியவருகின்றது. திக்கற்ற ஏழைகள், அங்கவீனர்கள், வீட்டுக்கு வெளியே போகாத ஏழை ஸ்திரீகள், வேலை செய்து பிழைக்க வேண்டி யிருக்கும் சிறு பெண்கள் முதலியோருக்கு நூற்கும் வேலை கொடுத்தல் சூத்திராத்தியட்சரின் கடமைகளில் ஒன்று என்பதாக அர்த்த சாஸ்திரம் கூறுகின்றது. எனவே, ஒருவகை ஏழைப் பாதுகாப்புச் சட்டமாகவும் அது உபயோகிக்கப்பட்டு வந்ததென்று அறிகிறோம். மனுவின் காலத்திலேயே இவ்வா றிருந்திருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. மனுஸ்மிருதிக்கு விரிவுரை எழுதிய குல்லூக பட்டர், வீட்டுக்கு வெளியே சென்று வேலை செய்ய இயலாத ஏழை ஸ்திரீகள், கைம் பெண் முதலியவர்களுக்கு என்ன வேலை கொடுக்கலா மென்பதைப்பற்றி விவாதித்து, நூல் நூற்றல் ஒன்றுதான் அவர்களுக்குத் தகுந்த கண்யமான ஜீவனோபாயம் என்று சொல்லி யிருக்கிறார்.

## வர்த்தகப் பெருக்கம்

வேறு நாடுகள் பருத்தித் துணியைப்பற்றிக் கேள்விப்பட்டேயிராத பண்டைக் காலத்தில் நூற்றலும் நெசவும் பாரத நாட்டில் செழித்தோங்கி

யிருந்தன என்பது சரித்திரப் பிரசித்தி கிறிஸ்து சகாப்தத்திற்கு பல்லாயிரமாண்டுகளுக்கு முன்பே இந்தியப் பருத்தித் துணிகள் பாபிலோனியாவுக்கு ஏற்றுமதியாயின வென்று பெயர் பெற்ற சரித்திராசிரியரான டாக்டர் ஸாய்ஸே என்பார் சொல்கிறார். பாபிலோனியாவின் பழைய துணி ஜாபிதா ஒன்றில் மஸ்லினைக் குறிப்பிட "சிந்து" என்னும் பதம் உபயோகிக்கப்பட்டிருக்கிறதென்றும், பாபிலோனியர்களுக்கும் சிந்து நதி பாயும் நாட்டில் வாழ்ந்த மக்களுக்கும் கடல் மூலம் வியாபாரம் நடந்துவந்த தென்பதை இது நன்கு நிரூபிக்கிறதென்றும் அவர் கூறுகிறார். எகிப்து நாட்டில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் தைலமிட்டுப் புதைக்கப்பட்ட பிரேதங்கள்மீது சுற்றப்பட்டிருக்கும் துணிகள் இந்திய மஸ்லின்களே யென்று பலர் எண்ணுகிறார்கள். பருத்தித் துணிகளுக்குக் கிரேக்க பாஷையில் "ஸிண்டன்" என்று பெயர். இது "ஸிந்து" என்பதுடன் நெருங்கிய சம்பந்தம் பெற்றதே யாகும். மஸ்லினைக் கிரேக்கர்கள் "கங்கேடிகா" என்று குறிப்பிட்டார்கள். அந்தத் துணி உற்பத்தியான இடத்தை முன்னிட்டே அதற்கு அப்பெயர் ஏற்பட்டிருக்கவேண்டும். இவ்வாறே கள்ளிக்கோட்டைத் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதியான துணிகளுக்குக் "காலிகோ" என்ற பெயர் ஏற்பட்டது. ஹெரோடோடஸ் என்னும் பண்டைக் கிரேக்க சரித்திராசிரியர் "பஞ்சு என்பது ஆட்டு மயிரை விடச் சிறந்த ஒருவகை மயிர்" என்று எழுதி வைத்துள்ளார். இதிலிருந்து அக்காலத்தில் கிரேக்கர்களுக்குப் பருத்தி என்றால் இன்னதென்றே தெரியாதென ஏற்படுகிறது. அலெக்ஸாண்டரின் தளபதிகளில் ஒருவரான அரிஸ்டோபுலஸ் என்பார் பருத்திச் செடியை "ரோமம் விளையும் மரம்" என்று குறிப்பிடுகிறார். அலெக்ஸாண்டரின் கப்பற் படைத் தலைவரான நியார்க்கஸ் "கொத்துக் கொத்தாய் ஆட்டு ரோமம் விளையும் மரங்கள் இந்தியாவில் இருக்கின்றன. இந்த ரோமத்தினால் ஒப்பில்லாத வெண்ணிற ஆடைகள் இந்தியர்கள் செய்கிறார்கள்" என்று எழுதியிருக்கிறார். * இந்தியாவில் பருத்தி சர்வ சாதாரணமா யிருந்த தெனினும்

---

* ஐரோப்பாவில் மத்திய காலத்தில் ஒரு விநோதக் கட்டுக்கதை பொது ஜனங்களிடையே வழங்கி வந்தது. தார்த்தாரி நாட்டில் ஓர் அதிசயமான மரம் இருப்பதாகவும், அதன் காய் முற்றி உடைந்ததும் அதனுள் ஒரு சிறு ஆட்டுக் குட்டி காணப்படுமென்றும், இவ்வாட்டுக் குட்டிகளின் ரோமத்தைக்கொண்டு அந்நாட்டில் மிக அதிசயமான வெள்ளை ஆடைகள் நெய்கிறார்களென்றும் ஜனங்கள் நம்பினார்கள். மேற்கூறிய மாய ஆட்டுக் குட்டிக்கு "தார்த்தாரி நாட்டின் தாவர ஆட்டுக் குட்டி" என்ற பெயரும் கொடுத்திருந்தார்கள். இம்மூட நம்பிக்கை ஸர் ஜான் மாண்டெவில்லி என்பவரால் இங்கிலாந்துக்குக் கொண்டுவரப்பட்டு 17-ம் நூற்றாண்டு வரையிலும் அங்கே நிலவி வந்தது.

வெளி நாட்டிலிருந்து வருவோருக்கு அதுவே மிகவும் அதிசயமான பொருளாயிருந்தது. எனவே வெளி நாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்த யாத்திரீகர் ஒவ்வொருவரும் இந்நாட்டின் செல்வ வளத்திற்குப் பருத்தி எவ்வளவு முக்கிய காரணமாயிருந்த தென்பதைக் கவனித்துச் சென்றார்கள். உள் நாட்டிலேயே பற்பல பகுதிகளுக்குள்ளும் வியாபாரம் செழித்தோங்கி யிருந்தது. அதில் துணி வியாபாரமும் ஒரு முக்கியமான பகுதியா யிருந்தது என்று சொல்ல வேண்டியதில்லை.

## வியாபார மார்க்கங்கள்

அக்காலத்தில் மூன்று பெரிய வியாபார மார்க்கங்கள் இருந்தன. (1) காசி நகரிலிருந்து கிழக்கு மேற்காக, மேற்குக் கடற்கரையிலிருந்த பருகச்சா (புரோச்), ருருக்கா என்னும் துறைமுகப் பட்டினங்களுக்குச் சென்ற பாதை. (2) காந்தாரத்திலிருந்து மகத தேசத்திற்கு அதாவது வடக்கிலிருந்து தென் கிழக்கே சென்ற பாதை. இதையே சிந்து நதிப் பள்ளத்தாக்கிலிருந்து பாடலிபுரத்துக்குச் சென்ற இராஜ பாட்டை என்று மெகஸ்தினீஸ் குறிப்பிட்டிருக்க வேண்டும். (3) சிராவஸ்தியிலிருந்து பிரதிஷ்டானத்துக்கு அதாவது வடக்கே இருந்து தென் மேற்கே சென்ற பாதை. இப்பெரிய பாட்டைகளின் வழியாகவும், மற்றும் பல சிறு பாதைகளின் வழியாகவும் பருத்தி ஆடைகள் கடற்கரைப் பட்டினங்களில் வந்து குவிந்துகொண்டிருந்தன. அங்கிருந்து அவை வெளி நாடுகளுக்குக் கப்பலேற்றி அனுப்பப்பட்டன. மிக மெல்லிய மஸ்லின்கள் மட்டுமன்றி முரட்டுத் துணிகளும் கூடக் கடல் வழியாகவும் தரை வழியாகவும் மேற்கு ஆசியா, ஸிரியா, பாபிலோனியா, பாரஸீகம், சீனம், ஜாவா, பெரு, மலாக்கா, கிரீஸ், ரோம், எகிப்து ஆகிய தேசங்களுக்குச் சென்றன. தரை மார்க்கத்தில், ஹிந்துகுஷ் கணவாய் கைபர் கணவாய்களின் வழியாக, ஸமார்க்கண்டு, பொக்காரா, துருக்கிஸ்தானம், தார்த்தாரி தேசம் இவற்றைக் கடந்து ருஷியாவிற்கும் இந்தியத் துணிகள் போயின. சீனத்துக்கும் இந்தியாவுக்கும் கப்பல் போக்கு வரவு மிகுதியாக நடந்துவந்தது. சுவர்ண பூமி (பர்மா)யிலிருந்து சீனம் வரையிலுள்ள கடற்கரை ஓரத்திலும், அவ்வாறே மலாய்த் தீவுகளின் கடற்கரைகளிலும் இந்தியர்கள் ஏராளமாகக் குடியேறி யிருந்தார்கள். ஆங்காங்குக் கப்பல் தங்கும் துறைமுகங்கள் அமைக்கப்பட்டிருந்தன. கீழ் சமுத்திரத்தில் இடைவிடாது பிரயாணம் செய்துகொண்டிருந்த பெரிய கப்பல்கள் அத் துறைமுகங்களில் தங்கிச் சென்றன. அக்காலத்தில் இந்தியாவில் துணி வியாபாரத்தில் பிரசித்தி பெற்றிருந்த முக்கிய நகரங்களும், துறைமுகங்களும் பின்வருமாறு:—(1) சிந்து நதியின் முகத்துவாரத்திலிருந்த பார்பேரிகான்; (2) அபராந்தகம் என்னும் காம்பே

வளேகுடா; (3) உஜ்ஜயினி (இங்கிருந்து புரோச்சுக்கு ஏராளமான வியாபாரச் சரக்குகள் போயின); (4) பயிதானு, தேவகிரி (மகாராஷ்டிரத்தின் முக்கிய வியாபார ஸ்தலங்கள்); (5) சூரத், நவஸாரி; (6) கன்னியாகுமரி, மசூலிப்பட்டினம், காவேரிப்பூம்பட்டினம். தமிழ் நாட்டில் இன்னும் பல பிரபல துறைமுகப் பட்டினங்களும் இருந்தன. அவற்றில் யவனர் முதலிய அந்நிய நாட்டு வியாபாரிகளின் கூட்டம் மிகுந்திருந்தது. அக்காலத்தில் அளவில் சிறுத்து மதிப்பில் உயர்ந்த பொருள்களே பெரும்பாலும் கடல் மூலம் அனுப்பப்பட்டன. இந்தியாவின் கடல் வியாபாரத்தில் ஆடைகளே முக்கியமான பொருள்களா யிருந்திருக்கவேண்டும். நூற்றுக்கணக்கான வருஷங்களாக உலக வியாபாரத்தில் இந்தியா முதன்மை ஸ்தானம் பெற்றிருந்ததிற்கு அதன் நூலும் துணியுமே சிறப்பான காரணமாகும். இந்தியாவின் துறைமுகங்கள் உலகம் முழுவதுடனும் சம்பந்தம் பெற்றிருந்தன. அக்காலத்தில் வெளி நாட்டிலிருந்து வந்த பிரயாணி ஒவ்வொருவரும் அத் துறைமுகங்களின் வியாபாரச் செழிப்பைக் குறித்துத் தங்கள் பெரு வியப்பை எழுதிவைத்துச் சென்றனர்.

## அன்னியர்களின் அத்தாட்சி

பண்டைக் காலத்தில் வியாபாரத்துக்காகவோ, வேறு காரியத்துக்காகவோ இந்தியாவுக்கு வந்த அன்னிய நாட்டார் ஒவ்வொருவரும் இந்நாட்டின் நூற்றல், நெசவுத் தொழில்களைப்பற்றி வியந்துரைத்திருக்கிறார்களெனில், அத்தொழில்கள் எவ்வளவு மகோந்நத நிலை யடைந்திருக்க வேண்டுமென ஒருவாறு அறியலாமன்றோ? உலகின் வியாபார நிலையை நன்குணர்ந்து எழுதிய பண்டைக்கால ஆசிரியர்களில் "பெரிப்ளஸ்" என்னும் நூலின் ஆசிரியரும் ஒருவர். இரண்டாம் நூற்றாண்டில் இருந்த இவர் இந்தியாவின் பலவகைப் பருத்தித் துணிகளைப்பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார். துணிகளைச் சாதாரணம், உயர்ந்த தரம், மிக மென்மையான தரம் ஒன்று அவர் மூவகையாகப் பிரித்துக் காட்டியிருப்பதுடன், தலையணைகளுக்கும் மெத்தைகளுக்கும் அடைக்க வெறும் பஞ்சு உபயோகிக்கப்பட்டது என்றும் அவர் கூறியுள்ளார். இவருக்குப் பிற்பட்டவரும், ஆனால் அதே நூற்றாண்டைச் சேர்ந்தவருமான ஆர்ரியன் என்பார், அராபியர்கள் புரோச்சிலிருந்து அதி வெண்மையான இந்தியத் துணிகளை ஏற்றுமதி செய்து செங்கடலிலுள்ள அதூலி நகர் வரையில் கொண்டு வந்து விற்றார்களென்றும், மசூலிப்பட்டினத்துச் சாயத் துணிகளும் ஏராளமாக விற்கப்பட்டனவென்றும் சொல்லுகின்றார். மேலும், அக்காலத்து இந்தியர்கள் அரையில் ஒன்றும், மேலே ஒன்றுமாக இரண்டு பருத்தி வஸ்திரங்களை மட்டுமே அணிந்தார்களென்றும், அவ்வஸ்திரங்கள்

பளபளப்பான வர்ணந் தோய்க்கப் பெற்றும், பூ வேலைகள் செய்யப்பட்டும் இருப்பதுண்டென்றும் அவர் கூறுகிறார். அக்காலத்தில் அன்னிய நாட்டார் ஒவ்வொருவரும், இந்தியாவென்றால் பருத்தி விளையும் தேசமென்றே கருதினர். ரோமாபுரியும், ரோம சாம்ராஜ்யத்திற்குட்பட்ட மற்றப் பிரதேசங்களும் இந்தியாவிலிருந்து ஏராளமாகப் பருத்தித் துணிகள் தருவித்துக்கொண்டன. இத்துணிகள் எல்லாம் எகிப்தின் வழியாகவே போகவேண்டி யிருந்தது. இவ்வாறு எகிப்துக்கும் இந்தியாவுக்கும் நடந்துவந்த கடல் வியாபாரம் சுமார் ஆயிர வருஷகாலம் நீடித்திருந்தது. ஓமார் கலீபாவின் தலைமையில் முகம்மதியர் எகிப்தைக் கைப்பற்றி இந்தியாவுக்கும் அந்நாட்டுக்கும் போக்கு வரவைத் தடை செய்தபோது தான் அவ்வியாபாரம் நின்றது. கிறிஸ்து பிறப்பதற்கு நூறு வருஷங்களுக்கு முன்பே ரோமர்கள் இந்தியத் துணிகளை அணியலானார்கள். அவர்கள் இந்தியாவின் மஸ்லின்களுக்கும், பட்டாடைகளுக்கும், 'தங்க மிழைத்துச் சித்திரக்கரைகள் போட்ட ஜோதிமயமான' துணிகளுக்கும் கணக்கில்லாத பணத்தைக் கொட்டிக்கொடுத்தது பிளினி என்னும் ரோமாபுரிப் பெரியாரின் கோபத்தைக் கிளப்பியதில் வியப்பில்லை யன்றோ? பத்துகோடி ரோம நாணயங்கள் வருஷந்தோறும் இந்திய ஆடைகளுக்காக ரோம ராஜ்யத்தினின்று போய்விடுகின்றன வென்று அவர் மதிப்பிட்டு, ரோமர்களின் ஊதாரித்தனத்தைப் பலமாகக் கண்டித்திருக்கிறார்.* அக்காலத்தில் உலகிலேயே பாரதநாடு ஒன்றில் தான் பருத்தித் துணி உற்பத்தியாகி வந்தபடியால், பல நூற்றாண்டுகாலம் இந்தியத் துணி வியாபாரம் போட்டியின்றிச் செழித்தோங்கியிருந்தது. கி. பி. 552-ம் ஆண்டில் ஜஸ்டினியன் சக்கரவர்த்தி வகுத்த சட்டங்களில், வரி போடவேண்டிய சாமான்களில் ஒன்றாக இந்தியப் பருத்தித் துணி சேர்க்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இரண்டாவது கலீபா ஓமார், பன்னிரண்டு இடத்தில் கிழிந்த பருத்தி யாடையை அங்கியாகத் தரித்திருந்தார் என்று எழுதப்பட்டிருக்கிறது. நாலாவது கலீபாவான அலி, மெல்லிய பருத்தித் துணியாலான அங்கியே தரித்திருந்தார். பாரஸீகம், மெஸபொடேமியா, சின்ன ஆசியா தேசங்களிலும், ஜாவா முதலிய இந்து சீனத் தீவுகளிலும் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து உள்ளவர்களெல்லாம் இந்தியத் துணிகளையே ஆடையாக அணிந்தார்கள். வெளி நாட்டார் பெரிதும் விரும்பியது நயமான துணிகளையேயாகும். வங்கநாட்டு மஸ்லின் பெயர் பெற்றிருந்ததாயினும்,

* கட்டுக்கதையோ வென்று சொல்லும்படியான அவ்வளவு அதிக விலைக்கு ரோமாபுரியில் பட்டும், மஸ்லினும், பருத்தித் துணிகளும் விற்கப் பெற்று வந்தன. ஆரீலியன் என்னும் சக்கரவர்த்தியின் ஆட்சியில் நிறைக்கு நிறை தங்கத்துக்குப் பட்டு விலைப்போயிற்று! டைபீரியஸ் கெயிஸரின் காலத்தில் உடம்பு தெரியும்படியான மெல்லிய பட்டு உடுத்தல் அநாகரிகம் என்பதாகச் சட்டம் போட்டுத் தடுக்கவேண்டியிருந்தது.

வங்காளத்தில் மட்டுமே நயமான துணிகள் உற்பத்தியாயின என்று நினைப்பது தவறு. உடைநயத்திலும், வேலைப்பாட்டின் அழகிலும், வர்ண விசித்திரங்களிலும் உலகிலேயே ஒப்புயர்வற்ற துணிகளுக்கு நாட்டின் மற்றைப் பகுதிகளும் பெயர்பெற்றிருந்தன. பதின்மூன்றும் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்திருந்த மார்க்கோ போலோ என்பார் தெலுங்க நாட்டில் உற்பத்தியான 'மிக நேர்த்தியான மஸ்லின்'களைப் பற்றியும், 'மற்றும் விலையுயர்ந்த துணி'களைப்பற்றியும் வியந்து கூறியிருக்கிறார். "அத் துணிகள் சிலந்தி வலையைப்போல் காணப்படுகின்றன. அவற்றை அணிய ஆசை கொள்ளாத அரசனோ, அரசியோ இவ்வுலகில் இல்லை" என்று அவர் சொல்லுகிறார். விசாகப்பட்டினத்துப் புஞ்சம் துணிக்கும், மசூலிப்பட்டினத்துச் சீட்டிக்கும், நெல்லூர் ஆடைகளுக்கும், ஆரணி மஸ்லின்களுக்கும் வெளிநாடுகளில் நல்ல கிராக்கியிருந்தது. பதினைந்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவுக்கு வந்த பார்போஸா என்பவர், காம்பே நகரைப்பற்றி வருணிக்கையில், அங்கே கைத்தொழிலாளிகளும், பல நாடுகளிலிருந்தும் வந்த வியாபாரிகளும் நிறைந்திருந்தார்களென்றும், நெசவுத் தொழிலும், துணி வியாபாரமும் செழித்தோங்கி யிருந்தன வென்றும் சொல்லுகின்றார். இதற்கு நூறு வருஷங்களுக்கு முன்புதான் தென் ஐரோப்பாவுக்குப் பருத்திச் செடி கொண்டுபோகப்பட்டது.* முதலில் சிறிதுகாலம் பருத்தியைக் காகிதம் செய்வதற்கு உபயோகப் படுத்திவந்தார்கள். இதாலி நாட்டில் தான் முதன் முதலாகப் பருத்தியைக்கொண்டு துணி உற்பத்தி செய்ய முயற்சி நடந்தது. வெனிஸ், மிலன் நகரங்களிலும், பின்னால் ஸாக்ஸனி, பிரஷியா தேசங்களிலும் பருத்தித் துணி உற்பத்தி செய்தார்களாயினும் அவை இந்தியத் துணிகளுடன் ஒப்பிடத்தகாதவையா யிருந்தன. ஆதலின் இந்தியத் துணி வியாபாரத்துக்கு எவ்வித பாதகமும் ஏற்படவில்லை. அராபியர்களும், இதாலியர்களும் இந்தியாவிலிருந்து துணி ஏற்றுமதி செய்து கொண்டுபோய் ஐரோப்பாவில் விற்று வந்தார்கள். பிரார்டு, பார்போஸா, நிகாலோ-கோண்டி, லின்ஷோதன் முதலிய பிரயாணிகள் எழுதி வைத்திருப்பவைகளிலிருந்து, இந்தியாவுக்குக் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள எல்லா தேசங்களிலும், தீவுகளிலும், தென்னாப்பிரிக்கா பிரதேசங்களிலும் கூட இந்தியப் பருத்தி ஆடை நிகரின்றி விளங்கிவந்தது என்பதை நன்கறிகிறோம். வார்த்திமா என்னும் பிரயாணி (1503—1508) வங்காளத்தின் செல்வப் பெருக்கைப்பற்றி எழுதுகையில், உலகில் வேறெந்த நாட்

---

* ஆயிரத்து நூறு வருஷங்களுக்கு முன்புதான் முதன்முதலாகப் பருத்திச் செடி ஜப்பானுக்குக் கொண்டுவரப்பட்டதென்றும், அதைக் கொண்டுவந்தவர்கள் இரண்டு இந்தியர்கள் என்றும் அந்நாட்டு அரசாங்க தஸ்தவேஜிகளிலிருந்து தெரியவருகிறது.

டையும்விட வங்காளத்தில் பருத்தி அதிகம் என்று கூறியுள்ளார். பங்கல்லே என்னும் நகரிலிருந்து பருத்தித் துணிகளும், பட்டாடைகளும் ஏற்றிய ஐம்பது கப்பல்கள் வருஷந்தோறும் புறப்பட்டுச் சென்றன வென்று இவர் குறிப்பிட்டிருக்கிறார். இவருக்கு அறுபது ஆண்டுகளுக்குப் பின்வந்த கெயிஸர் பிரடரிக் என்னும் வெனிஸ் நகரத்து வியாபாரி, ஸான்தோமிலிருந்து பெரு என்னும் நாட்டுக்குப் பலவகைத் துணிகள் ஏராளமாகப் போய்க்கொண்டிருந்தன வென்று எழுதி வைத்திருக்கிறார். "இவற்றுள் வர்ணத் துணிகள் மிக அருமையானவை. அவை பளபளப்பான பலவகை வர்ணங்களுடன் திகழ்கின்றன. துவைக்கத் துவைக்க வர்ணங்கள் பிரகாசமடைகின்றனவே யல்லாது அவற்றின் ஒளி மங்குவதேயில்லை" என்று அவர் சொல்கிறார். பதினாறும் நூற்றாண்டின் இறுதியில் வந்த லின்ஷோதன் என்பவர் "நாகப்பட்டினம், ஸான்தோம், மசூலிப்பட்டினம் இவ்விடங்களில் மிகச்சிறந்த துணிகள் நெய்யப்படுகின்றன. பலவகை வர்ணநூல்களால் மிக வேலைப்பாடாகவும், அழகாகவும் நெய்யப்படும் அத்துணிகளை இந்தியர்கள் அதிகமாக அணிகிறார்கள். பட்டாடைகளைவிட அவற்றிற்கு மதிப்பு அதிகம்; விலையும் அதிகம்" என்று எழுதி வைத்துள்ளார். பதினேழாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த பெர்னியர், இங்கே உற்பத்தியான பருத்தித் துணியின் மென்மை நம்புதற் கியலாததா யிருக்கிற தென்று தமது வியப்பைத் தெரிவித்திருக்கிறார். அதே காலத்தவரான டாவர்னியர் "வங்காளத்திலும் மாளவ நாட்டிலும் நெய்யப்படும் காலிகோ துணிகளைக் கையினால் தொட்டால் துணி இருப்பதாகவே தெரியாது. அவை அவ்வளவு மென்மையானவை. அத் துணிகளுக்காக நூல் நூற்கப்படும்போது பார்த்தால் இழை கண்ணுக்குப் புலப்படாது" என்று கூறுகின்றார்.

வெளிநாட்டுப் பிரயாணிகள் எழுதிவைத்திருக்கும் விவரங்களிலிருந்து இத்தகைய புகழுரைகளை முடிவில்லாமல் எடுத்துக் காட்டிக்கொண்டே போகலாம். இந்த அத்தாட்சிகளெல்லாம் விளக்குவது என்ன? ஆயிரக்கணக்கான வருஷங்களாக இந்திய நெசவுத் தொழில் சிறந்தோங்கி யிருந்ததென்பதும், நீண்டகால அப்பியாசத்தினால் ஏற்பட்ட அற்புத நெசவுத்திறமை தேசமக்களின் இயல்புடன் கலந்து ஒன்றாகிவிட்ட தென்பதுமேயாம். கடைசியில் 1841-ம் ஆண்டில் மௌண்ட் ஸ்டேவர்ட் எல்பின்ஸ்டன் என்பவர் "இந்தியாவில் உற்பத்தியாகும் எல்லாப் பொருள்களிலும் பருத்தித் துணியே மிகவும் முக்கியமானது. இதன் அழகும், நயமும் நீண்டகாலமாக எல்லாராலும் புகழப்பட்டு வந்திருக்கிறது. நெசவு நயத்தில் இந்தியத் துணிக்கு நிகரானது உலகிலே வேறெந்த நாட்டிலும் எக்காலத்திலும் கிடையாது" என்று எழுதியபோது, அது பல நூற்றாண்டுகளாகப் பல்லோரால் கூறப்பட்ட அத்தாட்சியைத்தான் அவர் திருப்பிச் சொன்னாரே யன்றி வேறில்லை.

## மேன்மையின் காரணங்கள்

பருத்தித் தொழிலில் இவ்வாறு இந்தியா உலகிலேயே நிகரற்று விளங்கிவந்ததின் காரணங்கள் யாவை? ஒரு காரணம் தெளிவானது. முற்காலத்தில் பருத்தி விளையப்பெற்ற தேசம் பாரதநாடு ஒன்றுதான். "இந்தியாவில் உணவுப் பொருள்களைப்போல் பருத்தியும் ஏராளம்" என்று பண்டைக் காலத்துப் பிரயாணி ஒருவர் கூறினர். இவ்வாறு ஏராளமாக விளைந்த பருத்தியைக்கொண்டு, பரம்பரையாக நெசவுத் தொழிலைப் பேணி வளர்த்துவந்த வகுப்பாரும் குடும்பத்தினரும் தங்களுடைய அற்புதக் கைத்திறமையினுல் ஒப்புயர்வற்ற ஆடைகளை நெய்து இந்தியாவுக்கு அழியாப் புகழைத் தந்தார்கள். இவ்வாறு இயற்கைத் தாய் இருவழியில் இந்தியாவின்மீது அருள் சொரிந்து வந்தாள். மூலப் பொருளை ஏராளமாகத் தந்ததுடன், தேசமக்களுக்கு உயரிய கைத்திறனுக்குரிய இயற்கை அறிவு வன்மையையும் அளித்தாள். விருப்பத்துடன் உடலை உழைத்து வேலை செய்யும் ஆற்றலினுலும், சாயம் போடுதல், அச்சடித்தல் என்னும் கலைகளில் இடைவிடாமல் அறிவைச் செலுத்தி முயன்றதினுலும் இந்திய நெசவுத் தொழிலாளி உலகையே வெற்றி கொள்ளுதல் எளிதாயிற்று. தேசத்தின் சீதோஷ்ண நிலையும் அவனுக்கு உதவி புரிந்தது. அது பலவகைச் சாயங்களையும் பளபளப்புடன் நீடித்து நிற்கும்படி செய்து அவனுடைய கைவேலைக்கு ஒரு தனி அழகு கொடுத்தது. அவன் தன் உழைப்புக்கேற்ற பயனும் அடைந்து வந்தான். அவன் நெய்த ஆடைகள் நல்ல விலைக்குப்போயின. எந்த சமயத்திலும் பொது ஜனங்கள் அவனுக்கு உதவி செய்யக் காத்திருந்தனர். அவனிடம் அவர்கள் பெரிதும் நன்றிபாராட்டிச் சமுதாயத்தில் அவனுக்கு உன்னத பதவி அளித்திருந்தார்கள். நூல் நூற்போரும், நெசவுகாரரும் சமுதாயத்தின் சிறந்த அங்கங்களா யிருந்தபடியால் அவர்களைக் குறித்து தேசமே பெருமை பாராட்டிற்று.

## முஸ்லிம் மன்னரின் ஆதரவு

முஸ்லிம்களின் படையெடுப்பினுலும், அதன் பயனுக ஏற்பட்ட முஸ்லிம் ஆட்சியினுலும், இந்தியாவின் தொழில் வளத்தைப் பொறுத்தவரையில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. முஸ்லிம் மன்னர்களின் கீழ் இந்தியக் கைத்தொழில்கள் முன்னைவிட அதிக ஆதரவு பெற்றுச் சிறந்தோங்கினவென்றும் கூறலாகும். ஹிந்து மன்னர்களைப்போலவே அவர்களும் நூற்றல், நெசவுத் தொழில்கள் சம்பந்தமாக விசேஷ கவனம் செலுத்தினர்கள். இதை நிரூபிக்க எத்தனையோ உதாரணங்கள் கூறலாமெனினும் இங்கே ஒன்று எடுத்துக் காட்டுதலே போதுமானது. டாக்கா மஸ்லின் தொழில் பெரும்பாலும் ஹிந்து தொழிலாளிகளாலேயே நடத்

தப்பட்டு வந்தபோதிலும், டாக்கா நவாபுகளும், டில்லிச் சக்கரவர்த்திகளும் அத்தொழிலை இடைவிடாது ஆதரித்து வளர்த்து வந்தார்கள். ஆடம்பரத்திலும், சுகபோகங்களிலும் பிரிய முள்ளவர்களாதலின், நவாபுகளும், சக்கரவர்த்திகளும் போட்டி போட்டுக்கொண்டு கைத்தொழில்களை வளர்த்தனர். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக, மொகலாய சக்கரவர்த்திகளின் காலத்தில் தேசத்தில் துணி உற்பத்தியின் அளவைக்குறித்துத் திட்டமாகத் தெரிவிக்கும் புள்ளி விவரம் எதுவும் கிடைக்கவில்லை.

மிஸ்டர் மோர்லாண்டு என்பவர் தாம் எழுதிய "அக்பர் மரணத்தின் போது இந்தியா" என்ற புத்தகத்தில், தேசத்தின் துணி உற்பத்தியை ஒருவாறு மதிப்பிட முயன்றிருக்கிறார். அப்போது இந்தியாவின் ஜனத்தொகையில் சராசரி தலைக்கு 13 கஜம் வீதம் துணி உற்பத்தியானதாக அவர் முடிவு கட்டியிருக்கிறார். இது மிகவும் குறைவான மதிப்பேயாகும். அவருடைய முடிவைப்பற்றி விரிவாக ஆராய்வதற்கு இச் சிறு நூல் இடந்தராது. அவர் கணக்குப் போட்டிருக்கும் முறை மிகவும் குறைபாடுள்ளதென்று இங்கு எடுத்துக் காட்டுவதே போதுமானது. வெளிநாட்டுக்குச் சென்ற துணிகளைக் கப்பல்களின் சரக்கு அளவைக் கொண்டு அவர் மதிப்பிட்டிருக்கிறார். இதற்கு ஆங்கிலக் கப்பல்கள், டச்சுக் கப்பல்கள் சம்பந்தமான சில தஸ்தவேஜிகளையன்றி அவருக்கு வேறு ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை. இத்தகைய கணக்கில் அபிப்பிராய பேதங்களுக்கும், பிழைபாடுகளுக்கும் நிரம்ப இடமுண்டு. மேலும் உள்நாட்டில் உபயோகிக்கப்பட்ட துணியையும் அவர் தக்க ஆதாரமின்றி மிகக் குறைவாக மதிப்பிட்டிருக்கிறார். ஆனால் டாக்டர் மோர்லாண்டுக்குக்கூட ஓர் உண்மை தெளிவா யிருந்திருக்கிறது. அவர் கூறுவதாவது:—"இந்தியாவின் கைத்தறிகள் உள்நாட்டு ஜனங்களுக்குத் தேவையான துணி முழுவதையும் அளித்து வந்தன. இதில் அவர்களுக்குப் போட்டியே கிடையாது. இதன்றியும், வெளிநாடுகளுக்கும் ஏராளமான துணி ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. அரேபியா, அதற்கப்பாலுள்ள நாடுகள், பர்மா, கீழ் சமுத்திரத்திலுள்ள தீவுகள் ஆகியவை இந்தியத் துணிக்குப் பிரதான விற்பனை ஸ்தலங்களாயிருந்தன. ஆசியாவின் மற்றப் பகுதிகளுக்கும், ஆப்பிரிக்காவின் கீழ்க் கடற்கரையோரப் பிரதேசங்களுக்கும்கூடத் துணி ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது." பதினாறும் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவுக்கு வந்த பிரார்டு என்பவர், காம்பே, சூரத், கள்ளிக்கோட்டை, கோவா * முதலிய துறைமுகங்களின் செல்வ வளத்தையும், வியாபாரப் பெருக்கையும் பற்றி வியந்து எழுதிய

* சில முக்கிய நகரங்களையும், துறைமுகங்களையும் பற்றி பிரார்ட் விவரமாக எழுதிவைத்திருக்கிறார். அவற்றுள் சிலவற்றின் சாரம் வருமாறு.—

தாவது:—"பட்டு, பருத்தி ஆடைகளே இந்நகரங்களின் முக்கிய செல்வமாகும். ஆப்பிரிக்காவிலிருந்து சீனம் வரையில் ஆடவர், பெண்டிர் அனைவரும் கால் முதல் தலைவரையில் இவ்வாடைகளையே அணிந்து விளங்குகிறார்கள். பட்டாடைகள் மட்டுமன்றிப் பருத்தித் துணிகளுங் கூடப் பனியைப்போன்ற தூவெண்ணிறமும், அபூர்வமான மென்மையும் பொருந்தியிருக்கின்றன. இத்துணிகளைப்பற்றிய முக்கியமான விசேஷ மென்னவென்றால், அவை நல்ல வேலைத்திற மமைந்த பொருள்களாயிருப்பதுடன், அவற்றின் விலையும் மிக மலிவாயிருப்பதுவே யாகும்." பிரார்டைப்போலவே அவருக்குப் பின்வந்த பர்னியர், டாவர்னியர் முதலிய பிரயாணிகளும் இந்தியாவின் துணி வியாபாரச் செழிப்பைக் குறித்து அதிசயித்தனர். ஆகவே, இந்தியாவின் பிரதான கைத்தொழில்களான நூற்றலும், நெசவும் மொகலாய சக்கரவர்த்திகளின் ஆட்சியில் நாளுக்குநாள் செழித்தோங்கிவந்தன வென்று ஐயமின்றிக் கூறலாகும்.

## தொழில் கைமாறுதல்

இக்காலத்தில் தான், வட இந்தியாவின் சில பகுதிகளில் நெசவுத் தொழில் ஹிந்துக்களின் கையிலிருந்து முஸ்லிம்களின் கைக்கு மாறிய

---

**சூரத்.**—"மெக்காவின் வாயிற்படி" என்றும் "சூரிய நகரம்" என்றும் பெயருள்ள இத்துறைமுகம் கூர்ஜரநாட்டில் பெயர் பெற்றது. ஜனங்கள் நிதான புத்தியுள்ளவர்கள்; உயரமானவர்கள்; வெண்பட்டினாலும் காலிகோ துணியினாலும் செய்த பகட்டான நீண்ட அங்கிகள் அணிந்திருக்கிறார்கள். இங்கிருந்து வெள்ளைத் துணிகள், பலவர்ண ஆடைகள், கோடு போட்ட தினுசுகள் முதலியவை வருஷந்தோறும் ஏராளமாக ஏற்றுமதியாகின்றன. கூர்ஜரம் இத்துணிகளுக்குப் பெயர் போனது.

**பால்.**—இது மிகவும் செழிப்பான பிரதேசம். இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலுமிருந்து வியாபாரிகள் தங்கள் தங்கள் சரக்குகளை விற்பதற்காக இங்கே வந்து சேர்க்கிறார்கள். இவ்விடத்தில் ஏராளமாகக் கிடைக்கும் பட்டாடைகள் இந்தியா முழுவதிற்கும் போதுமானவை. முக்கியமான பருத்தித் துணி வகைகளும் இங்கே கிடைக்கின்றன.

**கோவா.**—ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் கீழ்நாடுகளிலிருந்தும் வரும் வியாபாரிகள் எல்லாரும் சந்திக்கும் இடம் இது. இந்தியாவில் உற்பத்தியாகும் எல்லாப் பண்டங்களும் இங்கிருந்து அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி யாகின்றன.

**கள்ளிக்கோட்டை.**—இங்கிருந்து 'காலிகோ' என்று சொல்லப்படும் மிக நயமான பருத்தித் துணிகளும், பலவகை வர்ணங்கள், சித்திர வேலைப்பாடுகள் அமைந்த திரைச்சீலைகளும் உலகின் எல்லாப் பகுதிகளுக்கும் ஏற்றுமதியாகின்றன. எல்லா நாட்டாரும் இங்கே கூடுகின்றனர்.

தாகத் தோன்றுகிறது. ஐக்கியமாகாணம், பீஹார், பஞ்சாப் முதலிய மாகாணங்களில் இன்றளவும் முஸ்லிம் நெசவுத் தொழிலாளர் ஏராளமாயிருக்கின்றனர். அம்மாகாணங்களிலுள்ள நெசவுகாரர்களில் முஸ்லிம்களே பெரும்பான்மையோர் என்றும் சொல்லலாம். மற்றத்தொழில்களில் முஸ்லிம்கள் ஈடுபட்டதுபோல் நெசவுத் தொழிலையும் பெருந் திரளாகக் கைக்கொண்டார்களெனக் காண்கிறது. நெசவுத்தொழில் அக்காலத்தில் பெரிதும் மதிக்கப்பெற்ற தென்பதில் சந்தேகமில்லை. கபீர் என்னும் மகான், தென்னாட்டில் இன்னும் பழைய காலத்தில் வாழ்ந்த திருவள்ளுவனாரைப்போல், நெசவையே ஜீவனோபாயமாகக்கொண்டு, தம் தொழிலில் மனத்திருப்தியும், ஆனந்தமும் அடைந்திருந்தார்.

## பஞ்சு கோட்டியின் தோற்றம்

நூற்றல், நெசவுத் தொழில்களுக்குத் துணையாகப் புதிய தொழில் ஒன்றும் எற்பட்டது. ஐக்கிய மாகாணத்தைத் தவிர மற்றப்பகுதிகளிலெல்லாம் பஞ்சு கொட்டிகள் முஸ்லிம்களாகவே இருப்பதிலிருந்து, முஸ்லிம் ஆட்சியின்போதுதான் பஞ்சு கொட்டுதல் ஒரு தனித் தொழிலாயிற்று என்று ஊகிக்கக்கூடும். முதன்முதலில் பஞ்சு கொட்டி, மெத்தை தலையணைகளுக்குப் பஞ்சடைக்கும் வேலையே செய்திருக்கலாம். நாளடைவில் அவன் நூற்பவர்களுக்கும் பஞ்சு கொட்டிக் கொடுக்கத் தொடங்கி யிருக்க வேண்டும். இன்னும் பிற்காலத்தில் அவன் நூற்பவர்களுக்கும் நெசவுகாரர்களுக்கு மிடையே ஒருவகைத் தரகனாகவும் அமைந்தான். அவன் பருத்தி சேகரித்து அதைக் கொட்டி நூற்பவர்களுக்குப் பஞ்சுத் திரிகள் கொடுத்து அவர்களிடமிருந்து நூல் வாங்கினான். பின்னர் நூலை நெசவுகாரர்களுக்கு விற்பனை செய்தான். இவ்வாறு பஞ்சு கொட்டும் கூலியுடன் கொஞ்சம் தரகுக் கூலியும் அவன் பெற்றுவந்தான். பழைய காலத்தில் ஹிந்துக்கள் தங்களுக்குத் தேவையான அளவுக்குத் தாங்களே கைவில்லினாலோ, வெறுங் கையினாலோ பஞ்சு கொட்டிக்கொண்டிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. வங்காளத்திலும், தென்னாட்டிலும் நூல் நூற்போர் ஆயிரக்கணக்கானவர்கள் இன்னும் இக் கைவில்லை உபயோகித்து வருகிறார்கள். பஞ்சு கொட்டும் வில்லின் சரித்திரமும், பஞ்சு கொட்டுதல் ஒரு தனித்தொழிலான வரலாறும் சரித்திர மாணாக்கர்களின் விரிவான ஆராய்ச்சிக்குரிய விஷயங்களாகும்.

## ஐரோப்பியர்களுக்குள் போராட்டம்

பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இந்தியாவிலும் மற்றக் கீழ்நாடுகளிலும் வியாபாரம் செய்யும் ஏகபோக உரிமைக்காக ஐரோப்பிய வல்லரசுகளுக்குள் பெரும் போராட்டம் ஆரம்பமாயிற்று. ஐரோப்பிய நாட்டார் பலரும் பொன்னாசையினால் கவரப்பட்டு இந்தியாவையும்

மற்றக் கீழ்நாடுகளையும் நோக்கினர். முதலில் போர்ச்சுசியரும், அவர்களைத்தொடர்ந்து டச்சுக்காரரும், கடைசியாக பிரஞ்சுக்காரரும், பிரிட்டிஷாரும் இந்தியாவுக்கு வந்தார்கள். அவர்களுடைய முதன்மையான நோக்கம் வியாபாரமேயாகும். முக்கியமாக, இந்தியத் துணி ஏற்றுமதி வியாபாரம் அவர்களுக்குப் பெரிதும் லாபகரமாயிருந்தது. சூரத், ஹுக்ளி, மசூலிப்பட்டினம், கள்ளிக்கோட்டை ஆகிய இடங்களில் கிழக்கிந்தியக் கம்பெனியர் முதன்முதலில் ஸ்தாபித்த வர்த்தக சாலைகள் உண்மையில் நெசவுத் தொழிலாளரின் குடியேற்றங்களாகவே விளங்கின. இந்தியக் காலிகோ துணிகளுக்கு இங்கிலாந்தில் கிராக்கி அதிகமாகிக்கொண்டே யிருந்தது. 1665-ம் ஆண்டில் கம்பெனியின் டைரக்டர்கள் இந்தியாவிலிருந்த தங்கள் ஏஜண்டுகளுக்கு எழுதிய கடிதத்தில் "உங்கள் பிரதேசத்திலிருந்து வரும் சாமான்களுக்குள் இந்தியக் காலிகோ துணிகளுக்கே தற்போது கிராக்கி அதிக மிருப்பதால் அவைகளையே அதிகமாய் அனுப்பி வரவேண்டியது" என்று தெரிவித்தார்கள். ஒரு நூற்றாண்டு காலத்துக்கு மேலேயே நடந்துவந்த இந்த வியாபாரத்தின் பலாபலன்களைப்பற்றிப் பின்னர் விரிவாகக் கூறுவோம். வியாபாரப் பொறாமையும், அரசியல் அதிகார வெறியும் சேர்ந்து இந்தியாவின் அருங் கலையை அழித்துவிட்டன என்று கூறுதலே இவ்விடத்தில் போதும். பெருந்திரளான ஜனங்களுக்குப் பிழைப் பளித்து வறுமை யென்பதே இன்னதென்று தெரியாமல் காத்து வந்த மகத்தான தொழில் அழிந்து விடவே, நாட்டில் தரித்திரமும், பசிப்பிணியும் குடிகொள்ளலாயின. ஆனால் நூற்றாண்டு நூற்றாண்டாக இடைவிடாது பயின்று வளர்த்து வந்த அற்புதக் கைத்திறனை ஒரு பெரிய போராட்டமின்றி நசுக்கி விடக்கூடுமோ? டாக்கா மஸ்லின் தொழில் இதற்கு ஓர் உதாரணமாகும். டாக்கா மஸ்லின் வியாபாரத்தின் சரித்திரம் பெரிதும் அறிவு புகட்டுவதொன்றாதலின் அதைச் சற்றே விரிவாக ஆராய்வோம்.

## டாக்கா மஸ்லின்

பண்டைக்கால கிரேக்கர்கள் வங்காளத்தின் மஸ்லின் துணியைப் பற்றித் தெரிந்துகொண்டிருந்ததுடன் அதற்கு "கங்கேடிகா" என்னும் பெயர் தந்திருந்தார்களென்று முன்னமே எடுத்துக் காட்டியிருக்கிறோம். பழைய கிரேக்க நூல் ஒன்றில் கோடிட்ட டாக்கா மஸ்லின்களைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. ரோம சாம்ராஜ்யம் உச்ச நிலையிலிருந்த போது ரோமாபுரிவாசிகள் விலையுயர்ந்த டாக்கா மஸ்லின் துணிகளை ஆசையுடன் வாங்கி அணிந்து வந்தார்கள். பிளினி என்னும் பண்டை ரோமப் பெரியார், வங்காளத்திலிருந்து வந்த மஸ்லின் துணிகள் அவற்றை அணிந்தோரின் உடம்பு நன்றாக வெளியே தெரியும் வண்ணம் அவ்வளவு

மென்மையா யிருந்தன வென்று கூறுகின்றார். இந்தியாவுக்கு வந்த அயல்நாட்டார் ஒருவரேனும் டாக்கா மஸ்லினின் அழகையும், நயத்தையும் வியந்து புகழாமற் சென்றது கிடையாது. ஒன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் பிரயாணம் செய்த ஸுலைமான் என்னும் அராபியர் "இந்தியாதேசத்தில் உற்பத்தியாகும் நேர்த்தியும், நயமும் மிகுந்த துணியைப் போன்று உலகில் வேறெங்கும் காண முடியாது. இத்துணியினாலான ஓர் உடையை முத்திரை மோதிர மொன்றின் வழியாகச் செலுத்தி விடலாம். இது பருத்தி நூலினால் நெய்யப்படும் துணி. இத்தகைய துணி ஒன்றை நானே நேரில் பார்த்தேன்" என்று எழுதி வைத்திருக்கிறார். (எலியட் எழுதிய "சரித்திராசிரியர்கள்" என்னும் நூல், புத்தகம் 1, பக்கம் 5 பார்க்க). இவர் டாக்கா மஸ்லினையே குறிப்பிட்டார் என்பதில் ஐயமில்லை. இவ்வாறு பல நூற்றாண்டு காலமாக இந்தத் தொழில் அபிவிருத்தி யடைந்து வந்தது. பதினாறும் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவில் பிரயாணம் செய்த பிரார்டு என்பார் வங்காளத்துக்கு வந்து பார்த்துவிட்டு "இங்கே செய்யப்படும் சில துணிகள் அபூர்வமான நயம் பொருந்தியிருக்கின்றன. அவற்றை அணிந்தோர் உடை தரித்திருக்கிறார்களா இல்லையா என்று கண்டுபிடிப்பது கஷ்டமான காரியம்" என்று எழுதினார். ரால்ப் பிட்ச் என்பவர், இந்தியாவிற்குள் மிகவும் நயமான பருத்தியாடை டாக்காவுக் கருகில் ஸோனார்கோன் என்னுமிடத்தில் உற்பத்தியானதாகக் குறிப்பிட்டிருக்கிறார். இத்தகைய நிகரில்லாத கைத்திறமை படைத்த தொழிலாளிகளுக்கு மொகலாய மன்னர்கள் சிறப்பான சன்மானம் அளித்து ஆதரித்துவந்தார்கள். முக்கியமாக, நூர்ஜஹான் என்னும் பெயர்பெற்ற சக்கரவர்த்தினி இவ்வருங்கலையை விசேஷமாக ஆதரித்தாள். அவள் காலத்தில் அக்கலை ஒப்பற்ற மேன்மையுடன் விளங்கியது. மொகலாய சக்கரவர்த்திகள் தங்கள் சபைக்கு வரும் பிரபலஸ்தர்களுக்கு அளித்த பரிசுகளில் தலை சிறந்தது டாக்கா மஸ்லினேயாகும். "பாரஸீகத்திலிருந்து மொகலாய மன்னனின் சபைக்கு வந்த தூதுவன் ஒருவன் திரும்பப் பாரஸீகம் சென்றதும், தன்னுடைய அரசனுக்கு, நெருப்புக்கோழி முட்டை அளவினதும், முத்துக்கள் பதிக்கப் பெற்றதுமான ஒரு தேங்காய்க் குடுக்கையைச் சமர்ப்பித்தான். அதைத் திறந்து பார்த்தபோது அறுபது முழம் நீளமுள்ள மஸ்லின் தலைப்பாகை ஒன்று அதில் இருந்தது" என்று டாவர்னியர் எழுதியிருக்கிறார். மஸ்லினுக்கு எந்த நாட்டிலும் நல்ல கிராக்கி யிருந்தது. கிழக்கிந்தியக் கம்பெனியார் முதன்முதலில் வங்காளத்துக்கு வந்தபோது மஸ்லின்களை ஆசையுடன் வாங்கத்தொடங்கினார்கள். ஏறக்குறைய 1840-ம் ஆண்டு வரையில் டாக்கா மஸ்லின் முக்கிய ஏற்றுமதிப் பொருள்களில் ஒன்றாயிருந்து வந்தது. அதன்பிறகு, எளிதில் நைந்து கிழியக்கூடிய மலிவான

பரதேசித்துணிகள் வரத்தொடங்கிய போதே, மஸ்லின் உற்பத்தி குறைய லாயிற்று. பின்னர் நாளடைவில் அத்தொழிலே அடியோடு நசித்துவிட்டது. 1836-ம் ஆண்டில் டாக்டர் ஊரே என்பார் எழுதியதாவது:— "டாக்காவில் நூற்கப்படும் நூலுக்கும், நெய்யப்படும் மஸ்லினுக்கும் இணையானவை ஐரோப்பாவில் எங்கும் இல்லை. 'இங்கிலாந்தில் உற்பத்தியாகும் மிக மெல்லிய நூலையும்விட எவ்வளவோ மடங்கு நயமான நூலைக் கேவலம் கைக்கதிரினால் எப்படித்தான் நூற்கிறார்களோ, பிறகு அவ்வளவு மெல்லிய நூலை எத்தகைய அதிசயமான இயந்திரத்தைக்கொண்டு எப்படித்தான் நெய்கிறார்களோ என்பது என் அறிவுக்கெட்டவேயில்லை' என்று பருத்தித் தொழிலில் அநுபவமுள்ள ஒருவர் வியந்து கூறினாரென்றால், இதிலிருந்து அத்துணியின் மேன்மையை அறியலாகும்." டாக்டர் ஊரேக்குப் பின்னால், 1840-ம் ஆண்டில் டாக்டர் டேலர் என்பார் இவ்வரிய தொழிலைப்பற்றி விரிவான சரித்திரம் ஒன்று எழுதினார். அதில் அவர் கூறுவதாவது:—"டாக்காவின் மிக உயர்ந்த மஸ்லின்கள், அரசர்கள், பெருஞ் செல்வர்கள் முதலியோரின் உத்திரவுக்கே எப்போதும் தயாரிக்கப்பட்டு வந்தன. மொகலாய சக்கரவர்த்திகளின் காலத்தில் இருந்த அவ்வளவு கிராக்கி அத்துணிகளுக்குச் சமீபகாலத்தில் இல்லையாயினும், அந்தத் தொழில் அடியோடு அழியாமல் காப்பதற்குப் போதிய ஆதரவு இன்றளவும் இருந்து வருகிறது."

## டாக்காவில் நூற்கும் தொழில்

**டா**க்கா மஸ்லினுக்காக நூல் நூற்க உபயோகிக்கப்பட்ட பருத்தியைப்பற்றியும், நூற்கும் முறை, நெசவு முறை இவைகளைப்பற்றியும் விவரங்கள் நிரம்பக் கிடைத்திருக்கின்றன. டாக்கா ஜில்லாவிற்குள் விளைந்த பருத்தியே மஸ்லினுக்கு உபயோகிக்கப்பட்ட தென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அது 'நாட்டுப்பருத்தி' என்று சொல்லப்பட்டது. அந்த ஜில்லாவின் பூசத்து விசேஷத்தினால் அப்பருத்தி ஒரு தனிக் குணம் வாய்ந்ததாயிருந்தது. வங்காளத்தில் கிடைத்த மற்றப் பருத்தி வகைகளைக்காட்டிலும் அது நயத்திலும், துசும்பு நீளத்திலும் (Staple) சிறந்ததாயினும், தற்காலத்து அமெரிக்கப் பருத்தியைவிடத் துசும்பு நீளம் குறைந்ததுதான். டாக்கா பருத்திச் செடியைப்பற்றி ஆராய்ச்சி செய்த ஒரு நிபுணர் பின்வரும் நான்கு விஷயங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்:—"(1) வங்காளத்தின் மற்றவகைப் பருத்திச் செடிகளைவிட இதில் கிளைகள் அதிகம் நிமிர்ந்து நிற்கின்றன; இலைகளின் முனை கூராயிருக்கிறது. (2) செடி முழுவதும் ஒருவகைச் சிவப்பு வர்ணத்தில் தோய்ந்ததுபோல் காணப்படுகின்றது. (3) பூவின் காம்புகள் நீளமாயிருக்கின்றன; பூ இதழ்களின் வெளி வரம்பு சிகப்பு நிறமாயிருக்கிறது.

(4) பஞ்சுத் துசம்புகள் அதிக நீளமாயும், மிருதுவாயும் இருக்கின்றன.''* இந்தச் செடியின் வயது ஒரு வருஷமேயாகும். ஐந்தடி உயரம் வரையில் அது வளர்ந்தது. டாக்கா மஸ்லின் தொழில் செழித்திருந்தபோது இப்பருத்தியும் ஏராளமாகப் பயிர் செய்யப்பட்டு வந்தது. டாக்டர் டேலர் டாக்கா மஸ்லினின் சரித்திரம் எழுதிய காலத்தில் இது வளங் குறைந்து மிகவும் மட்ட தினுசாக மாறிவிட்டது. ''பருத்தி மகசூல் தற்போது நிரம்பக் குறைந்திருக்கிறது. பஞ்சுத் துசம்புகள் முன்போலவே மிருதுவாயும் நேர்த்தியாயு மிருப்பினும் அவை முன்னைவிடக் குட்டையாகி விட்டன. மேலும் அவை பருத்தி விதைகளுடன் அழுத்தமாய் ஒட்டிக் கொள்கின்றன'' என்று அவர் கூறுகிறார். மேற்கூறிய பஞ்சை மூங்கில் பிளாச்சைக்கொண்டு செய்த சிறு கை வில்லினால் கொட்டினார்கள். வில்லுக்கு நரம்பினாலோ அல்லது பட்டுக் கயிற்றினாலோ நாண் போடப் பட்டிருந்தது. பஞ்சு கொட்டும் முறையையும், நூல் நூற்கும் முறையையும் டாக்டர் டேலர் நன்கு விவரித்திருக்கிறார். அவர் சொல்லுவதாவது:—''நூல் நூற்கும் ஸ்திரீகள் முதலில் பருத்தியைச் சுத்தம் செய்கிறார்கள். விதை வேறு, பஞ்சு வேறாகப் பிரிப்பதற்கு இரண்டு கருவிகள் இருக்கின்றன. ஒன்று, இரண்டு உருண்டைக் கழிகள் அடங்கிய சாதாரண கை மணை. இரண்டாந்தர நூல் நூற்பதற்கே இந்த மணையினால் பஞ்சு அரைக்கப்படுகிறது. அதி நயமான முதல்தர நூல் நூற்பதற்குப் பஞ்சு அரைக்க, நடுவில் பெருத்தும் முனைகள் சிறுத்துமுள்ள ஓர் இரும்பு ஊசி உபயோகிக்கப்படுகிறது. இதன் பெயர் 'டல்லம் கதி.' இதனால் கொஞ்சமாகத்தான் பஞ்சு அரைக்க முடியும். ஒரு பலகையில் பருத்தியைப் பரப்பி வைத்து அதன்மீது இவ்வூசியை உருட்டிப் பஞ்சு வேறு கொட்டை வேறாகப் பிரிக்கிறார்கள். கை மணையில் அரைத்தால் பஞ்சுத் துசம்புகள் நசுங்கும் அளவு இவ்வூசியினால் அரைத்தால் நசுங்குவதில்லை.† அரைக்கப்பட்ட பஞ்சு பின்னர் கொட்டப்படுகிறது. இதற்கு மூங்கில் குச்சியினாலான சிறு வில்லை உபயோகிக்கிறார்கள். வில்லுக்கு நரம்பினாலோ, பட்டுக் கயிற்றினாலோ நாண் பூட்டப்படுகிறது. உயர்தர நூல் நூற்பதற்கு, பஞ்சைக் கொட்டுவதற்குமுன் அதிலுள்ள தூசுதுப்புகளை எடுத்துச் சுத்தம் செய்கிறார்கள். இதற்கு பெயோலி மீனின் தாடை

---

* தற்போது கஞ்சம் ஜில்லாவில் நூற்பவர்கள் அந்த ஜில்லாப் பருத்தியையே நூற்கிறார்கள். இது குட்டைத் துசம்புள்ள பருத்தியேயாயினும், பட்டுப்போல் வழுவழுப்பாயிருக்கின்றது. நிறைய மழை பெய்யும் மலைச்சாரல்களில் இப்பருத்தி விளைகிறது.

† கஞ்சம் ஜில்லாவில் தற்போது நூல் நூற்பவர்கள் நயமான நூலுக்குப் பருத்தி அரைக்க இம்முறையையே கையாளுகிறார்கள்.

எலும்பு உபயோகிக்கப்படுகிறது.* இவ்வெலும்பு இரண்டு அங்குலம் குறுக்களவுள்ள ஒரு வளைவைப்போல் அமைந்திருக்கிறது. அதன் உட்புறத்தில் வளைவான மெல்லிய பற்களின் வரிசை காணப்படுகிறது. சீப்பினால் தலைமயிரைச் சீவுவது போல் இக்கருவியால் பஞ்சைச் சீவி சுத்தம் செய்கிறார்கள். மிக மெல்லிய பஞ்சுத் துசும்புகளே இதன் பற்கள் வழியாகச் செல்லும். இதற்குப் பிறகு பஞ்சை வில்லினால் கொட்டித் துசும்புகள் ஒன்றோடொன்று சேராமல் செய்கிறார்கள். பின்னர், அப்பஞ்சு வழுவழுப்பான மீன் தோலின்மீது ஜாக்கிரதையாகப் பரப்பப்பட்டு, ஓர் உருண்டைக் குழாயின் வடிவில் சுருட்டித் திரியாக்கப்படுகிறது. இப் பஞ்சுத் திரியைக் கையில் பிடித்துக்கொண்டுதான் நூல் நூற்கிறார்கள். நூற்கும் கருவிகள் யாவும் சாதாரணமாக ஒரு சிறு கூடையில் போட்டு வைக்கப்படுகின்றன. பஞ்சுத் திரிகள், மெல்லிய இரும்புக் கதிர், களிமண்ணில் பொருத்திய கிளிஞ்சல் துண்டு, குழிவான சிறு கல் ஒன்றில் கொஞ்சம் சீமைச் சுண்ணும்புத் தூள் ஆகிய இந்த சாமான்கள் அக் கூடையில் இருக்கும். நூல் நூற்கும்போது அடிக்கடி சீமைச் சுண்ணும்புத் தூளை விரல்களில் தொட்டுக்கொள்வார்கள். கதிர் பெரிய ஊசி ஒன்றின் பருமனுக்கு மேல் இராது.† அதன் நீளம் பத்து முதல் பதினுலு அங்குலம் வரையில் இருக்கும். கதிரின் அடிமுனைக்குச் சமீபத்தில் களிமண் உருண்டை ஒன்று பொருத்தப்பட்டிருக்கிறது. கதிர் சுழலுவதற்கு வேண்டிய கனம் இது கொடுக்கிறது. நூற்கும்போது கதிரின் அடிமுனை கிளிஞ்சல் ஓட்டின் குழியில் நிற்கும். நூற்பவர்கள் வலது கைக்கட்டை விரலாலும், நடு விரலாலும் அதைச் சிறிது சாய்வாகப் பிடித்துக்கொண்டு சுழற்றுவார்கள். அதேசமயத்தில் இடது கையிலுள்ள பஞ்சுத் திரியிலிருந்து துசும்புகளை இழுத்துக்கொண்டேயிருப்பார்கள். இப்படி இழுக்கப்படும் துசும்புகள் கதிர் சுழல்வதால் முறுக்கப்பட்டு இழையானதும் அதைக் கதிரின்மீது சுற்றி விடுவார்கள்.'' இவ்வாறு கொஞ்சம் நூல் கதிரின்மீது சுற்றப்பட்டதும் அதைப் பெயர்த்து ஒரு நாணல் குச்சியின்மீது சுற்றிவிடுதல் வழக்கம். ஆகாயத்தில் ஈரமில்லாமல் வறட்சியாயிருக்கும் காலம் நயமான நூல் நூற்பதற்கு ஏற்றதன்று எனக் கருதப்பட்டது. வெப்பநிலை 82 டிக்ரியாக இருந்து கொஞ்சம் ஈரமுள்ள காற்றும் உலாவும் சமயந்தான் மெல்லிய நூல் நூற்பதற்குப்

---

* ஆந்திர தேசத்தில் நயமான நூல் நூற்பவர்கள் இவ்வாறுதான் செய்கிறார்கள். தேசமெங்கும் மெல்லிய நூல் நூற்பதற்கு ஒரே விதமான முறைகளே கையாளப்பட்டன வென்று கருத இடமுண்டு.

† 60-ம் நம்பருக்குக் கீழ்ப்பட்ட தடிப்பான நூல் கைக்கதிரில் நூற்கப்படுவதில்லை யென்றும், இராட்டினத்திலேயே நூற்கப்பட்டதென்றும் டாக்டர் டேலர் மற்றோரிடத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

பெரிதும் தகுந்தது என்று டாக்டர் டேலர் சொல்லுகின்றார். ஆகவே, டாக்காவில் நூல் நூற்றவர்கள் சாதாரணமாக அதிகாலையிலிருந்து 9 அல்லது 10 மணி வரையிலும், மாலை 3 அல்லது 4 மணியிலிருந்து சூரியாஸ்தமனத்துக்கு அரை மணி நேரம் முன்புவரையிலுமே நூற்றார்கள். டாக்காவில் எல்லா வகுப்புகளையுஞ் சேர்ந்த ஸ்திரீகளும் தங்கள் ஒழிவு நேரத்தை யெல்லாம் நூல் நூற்பதிலேயே கழித்துவந்தார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் ஹிந்து ஸ்திரீகள். மிகுந்த திறமையுடன் அதி நயமான நூல் நூற்றவர்கள் அனைவரும் பதினெட்டு வயதுக்குமேல் முப்பது வயதுக் குட்பட்ட மாதரே என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## சில புள்ளி விவரங்கள்

**கா**லை நேரம் முழுவதும் கதிர் சுற்றும் ஒரு ஸ்திரீ ஒரு மாதத்தில் முதல் தர மெல்லிய நூல் அரைத்தோலா எடைதான் நூற்றாள். மணிக்கு 40 அல்லது 50 கஜத்துக்குமேல் அவள் நூற்றிருக்க முடியாது. ஒரு தோலா நூலின் விலை எட்டு ரூபாயாக இருந்தபடியால், முழு நேரம் வேலை செய்த ஸ்திரீ ஒருத்திக்கு மாதம் 4 ரூபாய் கிடைக்கும். ஆனால் முழு நேரம் வேலை செய்தல் மிக அருமையானபடியால், சாதாரணமாக நூற்பவர்களின் வருஷ வருமானம் 20 ரூபாயிலிருந்து 40 ரூபாய் வரையில் மாறுபட்டு வந்தது. நூற்ற நூலில் எவ்விதத்திலும் குறை சொல்லுவதற்கு இடமிருப்பதில்லை. டாக்கா நூல் அயல்நாட்டு ஆலைகளில் உற்பத்தியாகும் நூலைவிட எல்லா வகையிலும் சிறந்ததென்பது நிபுணர்களின் ஒரு முகமான அபிப்பிராயமாகும். இது சம்பந்தமாக டாக்டர் டேலர் எழுதியிருப்பதாவது:—“1846-ம் ஆண்டில் என் முன்னிலையில் சுதேசி நெசவுகாரன் ஒருவன் ஒரு நூல் கண்டை அளந்து காட்டினான். பின்னர், அதை நிறுத்துக் கணக்கிட்டதில், ஒரு ராத்தல் பஞ்சுக்கு 150 மைல் நீளத்துக்கு அதிகமான நூல் நூற்கப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது.” எனவே அந்த நூல் 500-ம் நம்பருக்கு மேற்பட்டதாயிருக்கவேண்டும். இதற்கும் முந்திய நாட்களில், நூற்றல் தொழில் இவ்வளவு தாழ்வுற்றிருந்தபோது, இதைவிட மெல்லிய நூல் நூற்கப்பட்டிருக்கலாம். தற்போதைய அமெரிக்கப் பருத்தியுடன் ஒப்பிடுங்கால் டாக்கா பருத்தி குட்டைத் துசும்புள்ளதே யாதலின் இயந்திரத்தில் நூற்பதற்கு அது தகுதியற்றதா யிருத்தல்கூடும். எனினும், அந்தப் பருத்தியினால் நூற்கப்பட்ட டாக்கா நூல் தற்போது இயந்திரத்தில் நூற்கும் மெல்லிய நூலைவிட அதிக முறுக்குள்ள தாயிருந்தது. அவ்வாறே பலத்திலும், உறுதிப்பாட்டிலுங் கூட அது ஆலை நூலினும் சிறந்ததாயிருந்தது. மிஸ்டர் போர்ப்ஸ் வாட்ஸன் என்பவர் “இந்தியாவின் உடைகளும் துணித் தொழிலும்” என்று ஒரு நூல் எழுதி யுள்ளார். அதில் அவர்

டாக்கா நூலைப்பற்றி நிபுணர்களின் அபிப்பிராயத்தை எடுத்துக் காட்டியிருக்கிறார். அவர் கூறுவதாவது:—"மூன்று விஷயங்களைப்பற்றி நிபுணர்கள் நிச்சயமான அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்கள். முதலாவது, ஐரோப்பாவின் மிக மெல்லிய நூலின் குறுக்களவைவிட டாக்கா நூலின் குறுக்களவு குறைவானது. (அதாவது ஐரோப்பாவின் மிக மெல்லிய நூலைவிட டாக்கா நூல் அதிக மெல்லியது). இரண்டாவது, ஐரோப்பா நூலில் உள்ளவற்றை விட டாக்கா நூலில் துசும்புகள் குறைவு. மூன்றாவது, இவ்வாறு துசும்புகள் குறைவா யிருப்பதே டாக்கா நூலின் மேன்மைக்கு முக்கிய காரணமாகும்." டாக்கா மஸ்லின் நூலையும், ஐரோப்பிய ஆலை மஸ்லின் நூலையும் ஒப்பிட்டுச் சில சோதனைகள் செய்து பார்த்ததின் பயனாகவே மேற்கண்ட முடிவுகளுக்கு வந்தார்கள். அச்சோதனைகளில் கிடைத்த சில புள்ளி விவரங்கள் வருமாறு:—

| துணி | நூல் இழையின் குறுக்களவு (அங்குலத்தின் பகுதி) | ஓர் அங்குலம் நூலில் உள்ள முறுக்குகள். |
|---|---|---|
| பிரஞ்சு மஸ்லின் (1862-ம் வருஷத்துச் சர்வதேசக் கண் காட்சி). | ·0019* | 68·8 |
| இங்கிலீஷ் மஸ்லின் (1851-ம் வருஷம்; 440-ம் நம்பர்) | ·0018 | 56·6 |
| டாக்கா மஸ்லின் (இந்தியப் பொருட் காட்சி சாலை) | ·0013 | 110·1 |
| டாக்கா மஸ்லின் (1862-ம் வருஷத்துச் சர்வதேசக் கண்காட்சி). | ·0015 | 80·7 |

முறுக்கில் உள்ள வேற்றுமை மிகவும் முக்கியமானது. கை நூலால் நெய்த துணி ஆலை நூல் துணியைவிட நீடித்து நிற்பதற்குக் காரணம் கை நூலில் முறுக்கு அதிக மிருப்பதேயாகும். ஐரோப்பிய ஆலை மஸ்லின்கள் வெகு சீக்கிரத்தில் நைந்து கிழிந்துபோவதால் அவை அணிவதற்குப் பயனற்றவை என்றே சொல்லிவிடலாம். ஆனால் கை நூலாலான மிக மெல்லிய மஸ்லின்கள்கூடப் பலமுறை துவைக்கப்பட்ட பிறகும் உறுதியாக நிற்கின்றன வென்பது பிரசித்தியான விஷயம். உண்மையில், "நெய்யப்பட்ட காற்று" என்று சிறப்புப் பெயர் பெற்ற டாக்கா மஸ்லினை நிகர்க்கும் துணி மேனாட்டின் மிகச் சிறந்த இயந்திரங்களாலும் இதுவரை செய்யப்படவில்லை.

---

* ஓர் அங்குலத்தை 10,000 சம பகுதியாகப் பிரித்தால் அவற்றில் 19 பகுதி.

## டாக்கா மஸ்லின் நெசவு

டாக்கா மஸ்லினை நெய்த நெசவுத் தொழிலாளர் தொழில் திறமையில் நூல் நூற்போருக்கு எவ்வகையிலும் குறைந்தவரல்லர். நெசவில் தனித் தனியே 126 முறைகளை அவர்கள் கையாண்டார்கள். பாவு போடுதல், கஞ்சி போடுதல், சலவை செய்தல் முதலியவற்றிற்கு அவர்கள் கையாண்ட விசேஷ முறைகளைக் குறித்து டாக்டர் போர்ப்ஸ் வாட்ஸன் என்பவர் விரிவாக எழுதி வைத்திருக்கிறார். டாக்காவிலிருந்த நெசவுகாரர் அனைவரும் ஹிந்துக்களே. அவர்கள் சுருசுருப்பாக வேலை செய்வதற் கேற்ற ஒல்லியான சரீர அமைப்பு வாய்ந்தவர்கள். சிரமம் என்பதைப் பாராட்டாமல் அவர்கள் இடைவிடாது கஷ்டப்பட்டு உழைத்தார்கள். எவ்வளவு தான் வேலை செய்தாலும் அவர்கள் பொறுமை யிழப்பதில்லை. அவர்களுடைய நுண்ணிய ஸ்பரிச உணர்ச்சி ஒப்பற்றதாயிருந்தது. கனத்தின் தாரதம்மியத்தை மிக நுட்பமாய் அறியும் ஆற்றலும் அவர்கள் பெற்றிருந்தார்கள். ஆகவே அவர்கள் நெய்யும் துணி எதுவும் உடை நயத்திலோ, அழகிலோ, வேலைப்பாட்டிலோ குறைவு படுவதில்லை. எண்ணியதை எண்ணியவாறே செய்து முடிப்பார்கள். பாவுக்குக் கஞ்சிபோட அவர்கள் வறுத்த அரிசியின் கஞ்சியை உபயோகித்தனர். "ஷபனம்" அல்லது இரவுப்பனி என்னும் துணிக்குக் கஞ்சியுடன் சிறிது விளக்குப் புகைக் கரியைச் சேர்த்தனர். தறிகள் திறந்த வெளியில் அமைக்கப்படுவதில்லை. மழைகாலமாகிய ஆடி, ஆவணி, புரட்டாசி மாதங்களில்தான் நெசவு அதிகம் நடந்தது. மழை காலமே நெசவுக்கு எற்ற காலமென்று கருதப்பட்டது. அப்போது ஆகாய வெளியில் ஈரங் காத்திருப்பதால், நூல் இழைகள் அடிக்கடி அறுதிருக்கு மென்பது காரணம் போலும். கோடை காலத்தில் தறிகளுக்குக்கீழே வாயகன்ற பாத்திரங்களில் தண்ணீர் வைக்கப்பட்டது. சாதாரணமாக, டாக்கா மஸ்லின் மடி ஒவ்வொன்றும் 20 கஜம் நீளமும் ஒரு கஜம் அகலமும் உள்ளதாயிருந்தது. துணியின் தரத்தை யொட்டி ஒரு மடி நெய்வதற்கு 10 நாளிலிருந்து 60 நாள் வரை பிடித்தது. மிக உயர்ந்த தரமுள்ள "மல்மல்காஸ்" அல்லது "சர்க்காரலி" என்னும் துணியில் அரை மடி நெய்வதற்கு ஐந்தாறு மாதம் வரையில் ஆவதுண்டு. மெல்லிய கோடு போட்டவை, பூவேலை செய்தவை, பல வர்ணம் கொடுத்தவை ஆகிய தினுசுகள் சாதாரணமாய் விற்பனைக்கு வந்தன. டாக்காவில் நெய்யப்பட்ட துணிகளுக்குள்ளே மிகவும் விலை யுயர்ந்தது "ஜாம்தானி" மஸ்லின் ஆகும். விசித்திரமான வேலைப்பாடுகள் பல அமைந்த இந்தத் துணி இந்தியாவின் அருங்கலைப் பொருள்களுக்குள்ளே ஒப்புயர்வின்றி விளங்கிற்று. பூவேலை செய்தவர்கள் பெரும்பாலும் எழை முஸ்லிம் ஸ்திரீகளும், வண்ணார்களின் மனைவிமாருமாவர். ஒரு தையல்கூட வெளியில் தெரியாவண்ணம் அவ்வளவு திற

மையுடன் அவர்கள் வேலை செய்தார்கள். கிழிந்துபோன அல்லது வேறு வழியில் பழுதாய்ப் போன மஸ்லின்களைப் புதுத் துணி போலவே செப்பனிட்டுக் கொடுக்கக்கூடிய சிலர் இருந்தனர். இவர்கள் மஸ்லினின் உடையிலிருந்து ஒரு தனி இழையை முழுவதும் எடுத்துவிட்டு அதற்குப் பதிலாகப் புதிய இழை யொன்றை எளிதில் புகுத்தி சரிப்படுத்தி விடுவார்கள். உயர்தர மஸ்லின்களை வெளியிடங்களுக்கு அனுப்பவேண்டியிருந்தால் மூங்கில் குழாய்களில் அடைத்து அனுப்புவது வழக்கம். இக்குழாய்கள் 20 கஜம் துணிக்குமேலே கொள்ளும்படியானவை. டில்லி சக்கரவர்த்திக்கு "மல்மல்காஸ்" மஸ்லின் அனுப்புவதென்றால், மேற்படி குழாய்களில் மஸ்லினை அடைத்து மேலே முலாம் பூசி விடுவார்கள். மஸ்லின் மடி ஒன்றின் விலை ரூ. 100 முதல் ரூ. 400 வரை இருந்தது. இந்தத் துணிகளின் அபூர்வ மென்மையை உத்தேசித்து அவற்றிற்கு அழகிய கற்பனைப் பெயர்கள் பல சூட்டப்பட்டன. "இரவுப் பனி" (ஷபனம்) "ஓடும் நீர்" (அபெரவான்) "நெய்த காற்று" என்பவைபோன்ற பெயர்கள் வழங்கின. "இரவுப்பனி" என்னும் துணியைப் பனி பெய்யும் காலத்தில் திறந்த வெளியில் கட்டினால், சிலந்தி வலையின் இழைகள் போன்ற அதன் இழைகளுக்கும் பனிக்கும் வேற்றுமை கண்டுபிடிக்க முடியாதாம். ஆயினும் அது மூன்றாந் தர மஸ்லின் தான். முதல் தரம் "மல்மல்காஸ்" (அரசர் மஸ்லின்) என்பது. "அபெரவான்" அல்லது "ஓடும் நீர்" இரண்டாந்தரத் துணி. டாக்கா மஸ்லினின் ஆச்சரியமான மென்மையைக் குறிப்பிடும் கதைகள் பல உண்டு. வங்காள நவாப் அலிவர்த்திகானின் ஹிந்து நெசவுகாரன் ஒருவன் அஜாக்கிரதையாக உயர்தர மஸ்லின் ஒன்றைத் தரையில் விடுத்துச் செல்ல அதைப் புல் என்று எண்ணி அவனுடைய பசு தின்றுவிட்டதாம். இதனால் கோபங் கொண்ட நவாப் அத்தொழிலாளியை நாட்டை விட்டுத் துரத்தினன் என்று ஒரு கதை சொல்லுகிறார்கள். மொகலாய சக்கரவர்த்தியான அரங்கசீப் ஒரு நாள் இராஜ சபையில் தன் மகள் ஆடையின்றி வருவதைக் கண்டு திடுக்கிட்டு அவளைக் கடிந்துகொள்ள, மகள் அதை மறுத்துத் தன் உடம்பில் ஒன்றன்மீது ஒன்றாய் எழு மஸ்லின் உடைகள் தரித்திருப்பதாக பதில் கூறினாள் என்று மற்றொரு கதை வழங்குகிறது.

## தொழிலுக்கு அழிவு காலம்

இவ்வாறு, மொகலாய மன்னர்களின் ஆதரவு பெற்றுச் செழித்தோங்கி உன்னத நிலை அடைந்திருந்த இவ்வரிய கலைக்கு, அயல்நாட்டு மலிவான மஸ்லின்கள் வரத் தொடங்கியபோது அழிவு காலம் ஆரம்பமாயிற்று. விரைவில் நைந்து போகக்கூடிய உபயோகமற்ற இத்துணிகள் இந்தியாவிற்குள் வருவதற்குத் தாராளமாய் அநுமதிக்கப்பட்டன. இதற்கு

மாருக, இந்தியாவிலிருந்து இங்கிலாந்து சென்ற துணிகளுக்கு அங்கே 100-க்கு 75 முதல் 80 வரையில் இறக்குமதி வரி விதிக்கப்பட்டது. பதினாறாவது பதினேழாவது நூற்றாண்டுகளில் அரேபியா, பாரஸீகம், எகிப்து, பெகு, மலாக்கா, ஸுமத்ரா, மத்திய தரைக் கடற்கரையிலுள்ள தேசங்கள் ஆகியவற்றில் டாக்கா மஸ்லின் ஏராளமாக வியாபாரமாகி வந்தது என்பதற்கு அயல்நாட்டுப் பிரயாணிகள் எழுதி வைத்திருப்பவை சான்று கூறுகின்றன. நவாப் அலிவர்த்திகானின் காலத்தில் தலைமை நெசவுத் தொழிலாளி ஒருவன் ஒரு தடவையில் 800 மஸ்லின் மடிகள் வரை வியாபாரியிடம் கொண்டுவந்து விற்பது சர்வ சாதாரணம் என்று மிஸ்டர் போல்ட்ஸ் என்பார் 1772-ம் ஆண்டில் எழுதினர். 1787-ம் ஆண்டில் டாக்காவின் கலெக்டராயிருந்த மிஸ்டர் டே, அப்போது வருஷத்தில் ஒரு கோடி ரூபாய்க்கு மஸ்லின் வியாபாரம் நடைபெற்றதென்று மதிப்பிட்டிருக்கிறார். இதில், ஐரோப்பாவுக்கு ஏற்றுமதியான துணிகளின் பெறுமானம் 30, 40 லட்சம் ரூபாய் இருக்கலாமென்றும் அவர் சொல்லுகிறார். முதன்முதலாக, 1785-ம் ஆண்டில்தான் இங்கிலாந்தில் மஸ்லின் உற்பத்தி செய்யப்பட்டது. இன்னும் பிற்காலத்திலே தான் அது இந்தியாவுக்கு வர ஆரம்பித்தது. ஆனல் இதற்குள்ளாக உயர்ந்த வரி விகிதங்கள் போட்டு டாக்காவின் ஏற்றுமதி வியாபாரத்தை அடியோடு தொலைத்துவிட்டார்கள். 1821-ம் ஆண்டில் நூலும் அயல்நாட்டிலிருந்து வரத் தொடங்கவே டாக்காவின் நூற்றல் தொழிலுக்கும் கேடு நேர்ந்தது. ஆண்டுதோறும் வியாபாரம் குறைந்து முடிவில் டாக்காவின் பெருமை அடியோடு மங்கியது. உள்நாட்டுத் தொழிலை அயல்நாட்டுப் போட்டியிலிருந்து காப்பாற்ற எவ்வித ஏற்பாடும் செய்யப்படவில்லை. ஆனல் இங்கிலாந்தில் அசாத்தியமான இறக்குமதி வரிகள் போட்டு இந்தியத் துணிகள் வரவொட்டாமல் செய்தார்கள். இவ்விரு காரணங்களாலும், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பிரசித்திபெற்று விளங்கிய அப்புராதனத் தொழில் வீழ்ச்சியுறத் தொடங்கி 1840-ம் ஆண்டுக்குள் அடியோடு அழிந்துபோயிற்று. பின்னர், எத்தகைய முயற்சியினாலும் அதற்குப் புத்துயிர் தருதல் இயல்வதாயில்லை. பின்வரும் புள்ளி விவரங்களிலிருந்து இதைத் தெளிவாக அறியலாம்:—

| வருஷம். | மஸ்லின் ஏற்றுமதியின் மதிப்பு. | | |
|---|---|---|---|
| | ரூ. | அ. | பை. |
| 1807 | 8,61,818 | 8 | 5 |
| 1810 | 5,56,996 | 0 | 0 |
| 1813 | 3,38,114 | 12 | 8 |
| 1817—18 | 15,24,974 | 1 | 9 |

| | |
|---|---|
| 1821—22 | 12,16,252 0 5 |
| 1825—26 | 6,29,183 4 3 |
| 1829—30 | 5,04,812 12 0 |
| 1831—32 | 3,62,747 5 0 |
| 1834—35 | 3,87,122 0 0 |

1840-ம் ஆண்டிற்குப் பிறகு மஸ்லின் வியாபாரமே நின்றுவிட்டது என்று சொல்லலாம். உள்நாட்டிலும் கிராக்கி இல்லாமற் போயிற்று. எப்போதாவது அருமையாக இரண்டொருவர் முன்பணம் கொடுத்து நெய்யச் செய்ததையல்லாமல், மற்றப்படி மஸ்லின் உற்பத்தியே கிடையாது. பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நெசவுகாரர்கள் தாங்களே சொந்தத்தில் மஸ்லின் நெய்து வியாபாரிக்கு லாபத்துடன் விற்றுவந்திருக்க, 1850-ம் வருஷத்தில் முன்பணம் கொடுத்து நெய்யச் சொன்னுலொழிய மஸ்லின் நெய்வார் யாருமிலர் ஆயினர்.

## விலை வித்தியாசம்

டாக்கா மஸ்லினுக்கும், அயல்நாட்டு மஸ்லினுக்கும் விலையில் மிகுதியும் ஏற்றத்தாழ்வு இருந்தது. 180-ம் நம்பருக்குக் குறைந்த மஸ்லின் வகைகளில், உள்நாட்டு மஸ்லின் நான்கு, ஐந்து மடங்குகூட விலை அதிகமாயிருந்தது. 1840-ம் வருஷத்தில் மெல்லிய நூலின் விலை விகிதங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தியத் தொழிலை அழித்த போட்டி எத்தகைய தென்பது ஒருவாறு விளங்கும் :—

| நூல் நம்பர். | நூலின் எடை. | ஒன்றரைச் சிட்டத்தின் விலை. இங்கிலாந்து நூல். | இந்திய நூல். |
|---|---|---|---|
| 200 | 1 0 0 | 0 3 0 | 0 13 0 |
| 190 | 1 0 18 | 0 2 15 | 0 10 0 |
| 180 | 1 1 15 | 0 2 15 | 0 6 0 |
| 170 | 1 2 16 | 0 2 10 | 0 5 0 |
| 160 | 1 4 0 | 0 2 10 | 0 4 0 |
| 150 | 1 2 16 | 0 2 10 | 0 3 10 |

1840-ம் வருஷத்திற்குப் பிறகு, டாக்காவில், 30-ம் நம்பர் முதல் 200-ம் நம்பர் வரையில் இங்கிலாந்து நூலே உபயோகிக்கப்படலாயிற்று. சிறிதளவு அங்கேயே உற்பத்தியான நூல் 30-ம் நம்பருக்குக் குறைந்ததேயாகும். இவ்வாறு, முப்பதாண்டு காலத்தில், டாக்கா இங்கிலாந்துடன் நடத்திவந்த 30 லட்சம் ரூபாய் ஏற்றுமதி வியாபாரமும் அழிவுற்றது. அந்த ஜில்லாவில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் பிழைப்பளித்து வந்த

நூற்கும் தொழிலும் கை விடப் பட்டது. உழைப்பாளிகள் பல்லாயிரம் பேருக்கு ஜீவனோபாயமாயிருந்து வந்த நூற்றல், நெசவுத் தொழில்கள் அன்னியர் கைகளுக்கு மாறின. அவ்வன்னியர்கள் இந்தியாவின் வெளி நாட்டு வியாபாரத்தைக் கைப்பற்றியதோ டன்றி இந்தியாவின் உள் நாட்டுத் தேவைகளுக்கே துணி அனுப்பலாயினர். மலிவான பரதேசித் துணி டாக்காவின் அற்புதக் கலையைக் கொன்றது. அதைப் பாதுகாக்க யாரும் எதுவும் செய்தாரில்லை. பத்தரை மாற்றுப் பசும் பொன்னுக்கும், முலாம் பூசிய பித்தளைக்கும் உள்ள வேற்றுமையை மக்கள் அறியாது போயினர். டாக்காவின் மகிமை குன்றியது. 1800-ல், டாக்கா நகரின் ஜனத்தொகை 2 லட்சமாயிருந்திருக்க, 1840-ல் அது 80,000 ஆகிவிட்டது. நெசவுகாரர்களும் மற்றவர்களும் தங்கள் பரம்பரைக் கைத்தொழிலை விட்டு விவசாயம் முதலிய துறைகளுக்குச் சென்றார்கள். பார்லிமெண்டு விசேஷக் கமிட்டியின் முன்பு ஸர் சார்லஸ் டிரிவேலியன் சாட்சியம் தருகையில் இந்தத் துயரகரமான விஷயத்தை எடுத்துச் சொன்னார். ஆயினும் பயன் என்ன? டாக்காவின் அவ்வொப்பற்ற அற்புதக்கலை, உயிரற்ற துணிக்கு உயிர் புகட்டும் கைத்திறன், இந்திய நாகரிகச் செல்வத்தின் ஓர் அருஞ் சின்னமாய் விளங்கிய தொழில் அதற்குள்ளாகவே பண்டைக் காலத்துப் பழங் கதை யாகிவிட்டது.

## இரண்டாம் அத்தியாயம்

### இராட்டை நெசவுத் தொழில்கள் அழிந்த வரலாறு

ஆங்கிலேயர் இந்நாட்டில் அடி வைப்பதற்கு முன்பும், அதற்குப் பிறகு சுமார் நூற்றைம்பது வருஷகாலம் வரையிலுங்கூட, பாரத நாடு உலக முழுவதிற்கும் ஆடை அளித்துவந்த தென்பதைச் சென்ற அத்தியாயத்தில் கவனித்தோம். இவ்வாறு, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நாட்டின் உயிர்நாடி போலிருந்த இப்புராதனக் கைத்தொழில், பொருளாதாரக் கொடுமைகளின் கீழ் அகப்பட்டு அதிவிரைவில் அழிந்துபட்டது. தற்போது, பரதேசித் துணி இறக்குமதி செய்யும் தேசங்களில் உலகிலேயே முதன்மையா யிருப்பது இந்தியாவே யாகும். இந்தத் தலைகீழான மாறுதலுக்குரிய காரணங்களைப்பற்றி இவ்வத்தியாயத்தில் சற்றே விரிவாக ஆராய்ச்சி செய்யத் தொடங்குகிறோம்.

### ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வந்ததேன்?

இந்தியாவில் உற்பத்தியாகும் சரக்குகளை ஏற்றுமதி செய்து கொண்டு போய் விற்பதால் நல்ல லாபம் கிடைக்கும் என்ப தறிந்தே ஐரோப்பிய நாட்டார் இந்தியாவைத் தேடி வந்தார்களென்று முன்னமே குறிப்பிட்டிருக்கிறோம். அப்போது இங்கிலாந்திலும் சரி, மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் சரி, இந்தியாவில் கொண்டுவந்து விற்கும்படியான உற்பத்திச் சரக்கு எதுவும் கிடையாது. கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்து வாசனைத் திரவியங்களும், இந்தியாவிலிருந்து பருத்தி ஆடைகளும் ஏற்றுமதி செய்து கொண்டுபோய் விற்றல் நல்ல லாபகரமாய் இருந்தபடியால், போர்ச்சுகீயரும், டச்சுக்காரரும், பிரஞ்சு நாட்டாரும், கடைசியாக ஆங்கிலேயரும் ஒருவர்பின் ஒருவராக இங்கே வந்து மேற்படி வியாபாரத்துக்காகப் போட்டியிட லானார்கள். இப்போட்டியிலிருந்து யுத்தங்களும் மூண்டன. முடிவில், பிரிட்டிஷார் வெற்றியடைந்து மற்ற நாட்டாரைத் துரத்திவிட்டுக் கீழ்நாட்டு வியாபாரத்தைப் பெரிதும் தாங்களே ஏகபோகமாகக் கைப்பற்றிக்கொண்டனர். இவ்வாறு கீழ்நாட்டில் ஆங்கில அதிகாரம் நிலை நாட்டப்பட்ட வரலாறு கிழக்கிந்தியக் கம்பெனியின் சரித்திரமேயாகும். முதன்முதலில் 1600-ம் ஆண்டில் எலிஸபெத் மகாராணியிடம் உரிமைப் பத்திரம் பெற்று இந்தக் கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டது. இந்தியாவில் கம்பெனியின் முதலாவது வர்த்தகசாலை 1610-ம் வருஷத்தில் மசூலிப்பட்டினத்தில் ஏற்பட்டது. 1621-ல் சூரத்திலும், 1639-ல் சென்னையிலும், 1640-ல் ஹூக்ளியிலும் வர்த்தகசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

இதற்கு முன்னும் இங்கிலாந்துக்குச் சிறிதளவு இந்தியத் துணிகள் போய்க்கொண்டிருந்தன. ஆனால் இவை பிறநாடுகள் மூலமாகச் சுற்றிக் கொண்டு சென்றன. கம்பெனியின் வர்த்தகசாலைகள் இந்தியாவில் ஏற் பட்டபின்னர், இந்தியத் துணிகள் நேராகச் சென்று இங்கிலாந்தில் இறக்குமதியாகத் தொடங்கின. சரக்கு நன்றாயிருந்த படியால் கிராக்கியும் அதிகமாயிற்று. வியாபாரம் விரைவாக வளர்ந்தது. இந்தியாவில் உள் நாட்டிற்குள் பிரவேசிக்கும் விஷயத்தில் டச்சுக்காரர் வழி காட்டி யிருந்த னர். அவர்கள் கிழக்கே சோழமண்டலத்தின் கடற்கரையோரமாக வர்த் தகசாலைகள் ஏற்படுத்திக்கொண்டும், மேற்கே சூரத்திலிருந்து உள் நாட் டில் பிரவேசித்தும் பருத்தித் துணிகள் வாங்கிவந்தார்கள். அக்காலத்தில் டச்சுக்காரர் படேவியாவுக்குக் கொண்டுபோன துணிகளைப்பற்றி டாக் டர் மோர்லாண்டு என்பார் பின்வரும் புள்ளி விவரங்களைத் தந்திருக் கிறார் :—

| வருஷம். | சோழமண்டலம். | வங்காளம். | கூர்ஜரம். | மொத்தம். |
|---|---|---|---|---|
| 1625 | 1700 கட்டுகள் | ... | 800 | 2500 |
| 1641 | 2500 ,, | ... | 1000 | 3500 |
| 1657 | 4000 ,, | 500 | 1200 | 5700 |

மேற்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து வியாபாரம் எவ்வளவு விரை வாகப் பெருகி வந்ததென்பது நன்கு விளங்குகிற தன்றோ? சூரத்திலி ருந்து ஜாவாவுக்குப் பிரயாணமான கப்பல் ஒன்றின் சரக்கு ஜாபிதாவில் பருத்தித் துணிகளுக்குமட்டும் முப்பது வெவ்வேறு பதிவுகள் இருந்தன. பாரஸ்டர் என்பவர் எழுதிய "ஆங்கில வர்த்தகசாலைகள்" என்ற புத்த கத்தில் வெவ்வேறு வகை இந்தியத் துணிகள் 150-க்கு ஜாபிதா தந்திருக் கிறார். இவ்வளவு வகைத் துணிகளுக்கும் இறக்குமதி செய்த நாடுகளில் கிராக்கி யிருந்துவந்தது. முதன்முதலில், ஆங்கிலநாட்டார் இந்தியா வுக்குப் பணம் அனுப்ப அவ்வளவு விரும்பவில்லை யென்று தெரிகிறது. இங்கிலாந்தில் இந்தியத் துணிக்குக் கிராக்கி இல்லையென்றும், ஆகையால் துணி வியாபாரத்தை ஆசிய, ஆப்பிரிக்க தேசங்களுடன் நிறுத்திக்கொள் ளுவது நலமென்றும் ஸர் தாமஸ் ரோ கிழக்கிந்தியக் கம்பெனி டைரக்டர் களிடம் சொன்னார். ஆனால் இவர் கூறியது தவறென்பதாக விரைவி லேயே நன்கு விளங்கிற்று. நாளுக்குநாள் இந்தியத் துணிகளுக்குக் கிராக்கி அதிகமாகி வந்தது. கூர்ஜரத்திலும், சோழமண்டலத்திலும், வங்காளத்திலும் சரக்குகள் வாங்கப்பட்டன. சோழமண்டலத்துச் சரக்கு களில்தான் நல்ல லாபம் கிடைத்ததாகத் தெரியவந்தது. எனவே, டச் சுக்காரர்களைப்போல் ஆங்கிலேயரும் பல வருஷ காலம் அவ்விடத்திலேயே அதிக கவனம் செலுத்தி வந்தனர். சூரத்திலிருந்து காலிகோ துணி ஏற்று மதியும் வரவர அதிகமாகி வந்தது. 1614-ம் ஆண்டில் 12,500 மடிகள்

ஏற்றுமதி யாயின. 1619-ல் "ராயல் ஆன்" என்னும் கப்பல் 14,000 மடிகளை ஏற்றிக்கொண்டு சென்றது. ஆனால் இதற்கு ஆறாண்டுகளுக்குப் பின்னர் அதைப்போல் 15 மடங்கு துணிக்குக் கிராக்கி உண்டாகி விட்டது. 1625-ல் 165,000 மடிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. 1614-ம் வருஷத்தில் 500 பவுன் பெறுமானமுள்ள நூல்தான் அனுப்பப் பட்டது. 1628-ம் ஆண்டிலோ 528 கட்டு ஏற்றுமதி யாயிற்று. "நூல் விற்பனையினால் இங்கே வியாபாரத் தேக்கம் ஏற்பட்டுவிடுமென்று பயப்பட வேண்டியதில்லை. இந்தியாவிலிருந்து இதுவரையில் வந்திருக்கும் சரக்கைப்போல் பல மடங்கு வந்தாலும் விற்பதற்கு இடமிருக்கிறது" என்று கம்பெனியின் டைரக்டர்கள் எழுதினார்கள். இவ்வாறு நூல் ஏற்றுமதி செய்ததினால், இந்தியாவில் நூல் விலை கிராக்கியாகி இந்திய நெசவுக்காரர்கள் கஷ்டமடைந்ததாகத் தெரியவருகிறது. சூரத்திலும், புரோச்சிலும் இருந்த நெசவுகாரர்கள், நூல் ஏற்றுமதியை நிறுத்தினாலன்றித் துணி விற்கமாட்டோமென்று சொன்னார்களாம். 1627-ம் வருஷம் முதல் 1640-ம் வருஷம்வரையில் காலிகோ ஏற்றுமதி ஏறக்குறைய ஒரே அளவாக இருந்துவந்தது. வருஷம் 50,000 மடிக்குக் குறைவில்லை. இந்தியாவில் சராசரிக்கு மடி ஐந்து ரூபாய் வீதம் வாங்கி இங்கிலாந்தில் 15 ரூபாய் வீதம் விற்றார்கள். ஆகவே, லாபம் கொள்ளையாகக் கிடைத்தது என்று சொல்லவேண்டியதில்லையல்லவா? இங்கிலாந்தில் இந்தியத் துணி வியாபாரம் செய்வதுபற்றி இக்காலத்திலேயே சிலர் கூக்கூரல் கிளம்பினார்கள். இவர்களுடைய ஆட்சேபங்கள் சரியானவையல்லவென்று கிழக்கிந்தியக் கம்பெனியார் பலமாக வற்புறுத்தினார்கள். இதற்கு முன்னெல்லாம் இங்கிலாந்து துணி வகைகளுக்காக ஹாலந்து, பிரான்ஸ் முதலிய தேசங்களுக்கு வருஷம் ஐந்து லட்சம் பவுன் கொடுத்து வந்ததாகவும், அதற்கு மாறாகத் தற்போது இந்தியத் துணி வியாபாரத்தின் மூலமாய் அவ்வளவு பணம் அந்நாடுகளிலிருந்து இங்கிலாந்து பெற்று வருவதாகவும் அவர்கள் கூறினார்கள். இதற்கு முப்பதாண்டுகளுக்குப் பிறகும் இந்தியத் துணி வியாபாரம் லாபகரமாகவே இருந்தது. 1651-ம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனியின் டைரக்டர்கள் "இந்தியாவிலிருந்து வரும் சரக்குகளுக்குள் காலிகோ துணிக்குத்தான் கிராக்கி அதிகம்" என்று எழுதினார்கள்.

## கொள்ளை லாபமும் கூக்குரலும்

ஆங்கில மக்கள் இந்தியாவின் ஆடைகளிடம் தீவிர மோகங் கொண்டு விட்டார்கள். எனவே, இங்கிலாந்தில் இந்தியத் துணிகளுக்கு இடைவிடாத கிராக்கி யிருந்துவந்தது. இவ்வியாபாரத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியார் பெரு லாபம் அடைவதைக் கண்ட தனி மனிதர்கள் பலரும் இந்தியத் துணி வியாபாரம் செய்யத் தொடங்கினார்கள். அவர்களுக்கும்

ஏராளமான லாபம் கிடைத்தது. இது குறித்து ஒரு சரித்திராசிரியர் எழுதுவதாவது :—“இரண்டாவது சார்லஸ் அரசன் பட்டத்திற்கு வருவதற்கு முன்பு தேம்ஸ் நதியிலிருந்து கங்கை நதி முகத்வாரத்திற்கு ஒரே ஒரு கப்பலேனும் சென்றதாகத் தெரியவில்லை. அந்த வருஷத்திலேதான் அந்தச் செழிப்பான நாட்டிலிருந்து இங்கிலாந்துக்கு 8,000 பவுன் மதிப்புள்ள சரக்குகள் வந்தன. இவ்வியாபாரம் விரைவாக வளர்ந்து 24 வருஷத்திற்குள் 3 லட்சம் பவுன் சரக்குகள் வரத் தொடங்கிவிட்டன. இதில் ஏராளமான லாபம் கிடைத்த படியால் 1676-ம் வருஷத்தில் கம்பெனியின் பங்குக்காரர் ஒவ்வொருவரும் தாங்கள் போட்ட மூலதனத்தைப்போல் மற்றொரு மடங்கு இனமாகப் பெற்றனர்கள். இவ்விரு மடங்கு பங்குகளின்மீதும் 100 க்கு 25 வீதம் ஐந்து வருஷகாலத்திற்கு லாபம் பகிர்ந்து கொடுக்கப்பட்டது.” இத்தகைய கொள்ளை லாபத்தைப் பார்த்துப் பேராசை கொண்ட பிறரும் புதிய புதிய கம்பெனிகளை ஏற்படுத்திக் கிழக்கிந்தியக் கம்பெனியுடன் போட்டி யிடலாயினர். இந்த வியாபாரப் பொறுமையையும், அதன் பலாபலன்களையும் பற்றி நாம் இங்கே விரிவாகக் கூறுதல் அவசியமில்லை. 17-ம் நூற்றாண்டின் இறுதிக்குள் போட்டிக் கம்பெனிகளின் வித்தியாசங்கள் எல்லாம் ஒழிந்து ராஜி ஏற்பட்டுவிட்டதென்று சொல்வதே இங்கே போதுமானது. மற்றக் கம்பெனிகளும் கிழக்கிந்தியக் கம்பெனியுடன் சேர்ந்துவிடவே, இவ்வாறு ஐக்கியமுற்ற கம்பெனி ஏகபோக உரிமையுடன் வியாபாரம் செய்யத் தொடங்கிற்று. இதே காலத்தில்தான் இங்கிலாந்தில் இந்தியத் துணிகளுக்குப் ‘பிரீசம்’ உச்சநிலை அடைந்திருந்தது. வருஷந்தோறும் 1,60,000 பவுன் பெறுமான காலிகோத் துணிகள் இறக்குமதி யாவதாக மதிப்பிடப்பட்டது. ஆடைகள், படுக்கை விரிப்புகள், திரைச் சீலைகள் முதலியவற்றிற்கான இந்தியக் காலிகோ துணிகளும், மற்றத் துணிகளும் வருஷம் மூன்று லட்சம் பவுனுக்கு வாங்கப்படுவதாக 1681-ல் காமன்ஸ் சபையில் கூறப்பட்டது. பின்வரும் இறக்குமதிக் கணக்கைக் கவனித்தால் வியாபாரம் எவ்வளவு விரைவாக வளர்ந்துவந்ததென்பது நன்கு விளங்கும் :—

| வருஷம். | இறக்குமதியான மடிகள். |
|---|---|
| 1673-78 | 39,03.500 |
| 1680-83 | 85,64,000 |

பிந்திய காலத்தில் சராசரி வருஷம் 20 லட்சம் மடிகளுக்குமேல் இறக்குமதியானதாக ஏற்படுகிறது. ஒவ்வொரு மடியின்மீதும் 9 அணா முதல் $2\frac{1}{4}$ ரூபாய் வரையில் இறக்குமதி வரி விதித்திருந்தும் இவ்வளவு துணி இறக்குமதியாயிற்று என்பதைக் கவனிக்கவேண்டும். இங்கிலாந்தில் கம்பளி நெசவுத் தொழில் செய்தவர்களிடையே இது காரணமாகப் பெரும் பொறுமை தோன்றியது. இந்தியாவின் காலிகோ, பட்டு வியாபாரங்களைக்

குறித்து அவர்கள் பெருங் கூச்சல் கிளப்பினர்கள். இந்தியப்பட்டாடைகளை எவரும் அணியக்கூடாதென்று சட்டம் செய்யவேண்டு மென்பதாகக் காமன்ஸ் சபைக்கு விண்ணப்பம் செய்துகொண்டார்கள். இதன் பயனுகைப் பருத்தித் துணிகளுக்கும், பட்டாடைகளுக்கும் ஏராளமான இறக்குமதி வரி போடப்பட்டது. 1685-ம் வருஷத்தில், "இந்தியாவில் உற்பத்தியான காலிகோக்கள், பட்டாடைகள், இன்னும் பருத்தி, சணல், அல்லது பட்டு நூல் கலந்து நெய்த துணிகள் எல்லாவற்றின்மீதும்" 100 க்கு 10 வீதம் இறக்குமதி வரி விதிக்கப்பட்டது. 1690-ல் இவ்வரியை இருமடங் காக்கினர்கள். இவ்வளவு நிர்ப்பந்தங்கள் இருந்தும், இந்தியக் காலிகோக்களும் பட்டுகளுமே ஆங்கில நாட்டார் சாதாரணமாகத் தரிக்கும் உடைகளாகிவிட்டன. லெக்கி என்பார் எழுதிய இங்கிலாந்து தேச சரித்திரத்தில், 1688-ம் வருஷத்துப் பெரும்புரட்சிக்குப் பின்னர் மேரி இராணி தன் கணவனுடன் இங்கிலாந்துக்கு வந்தபோது இந்திய வர்ணக் காலிகோ துணிகளிடம் அளவில்லா மோகத்தையும் அவள் தன்னுடன் கொண்டு வந்தாளென்றும், அம்மோகம் எல்லா வகுப்பு ஜனங்களிடமும் விரைவாகப் பரவி விட்டதென்றும் கூறியிருக்கிறர். யார்க்ஷயர், வில்ட்ஷயர், நார்விச், ஸ்பிடல்பீல்ட்ஸ் முதலிய இடங்களைச் சேர்ந்த தொழிற்சாலை முதலாளிகளும், வியாபாரிகளும் ஆத்திரமாகக் கிளர்ச்சி செய்தார்கள். அவர்களுடைய கட்சியை மெக்காலே தமது ஆங்கில தேச சரித்திரத்தில் பின் வருமாறு எடுத்துக் கூறுகிறர் :—"முன்னெல்லாம் நமது நாட்டு ஆடுகள் கொடுத்த மயிரினல் நமது சொந்தத் தறிகளில் நெய்த கம்பளித் துணியினலேயே நமது உடைகள், படுக்கைகள் எல்லாம் செய்யப்பட்டு வந்தன. அந்தக் காலம் நாட்டுப்புறங்களில் ஆடு மேய்த்தவர்களுக்கு மட்டுமென்றி, நகரத்தில் தொழில் செய்தவர்களுக்கும் சந்தோஷமான காலமா யிருந்தது. எலிஸபெத் மகாராணியின் காலத்தில் பெரிய பெரிய மாளிகைகளில் எல்லாம் தொங்கவிட்டிருந்த நாட்டுத் திரைச்சீலைகள் இப்போதெங்கே? நமது மூதாதைகள் ஆங்கில தேசத்து ஆடுகளின் மயிரைக்கொண்டு ஆங்கில மக்களின் கரங்களால் நெய்த துணியை யன்றி வேறெதையும் தொடாதிருந்தார்கள். அவர்கள் வழித் தோன்றிய இக்காலத்துப் பெரிய மனிதர்கள் மூர்ஷிதாபாத்திலிருந்து வந்த காலிகோ உடுப்பும், பட்டுக் காலுறையும் அணிந்து டம்பமாக வெளி வருகிறர்களே? இது வெட்கங்கெட்ட தனமல்லவா?" இதுபோன்ற புகார்கள் இன்னும் பல அடங்கிய ஓர் அநாமதேயத்துண்டுப் பிரசுரம் "முழு உண்மை" என்னும் பெயருடன் 1696-ல் வெளியிடப்பட்டது. கம்பெனியார் கொண்டுவரும் இந்திய மஸ்லினைப்பற்றி அதில் முக்கியமாகக் குறை கூறப்பட்டிருந்தது. மஸ்லின் துணியைப் பாதி ஆத்திரமாயும் பாதி பரிகாசமாயும் அத்துண்டுப் பிரசுரம் தாக்கியது. "உடை

மோகம் ஆளை மயக்கும் ஒரு பொல்லாத மந்திரவாதியைப் போன்றது. ஓர் உடை எவ்வளவுக்குக் கிராக்கியாயும் அபூர்வமாயும் இருக்கிறதோ அவ்வளவுக்கு ஜனங்கள் அதனிடம் அதிக மோகம் கொள்கிறார்கள்! இல்லாவிடில் கேவலம் மஸ்லின் துணியை கஜத்துக்கு 30 ஷில்லிங் கொடுத்து யாராவது வாங்குவார்களா? உண்மையில், மஸ்லின் என்பது ஒரு துணியா? வெறும் நிழல்! கையால் தொடவும் முடியாதது!" என்று அப்பிரசுரம் கூறிற்று. அது வெளியாவதற்குச் சில வருஷங்களுக்கு முன்பு, பிரேதங்களின்மீது சுற்றிச் சவப்பெட்டியில் அடக்கம் செய்யக் கம்பளியைத்தான் உபயோகிக்கவேண்டுமென்று பார்லிமெண்டில் ஒரு சட்டம் செய்திருந்தார்கள். "உயிருடனிருப்பவர்கள் விஷயத்திலும் இத்தகைய சட்டம் செய்யப்படுமென்று எதிர்பார்த்தவர் சிலர் இல்லாமற் போகவில்லை." உள்நாட்டு வியாபாரிகளின் கோபத்தை நன்கெடுத்துக் கூறியவர் டேனியல் டீபோ (Daniel Defoe) என்பார். அவர் எழுதியதாவது:—"கிழக்கிந்தியச் சாமான்களிலே நமது ஜனங்களுக்கு மோகம் நன்றாய் விழுந்துவிட்டது. முன்னெல்லாம் படுக்கை விரிப்புகளாகவும், குழந்தைகள், சாதாரண ஜனங்கள் முதலியோரின் உடைகளாகவும் உபயோகிக்கப்பட்ட சீட்டிகளும், காலிகோக்களும் தற்போது நமது சீமாட்டிகளின் நாகரிக அணியாகிவிட்டன. சில வருஷங்களுக்கு முன் பணிப்பெண்கள்கூட அலட்சியம் செய்த இந்திய ஜமக்காளங்களை இப்போது பெரிய குடும்பங்களைச் சேர்ந்த மாதர்கள் தரித்து மகிழ்கிறார்கள். தரையில் விரிக்கப்பட்டுக் கிடந்த சீட்டிகள் இப்போது சீமாட்டிகளின் முதுகுக்கு ஏறிவிட்டன. கால் துடைக்க உபயோகப்பட்ட துணிகள் பெண்களின் மார்க்கச்சு ஆகிவிட்டன. இராணியுங்கூட இந்நாளில் சீனப்பட்டும், காலிகோவும் அணிந்து மகிழ்ச்சியுடன் வெளிவந்துலாவலானாள். இதுமட்டுமா? இந்தியக் காலிகோ துணி நமது ஸ்நான அறைகளிலும், படுக்கை அறைகளிலும், திரைகளிலும், படுக்கைகளிலும் வந்து புகுந்துவிட்டது. சுருங்கச்சொன்னால், பெண்களின் உடைகளும் சரி, மற்ற வீட்டுச் சாமான்களும் சரி, எதெதற்குத் துணி தேவையோ அவையெல்லாம் இந்தியத் துணியினாலேயே செய்யப்பட்டன. பொதுவாக இந்தியாவிலிருந்து வரும் சரக்குகளெல்லாம் பெரும்பாலும் நம்முடைய விலைக்குக் குறைவாகவே விற்கப்படுகின்றன. இந்தியாவிலிருந்து இவ்வளவு தூரம் கொண்டுவந்து இறக்குமதி செய்து ஏராளமான லாபம் வைத்து விற்றபோதிலும் அவற்றை நம்முடைய மலிவான துணிகளையும்விட சரசமாக விற்றல் சாத்தியமாயிருக்கிறது." இந்தியத் துணிகளின் உறுதியும், விலைமலிவுந்தான் அவை இங்கிலாந்தில் ஏராளமாகச் செலவழிந்ததற்கு முக்கிய காரணங்களாகும். இதன் பயனாக, உள்நாட்டுத் தொழிலாளரின் கோபம் அளவு கடந்ததாகி ஒரு முறை கால்செஸ்டர் என்னு

மிடத்தில் அவர்கள் கலகம் செய்யவும் கிளம்பிவிட்டார்கள். அங்கு இந்தியக் காலிகோ அணிந்திருந்த ஸ்திரீகளை ஜனங்கள் வளைந்துகொண்டு அவமானப்படுத்தினார்களென்று டேனியல் டிபோ கூறுகிறார். இந்தக் கிளர்ச்சிகள் எல்லாம் பயன் தராமற் போகவில்லை. 1700-ம் ஆண்டுக்குப் பிறகு பார்லிமெண்டு சபையார் ஒன்றன்பின் ஒன்றாகப் பல சட்டங்கள் இயற்றி இங்கிலாந்தில் எவரும் இந்தியத் துணி அணியாவண்ணம் தடுக்கலாயினர்.

## தடைமுறைச் சட்டங்கள்.

1700-ம் ஆண்டில், மூன்றாவது வில்லியம் அரசனின் ஆட்சியில், இந்தியாவிலிருந்து வரும் அச்சடித்த காலிகோ துணிகளின் இறக்குமதியைத் தடுக்க ஒரு சட்டம் இயற்றப்பட்டது. இதன்பயனாக, இந்தியாவிலிருந்து சாதாரண காலிகோக்களைத் தருவித்து இங்கிலாந்திலேயே அச்சடித்துக்கொள்ளும் வழக்கம் பரவிற்று. ஆனால், இதுவும் 1721-ல், முதலாம் ஜார்ஜ் அரசனின் ஆட்சியில் நிறுத்தப்பட்டது. அவ்வருஷத்தில் அச்சடித்த காலிகோ துணிகளையே யாரும் அணியக்கூடாதென்று சட்டம் செய்யப்பட்டது. இச்சட்டத்தை மீறி அத் துணி தரிப்போருக்கு ஐந்துபவுனும், விற்பவர்களுக்கு இருபது பவுனும் அபராதம் ஏற்படுத்தப்பட்டது. இதற்குப் பதினான்டுகளுக்குப் பிறகு கலப்புத் துணிகள் மீதிருந்த தடையை நீக்கிவிட்டு, முழுதும் பருத்தி நூலாலான அச்சுத் துணிகளுக்குமட்டும் தடைச் சட்டம் இயற்றினார்கள். ஆயினும் 'பெண்களின் கோணல் பிடிவாதத்தினாலோ, நாகரிக உடைப் பித்தினாலோ' காலிகோ துணி அணிவதை அவர்கள் நிறுத்திய பாடில்லை. 1774-ம் வருஷத்தில் — மூன்றாம் ஜார்ஜ் மன்னனின் ஆட்சியில் — இங்கிலாந்தில் விற்கப்படும் பருத்தித் துணிகள் எல்லாம் உள்நாட்டிலேயே நூற்று நெய்தனவா யிருக்கவேண்டுமென்று சட்டம் செய்யப்பட்டது. இந்தியாவில் உற்பத்தியான துணிகள், மறுபடியும் வேறு தேசங்களுக்கு அனுப்புவதற்காக உத்தேசிக்கப்பட்டாலன்றி, இங்கிலாந்தில் இறக்குமதியாகக் கூடாதென்று தடுக்கப்பட்டது. இச்சட்டங்களை மீறி நடப்போருக்கெல்லாம் கடுமையான அபராதங்கள் விதிக்கப்பட்டன. இவையெல்லாம் இந்தியத் துணிப் போட்டியை ஒழித்து உள்நாட்டுத் தொழிலைப் பாதுகாத்தலையே நோக்கமாகக் கொண்டவை யாகும். மஸ்லின்கள், சாதாரண காலிகோக்கள் முதலிய சிலவகைத் துணிகள் இந்தத் தடைச் சட்டங்களின் கீழ்வரவில்லை. ஆனால் அவைகளின்மீது ஏராளமான இறக்குமதி வரி விதிக்கப்பட்டது.

## பதினெட்டாம் நூற்றாண்டில் நிலைமை

மேற்சொன்ன இறக்குமதி வரிகளைப்பற்றி ஆராயப் புகுவதற்கு முன், பதினெட்டாம் நூற்றாண்டில் இந்தியாவில் நடந்த பிரிட்டிஷ்

வியாபாரத்தையும், இராஜ்ய நிர்வாகத்தையும் பற்றிச் சுருக்கமாகக் கூறுதல் அவசியமாகும். அந்நூற்றுண்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்தில் இந்தியக் காலிகோ துணி இறக்குமதியின் நிலைமையைப் பின்வரும் புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம் :—

| வருஷம். | இறக்குமதியான காலிகோ மடிகள். |
|---|---|
| 1699 | 853,034 |
| 1700 | 951,109 |
| 1701 | 826,101 |

இதன் பின்னர், முன்னமே சொன்னது போல், இந்தியச் சரக்குகளின் இறக்குமதி பலவகைத் தடைச் சட்டங்களுக்கு உட்படுத்தப்பட்டது. இச்சட்டங்கள் அமுலிலிருந்த காலமாகிய 1708 முதல் 1788 வரையில், கிழக்கிந்தியக் கம்பெனியார் இங்கிலாந்திலிருந்து 4,42,380 பவுன் பெறுமான தங்கமும், 92,228 பவுன் பெறுமான சாமான்களும் ஏற்றுமதி செய்தார்கள்; 7,58,042 பவுன் பெறுமான சரக்குகள் இறக்குமதி செய்தார்கள். இறக்குமதி செய்த பொருள்களில் முக்கியமானவை இந்தியக் காலிகோ, பட்டு முதலியவைகளே. இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியார் விற்பனை செய்த பொருள்கள் மிகவும் சொற்பம். ஆனால் இங்கிருந்து கொண்டுபோய் வெளிநாடுகளில் விற்ற பட்டு, பருத்தி சரக்குகளோ ஏராளம். 1774-ம் ஆண்டிலிருந்து 1792-ம் ஆண்டு வரையில் கம்பெனியார் வங்காளம், சென்னை, சூரத் இம் மூன்றிடங்களிலிருந்தும் ஏற்றுமதி செய்து விற்ற துணிகளுக்கு 41-ம் பக்கத்தில் விவரம் காண்க.

வியாபாரம் விரைவாகப் பெருகி வந்தது. ஆனால் வியாபாரத்தையும் விட விரைவாக இராஜ்யாதிகார ஆசை வளர்ந்து வந்தது. 1745-ம் ஆண்டு வரை இந்தியாவில் கம்பெனியின் ஆளுகையின் கீழ் வந்த பிரதேசங்கள் மிகச் சிலவாகும். அதுவரையில் கம்பெனியார் வெறும் வியாபாரிகளாக மட்டுமே இருந்து வந்தனர். கம்பெனியின் ஊழியர்கள் சிலர் இராஜ்யாதிகாரத்துக்கு ஆசைப்பட்டதுண்டு. அதன் பயனாக யுத்தங்கள் நேர்ந்து கம்பெனியின் வியாபார உரிமைகளும் போய்விடுமோ வென்று அஞ்ச நேர்ந்ததேயன்றி வேறு பயன் விளையவில்லை. உதாரணமாக, 1690-ல் சைல்டு என்பவர் பம்பாய்க் கவர்னராயிருந்தபோது இவ்வாறு நேர்ந்தது. கம்பெனியார் ஆதியில் வர்த்தகர்களாகவே இருந்தார்களென்பதற்கு, கம்பெனி வர்த்தகசாலைகளின் பிரபல உத்தியோகஸ்தர்களுடைய பட்டப் பெயர்களே தக்க சான்றாகும். நிர்வாக சபையின் பிரதம அங்கத்தினர் "கனம் பொருந்திய ஏஜண்ட் கவர்னர்" என்று அழைக்கப்பட்டார். இவருக்கு வருஷம் 300 பவுன்தான் சம்பளம். இவருக்கு அடுத்த படியில் "கணக்கர்," "பண்டசாலை அதிகாரி", "வாடிக் கைக்காரர்" என்போர் வந்தனர். நிர்வாக

| வருஷம். | வங்காளத் துணி. | | சென்னைத் துணி. | | சூரத் துணி. | | மொத்தம். | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மடிகள். | விற்பனைத் தொகை (பவுன்.) | மடிகள். | விற்பனைத் தொகை (பவுன்.) | மடிகள். | விற்பனைத் தொகை (பவுன்) | மடிகள். | விற்பனைத் தொகை (பவுன்.) |
| 1771 | 604,579 | 1,073,841 | 114,710 | 261,893 | 131,198 | 91,300 | 850,665 | 1,427,034 |
| 1772 | 626,160 | 1,035,686 | 273,766 | 523,094 | 147,029 | 87,176 | 1,046,955 | 1,045,956 |
| 1773 | 761,489 | 1,224,467 | 134,789 | 505,533 | 58,138 | 65,231 | 954,416 | 1,795,231 |
| 1774 | 616,226 | 1,105,230 | 207.086 | 644,563 | 38,366 | 54,788 | 861,678 | 1,804,591 |
| 1775 | 517,761 | 960,224 | 181,950 | 583,765 | 47,405 | 62,355 | 747,166 | 1,606,364 |
| 1776 | 607,878 | 1,090,744 | 209,538 | 515,557 | 18,822 | 13,308 | 836,238 | 1,619,609 |
| 1777 | 655,332 | 1,114,734 | 224,183 | 492,926 | 83,024 | 48,468 | 962,539 | 1,656,128 |
| 1778 | 805,010 | 1,194,613 | 296,182 | 422,213 | 61,285 | 32,207 | 162,447 | 1,649,033 |
| 1779 | 338,465 | 524,636 | 74,676 | 203,186 | 31,525 | 13,230 | 444,666 | 741,052 |
| 1780 | 474,703 | 984,763 | 170,130 | 257,626 | 18,605 | 11,349 | 600,438 | 1,253,738 |
| 1781 | 301,617 | 582,116 | 95,888 | 233,643 | 33,144 | 23,129 | 430,629 | 838,888 |
| 1782 | 446,488 | 1,033,557 | 72,188 | 204.163 | 36,597 | 29,403 | 565,273 | 1,267,123 |
| 1783 | 437,802 | 1,049,224 | — | — | 82,966 | 79,944 | 520,768 | 1,129,168 |
| 1784 | 516,088 | 908,370 | 44,810 | 116,883 | 31,130 | 22,607 | 592,028 | 1,047,860 |
| 1785 | 768,288 | 1,426,259 | 45,352 | 115,632 | 26,767 | 18,693 | 840,347 | 1,560,847 |
| 1786 | 764,173 | 1,458,416 | 43,240 | 97,511 | — | — | 807,413 | 1,555,927 |
| 1787 | 745,449 | 1,137,934 | 38,641 | 84,598 | 41,822 | 28,560 | 825,972 | 1,431,092 |
| 1788 | 594,728 | 978,507 | 96,455 | 191,826 | 41,806 | 29,937 | 732,989 | 1,200,270 |
| 1789 | 614,839 | 943,096 | 112,216 | 225,169 | 44,715 | 33,357 | 771,770 | 1,201,622 |
| 1790 | 866,282 | 1,485,080 | 126,221 | 253,625 | 33,131 | 9,639 | 1,025,634 | 1,748,344 |
| 1791 | 709,540 | 1,131,717 | 144,996 | 475,590 | 57,080 | 44,380 | 911,615 | 1,651,687 |
| 1792 | 607,329 | 1,194,875 | 240,108 | 577,400 | 25,910 | 21,050 | 873,347 | 1,793,625 |
| மொத்தம். | 13,380,344 | 23,818,702 | 2,884,105 | 6,986,396 | 1,090,525 | 820,391 | 17,354,974 | 31,624,889 |

சபை அங்கத்தினர் எல்லாரும் பொதுப் படையாக "பெரிய வியாபாரிகள்" என்று அழைக்கப்பட்டார்கள். கீழ்த்தர ஊழியங்களிலிருந்த இளைஞர்களுக்குக் "குமாஸ்தா" என்னும் பட்டம் வழங்கிற்று. இவர்களெல்லாரும் கம்பெனியின் ஊழியர்களாயிருந்தும், பண வெறி கொண்டவர்களாயிருந்தபடியால், கம்பெனியின் சார்பாக வியாபாரம் நடத்தியதுடன், ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சொந்தத்துக்கும் வியாபாரம் நடத்தலானார்கள். கம்பெனியின் பெயரால் திருட்டுத்தனமாகத் தங்கள் சொந்த வியாபாரப் பொருள்களையும் அவர்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்தார்கள். அக்காலத்தில் இங்கிலாந்திலும் சரி, இந்தியாவிலும் சரி, சுயநலப்பற்றில்லாமல் வேலை செய்த கம்பெனி ஊழியர்களே இல்லையென்று சொல்லிவிடலாம். எந்த வழியிலாயினும் பணம் நிறையச் சேர்த்துவிடுவது ஒன்றே அவர்கள் நோக்கமாயிருந்தது. பல வருஷகாலம் கம்பெனி ஊழியத்தில் இருந்தவரான மிஸ்டர் போல்ட்ஸ் என்பவர், 1712-ம் ஆண்டில், கம்பெனி நிர்வாகிகளின் நேர்மையைக் குறித்துப், பின்வருமாறு எழுதினார்:—

"இங்கிலாந்திலும் இந்தியாவிலும் உள்ள கம்பெனியின் தலைமை உத்தியோகஸ்தர்களிடம் பொதுநல உணர்ச்சி என்பது மிக அபூர்வமாயிருக்கிறது. சொந்த லாபம் ஒன்றே அவர்களுடைய தனிப் பெருநோக்கம் என்று சொல்லுதல் தவறாகாது. 'நமது பெட்டிக்குள் எத்தனை லட்சம் ரூபாய் போட்டுக்கொள்ளலாம்?' அல்லது 'நமது அதிகாரத்தில் அகப்பட்ட ஏழை மக்களின் பணத்தைக் கொண்டு எத்தனை புதல்வர்களுக்கும், மருமகன்மாருக்கும், வேறு உறவினருக்கும் பிழைப்பு ஏற்படுத்திக் கொடுக்கலாம்?' என்னும் கேள்விகளே, தற்போது கம்பெனியின் தலைமை அதிகாரிகளுக்கு முக்கியமான கேள்விகளா யிருக்கின்றன. ரோம சாம்ராஜ்யத்தின் அந்திய நாட்களில், அந்த சாம்ராஜ்யத்திற்குட்பட்ட தூரப் பிரதேசங்களுக்கு என்ன கதி நேர்ந்ததோ, அதே கதி இப்போது ஆசியாவிலுள்ள நமது இராஜ்யங்களுக்கும் நேர்ந்திருக்கிறது. தூரதேசத்திலிருந்து வந்த அன்னியர்களின் பேராசைக்கு அவை இரையாக விடப்பட்டிருக்கின்றன. ஆகவே, கம்பெனியின் ஊழியர்கள் பலர், உலக சரித்திரத்திலேயே இணை சொல்ல முடியாத பயங்கரமான கொடுமைகளை இழைத்துவிட்டு, ஏராளமான பணத்துடன் இங்கிலாந்துக்குத் திரும்பி வந்து, அங்கே நீதிக் கெட்டாத உயரத்தில் அமர்ந்து, செல்வாக்குடன் வாழ்கிறார்கள்."

## கொடுமையும் மோசமும்

எங்கே பார்த்தாலும் கொடுமைகள் அதிகமாகி வந்தன. வர்த்தகசாலை ஊழியன் ஒவ்வொருவனும் முதலாளியினுடைய அதிகாரம் அனைத்தும் செலுத்தினான். தொழிலாளிகள் கம்பெனி சாமான்களைக் கிராக்கியான விலைக்கு வாங்கித் தங்கள் பொருள்களை மலிவான விலைக்கு விற்கும்படி கட்-

டாயப்படுத்தப்பட்டார்கள். சட்ட விரோதமான தண்டனைகள் அவர்களுக்கு விதிக்கப்பட்டன. கம்பெனியின் ஊழியன் ஒவ்வொருவனும் தன்னை ஓர் அதிபதியாகவே எண்ணிக்கொண்டான். சட்டங்களையெல்லாம் மீறித் திருட்டு வியாபாரம் செய்து அவன் பணங் குவித்தான். அக் காலநிலைமையைப் பற்றி மெக்காலே என்பார் எழுதும்போது, "கூடிய சீக்கிரத்தில் ஒரு லட்சம் அல்லது இரண்டு லட்சம் பவுன் அடித்துப் பறித்தல்; வெப்பத்தினுல் உடம்பு கெடுவதற்குமுன் இங்கிலாந்துக்குத் திரும்புதல்; பிரபுவின் புதல்வி ஒருத்தியை மணந்துகொள்ளுதல்; காமன்ஸ் சபை பீடமொன்றை விலைக்கு வாங்குதல்; விருந்துக் களியாட்டங்கள் நடத்தல்;—இவைதான் கம்பெனி ஊழியர் ஒவ்வொருவரும் செய்த காரியங்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறுர். பணஞ் சேர்க்கும் விஷயத்தில் நல்லது, கெட்டது என்று அவர்கள் பார்க்கவேயில்லை. லஞ்சம் வாங்குதலும், பலவந்தமாகப் பணம் பறித்தலும் சர்வ சாதாரணமாக இருந்தன. இதற்குச் சில உதாரணங்களை இங்கே எடுத்துக் காட்டுவோம். 1757-ம் ஆண்டில் மீர் ஜாபர் சிம்மாசனம் ஏறியபோது, வங்காளத்தை நிர்வாகம் செய்த கௌன்சில் அங்கத்தினர் உள்படக் கம்பெனி ஊழியர் எல்லாருக்கும் அவன் மொத்தம் 26,97,750 பவுன் கொடுக்கவேண்டி வந்தது. இவ்வளவு தொகைக்குப் போதிய நாணயம் கிடைக்காதபடியால், அதில் மூன்றில் ஒரு பகுதி அரண்மனை நகைகளாகவும், பாத்திரங்களாகவும் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதே நிலைமைதான் ஏறக்குறையக் கர்நாடகத்திலும் குடிகொண்டிருந்தது. கபடமில்லாத ஆற்காட்டு நவாப் தான் வாங்காத கடன்களுக்கெல்லாம் பொறுப்பாளி யானுன். பால் பென்பீல்டு என்னும் கம்பெனியின் அற்ப ஊழியன் ஒருவன், தஞ்சாவூர் நில வரி முழுதும் தனக்குச் சேரவேண்டுமென உரிமை கொண்டாடினுனென்றுல், அக்காலத்தில் நிகழ்ந்த அக்கிரமங்களுக்கு வேறென்ன உதாரணம் வேண்டும்? மோசமும், கொடுமையும் நாட்டில் தாண்டவ மாடின. இத்தகைய காலத்தில் நெசவுகாரரும், மற்றத் தொழிலாளிகளும் எவ்வாறு துன்புற்றுர்கள் என்பது குறித்து இனி நாம் ஆராய்ச்சி செய்யவேண்டும்.

## ஏகபோக உரிமை ஆட்சி

**வி**யாபாரத் தனி உரிமை பெற்றவர்களின் மிகப் பயங்கரமான ஆட்சி முறையின் கீழ் இந்தியா அகப்பட்டு, அவ்வாட்சியின் துன்பங்கள் எல்லாவற்றையும் அநுபவித்தது. கம்பெனியின் வியாபாரமும், அத்துடன் கம்பெனி ஊழியர்களின் சொந்த வியாபாரமும் பெருகி வந்தன. ஊழியர்களின் சொந்த லாபத்தை யல்லாமல், ஐரோப்பாவில் கம்பெனியின் செலவுகளுக்காக வருஷந்தோறும் லட்சக்கணக்கான பவுன் அனுப்பவேண்டியதா யிருந்தது. ஆனுல் இதை ரொக்கமாக அனுப்பாமல் சரக்குகளாக அனுப்பினுர்கள். இந்தச் சரக்குகளை இங்கி

லாந்தில் லாபத்துக்கு விற்று, அத்தொகையைக் கொண்டு அங்குள்ள கம்பெனி ஊழியர்களுக்குச் சம்பளமும், பங்குதாரர்களுக்கு லாபத்தொகையும், வட்டியும் கொடுத்து இந்தியாவில் நடந்த யுத்தங்களினுல் ஏற்பட்ட கடன்களையும் அடைத்து வந்தார்கள். இவற்றிற்கெல்லாம் பெருந் தொகைகள் வேண்டியிருந்தபடியால் இந்திய வியாபாரிகளையும், நெசவுத் தொழிலாளரையும் துன்புறுத்த வேண்டியதாயிற்று. சில வகைக் காலிகோ துணிகளை யாரும் அணியக்கூடாதென்று இங்கிலாந்தில் தடைச் சட்டம் பிறந்திருந்ததாயினும், மஸ்லின்கள், சாதாரண சீட்டிகள் முதலிய சில தினுசுத் துணிகளுக்குத் தடை ஏற்படவில்லை. தடைக்குள்ளான துணிகளுக்குக்கூட, இங்கிலாந்திலிருந்து மறுபடியும் வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காகக் கிராக்கி அதிகமிருந்தது. ஆகவே, ஆங்கில வியாபாரிகள் துணி வியாபாரத்தில் தாங்களே ஏகபோக உரிமை வைத்துக் கொள்ளப் பெரிதும் முயன்றூர்கள். இத்தகைய தனி உரிமை வியாபாரத்தின் தீமைகள் எல்லாம் தொடர்ந்து வந்தன. மிஸ்டர் ரிச்சர்ட்ஸ் என்பார் 1813-ம் ஆண்டில் வெளியிட்ட ஒரு பிரசுரத்தில், சூரத்திலிருந்த கம்பெனி ஊழியர்கள் சாதாரணமாகக் கடைப்பிடித்த முறைகளைப் பின் வருமாறு வர்ணித்திருக்கிறூர் :—“ சூரத்திலிருந்து கம்பெனிக்கு லாபப் பணம் அனுப்புவதற்காக மிகக் கடுமையான பலவந்த முறைகள் கையாளப்பட்டன. நெசவுத் தொழிலாளிகள் தங்கள் நலத்துக்கும், விருப்பத்துக்கும் மாருகக் கம்பெனிக்கு வேலை செய்யும்படி கட்டாயப் படுத்தப்பட்டனர். சில சமயம் அவர்கள் இப்படிக் கட்டாயத்துக்கு வேலை செய்வதைவிடப் பெருந்தொகை அபராதம் செலுத்துவது மேல் என்று கருதி, அப்படிச் செய்து தப்பித்துக்கொண்டார்கள். கம்பெனியார் உயர்ந்த ரகத் துணிகளுக்குக் கொடுத்த விலையைவிட அதிகவிலை கொடுத்து ஹாலந்து, போர்ச்சுகல், அரேபியா நாட்டு வியாபாரிகள் மட்டமான துணிகள் வாங்கத் தயாராயிருந்தார்கள். இது காரணமாக அவ்வன்னிய நாடுகளின் வர்த்தக ஏஜண்டுகளுக்கும் கம்பெனி ஊழியர்களுக்கும் அடிக்கடி சண்டை மூண்டது. நெசவுக்காரர்களும் சில சமயம் இரகசியமாய் மேற்படி அன்னிய நாட்டு வியாபாரிகளுக்குத் துணி விற்றூர்கள். இது கண்டுபிடிக்கப்பட்ட போதெல்லாம் தொழிலாளிகளுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டது. வியாபார ஏகபோக உரிமையைப் பாதுகாத்துக்கொள்வதே கம்பெனி நிர்வாகிகளின் முக்கிய நோக்கமாயிருந்தது. இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக பலவந்தப்படுத்தலும், தண்டனை விதித்தலும் பெரிதும் கையாளப்பட்டன. இவற்றின் கடுமை காரணமாக நெசவுக்காரர் பலர் தொழிலையே விட்டு விட்டு ஓடிப்போகவும் விரும்பினுர்கள். இதைத் தடுக்கும்பொருட்டு, தலைமை ஆங்கில அதிகாரியின் உத்திரவின்றி அவர்களை நகரத்துக்கு

வெளியே போகவிடாமலிருக்க ஏற்பாடு செய்யப்பட்டது. நெசவுக்காரர்கள் நவாப்பின் குடிகளாயிருந்தவரையில் அவர்களைத் தண்டிப்பதற்கும் பலவந்தப்படுத்துவதற்கும் அடிக்கடி நவாபினிடம் மனுச் செய்துகொள்ளப்பட்டது. நவாப் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கையில் ஒரு கருவியாகவே இருந்தார். ஆகவே, நெசவுகாரர்கள் தண்டிக்கப்படுங்கால் அவர்களுக்குக் கம்பெனி ஊழியர்கள்மீது கோபம் உண்டாகாதிருக்கும் பொருட்டு நவாப் தாமே அத்தண்டனைகளை விதித்ததாகக் காட்டிக்கொள்ளவேண்டியவரானார். நெசவுத்தொழிலாளர் வேறு வியாபாரிகளிடம் வேலை செய்ய அமர்ந்து விடாதிருக்கும்பொருட்டு எப்போதும் அவர்களிடம் கம்பெனியின் முன்பணம் கொஞ்சம் இருக்கும்படி செய்யப்பட்டு வந்தது. சுற்றுப் பக்கத்திலுள்ள சிற்றரசர்களும் சரிப்படுத்தப்பட்டார்கள். அவர்கள் தத்தம் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசங்களில், கம்பெனியைச் சேர்ந்த வியாபாரிகளுக்கே துணிகள் விற்கவேண்டுமென்றும், மற்ற யாருக்கும் விற்கக்கூடாதென்றும் கட்டாய உத்திரவு பிறப்பித்தார்கள். சூரத் பின்னர் பிரிட்டிஷ் அரசாங்கத்தின்கீழ் வந்தபோது மேற்கூறியவை போன்ற கொடுமைகள் தங்கு தடையின்றி நடை பெற்று வந்தன.” கம்பெனிக்குச் சொந்தமான மற்ற இடங்களிலும் ஏறக்குறைய இத்தகைய நிலைமையே குடிகொண்டிருந்தது. ஆனால் கொடுமை தலை விரித்தாடிய இடம் வங்காளமே யாகும். அம்மாகாணத்தில் “எங்கே பார்த்தாலும் ஒரே கொடுமைக் காட்சிதான். அதனால் துன்புறாத நெசவுக்காரனோ, வியாபாரியோ ஒருவன் கூட இல்லை” என்று மிஸ்டர் போல்ட்ஸ் சொல்கிறார்.

துணி வாங்குவதற்குக் கையாளப்பட்டு வந்த முறை பற்பல கொடுமைகளுக்கும் இடந்தருவதா யிருந்தது. கம்பெனியின் ஏஜண்டுகள் தங்கள் குமாஸ்தாக்களுடன் உள் நாட்டில் பிரயாணம் செய்தனர். அந்த ஏஜண்டுகளுக்கு வேண்டிய உதவியெல்லாம் செய்யும்படி ஆங்காங்குள்ள ஜமீன்தார்கள், இராஜாக்கள் முதலியவர்களுக்கு மாகாண கவர்னர் கடிதம் அனுப்புவது வழக்கம். மிஸ்டர் போல்ட்ஸ் கூறுகிறார் :—“நெசவு வேலை நடக்கும் பட்டணம் ஒன்றுக்குக் குமாஸ்தா வந்து சேர்ந்ததும் ஓரிடத்தில் கச்சேரி போடுவான். பிறகு தன் சேவகனை அனுப்பி அப்பட்டணத்திலுள்ள தரகர்களையும் தொழிலாளிகளையும் அழைத்து வரச்செய்வான். அவர்கள் ஒவ்வொருவருக்கும் முன்பணம் கொடுத்து, குறிப்பிட்ட காலத்திற்குள் இன்ன விலைக்கு இவ்வளவு துணி கொண்டு வந்துகொடுப்பேன் என்பதாக ஒப்பந்தம் எழுதி வாங்கிக்கொள்வான். சாதாரணமாக, தொழிலாளியின் சம்மதம் கேட்கப்படுவதேயில்லை. குமாஸ்தாக்கள் பெரும்பாலும் தங்களுக்கு இஷ்டமானபடி எழுதிக் கையொப்பம் வாங்கிக்கொள்கிறார்கள். கம்பெனி குமாஸ்தாக்களின் புத்தகங்களில் தொழிலாளிகள்

பலருடைய பெயர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கும். இவர்கள் வேறு யாருக்கும் வேலை செய்ய அநுமதிக்கப்படுவதில்லை. ஒரு குமாஸ்தா போய் வேறொரு குமாஸ்தா வந்தால், இவர்கள் அடிமைகளைப்போல் மாற்றப் படுவார்கள். இந்த குமாஸ்தாக்கள் கையாளும் கொடுமைகளும், அயோக்கியத்தனமும் கற்பனைக்கும் எட்டாதனவாகும். எல்லாம் ஏழைத்தொழிலாளிகளை மோசம் செய்வதிலேயே வந்து முடிகின்றன. ஏனென்றால் கம்பெனி குமாஸ்தாக்கள் வாங்கும் துணிகளுக்கு அவர்கள் நிர்ணயிக்கும் விலை கடைத்தெருவில் கிடைக்கக்கூடிய விலையைவிட 100க்கு 15 முதல் 40 வரையில் குறைவாகவே இருக்கும்.'' இவ்வாறு கம்பெனிக்கே துணி கொடுக்கவேண்டு மென்பதாக நெசவுகாரர்கள் இடைவிடாது துன்புறுத்தப்பட்டார்கள் என்பது தெளிவாகிறது.

வங்காளத்தில் கையாளப்பட்ட முறையே தென்னாட்டிலும் கையாளப்பட்டது. சென்னை அரசாங்கத்தின் பழைய தஸ்தவேஜுகளிலிருந்து இதற்கு ஓர் உதாரணம் எடுத்துக் காட்டுவோம். கம்பெனி அதிகாரிகளின் தூண்டுதலின்மீது ஆற்காட்டு நவாப் 1732-ம் வருஷத்தில் தமது இராஜ்யத்திலுள்ள உத்தியோகஸ்தர்கள் எல்லாருக்கும் ஒரு சுற்றுத்திரவு பிறப்பித்தார். அது வருமாறு :—"சென்னைக் கவர்னர் துணி வாங்குவதற்காக உங்கள் பிரதேசத்துக்கு வரப்போவதை முன்னிட்டு இக்கடிதம் எழுதலானேம். உங்கள் எல்லைக்குள் இருக்கும் வியாபாரிகள் அனைவரும் சென்னைக் கவர்னருக்கும் அவருடைய மனிதர்களுக்குமே துணி விற்கவேண்டுமென்பதாக நீங்கள் கண்டிப்பான கட்டளை பிறப்பிக்கவேண்டியது. கையிலுள்ள துணிகளை அவர்கள் உடனே கவர்னரின் குமாஸ்தாக்களிடம் ஒப்புவிக்கச் செய்யவேண்டியது. அவர்கள் வேண்டாமென்று சொல்லும் துணிகளை மற்றவர்களுக்கு விற்க அனுமதி கொடுக்கலாம். கவர்னரின் மனிதர்களைத் தவிர வேறு யாரும் உங்கள் எல்லைக்குள் துணி வாங்காதபடி எச்சரிக்கையுடன் பார்த்துக்கொள்ளவேண்டியது. இது நம்முடைய கண்டிப்பான கட்டளை யென்பதை அறிந்துகொள்வதுடன், வியாபாரிகளுக்கு அபராதங்கள் விதித்து அவர்கள் இக்கட்டளையை மீருமல் பார்த்து வரவேண்டியது.'' கம்பெனியின் பண வேட்டைக்கு உதவியாக நவாப் இம்மாதிரி கடிதங்கள் பல அவ்வப்போது எழுதிக் கொடுத்திருக்கிறுர். சென்னையில் கம்பெனிக்கு அதிக இராஜ்யம் சேர்ந்த பிறகும் இதே விதமான கொடுமை நடந்துகொண்டுதான் வந்தது. இதற்குப் பல வருஷங்களுக்குப் பின்னர் வெல்லெஸ்லி பிரபு கவர்னர் ஜெனரலாக வந்தபோதுகூட இவ்வக்கிரமங்கள் நடந்தன என்பதற்கு அப் பிரபு 1814-ம் வருஷம் ஜூலை மீ 19௳ சென்னை அரசாங்கத்துக்கு எழுதிய கடிதமே சான்றுகும். கம்பெனியின் வியாபார அபிவிருத்தியை முன்னிட்டும், தனிப்பட்ட வியாபாரிகளுக்கு இடையூறுகள் உண்டாக்கும்

பொருட்டும் யதேச்சாதிகாரக் கொடுமை முறைகள் கையாளப்பட்டன வென்பது அக்கடிதத்திலிருந்து நன்கு வெளியாகிறது. விலை விகிதம், துணி கொடுக்கவேண்டிய காலம் முதலியவைகளைக் கம்பெனி குமாஸ் தாக்கள் தங்கள் இஷ்டம்போல் நிர்ணயித்தார்கள். குமாஸ்தாக்கள் கொடுத்த விலையைத் தொழிலாளிகள் பெற்றுக்கொள்ள மறுத்தால் "அவர்களைக் கட்டிவைத்துக் கசையடி யடித்து மிரட்டியதாகவும் தெரிய வந்திருக்கிறது." வேறிடங்களில் கிடைக்கக்கூடியதை விடக் குறைந்த விலையே கம்பெனியினுல் கொடுக்கப்பட்டது. அதைப் பெற்றுக் கொள்ளும்படி நெசவுக்காரர் கட்டாயப்படுத்தப்பட்டனர். 1770-ம் ஆண் டில் தோன்றிய பயங்கரமான பஞ்சத்தினுல் வங்க நாட்டிலும் பிற இடங் களிலும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நாசமானபோதும் கம்பெனி ஊழியர்கள் செய்த கொடுமைகள் நின்றபா டில்லை. இதற்கு இரண்டு வருஷங்களுக்குப் பிறகு வாரன் ஹேஸ்டிங்ஸ் ஜனங்களின் குறைகளைப் பற்றி விசாரித்துவிட்டுப் பின்வருமாறு எழுதினுர்:—"எங்கே பார்த்தா லும் கொடுமை இழைக்கப்படுகிறதென்னும் கூக்குரலே அதிகமாயிருக் கிறது. இது உண்மை என்று நிரூபிப்பதற்குத் தக்க ஆதாரங்களும் ஜனங்கள் காட்டுகிறுர்கள். ஆனுல் சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு வேண்டிய ருசு பெரும்பாலும் கிடைப்பதில்லை." ஆகவே, எந்த உத்தியோகஸ்தனையும் காரணங் காட்டாமல் ஸ்தலத்திலிருந்து திரும்ப அழைத்துவிடும் அதிகாரம் கவர்னருக்குக் கொடுக்கப்படவேண் டு மென்று வாரன் ஹேஸ்டிங்ஸ் அபிப்பிராயம் தெரிவித்தார்.

## சட்ட பூர்வமான கொடுமைகள்

கம்பெனி ஆட்சிக்குட்பட்ட பிரதேசமெங்கும் லஞ்சமும், பலவந்த மாகப் பணம் பறித்தலும் சர்வ சாதாரணமாக இருந்தன. இவற்றிற்குச் சட்டத்தின் முத்திரை வைப்பதுபோல், நெசவுகாரர்களைக் கட்டுக்குள் வைத்திருப்பதற்கென்று தர்ம விரோதமான விதி முறைகள் பல செய்யப் பட்டன. கம்பெனியிடமிருந்து முன் பணம் பெற்றுக்கொண்ட தறி காரன் ஒருவன் வேறு யாருக்கும்—ஐரோப்பியருக்காகட்டும் சுதேசிக் காகட்டும்—துணி கொடுக்கக்கூடாதென்றும், ஒப்பந்தப்படி குறிப்பிட்ட தேதியில் துணி கொடாவிட்டால் வேலையைத் துரிதப்படுத்துவதற்காக அத்தகைய தொழிலாளிமீது ஒரு சேவகனைக் காவல் போடலாமென்றும் சட்டம் செய்யப்பட்டது. சேவகனைக் காவல் போடுவதென்ருல் தொழி லாளி நாள் ஒன்றுக்கு ஓர் அணு அபராதம் செலுத்தவேண்டுமென்று பொருள். நெசவுக்காரன் இவ்வாறு விடுதலையே யில்லாத அடிமையாக வைக்கப்பட்டிருந்தான். மற்றும், வேறு யாருக்காவது அவன் துணி விற்றுவிட்டால் அவனைக் கைது செய்து விசாரிக்கலாமென்றும், ஒரு தறிக்குமேல் வைத்துக்கொண்டு கூலியாட்களை அமர்த்தி வேலை

செய்வோர் ஒப்பந்தப்படி துணி கொடுக்காவிட்டால் துணியின் மதிப்பில் 100க்கு 35 வீதம் அபராதம் விதிக்கலாமென்றும் விதிகள் செய்யப் பட்டன. இவ்வாறு, தொழிலாளி விரும்பினாலும் சுதந்திரத்துடன் வாழ இயலாதவனானன். கம்பெனி ஊழியர்கள் தறிகாரர்களை அணுக முடியாத வண்ணம் ஜமீன்தாரர்களும் மற்றக் குடிகளும் தடை செய்யக்கூடா தென்று வேறொரு விதி செய்யப்பட்டது. இந்த அநாகரிகக் கொடு விதி முறைகள் எல்லாம் சுதேசித் தொழிலை அன்னிய வியாபாரிகளின் கையின்கீழ் கொணர்ந்து அதை அழித்துவிடுவதற்கே ஏது வாயின. இந்தக் கொடுமைகளை யெல்லாம் நன்கறிந்தவரான தாமஸ் மன்ரோ என்பார் 1813-ம் ஆண்டில் பார்லிமெண்டு கமிட்டியின் முன்பு சாட்சியங் கூறுகையில், கம்பெனி ஊழியர்கள் நெசவுகாரர்களை ஓரிடத்தில் கூட்டி அவர்கள் ஒப்பந்தம் செய்துகொள்ளும் வரையில் காவலில் வைப்பது வழக்கம் என்று சொல்லியுள்ளார். தொழிலாளிகள் ஒப்பந்தத்தின்கீழ் அடிமைகளாகவே உழைத்து வந்தார்கள் என்று கூறலாம். ஒரு சமயம் பிரிட்டிஷ் வியாபாரிகளும், டச்சு வியாபாரிகளும் தொழிலாளிகளைப் பாகம் போட்டுக்கொள்வதென்றுகூட ஒரு யோசனை இருந்ததாக மிஸ்டர் போல்ட்ஸ் சொல்கிறார். ஆனால் அதிர்ஷ்டவசமாக இவ்வளவு வெட்கங் கெட்ட யோசனையைக் கம்பெனி டைரக்டர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

தொழிலாளிகளுக்கு அடிக்கடி அபராதங்களும், வேறு தண்டனை களும், சிலசமயம் கசையடியுங் கூட விதிக்கப்பட்டன. அவர்களை விலங்கு பூட்டித் தெரு வழியாக அழைத்துச் சென்று அவமானப்படுத்துவது முண்டு. கம்பெனி ஏஜண்டுகளல்லாதவர்களுக்குத் துணி விற்ற குற்றத் திற்காக அவர்களுக்கு அநியாய அபராதங்கள் விதிக்கப்பட்டன. இத் தொகைகளுக்கு ஈடு செய்வதற்காக அவர்களுடைய பாத்திரங்கள் கைப் பற்றப்பட்டன. "கம்பெனி ஏஜண்டுகளும் குமாஸ்தாக்களும் தேச மெங்கும் பல விதமான கொடுமைகள் செய்தார்கள். அபராதம் விதித்தல், சிறையிலடைத்தல், கசையடி யடித்தல், பலவந்தமாக ஒப்பந்தம் எழுதி வாங்குதல் முதலியவை தினந்தோறும் நடந்தன. கணக்கில்லாத இத் தகைய கொடுமைகளின் காரணமாக தேசத்தில் தறிகாரர்களின் தொகை மிகுதியும் குறைந்துவிட்டது" என்று மிஸ்டர் போல்ட்ஸ் எழுதி யிருக்கிறார். கம்பெனியின் அதிகாரத்தின்கீழ் வந்த சுதேசி வியாபாரி களின் கதியும் இப்படியேதான் ஆயிற்று. அவர்கள் ஐரோப்பியத் துணி களைக் கம்பெனி குறிப்பிட்ட விலைக்கு வாங்கி விற்கும்படி கட்டாயப் படுத்தப்பட்டனர். அத்துணிகளுக்குக் கிராக்கியில்லையென்றாலும் வாங் கிக்கொண்டுதான் தீரவேண்டும். சென்னை மாகாணத்தின் அக்கால நிலையைப்பற்றி டால்பாய் வீலர் என்பவர் ஒரு புத்தகம் எழுதி யிருக்கிறார். அதில், வியாபாரிகளை அடிக்கடி அழைத்துவரச் செய்து, கடுமையான

தண்டனை விதிப்பதாக பயமுறுத்தி, தங்களால் நிறைவேற்ற முடியாத ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளும் படி கட்டாயப்படுத்தியது குறித்து அவர் எழுதியுள்ளார்.* கம்பெனியின் லாபத்தை முன்னிட்டுக் கட்டாய முறை தங்கு தடையின்றித் தாராளமாகக் கையாளப்பட்டு வந்தது.

## கோமேயின் விளைவு

மேலே கூறிய விவரங்களிலிருந்து கம்பெனியார் துணி வியாபாரத்தைத் தங்கள் ஏகபோக உரிமையாக ஸ்தாபித்துக்கொள்வதற்காக எத்தகைய முறைகளைக் கையாண்டார்களென்று ஒரு வாறு அறிந்தோம். சுருங்கக் கூறின் அம்முறைகள் பின் வருவன வாகும் :—

1. இதர வியாபாரிகள் தங்கள் குமாஸ்தாக்களைத் துணி வாங்குவதற்காக உள்நாட்டுக்கு அனுப்பக்கூடாதென்றும், கவர்னருடைய உத்திரவு காட்டுபவர்களுக்கன்றி வேறு யாருக்கும் அவர்கள் துணி விற்கக்கூடாதென்றும் கண்டிப்பாகத் தடுக்கப்பட்டார்கள். ஆனால் கம்பெனியின் குமாஸ்தாக்கள் நாடெங்கும் பரவிக் கணக்கற்ற கொடுமைகளைச் செய்தார்கள்.

2. கம்பெனி குமாஸ்தாக்கள் தாங்கள் சொல்லும் விலைக்குத் துணி தரவேண்டுமென்பதாக நெசவுக்காரர்களை நிர்ப்பந்தப்படுத்தி ஒப்பந்தம் எழுதி வாங்கினார்கள்.

3. அபராதம், கசையடி முதலிய தண்டனைகள் தறிகாரர்களுக்கு விதிக்கப்பட்டன.

4. சுதேசி வர்த்தகர்களிடமிருந்தும் நெசவுத் தொழிலாளிகளிடமிருந்தும் பலவந்தமாகச் சரக்குகள் கைப்பற்றப்பட்டன.

5. சுதேசி வர்த்தகர்களின் உள்நாட்டு வியாபாரத்துக்கும் மிகுதியான போக்குவரவு வரிகள் போட்டு இடையூறு செய்யப்பட்டது.

இவ்வாறு பல வருஷ காலம் நாட்டுக் கைத்தொழில்கள் பலவகை நிர்ப்பந்தங்களுக்குட்படுத்தப்பட்டன. தறிகாரர்கள் குறைந்த சம்பளத்

* வங்காள நவாப் 1762-ம் வருஷம் மார்ச்சு மாதம் எழுதிய ஒரு கடிதத்தில் கம்பெனி ஊழியர்கள் கையாண்ட முறைகளைக் குறித்துப் புகார் சொல்லி யிருக்கிறார். மிராசுதாரர்கள், வியாபாரிகள் முதலியோருடைய உடைமைகளை நாலில் ஒரு பங்கு விலை கொடுத்துக் கம்பெனி ஏஜண்டுகள் பலவந்தமாக எடுத்துக்கொண்டு போனதாயும், ஒரு ரூபாய் சாமானை 5 ரூபாய் கொடுத்து வாங்கும்படி அவர்களைக் கொடுமைப்படுத்திய தாயும் அவர் கூறுகிறார்.

திற்குக் கம்பெனிக்காக வேலை செய்யும்படி கட்டாயப்படுத்தப்பட்டார்கள். இதன் பயனாக அவர்களில் பலர் அத்தொழிலையே விட்டு விடவும் துணிந்து பிழைப்புக்கு வேறு வழி தேடலானார்கள். உதாரணமாக, "வங்காளத்தில் ஜங்கல்காரிக்குச் சுற்றுப்புறப் பிரதேசங்களிலுள்ள 700 நெசவுக் குடும்பத்தார், அப்போது ஆரம்பமாகிக் கொண்டிருந்த கொடுமைகளின் காரணமாகத் தங்கள் பரம்பரைத் தொழிலையும், சொந்த ஊரையும் விட்டு ஓடிப்போனார்கள்" என்று மிஸ்டர் போல்ட்ஸ் கூறுவதை எடுத்துக் காட்டலாம். பட்டு நூல் இழைப்பவர்கள் சிலர் தங்களைக் கட்டாயப்படுத்தி வேலை வாங்குவதைப் பொறுமல், அப்படி வேலை செய்யாதிருக்கும்பொருட்டுத் தங்கள் கட்டை விரல்களைத் தாங்களே வெட்டிக்கொண்டதாகவும் போல்ட்ஸ் எழுதியிருக்கிறார். வங்காளத்திலே தான் வியாபாரம் செழிப்பாக இருந்ததாதலின், கொடுமையின் விளைவுகளும் அங்கேதான் மிகப் பயங்கரமாயிருந்தன. வங்காளத்தின் கவர்னராயிருந்த ஹாரி வெரிலெஸ்ட் என்பவர் 1767-ம் வருஷத்தில் எழுதிய ஒரு கடிதத்தில் கூறியதாவது:—"நெசவுகாரர்கள் கிடைப்பது மிகவும் அபூர்வமாகிவிட்டது. சமீபத்தில் நாடெங்கும் ஏற்பட்டிருந்த தொல்லைகள் இதற்குக் காரணமா அல்லது இந்தியாவின் எல்லாத் துறைமுகங்களிலும் பொதுவாக வியாபாரம் குறைந்துவிட்டது காரணமா என்று சொல்வதற்கில்லை. காரணம் எதுவாயினும், துணி உற்பத்தி செய்துகொண்டிருந்தவர்களில் அநேகர் தங்கள் பரம்பரைத் தொழிலை விட்டுப் பிழைப்புக்கு இவ்வளவு மோசமில்லாத வேறு தொழில்களைக் கைக்கொண்டு விட்டார்கள் என்பதில் சந்தேகம் இல்லை." கொடுமைகள் நாளுக்கு நாள் அதிகமாகி வந்ததின் பயனாக எவ்வளவோ வியாபார ஸ்தலங்கள் பெருமை யிழந்து அழிந்தன. சில விடங்களில் நாட்டுக் கைத்தொழில் அடியோடு நசித்தது.

## பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்

ஆனால் இன்னமும் நூற்றலும் நெசவுமே நாட்டின் முக்கிய கைத்தொழில்களாயிருந்து வந்தன. இவ்வளவு கொடுமைகளுக்கும் இடையூறுகளுக்கும் ஆளான பின்னரும் தேசத்தின் சில பகுதிகளில் அவை எப்போதும் போல் செழித்தோங்கி யிருந்தனவென்று தெரிய வருகிறது. 1782-ம் வருஷத்தில் தளபதி ஓர்ம் என்பார் தாம் நேரில் பார்த்தறிந்து எழுதியதாவது:— "சோழமண்டலக் கடற்கரையோரத்திலும், வங்காள மாகாணத்திலும் கொஞ்சம் உள்நாட்டில் சென்றுவிட்டால், ஒவ்வொரு கிராமத்திலும் நெசவு வேலை நடப்பதைக் காணலாம். அந்த கிராமங்களில் துணி உற்பத்தி சம்பந்தமான ஏதேனுமொரு வேலையில் ஈடுபடாத ஆண், பெண், குழந்தை யாரையும்

காணல் அரிது. வட சர்க்கார் ஜில்லாக்களில் பெரும் பகுதி தற்போது இந்த ஒரே தொழிலில் ஈடுபட்டிருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவும் ஒவ்வொரு வகைத் துணிக்குப் பெயர் போனதாயிருக்கிறது. இத்தொழிலின் பயிற்சியானது தலைமுறை தலைமுறையாக வந்துகொண்டிருப்பதால் உற்பத்தியாகும் துணி எவ்விதத்திலும் குறையின்றித் தலை சிறந்து விளங்குகிறது."

ஹிந்துஸ்தானத்து ஜனங்களில் பாதிப்பேருடைய வாழ்க்கை துணி உற்பத்தித் தொழிலுடன் அக்காலத்தில் சம்பந்தப்பட்டிருந்ததாய் மேற்படி தளபதி அபிப்பிராயப்பட்டார். அவர் கூறுவதாவது:— "நூற்றலையும் நெசவையும் போல் ஒருவன் செய்யக் கூடிய சுலபமான வேலை வேறு கிடையாது. ஆகவே தேசத்தில் பாதி ஜனங்களுக்குமேல் மேற்படி வேலைகளைத் தவிர வேறெதுவும் செய்வதில்லை. நெசவுக்காரர்கள் திறந்த வெளியில் வேலை செய்கிறார்கள். அவர்களுடைய மனைவி மக்கள் அவ்வேலையில் அவர்களுக்கு உதவி செய்யக் கூடியவர்களா யிருக்கிறார்கள். நெசவுத் தொழில் பெரிதும் விரும்பப்படுவதற்கு இதுவே காரணமாகும். ஹிந்துக்களில் நெசவுச் சாதி கௌரவம் பொருந்தியது. எல்லாக் கைத்தொழிலாளரிலும் நெசவுக்காரனே உயர்ந்தவனாகக் கருதப்படுகிறான். அவன் நெசவுக்குச் சம்பந்தமில்லாத வேலை செய்யத் தொடங்கினால் சாதி இழந்தவனாவான்." இவ்வாறு இன்னமும் நெசவுத் தொழில் பெரிதும் கௌரவிக்கப்பட்டு நல்ல நிலைமையில் இருந்து வந்ததாக அறிகிறோம். அத்துடன் நூல் நூற்றலும் எங்கும் பரவிச் செழித்திருந்தது.

அதிர்ஷ்ட வசமாக, டாக்டர் புசானன் என்பவர் 1806-லிருந்து 1810 வரையில் தேசத்தின் பொருளாதார நிலைமையைப்பற்றி விரிவாக ஆராய்ச்சி செய்து எழுதி வைத்துள்ள விவரங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. தென்னிந்தியாவில் மைசூர், கன்னடம், மலையாளம் முதலிய பகுதிகளிலும் வங்காள*, பீஹார் மாகாணங்களிலும் அவர் விரிவாக் விசாரணை நடத்தினார். வட இந்தியாவைப் பற்றி அவர் கொடுத்திருக்கும் புள்ளி விவரங்களில் முக்கியமான சில வருமாறு:—

---

*டாக்டர் மில்பர்ன் என்பவர் கீழ்நாட்டு வியாபாரத்தைப்பற்றி எழுதியுள்ள புத்தகங்களில் 1805-ம் வருஷத்துக்குச் சமீபத்தில் வங்காளத்தின் வியாபார நிலைமையைப்பற்றி முக்கியமான விவரங்கள் இருக்கின்றன. வட இந்தியாவில் உற்பத்தியான துணிகள் இந்தியாவின் எல்லாப் பகுதிகளுக்கும், அமெரிக்க ஐக்ய ராஜ்யத்துக்கும், ஐரோப்பாவிலுள்ள எல்லாத் தேசங்களுக்கும் அனுப்பப் பெற்றதாக அவர் சொல்கிறார்.

| ஜில்லா. | ஜனத் தொகை. | நூற்பவர்கள் தொகை. | நூலின் விலை மதிப்பு ரூ. | நூற்பவர்களின் தலாவருமானம் ரூ. | பஞ்சு கொட்டிகளின் வருஷ வருமானம். | கைத்தறிகள். | துணியின் மதிப்பு. | தறியின் சராசரி வருஷ வருமானம். |
|---|---|---|---|---|---|---|---|---|
| பாட்னு (பீஹார்) | 3,364,420 | 320,426 | 2,367,277 | 3—4—0 | ரூ. 36 (குடும்பத்திற்கு) | 21,522 | 2,438,621 (முரட்டுத் துணி மாத்திரம்) | ரூ. 28—4—0 முதல் ரூ. 58 வரையில். |
| ஷாஹாபாத் | 1,419,520 | 159,500 | 1,250,000 | 1—8—0 | ... | 8,778 | 1,634,000 | ரூ. 48 முதல் 53 வரையில். |
| பகல்பூர் | 2,019,900 | 160,000 | 594,600 | 4—0—0 | ... | 7,279 | 832,440 | ரூ. 32. |
| கோரக்பூர் | 1,989,314 | 175,600 | 1,106,250 | 2—8—0 | ... | 6,114 | 522,840 | ரூ. 23--8--0 முதல் 36 வரையில். |
| தினஜ்பூர் | ... | ... | 1,165,000 | 3—0—0 | ... | ... | 100,000 | ரூ. 36 முதல் 40 வரையில். |
| பூர்ணியா | 2,904,380 | ... | ... | ரூ. 3 முதல் ரூ. 9 வரையில் | ... | 3,500 | 1,300,000 | ... |
| ரங்பூர் | 2,735,000 | ... | ... | ... | ... | ... | ... | ... |

தென்னிந்தியாவின் பொருளாதார நிலைமையைக்குறித்து டாக்டர் புசானன் அவ்வளவு விரிவான புள்ளி விவரங்கள் தரவில்லை. ஆயினும் அவர் கூறியிருப்பதிலிருந்து தென்னாட்டிலும் நெசவுக்காரர்களும், நூற்பவர்களும் ஏராளமாக இருந்தார்களென்பது ஐயமறத் தெளிவாகிறது. தென்னிந்தியாவின் நிலைமையைப்பற்றி நாம் ஆராயப் புகுவதற்குமுன், வட நாட்டில் நெசவுத் தொழிலின் நிலைமை எவ்வா றிருந்ததென்பதை மேலே தந்திருக்கும் புள்ளி விவரங்களின் உதவியினல் ஒருவாறு ஆராய்ந்து செல்லுதல் நலம். அந்தப் புள்ளி விவரங்களிலிருந்து ஒரு விஷயம் மிகவும் தெளிவாக விளங்குகிறது. ஆண், பெண், குழந்தைகள் உள்பட மொத்த ஜனத்தொகையில் பத்துப்பேருக்கு ஓர் இராட்டைவீதம் சுழன்று வந்ததென நிச்சயமாய் அறிகின்ருேம். மிகப்பெரும்பான்மையான குடும்பங்கள் ஒழிந்த வேளையில் செய்வதற்குரிய தொழிலாக நூல் நூற்றலைக் கைக்கொண்டிருந்தன. விவசாயம் முதலிய வேறு துறைகளில் கிடைத்த குடும்ப வருமானத்துடன் ஒப்பிடுகையில் இராட்டையில் கிடைத்ததை அற்பமென்று தள்ளி விடுவதற்கில்லை. கதிர் ஒன்றுக்கு வருஷத்தில் ரூ. 2 முதல் ரூ. 4 வரையில் சராசரி வருமானம் கிடைத்தது. பணத்தின் தற்போதைய விலை மதிப்பின்படி ரூ. 10லிருந்து ரூ. 20 வரை

---

முக்கியமான இடங்களுடன் வங்காளத்தின் வியாபாரம் 1805-ம் வருஷத்தில் பின்வரும் நிலைமையில் இருந்தது :—

| இடம். | இறக்குமதி ரூ. | துணி ஏற்றுமதி ரூ. |
|---|---|---|
| 1. லண்டன் | 67,722 | 3,31,582 |
| 2. டென்மார்க் | 2,135 | 3,37,632 |
| 3. லிஸ்பன் | | 12,13,353 |
| 4. அமெரிக்க ஐக்ய ராஜ்யம் | 25,096 | 47,63,132 |
| 5. இலங்கை | | 1,03,944 |
| 6. சுமத்ரா | | 85.089 |
| 7. சோழநாட்டுக் கடற்கரை | 1,15,390 | 4,07,942 |
| 8. பாரஸீக வளைகுடாவும், அரேபியாவும் | | 8,45,788 |
| 9. பெகு | | 82,254 |
| 10. பினங்கும் அதற்குக் கீழ் நாடுகளும் | | 8,16,612 |
| 11. படேவியா | | 9,15,996 |
| 12. சீனம் | 1,22,127 | 3,79,469 |

யில் கிடைத்ததாக ஏற்படும். * தினஜ்பூர், ரங்பூர் முதலிய ஜில்லாக்களில் ஒரு சிலர் முழுநேரமும் இராட்டையில் வேலை செய்து வந்தார்கள். இவர்களுக்கு வருஷத்தில் ஒன்பது ரூபாய் அதாவது தற்போதைய மதிப்புக்கு 45 ரூபாய் வரை கிடைத்துவந்தது. ஆனால் சாதாரணமாக ஸ்திரீகள் வேறு வேலை யில்லாத ஒழிந்த நேரத்தில்தான் நூற்பது வழக்கம். தங்கள் சொந்தக் கொல்லையில் பருத்தி விளைவு இல்லாதவர்கள் வாரச் சந்தையில் வாங்கிக்கொண்டார்கள். ஒவ்வோர் ஊரிலும் பஞ்சு கொட்டி ஒருவன் இருந்தான். அவனிடந்தான் ஸ்திரீகள் பஞ்சு கொட்டிக் கொண்டார்கள். அவன் ஒரு நாளில் $4\frac{1}{2}$ ராத்தல் பஞ்சு கொட்டிக் கொடுத்து $6\frac{3}{4}$ சேர் தானியம் கூலியாகப் பெற்றுக்கொள்வான். பெரும் பாலும் தானியமாகவும் சில சமயம் பணமாகவும் அவனுக்குக் கூலி கொடுக்கப்பட்டது. நிரம்ப நயமான நூல் நூற்பதற்கு † ஸ்திரீகள் தாங்களே கை வில்லால் பஞ்சு கொட்டிக்கொண்டார்கள். பெரும்பான்மையும் முஸ்லிம்களே பஞ்சுகொட்டிகளா யிருந்தனர். சில்லரைப் பருத்தி வியாபாரிகள், பஞ்சுகொட்டிகள், பருத்தி அரைப்பவர்கள் உள்பட ஜனத்தொகையில் எழில் ஒருவர் இராட்டைத் தொழிலினால் பிழைப்பு நடத்தி வந்தார்கள்.

நெசவுத்தொழிலிலும் ஏராளமான ஜனங்கள் பிழைத்துவந்தார்கள் என்பதில் சந்தேக மில்லை. நெசவுக்கு உபதொழில்களான சாயம் போடுதல், அச்சடித்தல், பூவேலை செய்தல் முதலியவையும் மிகவும் லாபகரமாயிருந்தன வென்று டாக்டர் புசானன் சொல்கிறார். இவ்வேலைகளில் ஈடுபட்டவர்களையும், நெசவுகாரர்களின் குடும்பத்தினரையும் சேர்த்துப் பார்த்தோமானால் குறைந்தபட்சம் ஜனத்தொகையில் நூற்றுக்கு ஒருவர் வீதம் நெசவுத்தொழிலினால் பிழைத்தார்களென்று ஐயமறச் சொல்லலாம். நெசவுத்தொழிலாளிக்கு நல்ல வருமானம் கிடைத்தது. முழுநேரம் வேலை செய்தவர்கள் வருஷத்தில் $108\frac{1}{2}$ ரூபாய் சம்பாதித்தார்கள். தற்போதைய பண மதிப்புக்கு இது 550 ரூபா யாகிறது. பல விடங்களில் விவசாயத்துக்குத் துணைத்தொழிலாகவும் நெசவு கைக்கொள்ளப் பட்டு வந்தது. விவசாயிகள் வயலில் வேலை யில்லாதபோது இந்தத் தொழிலில் ஈடுபட்டார்கள். தினஜ்பூர் ஜில்லாவைப்பற்றி எழுதுகையில் டாக்டர் புசானன் கூறுவதாவது :—" ஹிந்துக்களிலும், முஸ்லிம்களிலும் விவசாயிகள் அநேகர் வீட்டில் ஒரு தறி வைத்திருக்கிறார்கள். ஒழிந்த

---

* இன்றைய தினமும் பெரும்பாலான பிரதேசங்களில் நூற்பவர்களின் சராசரி வருஷ வருமானம் இவ்வளவுதான்.

† பூர்ணியாவில் மெல்லிய நூல் நூற்ற ஸ்திரீகள் கைக்கதிரில் நூற்றார்கள்.

நேரத்தில் ஸ்திரீகளும் புருஷர்களும் தறியில் வேலை செய்கிறார்கள். காவி, கோரா முதலிய முரட்டுத் துணிகள் அவர்களால் நெய்யப்படுகின்றன.'' முழுநேரம் வேலை செய்துவந்த நெசவுக்காரர்கள் நல்ல சம்பளம் பெற்றுப் பெரும்பாலும் வறுமையற்ற வாழ்க்கை நடத்திவந்தார்கள்.

இக்காலத்தில் கம்பெனியின் ஏஜண்டுகள் முன்பணம் கொடுக்கும் முறையினால் நெசவுக்காரர்களை அடிமைப்படுத்த முயன்று வந்ததையும், அதன் பயனாக விளைந்த தீய பயன்களையும் டாக்டர் புசானன் கவனியாமலில்லை. சுதந்திரமாக வேலை செய்த தொழிலாளி, கம்பெனி ஊழியர்களிடமிருந்து முன்பணம் பெற்றுக்கொண்டு வேலை செய்தவனைவிட எங்கும் நல்ல நிலைமையிலிருப்பதை அவர் கண்டார். ''முன்பணம் கொடுக்கும் முறை குடியானவர்களுக்கும் தொழிலாளிகளுக்கும் மிகவும் தீமை பயப்பதென்பதில் சந்தேகமே யில்லை. இதனால் அவர்கள் கையில் மூலதனம் சேரவே முடியாமல் போய்விடுகிறது. கையில் மூலதனம் சேராதவரையில் அவர்கள் சுதந்திரமாக இருப்பதோ, சுகமாக வாழ்வதோ இயலாத காரியம்'' என்று டாக்டர் புசானன் சொல்கிறார். முன்பணம் கொடுக்கும் முறையினால் மூலதனம் சேர் முடியாமல் போயிற்றென்பதோடு, அது ஜனங்களின் செட்டு வழக்கத்தையும், வருங்காலத்துக்கு ஜாக்கிரதை செய்யும் வழக்கத்தையும் அழித்து வந்தது. கம்பெனி ஊழியர்களிடம் துணி கொடுத்து அதன் கிரயம் வாங்குவதில் இன்னும் எவ்வளவோ தொல்லைகள் நேர்ந்தன.* உதாரணமாக, மால்டா என்னுமிடத்தில் கம்பெனி ஊழியர்கள் முன்பணம் கொடுத்துப் பல தறிகளை அமர்த்தி யிருந்தார்களென்றும், இதன் பயனாகத் தறிகாரர்கள் மிகவும் கஷ்டத்துக் காளானபடியால் அவர்களுடைய தொகை நாளுக்கு நாள் குறைந்துவிட்டதென்றும் டாக்டர் புசானன் சொல்கிறார். முன்பணம் பெறும் வழக்கத்தினால் நெசவுகாரர்கள் பலர் கடனாளிக ளாகிவிட்டார்கள். அவர்கள் கடனைத் தீர்த்து விடுதலை பெறுதல் எளிய காரியமா யில்லை. ''இப்படிப்பட்ட நிலைமையிலும் நெசவுத்தொழில் செழிப்புடன்தான் இருந்துவந்தது. மற்ற எல்லாத் தொழில்களிலும் அதுவே பிரதானமாய் விளங்கிற்று. ஏனெனில் உற்பத்தியான துணிகளில் மிகப் பெரும் பகுதி அந்தந்தப் பிரதேசத்திலேயே செலவழிந்தது. துணி ஏற்றுமதி அடியோடு நின்றிருந்தால்கூட நெசவுத்தொழிலாளர் அதிக கஷ்டமடைந்திருக்க மாட்டார்கள். ஏனெனில், உள்ளூர்த் தேவைகளுக்கு அவசியமான துணிகள் நெய்தே அவர்கள் பிழைப்பு நடத்திவிடக்கூடும்'' என்று டாக்டர்

---

* வங்காளக் கடற்கரையோரத்து ஜில்லாக்களில் டாக்டர் புசானன் விசாரணை நடத்தவில்லை யென்பதைக் கவனிக்கவேண்டும். இந்த ஜில்லாக்களில்தான் தொழிலாளிகள் மிகுந்த கொடுமைக் காளாயினர்.

புசானன் எழுதுகிறார். சாதாரணமாக, சந்தைகளில் ரொக்கப் பணத்திற்கே துணி வாங்கப்பட்ட படியால் நெசவுக்காரனுக்கு எப்போதுமே வேலைப் பஞ்சம் கிடையாது.

## வாழ்க்கை நிலைமை

**ப**ற்பல தரங்களையும் சேர்ந்த குடும்பங்களில் அந்நாளில் வாழ்க்கை நடத்துவதற்கான செலவுகளைக் குறித்தும் டாக்டர் புசானன் சில விவரங்கள் சேகரித்திருக்கிறார். அவற்றுள் முக்கியமாக உணவுக்கும் உடைக்குமான செலவுகளைக் குறித்து நாம் இங்கே கவனித்தல் பொருந்தும். தினஜ்பூர் ஜில்லாவைப்பற்றி அவர் கொடுத்திருக்கும் விவரங்கள் ஏறக்குறைய வட இந்தியா முழுவதிற்கும் பொதுவானவை யாகும். மேற்படி ஜில்லாவில் குறைந்த பட்சம் ஆறு தரங்களைச் சேர்ந்த குடும்பங்கள் இருந்தனவென்று டாக்டர் புசானன் சொல்கிறார். தர வாரியாக அக்குடும்பங்களுக்கான உணவு, உடைச் செலவுகள் பின்வருமாறு :—

| குடும்பத்தின் தரம் (ஐந்து பேர் கொண்டது) | உணவுச் செலவு | | | உடைச் செலவு | | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
| 1 | 334 | 13 | 0 | 210 | 0 | 0 |
| 2 | 174 | 0 | 0 | 72 | 0 | 0 |
| 3 | 128 | 0 | 0 | 37 | 8 | 0 |
| 4 | 66 | 0 | 0 | 17 | 12 | 0 |
| 5 | 30 | 0 | 0 | 3 | 6 | 0 |
| 6 | 20 | 10 | 0 | 2 | 6 | 0 |

கடைசி இரண்டு தரத்தையும் சேர்ந்தவை, வயல் வேலையும், வேறு கூலி வேலையும் செய்த மிகவும் எழ்மையான குடும்பங்கள். நடுத்தர வகுப்பாரும், கொஞ்சம் உயர்தரத்தைச் சேர்ந்த தொழிலாளிகளும் தாராளமாக உடை யணிந்தார்கள். உணவுக்கான செலவில் மூன்றில் ஒரு பங்கு அவர்கள் உடைக்காகச் செலவழித்தார்கள். ஆனல் பெரும்பாலான குடும்பங்கள், முக்கியமாக ஏழைக் குடும்பங்கள் விலை கொடுத்துத் துணி வாங்குவதேயில்லை. அவர்கள் தங்களுக்கு வேண்டிய நூலை வீட்டிலேயே நூற்று அக்கம்பக்கத்தி லிருந்த நெசவுக்காரர்களிடம் கொடுத்து நெய்துகொண்டார்கள்.

## தென்னிந்தியாவும் மைசூரும்

**வட** இந்தியாவிலிருந்த நிலைமையே ஏறக்குறையத் தென்னிந்தியாவிலும் இருந்துவந்தது. தொழில் இன்னும் அதிக செழிப்புற்றிருந்தது என்றும் கூறலாம். நூற்பவர்களும், நெசவுகாரர்களும் கணக்கின்றி

யிருந்தார்கள். மைசூர் மாகாணத்தில் பிராமணர்களைத் தவிர மற்ற எல்லாச் சாதிகளிலும் பெண்கள் ஒழிந்த நேரத்தில் நூல் நூற்று வந்தார்களென்றும், கோயமுத்தூரில் தாழ்ந்த வகுப்புகளைச் சேர்ந்த ஸ்திரீகள் மிக நன்றாய் நூற்றார்களென்றும், பஞ்சம ஸ்திரீகளின் நூல்தான் மிகச் சிறந்ததெனப் பெயர் வாங்கியிருந்ததென்றும் டாக்டர் புசானன் எழுதியிருக்கிறார். தென்னிந்தியாவெங்கும் வாரந்தோறும் நடந்த சந்தைகளில் துணியும், நூலுந்தான் முக்கிய வியாபாரப் பண்டங்களாயிருந்தன. கடப்பை, கர்நூல் ஜில்லாக்களிலிருந்தும் அதற் கப்பாலிருந்துங்கூட வியாபாரிகள் மைசூருக்கு வந்து பஞ்சு விற்றுத் துணி வாங்கிக்கொண்டு போனார்கள். சோழமண்டலக் கடற்கரைப் பிரதேசமும், வட ஸர்க்கார் ஜில்லாக்களும், உள்நாட்டிலுள்ள சேலம் கோயமுத்தூர் ஜில்லாக்களும் நெசவுத் தொழிலுக்கும், துணி வியாபாரத்துக்கும் பெயர் போனவையாயிருந்தன. இந்தப் பிரதேசங்களில் எங்கே பார்த்தாலும் கம்பெனியின் ஏஜண்டுகள் காணப்பட்டார்கள். அவர்கள் நெசவுத் தொழிலாளிகளுக்கு முன்பணம் கொடுத்துக்கொண்டும், ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்ய மஸ்லின், காலிகோ முதலிய துணிகளை வாங்கிக்கொண்டும் சுற்றித் திரிந்தனர். அந்நாளில் சேலம், கோயமுத்தூர் ஜில்லா கலெக்டர்களின் முக்கியமான வேலை ஏற்றுமதிக்குத் துணி வாங்குவதுதான் என்று தெரியவருகிறது. பொதுவாக, வங்காளத்திலும், பீஹாரிலுமிருந்த நிலைமையே தென்னிந்தியாவிலும் இருந்ததாயினும் இரண்டொரு முக்கியமான வித்தியாசங்களும் இருந்தனவென்று தெரியவருகிறது. "தென்னிந்தியாவில் உயர்சாதி மாதர், முக்கியமாக பிராமண ஸ்திரீகள், நூல்நூற்பதில்லை. இந்த சாதிகளில் புருஷர்கள் ஏர் உழுதலை விரும்பாததுபோல் ஸ்திரீகளும் நூல் நூற்றலை விரும்பவில்லை" என்று டாக்டர் புசானன் சொல்கிறார். ஆனால் வட இந்தியாவில் எந்த ஜாதியும் நூல் நூற்றலை இழிவாகக் கருதவில்லை. இராட்டை வருமானம் வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் ஒன்றாகத்தான் இருந்தது. நூற்கும் வேகம், நூலின் நயத்துக்குத்தக்க படி, மணிக்கு 100 கஜம் முதல் 600 கஜம் வரை வித்தியாசப்பட்டு வந்தது. 100-ம் நம்பருக்கு மேற்பட்ட உயர்ந்த நூலாயிருந்தால் ஒரு நாளைக்கு 840 கஜங் கொண்ட ஒரு சிட்டத்துக்கு மேல் நூற்க முடிவதில்லை. மட்ட நூலாயிருந்தால் மணிக்கு 500 கஜம் முதல் 600 கஜம் வரையில் நூற்று, ஒரு நாளைக்கு முக்கால் சேர் நூல் நூற்று விடுவார்கள். பருத்தி அரைத்தல், சுத்தம் செய்தல், கொட்டுதல் ஆகிய வேலைகளெல்லாம் தென்னிந்தியாவில் நூற்கும் பெண்களே செய்துகொண்டார்கள். தென்னிந்தியாவைப் பற்றி புசானன் எழுதியிருப்பவைகளில் பஞ்சுகொட்டியைப்பற்றி எங்குமே சொல்லப்படவில்லை. வங்காளத்திலும் பீஹாரிலும் போல் பஞ்சுகொட்டிகள் தனியாக ஏற்படுவதற்கு அத்தொழில்

அவ்வளவு லாபகரமில்லாம லிருந்திருக்கலாம்; அல்லது அதற்கு அவசியம் நேராதிருந்திருக்கலாம். எனவே, நூற்பவர்கள் தாங்களே பஞ்சும் கொட்டிக்கொண்டார்கள். துணிகளின் விலை வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் எறக்குறைய ஒன்றாயிருந்தது. ஆனால் மஸ்லின் முதலிய மெல்லிய துணிகள் மட்டும் தென்னிந்தியாவில் சற்று மலிவாயிருந்தன. வங்காளத்தின் பாப்தா துணியும், கோயமுத்தூர் முரட்டுத் துணியும் ஒரே விலைக்கு விற்றன. டாக்டர் புசானன் தென்னாட்டிலேயே முதலில் தமது ஆராய்ச்சி தொடங்கினாரெனினும், தென் ஜில்லாக்களைக் குறித்து விரிவான புள்ளி விவரங்கள் தராமற் போனது துரதிர்ஷ்டவசமே யாகும். ஆயினும், அவர் பொதுவாக விவரித்திருக்கும் நிலைமையிலிருந்து அன்னியத் துணியோ அன்னிய நூலோ இன்னமும் ஜனங்களின் மனதைக் கவர்ந்து விடவில்லை யென்று நிச்சயம் செய்யலாம். அன்னிய நாட்டு நூல் இன்னும் தலைகாட்டவே யில்லை. "பட்டணவாசிகள் சிலருடைய வீடுகளைத் தவிர்த்து" அன்னியத் துணிக்கும் இன்னும் கிராக்கி எற்பட்டு விடவில்லை. *

---

* 1792-ம் ஆண்டிலிருந்து 1809-ம் ஆண்டு வரையில் சென்னை மாகாணத்திலிருந்து கிழக்கிந்தியக் கம்பெனியாரின் முக்கிய எற்றுமதிப் பொருள் ஜவுளிதான் என்று மில்பர்ன் எழுதிய "கீழ்நாட்டு வியாபாரம்" என்னும் புத்தகத்தின் மூலமாக அறிகிறோம். சாதாரணமாக இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் எற்றுமதியான துணிவகைகள் பின்வருமாறு:—கைக்குட்டைகள், நீலத்துணி, புஞ்சம் துணி, புடவை, சாலம்போர், சீட்டி, புக் மஸ்லின், மஸ்லின் கைக்குட்டை முதலியன. 1805-ம் ஆண்டில் சென்னையின் வியாபாரநிலைமை அதே புத்தகத்திலிருந்து தெரிய வருகிறது.

| | இடம். | துணி இறக்குமதி ரூ. | துணி எற்றுமதி ரூ. |
|---|---|---|---|
| 1. | லண்டன் | 13,000 | 1,46,811 |
| 2. | அமெரிக்க ஐக்யராஜ்யம் | | 12,44,494 |
| 3. | பம்பாய் | 74,749 | 88,570 |
| 4. | வடசர்க்கார் | 19,180 | 5,59,146 |
| 5. | மலையாளக் கடற்கரை | 96,905 | 1,05,828 |
| 6. | வங்காளம் | 3,37,546 | 89,400 |
| 7. | பினங்கும் அதற்குக் கீழண்டை நாடுகளும் | | 9,25,892 |

சென்னை மாகாணத்தின் ஏற்றுமதி இறக்குமதி வியாபார நிலைமையைப் பின்வரும் புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம்:—

| பொருள். | இறக்குமதி ரூ. | ஏற்றுமதி ரூ. |
|---|---|---|
| (1) பஞ்சு | 2,51,458 | 1,75,416 |
| (2) நூல் | 55,114 | 8,645 |
| (3) துணி | 20,44,582 | 53,66,171 |

இறக்குமதியான துணியிலும், நூலிலும் அன்னிய நாட்டிலிருந்து வந்தது மிகச் சொற்பம். பெரும்பாலும் அவை வட இந்திய மாகாணங்களிலிருந்து வந்தன.

## அன்னியத் துணிக்குக் கிராக்கியின்மை

அக்காலத்தில் எல்லா வகுப்பு ஜனங்களுக்கும் ஒழிந்த நேரத்தில் செய்ய லாபகரமான தொழில் இருந்ததென்றும், நிலத்தையே நம்பி ஜனங்கள் உயிர் வாழ்ந்திருக்கவில்லையென்றும் டாக்டர் புசானன் எழுதி வைத்திருப்பவைகளிலிருந்து நன்கு தெளிவாகின்றன. உள் நாட்டுத் துணிகள் பரதேசித் துணிகளைவிட மிகச் சிறந்து விளங்கின. இக்காரணத்தினுல்தான் இந்தியாவில் ஐரோப்பியச் சரக்குகள் அதிகமாக விலையாவதில்லையென்று வாரன் ஹேஸ்டிங்ஸ் 1813-ம் ஆண்டில் பார்லிமெண்டு கமிட்டியின் முன்பு சாட்சியம் கொடுக்கையில் வற்புறுத்திக் கூறினுர். நாட்டுமக்களுக்கு வேண்டிய துணிகள் எல்லாம் நாட்டிலேயே உற்பத்தியாகி விற்கப்பட்டன. அன்னிய நாட்டார் பலர் அதிசயித்து எழுதியிருக்கும்வண்ணம் அவை மிகவும் மலிவாகவும் இருந்தபடியால் அயல்நாட்டுத் துணிகள் அவற்றுடன் போட்டியிட முடியவில்லை. 1800 முதல் 1813 வரையில் கீழ் நாடுகளுக்கு, முக்கியமாக இந்தியாவுக்கு, இங்கிலாந்திலிருந்து வந்த சரக்குகளின் மதிப்பைக் கவனித்தால், அக்காலத்தில் பரதேசித் துணிக்குக் கிராக்கி எவ்வளவு சொற்பமாயிருந்ததென்பது நன்கு விளங்கும் :—

| வருஷம். | இறக்குமதியான பிரிட்டிஷ் துணிகளின் மதிப்பு (பவுன்) |
|---|---|
| 1800 | 19,575 |
| 1801 | 21,200 |
| 1802 | 16,191 |
| 1803 | 27,876 |

| | |
|---|---|
| 1804 | 5,936 |
| 1805 | 31,943 |
| 1806 | 48,525 |
| 1807 | 69,041 |
| 1808 | 1,18,408 |
| 1809 | 74,695 |
| 1810 | 1,14,649 |
| 1811 | 1,07,306 |
| 1812 | 1,08,824 |

முதன்முதலாக 1808-ம் ஆண்டில்தான் இறக்குமதிச் சரக்குகளின் மதிப்பு ஒரு லட்சம் பவுனுக்கு வந்திருக்கிறது. இக்காலத்தில் அயல் நாடுகளுக்கு இந்தியத்துணியின் ஏற்றுமதி மிகவும் குறைந்துவிட்டது உண்மையே. 1800-ம் ஆண்டிலிருந்து 1826-ம் வருஷம் வரையில் சராசரி 2000 கட்டுத்துணிகள்தான் வெளியே சென்றன. இந்தியத் துணிகளுக்கு இங்கிலாந்தில் பலமான இறக்குமதி வரிகள் போடப்பட்டபடியால் ஏற்றுமதி வியாபாரம் நாளுக்குநாள் குறைந்துவந்தது. ஆனால் எவ்வளவோ இடைவிடாத முயற்சி செய்தும் இங்கிலீஷ் துணிகளுக்கு மட்டும் இந்தியாவில் கிராக்கி உண்டுபண்ண முடியவில்லை. அன்னிய நாட்டு நூலோ முதன்முதலாக 1823-ம் ஆண்டில்தான் இந்தியாவில் தலை காட்டியது.

## அநியாயத் தடை வரிகள்

இக்காலத்திலேதான் இங்கிலாந்தில் துணி உற்பத்தித் தொழில் அதிவேகமாக அபிவிருத்தி யடைந்து வந்த தென்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். இந்த அபிவிருத்திக்கு முக்கிய காரணம் புதிய புதிய இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டதேயாகும். 1760-ம் ஆண்டிலிருந்து 1768-ம் வருஷத்திற்குள் விசைத் தறி, விசை ராட்டினம், நீராவி என்ஜின் முதலியவைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த இயந்திரங்களை நன்கு அமைத்து வேலை தொடங்குவதற்கு இந்திய வியாபாரத்தின் பயனாகக் குவிந்து கிடந்த பணம் மூலதனமாக உதவிற்று. இந்தியாவின் பணம் மட்டும் அப்போ திருந்திராவிட்டால், மேற்படி இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டும் வெகுகாலம் உபயோகமில்லாமலே இருந்திருக்கும். இந்தியாவின் கெட்ட காலமே இங்கிலாந்தின் நல்ல கால மாயிற்று. பல ஆண்டுகளாக இங்கிலாந்துக்கு இந்தியாவானது பணங் காய்க்கும் ஒரு மரமாகவே இருந்து வந்தது. அந்த மரத்தை உலுக்கிக் கொண்டுவந்து சேர்த்த பணக் குவியல் இப்போது பிரிட்டிஷ் தொழிலின் ஆக்கத்துக்கு ஆதாரமாயிருந்தது. இதன்பின் இங்கிலாந்தில் ஆலைகளில் உற்பத்தியான துணிகளுக்கு இந்தியாவிலேயே சந்தை கண்டுபிடிக்க இடைவிடாத

முயற்சி செய்யப்பட்டது. நெப்போலியன் இங்கிலாந்தின் சரக்குகள் ஐரோப்பாவுக்குள் வரக்கூடாதென்று திட்டம் செய்தபோது பிரிட்டிஷ் வியாபாரிகள் இந்தியாவில் தங்கள் துணியை விற்பதற்குப் பெரு முயற்சி செய்தார்கள். 1813-ல் இங்கிலாந்தின் தொழில் முன்னேற்றம் சம்பந்த மாக விசாரணை செய்வதற்குப் பார்லிமெண்டு கமிட்டி ஒன்று ஏற்படுத்தப் பட்டது. வாரன் ஹேஸ்டிங்ஸ் முதல் ஸர் தாமஸ் மன்ரோ வரையில் இந்திய நிர்வாக அநுபவம் உள்ளவர்கள் அனைவரையும் இங்கிலீஷ் துணி கள் இந்தியாவில் விற்குமா வென்று மேற்படி கமிட்டியார் கேட்டார் கள். இது முடியாத காரியமென்றே சாட்சியங்களிலிருந்து தெரிய வந்தது. பிரிட்டிஷ் துணிகளைவிட இந்தியத் துணிகள் மிகவும் மலி வானவை என்பதை ஸர் தாமஸ் மன்ரோ முதலியோர் எடுத்துக் காட்டி னர். பிரபுக்கள் சபைக் கமிட்டியின் முன்பு சாட்சியம் கூறிய மிஸ்டர் ராபர்ட் பிரௌன், இந்தியாவிலிருந்து வரும் நயமான துணிகளை வரி யின்றி இங்கிலாந்தில் இறக்குமதி செய்ய அநுமதித்தால் அவ்வகை பிரிட் டிஷ் துணிகளுக்கு நிச்சயம் பாதகம் நேருமென்றும், முரட்டுத்துணிகளை அவ்வாறு இறக்குமதிசெய்ய அநுமதித்தால் பாதகம் மிகவும் அதிகமா யிருக்குமென்றும், முரட்டுத் துணிகளின் விலையில் அவ்வளவு வித்தியாச மிருப்பதாகவும் தெரிவித்தார். "இங்கிலாந்தில் உற்பத்தியாகும் வெள் ளைக் காலிகோ துணிகளின் விலைக்கும், அதே தரத்தைச் சேர்ந்த இந் தியக் காலிகோத் துணிகள் இங்கிலாந்தில் விற்கப்படக்கூடிய விலைக்கும் வித்தியாசம் என்ன இருக்குமென்று சொல்ல முடியுமா?" என்று மிஸ்டர் ராபர்ட் பிரௌனைக் கேட்டார்கள். அதற்கு அவர் "சமீபத்தில் நான் போட்ட கணக்கிலிருந்து 100-க்கு 30 முதல் 60 வரையில் இந்தியத் துணிகளைக் குறைந்த விலைக்கு விற்கக் கூடுமென்று கண்டுபிடித்தேன்" என்று பதிலளித்தார். இந்தியத் துணிகளை இறக்குமதி வரி யில்லாமல் இங்கிலாந்துக்கு வர அநுமதித்தால் பிரிட்டிஷ் தொழில்களுக்கு அபாயம் நிச்சயம் என்று தெரிய வந்தது. ஆகவே அவ்வரிகளை எடுத்து விட வேண்டுமென்று யாருமே யோசனை சொல்லவில்லை. 1812-ம் வருஷத் தில் பிரபுக்கள் சபையில் லார்டு வெல்லெஸ்லி பேசியபோது "இந்தியத் துணிகளை இறக்குமதி வரி யில்லாமல் இங்கிலாந்தில் வரவிட்டால் நாட்டுத் தொழில் நாச மடைந்துவிடும். பிரிட்டிஷ் துணிகள் உள் நாட்டில் செலவாவது கூட நிச்சயமாகத் தடைப்படும்" என்று கூறி தேசமெங்கும் பொதுவாகக் குடிகொண்டிருந்த அச்சத்தை வெளி யிட்டார்.

இங்கிலீஷ் துணிகளின் விலையைவிட அதே தரத்தைச் சேர்ந்த இந்தியத் துணிகளின் விலை 100-க்கு 50 முதல் 60 வரை குறைவா யிருந்தபடியால், இங்கிலாந்துக்கு வந்த இந்தியத் துணிகளுக்கு

100-க்கு 70, 80 வரையில் இறக்குமதி வரி போட்டார்கள். "தொழில் போட்டியில் அரசாங்கம் தலையிடக் கூடாது" என்னும் பேச்சு அப்போது கிளம்பவேயில்லை. பிரிட்டிஷ் தொழில்களுக்குப் போட்டிகளெல்லாம் அழிந்து அவை நன்கு நிலைபெற்ற பின்னர்தான் "யதேச்சா வியாபாரம்", "தொழில் சுதந்திரம்" முதலிய பேச்சுக்கள் கிளம்பலாயின. இங்கிலாந்தில் இந்தியத் துணிகளுக்கு அநியாயத் தடைவரிகள் விதிக்கப்பட்டிருந்த அதே காலத்தில், பிரிட்டிஷ் துணிகள் எவ்வகை வரியுமின்றி இந்தியத் துறைமுகங்களில் இறக்குமதியாகி வந்தன வென்பதையும் கவனிக்கவேண்டும். ஆங்கில வியாபாரிகளின் சுயநலமும், பொருளாசையும் எத்தகைய அநீதி செய்வதற்கும் பின் வாங்கவில்லை. இவ்வாறு ஒருதலைச் சார்பாகத் தடை வரிகள் விதித்த அநியாயத்தைப் பொறுக்க முடியாமல் சரித்திராசிரியர் வில்ஸன் பிரிட்டிஷ் முறையைப் பலமாகக் கண்டித்திருக்கிறார். அவர் கூறுவ தாவது :—"தடை இல்லாத சுயேச்சை வியாபாரக் கொள்கை எல்லாக் காலங்களுக்கும் எல்லா நிலைமைகளுக்கும் பொருந்தாதென்பதற்கு இந்தியாவின் பருத்தித் தொழிலின் சரித்திரம் ஓர் உதாரணமாயிருக்கிறது. இந்தியாவுக்கு அதைக் கைப்பற்றிய நாட்டினால் செய்யப்பட்ட அநீதிக்கும் அது ஒரு துயரகரமான உதாரணமாகும். இந்தியாவின் பருத்தி, பட்டுத் துணிகள் இங்கிலாந்தில் உற்பத்தியான அதே வகைத் துணிகளைவிட 100-க்கு 50 முதல் 60 வரை குறைவான விலைக்கு லாபத்துடன் விற்கக்கூடியனவாயிருந்தன. 1813-ம் ஆண்டுவரை இந்த நிலைமை இருந்து வந்ததென்று அவ்வருஷத்தில் பார்லிமெண்டு கமிட்டியின் முன்பு கூறப்பட்ட சாட்சியத்தால் தெரிய வருகிறது. ஆதலின் 100-க்கு 70 முதல் 80 வரையில் இந்தியத் துணிகளுக்கு இறக்குமதி வரி விதித்தோ, அல்லது அவற்றின் இறக்குமதியை அறவே தடுத்தோ பிரிட்டிஷ் தொழில்களைப் பாதுகாத்தல் அவசியமாயிற்று. இப்படிச் செய்திராவிட்டால்,—இத்தகைய தடை வரிகளும் தடைச் சட்டங்களும் இருந்திராவிட்டால்,—பெயிஸ்லி, மான்செஸ்டர் ஆலைகள் ஆரம்பத்திலேயே நின்றுபோயிருக்கும். நீராவியின் அபார சக்தியினால் கூட அவைகளை ஓட்டியிருக்க முடியாது. இந்தியத் தொழில்களைப் பலிகொடுத்தே அவ்வாலைகள் நாட்டப்பெற்றன. இந்தியா சுதந்திர தேசமாயிருந்திருந்தால் பதிலுக்குப் பதில் பிரிட்டிஷ் துணிகளுக்குத் தடை வரிகள் விதித்துத் தன் உள்நாட்டுத் தொழில் அடியோடு அழிந்துபோகாமலாவது காப்பாற்றிக்கொண்டிருக்கும். ஆனால் இந்தியா அன்னியன் கைக்கீழ் அகப்பட்டுக்கொண்டிருந்தபடியால் இவ்வாறு தற்காப்புச் செய்துகொள்ளவும் இயலாமல் போயிற்று."

தடியெடுத்தவன் தண்டல்காரன் என்னும் நீதியே அப்போது நிலவியது. சுயநல வியாபாரக்கொள்கைகளை எதிர்த்துப் போராட இந்தியாவுக்கு

சக்தியில்லை. 1813-ம் வருஷத்திற்குப் பிறகு கம்பெனியின் வியாபாரத் தனிஉரிமை ரத்து செய்யப்பட்டு இந்தியாவில் பிரிட்டிஷார் எவரும் வியாபாரம் செய்யலாமென்று ஏற்பட்டது. இந்தியாவில் பிரிட்டிஷ் சாமான்களின் இறக்குமதிக்குச் செய்து கொடுக்கப்பட்ட வசதிகள் கணக்கற்றனவாகும். இறக்குமதி வரி சரக்கின் மதிப்பில் 100-க்கு $2\frac{1}{2}$ வீதமாகக் குறைக்கப்பட்டது. பல முக்கியமான பொருள்கள் வரி எதுவும் இல்லாமல் இறக்குமதி செய்ய அநுமதிக்கப்பட்டன. போக்கு வரவு வரிகளும் பல பொருள்களுக்கு எடுத்துவிடப்பட்டன. உள்நாட்டுப் பருத்தி வரியும் ரத்து செய்யப்பட்டது. இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்த பஞ்சுக்கு எவ்வித வரியும் விதிக்கப்படவில்லை. இவற்றிற்கு நேர்மாறாக, இந்தியச் சரக்குகள் இந்தியாவில் விற்பனையாவதற்கு எவ்வளவு இடையூறுகள் செய்யலாமோ அவ்வளவும் செய்யப்பட்டன. இந்த அதர்ம யுத்தத்தில் அதிக பலமுள்ள கட்சி எளிதில் வெற்றியடைந்தது. ஆங்கில வியாபாரிகள் வெற்றியடைந்ததற்கு அவர்கள் அதிகத் திறமையும், மூலதனமும் படைத்திருந்தது காரணம் அன்று. ஏற்றத் தாழ்வான அநியாய வரி விகிதமே அதற்குக் காரண மாகும். ஒரு கட்சிக்கு அநுகூலமாகவும், மற்றொரு கட்சிக்குப் பிரதிகூலமாகவும் ஏற்றுமதி இறக்குமதி வரிகள் விதிக்கப்பட்டன. மிஸ்டர் ரிச்சர்ட்ஸ் என்பவர் கிழக்கிந்தியக் கம்பெனியின் நன்மையைக் கோரியவர்களில் ஒருவர். ஆயினும் பார்லிமெண்டு கமிட்டியின் முன்பு சாட்சியங் கூறுகையில் அவர் இந்த அநீதியை எடுத்துக் காட்டினார். அவர் சொன்னதாவது :—“ இந்தியா, பிரிட்டன் இரண்டும் பிரிட்டிஷ் குடிமக்களின் சொத்து. ஆயினும் இந்தியாவில் பிரிட்டிஷ் சாமான்களுக்கு விதிக்கப்படும் வரி விகிதத்திலும், இங்கிலாந்தில் இந்தியத் துணிகளுக்கு விதிக்கப்படும் வரி விகிதத்திலும் முரண்பாடு பெரிதும் இருக்கிறது. பிரிட்டிஷ் சரக்குகள் இறக்குமதி வரியே யில்லாமல் இந்தியாவில் வர அநுமதிக்கப்படுகின்றன. ஆனால் இந்நாட்டுக்கு வரும் இந்தியச் சரக்குகளுக்கு அசாத்தியமான இறக்குமதி வரி விதிக்கப்படுகிறது. சாதாரண உபயோகத்திற் குரிய பல பொருள்கள் 100-க்கு 100 க்கு மேலும் 100 க்கு 600 வரையிலும் இறக்குமதி வரிக்குள்ளாகின்றன. ஒரு பொருளுக்கு 100க்கு 3000 மடங்கு வரியும் விதிக்கப்படுகிறது !” வரிவிகிதங்கள் அவ்வப்போது மாறி வந்தன வாயினும், இந்தியாவின் துணி ஏற்றுமதி வியாபாரம் இனி உயிர்ப்பிக்க முடியாதபடி இறந்துவிட்டதென்று நிச்சயமான பின்னர்தான் இறக்குமதி வரிகளை முழுதும் எடுத்தார்கள். வரி விகிதங்கள் எவ்வாறு மாறிவந்தன வென்பதைச் சற்றே கவனிப்போம் :—

(100 பவுன் மதிப்புள்ள சரக்குக்கு இறக்குமதி வரி)

| வருஷம் | வெள்ளைக் காலிகோ. ப. | ஷி. | பெ. | மஸ்லின். ப. | ஷி. | பெ. | சாயத்துணிகளும் அச்சடித்த துணிகளும். | மற்ற பருத்தித் துணிகள் ப. | ஷி. | பெ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1797 | 18 | 3 | 0 | 19 | 16 | 0 | அடியோடு தடுக் | | | |
| 1798 | 21 | 3 | 0 | 22 | 16 | 0 | கப் பட்டன | | | |
| 1799 | 26 | 9 | 1 | 30 | 3 | 9 | ,, | | | |
| 1802 | 27 | 1 | 1 | 30 | 15 | 9 | ,, | | | |
| 1803 | 59 | 1 | 3 | 30 | 18 | 9 | ,, | | | |
| 1804 | 65 | 12 | 6 | 34 | 7 | 6 | ,, | | | |
| 1805 | 66 | 18 | 9 | 35 | 1 | 3 | ,, | | | |
| 1806 | 71 | 6 | 3 | 37 | 7 | 1 | ,, | | | |
| 1809 | 71 | 13 | 4 | 37 | 6 | 8 | ,, | 27 | 6 | 8 |
| 1812 | 73 | 0 | 0 | 37 | 6 | 8 | ,, | | | |
| 1813 | 85 | 2 | 1 | 44 | 6 | 8 | ,, | 32 | 9 | 2 |
| 1814 | 67 | 10 | 1 | 37 | 10 | 0 | ,, | 32 | 10 | 0 |
| 1825—32 | சரக்கின் மதிப்பின்மீது 100 க்கு 10 வரியும், அச்சடித்த துணியாயிருந்தால் அதிகப்படியாக 100 க்கு $3\frac{1}{2}$ யும் | | | | | | | 20 | 0 | 0 |
| 1846 | 10 பவுன் வரி எடுக்கப்பட்டது. | | | | | | | | | |

அந்தந்தக் காலத்தில் இருந்த வரி விகிதங்களையும், ஏற்றுமதி இறக்குமதி வியாபார நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தியத் தொழில்கள் எவ்வாறு ஒடுக்கப்பட்டன வென்பது நன்கு விளங்கும்:—

| வருஷம். | இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான துணி (மடிகள்). | இங்கிலாந்தில் இறக்குமதி வரி. | இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வந்த துணி (கஜம்). |
|---|---|---|---|
| 1814 | 12,66,608 | மஸ்லினுக்கு 37 பவுன்<br>காலிகோவுக்கு 67 பவுன்<br>மற்றத் துணிகளுக்கு $27\frac{2}{3}$ பவுன் | 8,18,208 |
| 1821 | 5,34,495 | மஸ்லினுக்கு $37\frac{1}{2}$ பவுன்<br>காலிகோவுக்கு $67\frac{1}{2}$ பவுன்<br>மற்றவைகளுக்கு 50 பவுன் | 19,138,726 |
| 1828 | 4,22,804 | 10 பவுன் | $42,822,077\frac{1}{2}$ |
| 1835 | 3,06,086 | ஷை | 51,777,277 |

மேற்கூறிய காலத்தில் இந்தியாவில் 100க்கு 2½ வீதம் தான் இறக்குமதி வரி விதிக்கப்பட்டது. இவ்வாறாக, இந்தியாவில் யதேச்சா வியாபார முறையும், இங்கிலாந்தில் தொழில் பாதுகாப்பு முறையும் கைக்கொள்ளப்பட்டன. முந்தைய முறையின்படி இந்தியாவில் பிரிட்டிஷ் சாமான்கள் தங்கு தடையில்லாமல் வந்து குவிந்துகொண்டிருந்தன. ஆனால் இந்தியச் சரக்குகள் மட்டும் தடைச் சட்டங்களினாலும் தடை வரிகளினாலும் இங்கிலாந்துக்குள் வரவொட்டாமல் தடுக்கப்பட்டன. இந்தியத் துணி ஏற்றுமதி அடியோடு நின்றுபோய் பிரிட்டிஷ் சரக்குகளும் நிரம்ப மலிவான பின்னர் மேற்கூறிய தடைச் சட்டங்களும் தடை வரிகளும் எடுக்கப்பட்டன.

## பிரிட்டிஷ் வியாபார வளர்ச்சி

இவ்வாறு இங்கிலாந்தில் பாதுகாப்புப் பெற்று இந்தியாவில் எவ்விதத் தடையுமின்றிப் போட்டியிட விடப்பட்ட பிரிட்டிஷ் துணி வியாபாரம் 1813-ம் ஆண்டிலிருந்து வளர்ச்சி பெறலாயிற்று. அவ்வருஷத்திலிருந்து 1833-ம் ஆண்டு வரையில் இந்தியாவின் துணி வியாபாரம் சம்பந்தமான புள்ளி விவரங்களைக் கவனித்தால், அயல் நாடுகளுக்குத் துணி ஏற்றுமதி செய்தல் வரவரக் குறைந்து, அயல் நாட்டுத் துணிகளின் இறக்குமதி அதிகமாகி வந்திருப்பது நன்கு தெரிய வரும்.

| வருஷம். | இந்தியாவிலிருந்து துணி ஏற்றுமதி ரூ. | இந்தியாவில் துணி இறக்குமதி ரூ. | நூல் இறக்குமதி ரூ. |
|---|---|---|---|
| 1813—14 | 52,91,458 | 92,070 | |
| 1814—15 | 84,90,700 | 45,000 | |
| 1815—16 | 1,31,51,427 | 2,68,300 | |
| 1816—17 | 1,65,94,380 | 3,17,602 | |
| 1817—18 | 1,32,72,154 | 11,22,372 | |
| 1818—19 | 1,15,27,385 | 26,58,940 | |
| 1819—20 | 90,30,796 | 15,82,353 | |
| 1820—21 | 85,40,763 | 25,59,642 | |
| 1821—22 | 76,64,820 | 46,78,650 | |
| 1822—23 | 80,09,432 | 65,82,351 | |
| 1823—24 | 58,70,523 | 37,20,540 | |
| 1824—25 | 60,17,559 | 52,96,816 | |
| 1825—26 | 58,34,638 | 41,24,159 | 1,23,146 |
| 1826—27 | 39,48,442 | 43.46,054 | 75,276 |
| 1827—28 | 28,76,313 | 52,52,793 | 8,82,743 |

| | | | |
|---|---|---|---|
| 1828—29 | 22,23,163 | 79,96,383 | 19,11,205 |
| 1829—30 | 1,32,423 | 52,16,226 | 35,22,640 |
| 1830—31 | 8,57,280 | 60,12,729 | 15,55,321 |
| 1831—32 | 8,49,887 | 45,64,047 | 31,12,138 |
| 1832—33 | 8,22,891 | 42,64,707 | 42,85,517 |

1833-ம் வருஷத்திற்குள் இந்தியத் துணி ஏற்றுமதி மிகவும் சொற்பமாகிவிட்டது. அதே காலத்தில் பிரிட்டிஷ் துணியும், நூலும் இந்தியாவில் நிரந்தரமான வாடிக்கை பிடித்துவிட்டன.

## சுங்க வரித் தொல்லைகள்

மேற் கூறியவை போன்ற அநியாய முறைகளினால் இந்தியாவின் ஏற்றுமதி வியாபாரத்தைக் கொன்றதுமல்லாமல், இந்தியாவிலேயே பல வகையான சில்லரை வரிகள் விதித்து நாட்டுக் கைத்தொழிலுக்குக் கேடு சூழ்ந்தார்கள். இந்தக் கொடும் வரிகளில் முக்கியமானது உள்நாட்டில் சாமான் போக்கு வரவுக்கு விதிக்கப்பட்ட வரி யாகும். நவாபுகளின் ஆட்சியிலும், மற்ற இந்திய மன்னர்களின் ஆட்சியிலும் சாமான் போக்கு வரவுக்கு வரி உண்டாயினும் அவை சாதாரணச் சுங்க வரியாகவே இருந்தன. அதாவது சாமானின் மதிப்பைக் கவனியாமல் மாட்டுச் சுமைக்கு இவ்வளவு, குதிரைச் சுமைக்கு இவ்வளவு, வண்டிச் சுமைக்கு இவ்வளவு என்று மட்டுமே வரி விதிக்கப்பட்டது. பெரும்பாலும் இந்த வரி விகிதம் மிகவும் சொற்பமா யிருந்தபடியால் யாரும் சாமான்களைத் திருட்டுத்தனமாய்க் கொண்டுபோக எண்ணுவதில்லை. அநுமதிச் சீட்டு தேவையில்லாதபடியால் எக்காரணத்தைக் கொண்டும் சுங்கச் சாவடியில் சாமான்கள் சோதனை போடப் படுவதில்லை. வியாபாரிகள் சரக்குக் கொண்டுபோகும் தூரத்திற்குத் தகுந்தாற்போல் ஆங்காங்கு சொற்பத் தொகை சுங்கம் கொடுத்துச் சென்றார்கள். ஆனால் பிரிட்டிஷாரின் கீழ் இந்த முறை தலைகீழாக மாறிவிட்டது. வியாபாரி எவ்வளவு சொற்ப தூரம் சரக்குக் கொண்டு போனாலும் முதலிலேயே வரி முழுவதையும் செலுத்தி அநுமதிச் சீட்டு வாங்கிக்கொள்ள வேண்டியதாயிற்று. சுங்கத்தை ஒழுங்கு படுத்துவதென்னும் சாக்கின்மீது சுங்க வரி அசாத்தியமாக உயர்த்தி விடப்பட்டது. அதாவது வெகு தூரத்துக்கு வெகு தூரமுள்ள எல்லாச் சுங்கங்களின் வரியையும் சேர்த்து முதலில் கிளம்பும்போதே கொடுத்துவிட வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது. உள்நாட்டில் உபயோகப் படுத்தப்பட்ட இந்தியத் துணிகள் சில பிரதேசங்களில் 100க்கு $17\frac{1}{2}$ வீதம் வரி செலுத்த வேண்டியிருந்ததென்று மிஸ்டர் ராங்கிங் என்பார் 1843-ம் ஆண்டில் பார்லிமெண்டு விசேஷக் கமிட்டியின் முன்பு சாட்சியங் கூறினார். பருத்திக்கு 100க்கு 5 ரூபாயும், நூலுக்கு

$7\frac{1}{2}$ ரூபாயும், துணிக்கு $2\frac{1}{2}$ ரூபாயும், சாயம் போட்ட துணியானால் அதிகப்படியாக இன்னும் $2\frac{1}{2}$ ரூபாயும் வியாபாரிகள் வரி செலுத்தினார்கள். வெகு தூரங்களிலிருந்து சிறிது சிறிதாக சாமான்கள் வாங்கிக்கொண்டு வர வேண்டியிருந்தபடியால், இந்த வரிகளிலிருந்து தப்பித்துக் கொள்ளுதல் இயலாத காரியமா யிருந்தது. பருத்தியைத் துணியாக்குவதற்கு முன்னர் நாலுமுறை வரி கொடுக்கப்பட்டது. இதற்குப் பிறகும், நெய்த துணி அநுமதிச் சீட்டில் கண்ட வகையாயில்லாதிருந்தால் அதிக வரி கொடுக்க வேண்டியதாயிற்று. சுங்கச் சாவடியில் வரி செலுத்தி வியாபாரி வாங்கும் அநுமதிச் சீட்டு அடிக்கடி அவன் பெருந் தொல்லைக் காளாகக் காரணமாயிருப்பதுண்டு. குறிப்பிட்ட காலம் வரையில்தான் அந்தச் சீட்டு செல்லுபடி யாகும். அதற்குள் சரக்கு விற்பனை யாகாவிட்டால் சீட்டைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும். ஆனால் பழைய சரக்குகள்தான் என்று வியாபாரி நிரூபித்தால்தான் புதுச் சீட்டு கொடுக்கப்படும். அநுமதிச் சீட்டுப் பெறுவதில் பெருங் கஷ்டங்கள் இருந்தபடியால் திருட்டுத்தனமாய்ச் சரக்குகளைக் கொண்டுபோவதற்குத் தூண்டுதல் உண்டாயிற்று. இதைத் தடுப்பதற்காக ஏராளமான சோதனைச் சாவடிகள் நாடெங்கும் ஏற்பட்டன. சட்டத்தின்படி சுங்கக் காரியாலயத்துக்கு நாலு மைலுக்கப்பால் சோதனைச் சாவடிகள் இருக்கக் கூடாதாயினும் நடை முறையில் இச்சட்டம் முற்றும் புறக்கணிக்கப்பட்டது. சுங்கக் காரியாலயத்துக்கு 60, 70 மைல் தூரம் வரைக்கும் கூட எங்கே பார்த்தாலும் சோதனைச் சாவடிகள் ஏற்பட்டன. சுங்க உத்தியோகஸ்தர்களும், சோதனை அதிகாரிகளும் வியாபாரிகளைப் படுத்திய கொடுமைகளினால் பல விடங்களில் வியாபாரமே சட்ட விரோதமான காரியம் போல் ஆகிவிட்டது. வியாபாரிகளிடம் பணம் பறித்தல் சர்வ சாதாரணமாய் நடந்து வந்தது. சுங்கக் காரியாலயத்தையும், கணக்கற்ற சோதனைச் சாவடிகளையும் கடந்து சரக்குகள் கொண்டுபோதல் அளவில்லாத தொல்லைகளுக்கு இடமாயிருந்தது. அக்காலத்தில் இந்திய சுங்கச் சாவடிகளின் நிலைமையை நன்கறிந்தவர்கள், ருஷியா, காபூல், பிஷாவர், பொகாரா முதலிய நாடுகளைவிட பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களில் சுங்கச் சாவடியில் பணம் பறித்தலும், மற்ற நிர்ப்பந்தங்களும் அதிகமாயிருப்பதாக உரைத்தார்கள். நாளுக்குநாள் வறுமை வாய்ப்பட்டு வந்த ஜனங்கள் இக்கொடுமைகளைக் குறித்து முறையிடாமல் இல்லை- ஆனால் எவ்வளவோ முறையீடு அனுப்பியும் பரிகாரம் கிடைக்கவில்லை. இக்காலத்தில் இந்தியாவில் வியாபாரமே கஷ்டம் நிறைந்ததாயும், அபகீர்த்தி வாய்ந்ததாயும் ஆகிவிட்டதாக ஸர் சார்லஸ் டிரெவிலியன் கூறுகின்றார். எவ்வளவோ மதிப்பு வாய்ந்த மனிதர்களெல்லாம் அற்பச் சுங்க உத்தியோகஸ்தனின் தயவை நாட வேண்டியதாயிற்று. பார்லிமெண்டுக்கு விண்ணப்பத்துக்கு மேல்

விண்ணப்பம் அனுப்பியும் பயன்படவில்லை. சொற்ப வருமானத்தை முன்னிட்டு ஜனங்களைப் பெருங் கொடுமைக் காளாக்கிய முறை ஆதரிக்கப்பட்டு வந்தது. முதன்முதலில் 1825-ல் ஹோல்ட் மாக்கன்ஸி என்பார் இச்சுங்க வரிகளின் அநியாயத்தை நன்கு எடுத்து விளக்கினர். பின்னர் ஸர் சார்லஸ் டிரெவிலியனும், எல்லன் பரோ பிரபுவும் கிழக் கிந்தியக் கம்பெனிக்கு 1835-ம் ஆண்டில் அனுப்பிய அறிக்கைகளில் இவ்வநீதியைக் கண்டித்திருந்தார்கள். இவற்றின் பயனாக 1836-ல் வங்காளத்திலும், 1838ல் பம்பாயிலும், 1844-ல் சென்னையிலும், மற்றவிடங்களில் 1847-லுந்தான் இவ்வரிகள் நீக்கப்பட்டன. முதர்பா என்னும் கொடும் வரி ஒழிவதற்கு இன்னும் ஆறு வருஷகாலம் சென்றது. முதர்பா வரி என்பது, "நெசவுகாரர், தச்சர், கன்னர், கொல்லர், வியாபாரிகள் முதலிய அனைவர்மீதும் விதிக்கப்பட்ட ஒரு வரி. வியாபாரிகள் கடை வைத்திருந்தாலும், சாலை யோரத்தில் விற்றாலும் இந்த வரி யுண்டு. கடையாயிருந்தால் அதற்கு வேறு தனி வரி உண்டு" என்பதாகச் சென்னையிலிருந்து சென்ற ஒரு விண்ணப்பத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. மிஸ்டர் டைக்ஸ் என்பவர் மாஜிஸ்ட்ரேட்டாகவும், ரிவினியு அதிகாரியாகவும் வேலை பார்த்தவர்; தாமே முதர்பா வரி வசூல் செய்தவர். அவர் மேற்படி வரியின் கொடுமையைப் பற்றிக் கூறுவதாவது:— "நிலம் சாகுபடி செய்யாதவன் ஒவ்வொருவன்மீதும் அநேகமாக இந்த வரி விதிக்கப்படுகிறது. கிழவி ஒருத்தி தெரு மூலையில் கறி காய் விற்றால் அவள்மீது வரி விதிக்கப்படுகிறது. துணி விற்கும் வியாபாரியிடமும் அது வசூலிக்கப்படுகிறது. ஆனால் ஐரோப்பிய வர்த்தகர்களுக்கு மட்டும் வரி கிடையாது. வருஷத்தில் சில ரூபாய் சம்பாதிக்கும் சில்லரைக் கடைக்காரன் வரி செலுத்த வேண்டும். அவனுக்குப் பக்கத்தில் நூற்றுக் கணக்கில் சம்பாதிக்கும் ஐரோப்பிய வியாபாரி தம்படி வரி செலுத்துவதில்லை." இத்தகைய அற்பக் கொடுமைகளின் விளைவு என்னவாகுமென்று சொல்லவும் வேண்டுமோ? தேசமெங்கும் விஸ்தாரமாகப் பரவியிருந்த அரும் பெருந் தொழில் சிறிது சிறிதாக நிலை குலையலாயிற்று. மிக அற்பமான வியாபாரப் பண்டங்களுக்கும், தொழிலாளிகளின் சின்னஞ் சிறு கருவிகளுக்கும் முதர்பா வரி போடப்பட்டது. இராட்டினங்கூட இந்த வரியினின்றும் தப்பவில்லை. இந்தியப் பருத்தித் தொழிலைப்பற்றி விசாரிக்க 1848-ல் நியமிக்கப்பட்ட கமிட்டியார் முன்பு இவ்விஷயம் முக்கியமாக எடுத்துச் சொல்லப்பட்டது. தறிகளுக்கு வரி போடப்பட்டதென்று கூறவேண்டியதில்லை யன்றோ? தென்னிந்தியாவில் தறிகளுக்கு ஒரு வகை முத்திரை வரி வசூலிக்கப்பட்டதாகவும், இது குறித்து சத்தியமங்கலம், தர்மபுரி முதலிய இடங்களைச் சேர்ந்த தறிகாரர்கள் புகார் செய்தார்களென்றும் டாக்டர் புசானன் குறிப்பிட்

டிருக்கிறார். எல்லா வகுப்புகளையும் சேர்ந்த தொழிலாளிகள் - வியாபாரிகளிடமிருந்து உத்தியோகஸ்தர்கள் பணம் பறிப்பதற்கும், வேறு பல கொடுமைகள் செய்வதற்கும் முதர்பா வரி வசூல் இடமளித்ததாக 1853-ம் ஆண்டில் சென்னையிலிருந்து காமன்ஸ் ஸபைக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பத்திலிருந்து அறிகிறோம்.

## அடிமை யுகம்

பத்தொன்பதாம் நூற்றாண்டை இந்தியாவின் அடிமையுகம் என்று கூறலாம். இந்தியா விஷயத்தில் இங்கிலாந்து கைக்கொண்ட வியாபார முறை முதலில் தடை முறையா யிருந்தது. அதாவது இந்தியச் சரக்குகளின் வரவைத் தடுத்து அது தன்னுடைய கைத்தொழில்களைக் காத்துக்கொண்டது. பின்னர் இந்திய வியாபாரத்தை ஓங்க விடாமல் ஒடுக்கும் முறை கையாளப்பட்டது. கடைசியாக, அது அடக்க முறையாக மாறியது. பிரிட்டன் இந்தியாவில் அரசியல் அதிகாரம் பெற்ற காலத்திலிருந்து இந்தியாவின் வியாபாரத்தையும் கைத்தொழில்களையும் அழித்து விடுவதற்கு உறுதியுடன் முயன்று வந்திருக்கிறது. அம்முயற்சியில் பிரிட்டன் கையாண்ட முறைகளைப் பின்வருமாறு சுருக்கமாக எடுத்துக் கூறலாம் :—

(1) தடையில்லாத யதேச்சா வியாபாரக் கொள்கையை இந்தியாவின்மீது சுமத்தியது.

(2) இங்கிலாந்தில் இந்தியச் சரக்குகளுக்கு ஏராளமான இறக்குமதி வரிகள் விதித்தது.

(3) இந்தியாவில் உள் நாட்டு வியாபாரத்துக்கு மிகுதியான சுங்க வரிகள் விதித்தது.

(4) இந்தியாவிலிருந்து தங்கு தடையின்றி மூலப் பொருள்கள் ஏற்றுமதியாவதற்கு ஆதரவளித்தது.

(5) இந்தியத் தொழிலாளிகளைப் பலவந்த நிர்ப்பந்தங்களின் கீழ் வேலை செய்யப்பண்ணியது.

(6) கம்பெனியின் வருமானத்தைச் செலவு செய்த முறை. *

(7) இந்தியத் தொழிலாளிகளைப் பலவந்தப் படுத்தி அவர்களுடைய தொழில் இரகசியங்களை வெளியிடச் செய்தது.

---

* 1793-ம் ஆண்டிலிருந்து 1812 வரை 19 வருஷத்தில் தேசத்தின் வருமானத்திலிருந்து 250 லட்சம் பவுனுக்கு இந்தியச் சரக்குகள் வாங்கி அனுப்பப்பட்டன. இச்சரக்குகளை ஐரோப்பாவில் விற்றுப் பணத்தை எடுத்துக்கொண்டார்கள். இவற்றிற்குப் பதிலாக இந்தியா எவ்வித லாபமும் அடையவில்லை.

இந்தியாவில் கொடுமைகள் செய்தும் இங்கிலாந்தில் வரிகள் விதித்தும் இந்தியத் தொழில்களை நசுக்கிக்கொல்ல முயன்றார்கள். இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குத் துணி ஏற்றுமதி நின்று வருகையில், பஞ்சு ஏற்றுமதி மட்டும் அதிகமாகிக் கொண்டுவந்தது. அழிந்துபோன இந்தியத் தொழில்களை எருவாகப் போட்டு பிரிட்டிஷ் தொழில்கள் செழித்தோங்கின. பலவிடங்களில் நெசவுத் தொழிலாளிகள் வேலையில்லாதவர்களாகிப் பெருந் துன்பத்துக்காளாயினர். இந்தியத் தொழில்களுக்குப் பாதகமான வரிகளை நீக்குவது குறித்து விசாரணை செய்து அறிக்கை அனுப்ப 1840-ம் ஆண்டில் பார்லிமெண்டின் விசேஷ கமிட்டி ஒன்று ஏற்பட்டது. இக் கமிட்டியின் முன்பு சாட்சியங் கூறியவர்களில் பலரும், பிரிட்டிஷ் சரக்குகளுக்கு இந்தியாவில் 100க்கு $3\frac{1}{2}$ வீதமே வரி விதிக்கப்படுகையில் இந்தியத் துணிகளுக்கு மட்டும் இங்கிலாந்தில் 100க்கு 10 வீதம் வரி விதித்தல் அநீதி என்பதை எடுத்துக் காட்டினார்கள். இந்தியாவில் அப்போதிருந்த நிலைமையைக் கொண்டு இந்தியத் தொழில்கள் அடியோடு அழிந்து விடப் போகின்றன வென்பதை முன் கூட்டியே அறிந்து கூறுதல் எளிதாயிருந்தது.

1813-ம் ஆண்டுக்குப் பின்னர் பிரிட்டிஷ் ஆலைத்தொழில் விரைவாக அபிவிருத்தி யடையலாயிற்று. அவ்வருஷத்தில் இயந்திரத்தினால் ஓட்டப்பெற்ற தறிகள் இரண்டாயிரந்தான் இருந்தன. 1833-க்குள் அவை ஒரு லட்சமாகப் பெருகிவிட்டன. விலை விகிதமும் பெரிதும் குறைந்துவிட்டது. நூல், துணி இவற்றின் விலை மேற்படி இருபது வருஷகாலத்தில் 100க்கு 25 முதல் 80 வரையில் குறைந்து விட்டதாக மிஸ்டர் பெயின்ஸ் கூறுகிறார். உற்பத்திச் செலவு குறைந்து இந்தியாவில் விற்பனை செய்வதற்கும் வசதிகள் கிடைக்கவே தொழில் அதி விரைவாகச் செழித்தோங்கிற்று. 1833-ல் 40-ம் நம்பருக்கு மேற்பட்ட இந்திய நூல் விற்ற விலையையும் பிரிட்டிஷ் நூல் விற்ற விலையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இருபது வருஷங்களுக்கு முன்னிருந்த நிலைமை தலை கீழாக மாறிவிட்டதென்பது நன்கு தெரியவரும் :—

| நூல் நம்பர். | ஒரு ராத்தல் நூலின் விலை. இங்கிலீஷ் நூல். | | | இந்திய நூல். | | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
| 40 | 0 | 14 | 6 | 2 | 11 | 0 |
| 60 | 1 | 6 | 6 | 4 | 8 | 0 |
| 80 | 1 | 14 | 9 | 6 | 15 | 0 |
| 100 | 2 | 8 | 3 | 9 | 4 | 0 |
| 120 | 3 | 0 | 0 | 12 | 5 | 0 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 150 | 4 | 15 | 0 | 19 | 2 | 0 |
| 200 | 10 | 14 | 0 | 33 | 13 | 0 |

டாக்டர் டேலர் டாக்கா மஸ்லின் தொழிலைப்பற்றி எழுதும்போது, 30-ம் நம்பருக்கு மேற்பட்ட வகைகளில் உள் நாட்டு வெளி நாட்டு நூல்களின் விலை விகிதங்களை ஒப்பிட்டுக் காட்டி யிருக்கிறார். அவற்றிலும் இவ்வளவு ஏற்றத் தாழ்வு காணப்படுகிறது. ஆகவே இந்தியாவில் மெல்லிய நூல் நூற்றல் கைவிடப்பட வேண்டியதாயிற்று. ஆனால் முரட்டு நூல் மட்டும் இன்னமும் நூற்கப்பட்டு வந்தது. 1835-ம் வருஷத்தில் டாக்காவிலிருந்த கைத்தறிகளில் மூன்றில் ஒரு பங்கு தறிகள் கை இராட்டையில் நூற்ற முரட்டு நூலைக்கொண்டு துணி நெய்தன வென்று டாக்டர் டேலர் சொல்கிறார். இவ்வாறு பிரிட்டிஷ் துணிகள் மலிவானதும், அயல் நாட்டு மெல்லிய நூல் ஏராளமாக வரத் தொடங்கியது மல்லாமல், சில வருஷங்களுக்கெல்லாம் ரயில் பாதைகள் போடப்பட்டுப் பரதேசிச் சாமான்கள் நாட்டின் மூலை முடுக்குகளுக்கும் கூடப் போதல் சுலபமாகி விடவே, அவற்றுடன் போட்டியிட இயலாது சுதேசித் தொழில்கள் விரைவில் அழிந்துபடலாயின. 1840-ம் வருஷத்திலிருந்து 1879-ம் வருஷம் வரையில் ஏற்றுமதி இறக்குமதிப் புள்ளி விவரங்களைப் பார்த்தால், இந்தியா நாளுக்குநாள் துணிக்கு அயல்நாட்டை நம்பிய தேசமாகி வந்ததென்பது நன்கு தெரிய வரும் :—

| வருஷம். | இந்தியாவில் துணி இறக்குமதி (லட்சம் பவுன்.) | இந்தியாவிலிருந்து பஞ்சு ஏற்றுமதி (லட்சம் பவுன்.) |
|---|---|---|
| 1840—44 | 3·19 | 2·34 |
| 1844—45 | 3·75 | 1·68 |
| 1850—54 | 5·15 | 3·14 |
| 1855—59 | 6·94 | 3·11 |
| 1860—64 | 10·92 | 15·96 |
| 1865—69 | 15·74 | 25·98 |
| 1870—74 | 17·56 | 17·41 |
| 1875—79 | 19·21 | 11·21 |

இவ்வாறு பாரத தேசம் உள் நாட்டில் விளைந்த பஞ்சை ஏற்றுமதி செய்து வெளி நாட்டுத் துணி இறக்குமதி செய்யும் நாடாக விரைவில் மாறி வந்தது. ஒரு காலத்தில் மிகச் சிறந்த ஆடைகளை நெய்து உலகெங்கும் அனுப்பிப் பெயர் பெற்றிருந்த நாடு இப்போது வெறும் பருத்திப் பண்ணையாகக் கருதப்படலாயிற்று. இங்கிலாந்துக்கு வேண்டும்போதெல்

லாம் பஞ்சு அனுப்பி அங்கே அப்பஞ்சைக்கொண்டு உற்பத்தியாகும் துணிகளை அவர்கள் அனுப்பும் அளவுக்குத் திரும்ப வாங்கிக்கொள்ளு தற்கே இந்தியா ஏற்பட்டதுபோ லாயிற்று. உள் நாட்டுத் தொழிலைப் பாதுகாப்பதற்கு எவ்வித முயற்சியும் செய்யப்படவில்லை. துணி இறக்கு மதி வரியைக் கொஞ்சம் உயர்த்தலாமென்று யோசனை சொல்லப்பட்ட போதெல்லாம் இங்கிலாந்தில் அதற்கு விரோதமான பலத்த கூக்குரல் கிளம்பிற்று. கானிங் பிரபு 1857-ல் கொஞ்சம் இறக்குமதி வரியை உயர்த்தியபோது இவ்வாறே நேர்ந்தது. அதற் கடுத்த வருஷத்தில் இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பைக் கம்பெனியின் கையிலிருந்து பிரிட்டிஷ் அரசாங்கமே நேரில் ஏற்றுக்கொண்டது. இதற்குப் பின்னர் முதன் முதலாக இந்தியாவுக்கு வந்த வரவு செலவு மந்திரியிடம் மேற்படி வரி விகிதங்களை மாற்றி பிரிட்டிஷாரின் அதிருப்தியை நீக்கும்படியாகச் சொல்லி யனுப்பினார்கள். இதன் பயனாக, அன்னியத் துணிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த இறக்குமதி வரி பாதி யாக்கப்பட்டது. அன்னிய நூலுக்கும் 100 க்கு 5 விகிதத்திலிருந்து 100 க்கு $3\frac{1}{2}$ விகிதமாக இறக்கு மதி வரி குறைக்கப்பட்டது. இதன் நோக்கமென்ன வென்பதை மறைத் துக் கூறவில்லை. பம்பாய் மாஜி கவர்னரான ஸர் பார்டில் பிரியர் என்பவர் 1871-ல் காமன்ஸ் சபைக் கமிட்டியின் முன்பு சாட்சியம் கூறுகையில், இந்தியாவில் இறக்குமதி வரிகளை உயர்த்தினால் பிரிட்டிஷ் சரக்கு விற்பனை நிச்சயமாகக் குறையுமென்றும், உள் நாட்டில் அவற்றின் உற்பத்தி அதிகமாகுமென்றும் சொன்னார். பிற்காலத்தில் பம்பாயில் ஆலைத்தொழில் ஏற்பட்டது, அது ஆரம்ப தசையிலிருந்தபோதே லங்கா ஷயர் முதலாளிகளின் பொறாமையைக் கிளப்பியது, அவர்களுடைய முயற்சியினால் 1896-ல் பம்பாய் ஆலைத் தொழிலுக்கு மகா அநீதி வாய்ந்த எதிர் வரி போடப்பட்டது முதலிய விஷயங்களைக் குறித்து இங்கு நாம் விரிவாக ஆராய்வதற்கில்லை. இந்தியாவின் நன்மையும், இங்கிலாந்தின் நன்மையும் முற்றும் மாறுபட்டிருந்தன வென்றும், இங்கிலாந்தின் நலத் திற்காக இந்தியாவின் நலம் பலி கொடுக்கப்பட்டதென்றும் இங்கே குறிப்பிடுதலே போதும்.

## வாட்ஸனின் விசாரணை

ஏறக்குறைய 40 லட்சம் பவுன் பெறுமான அன்னியத் துணி 1879-ல் இந்தியாவில் இறக்குமதியாயிற்று. ஐம்பது ஆண்டுகளில் துணி இறக்குமதி பத்து மடங்குக்குமேல் பெருகிவிட்டது. இவ்வளவு சிறு காலத்தில் இறக்குமதி இத்துணை அதிகமாதல் ஆச்சரியமன்றோ? அதற் காகச் செய்யப்பட்ட முயற்சிகளின் வரலாறு ஒரு சுவையுள்ள சரித்திர மாகும். பிரிட்டிஷ் முதலாளிகளுக்கு எவ்விதத் தங்குதடையுமின்றி

இந்தியாவில் குறைந்த விலைக்குத் துணி விற்பதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இந்திய ஜனங்கள் எத்தகைய துணிகளை விரும்புகிறார்கள் என்னும் விஷயம் மிக நுட்பமாக ஆராய்ச்சி செய்யப் பட்டது. இந்தியத் தொழிலாளிகளின் வெற்றி இரகசியத்தைக் கண்டு பிடிக்கவும் பெருமுயற்சி செய்யப்பட்டது. இந்தியர்கள் விரும்பக்கூடிய துணிகளையே லங்காஷயர் ஆலைகள் உற்பத்தி செய்யுமாறு ஏற்பாடு செய் தார்கள். இந்த முயற்சிகள் எல்லாவற்றிற்கும் இந்திய அரசாங்க அதி காரிகள் துணை புரிந்தார்கள். 1851-ல் நடந்த சர்வ தேசீயக் கண் காட்சிக்குப் பின்னர், இந்தியாவின் உற்பத்திப் பொருள்கள் எல்லாவற்றை யும் சேகரித்து லண்டனில் ஒரு பொருட் காட்சிச் சாலை அமைக்கும்படி டாக்டர் ஜான் போர்ப்ஸ் ராயல் என்பார் நியமிக்கப்பட்டார். இந்தியாவில் லங்காஷயர்த் துணி விற்பனையைப் பெருக்குவதற்கான இம்முயற்சி இந்தி யாவின் செலவில் நடைபெற்றது! பத்து வருஷங்களுக்குப் பின்னர் இதே வேலையை மிஸ்டர் போர்ப்ஸ் வாட்சன் என்பவர் தொடர்ந்து நடத் தினார். அவர் தமது விசாரணையின் முடிவில் "இந்தியத் துணி வகைகளும் உடைகளும்" என்ற பெயருடன் ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டார். இந்தப் புத்தகத்தைக் குறித்துத்தான் மிஸ்டர் ஜே. பி. கீத் என்னும் ஆங்கில உத்தியோகஸ்தர் 1891-ம் ஆு செப்டம்பர் மீ 7உ வெளியான "பயனியர்" பத்திரிகையில் பின்வருமாறு எழுதினார்போலும்:—"தொழில் இரகசியங்கள் எவ்வளவு கவலையுடன் பாதுகாக்கப்படுகின்றன வென்பது அனைவரும் அறிந்த விஷயமே. டௌல்டன் கம்பெனியாரின் பானைத் தொழிற் சாலைக்கு ஒருவர் போனால் அங்கு அவரை யாரும் விரும்பி வர வேற்கமாட்டார்கள். எனினும் இந்தியத் தொழிலாளிகள் பலவந்தமாகத் தங்களுடைய சலவை முறை முதலிய தொழில் இரகசியங்களை மான் செஸ்டருக்கு வெளியிடும்படி செய்யப்பட்டார்கள். இந்திய ஏழை மக்க ளிடமிருந்து மான்செஸ்டர் 290 லட்சம் பவுன் அபகரிக்கும்பொருட்டு இந்தியக் காரியாலயத்தார் ஏராளமான பொருள் செலவு செய்து இப்புத்த கத்தைத் தயாரித்தார்கள். அதன் பிரதிகள் இங்கிலாந்தின் வர்த்தகச் சங்கங்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. இதற்குரிய செலவை இந்திய விவசாயிகள் கொடுக்க வேண்டியதாயிற்று!"

இந்திய உடைகளின் நிறம், கரை முதலிய ஒவ்வோர் அம்சமும் ஆங்கில முதலாளிகளின் நன்மைக்காக மேற்படி புத்தகத்தில் நன்கு விவரிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் உற்பத்தியான வெவ்வேறு 700 வகைத் துணிகளுக்கு மிஸ்டர் வாட்ஸன் மாதிரிகள் சேகரித்தார். வேஷ்டி, தலைப்பாகை, சேலை, மஸ்லின், துப்பட்டி, சீட்டி, பட்டும் பருத்தியும் கலந்த துணிகள் ஆகிய எல்லாம் மேற்படி மாதிரிகளில் அடங்கி யிருந்தன. இவற்றைக்கொண்டு ஆங்கில ஆலை முதலாளிகளின்

நன்மைக்காக ஒரு வியாபாரப் பொருட்காட்சிச் சாலை ஏற்படுத்தினார்கள். இந்திய ஜனங்கள் என்னென்ன விதமான துணிகளை விரும்புகிறார்கள் என்று காட்டுவதற்கே இது ஏற்பட்டது. ஏதேனும் ஒரு மாதிரியைப்போல் யாராவது துணி உற்பத்தி செய்ய விரும்பினால் அவர்களுக்கு அது கொடுத்து உதவப்பட்டது. எவ்விதக் குறைபாட்டுக்குமிடமின்றி இவ் வேலையை மிக நன்றாகச் செய்துவந்தார்கள். பிரிட்டிஷ் வியாபாரி களுக்கு இந்தியாவில் இன்னின்ன வகைத் துணிகள்தான் விற்கும், இன்னின்ன வகை விற்கமாட்டா என்று திட்டமாக எடுத்துரைக்கப் பட்டது. ஓர் அற்பமான விவரங் கூடப் பாக்கி வைக்கப்படவில்லை. சேலை யில் இவ்வளவு பொட்டுக்கள் இருக்கின்றன வென்பதுகூட எண்ணிச் சொல்லப்பட்டது. தலைப்பாகைகளின் விதவிதமான வர்ணங்கள், வேஷ்டிகளின் நீளம், அகலம், உடைநயம், கரைகள், மஸ்லின் துணியின் வேலைப்பாடு, அச்சுப் பூ வகைகள், ஆங்கிலேயரின் வாயிலும் நுழை யாத பலவிதப் பெயர்கள் முதலியன ஒன்று விடாமல் அறிவிக்கப்பட்டன. இந்தியாவில் மேல்வகுப்பாராகிய சில லட்சம் பேரைத் துணி விற்பனை க்கு நம்பியிருப்பதில் பயனில்லை யென்றும், கீழ் நிலையிலுள்ள கோடிக் கணக்கான ஜனங்களுடைய தேவைகளையே கவனித்து, அவர்களுக் கேற்ற சாதாரண, மலிவான துணிகளை உற்பத்தி செய்தால் எவ்வளவு வேண்டுமானாலும் விற்க இடமிருக்கிறதென்றும் பிரிட்டிஷ் முதலாளி களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டன. மிஸ்டர் வாட்ஸன் எழுதி யிருப்பதாவது:—"இந்தியாவிலிருந்து நாம் ஏராளமான மூலப்பொருள் களை வாங்கி வருகிறோம். அவற்றின் கிரயத்தைப் பாதி சரக்குகளாகவும் பாதி பணமாகவும் நாம் கொடுத்து வருகிறோம். ஆனால் நாம் இந்தியாவி னிடம் வாங்கும் பொருள்களுக்கு ஈடு செய்யக்கூடிய அளவு இந்தியா நம்மிடம் சாமான் வாங்குவதில்லை. இதன் பயனாக நாம் இந்தியாவுக்கு ஏராளமான தங்கம் அனுப்பவேண்டி யிருக்கிறது. அவ்வாறு நாம் அனுப்பும் பணம் சமுத்திரத்தில் போட்டது போல் அங்கேயே மறைந்து விடுகிறதே யல்லாமல் நம்மிடம் திரும்பி வருவதேயில்லை. பருத்தி, அவுரி, காப்பி, வாசனைத்திரவியம் முதலிய மூலப்பொருள்களை நாம் இந்தியாவினிடம் வாங்கிக்கொள்கிறோம். துணி முதலிய உற்பத்திப் பொருள்களை இந்தியாவுக்கு விற்கிறோம். ஆனால் இந்தியா ஒரு காலத்தில் நமக்கு ஏராளமாகத் துணி அனுப்பி வந்ததென்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இனிமேல் அப்பழைய நிலைமைக்கு அந்நாடு வருதல் இயலாத காரியமாயிருக்கலாம். எனினும் இந்தியாவில் ஆலைத்தொழில் அபிவிருத்தி யடைந்து வந்தால் அதன் முடிவு என்னவாகுமென்று சொல்ல முடியாது. ஆலைத்தொழில் அபிவிருத்தியைத் தடைசெய்ய எவ்வித நிர்ப்பந்தங்களும் விதிப்பதற்கு இந்தியாவின் நண்பர்கள் ஒருப்படமாட்டார்கள். ஆனால்

ஒன்று நிச்சயமாகக் கூறலாம். துணிகள் எங்கிருந்து வந்தாலும், எவ்வளவு மலிவாக அவை கிடைக்கின்றனவோ அவ்வளவுக்கு இந்தியப் பாமர ஜனங்கள் நன்மை யடைவார்கள். இந்திய நெசவுகாரர்களின் துணிகளைவிட மலிவான விலைக்கு லுங்கி, வேஷ்டி, சேலை, காலிகோ முதலிய துணிகளை கிரேட் பிரிட்டன் இந்தியாவுக்கு அனுப்பக்கூடுமானால் இரு தேசங்களும் நன்மை அடையும். இந்தியாவைப் போன்ற வளம் பொருந்திய தேசத்திற்கு இதனால் லாபம் உண்டென்பதில் சந்தேகமே யில்லை. பிரிட்டனிலிருந்து துணிகள் வருவதின் மூலம் இந்திய நெசவுத்தொழிலாளிகளுக்கு விடுதலை ஏற்பட்டால், அவர்கள் இன்னும் லாபகரமான தொழில்களில் ஈடுபட்டு உழைத்து நன்மை யடைவார்கள்.” அநுபவத்தில் இந்த மனிதருடைய தீர்க்க தரிசனம் பொய்யாகி விட்டது. இவருடைய நோக்கம் நல்லதென்று கொள்ளினும் சிறிதும் கற்பனு சக்தி இல்லாத ஆங்கிலேயர் இவர் என்பதில் சந்தேகமில்லை. இராட்டைத் தொழிலும், நெசவுத் தொழிலும் அழிவதினால் நாடெங்கும் ஏற்படக்கூடிய மகத்தான துயரங்களை இவர் எண்ணிப் பார்க்கவில்லை. உண்மையில் அவற்றின் அழிவினால் விளைந்த தென்ன ? கைராட்டைச் சுற்றிக் கண்யமாக வாழ்ந்த கோடிக்கணக்கான ஏழை மாதர் தங்கள் பிழைப்பை இழந்தார்கள். ஒன்று அவர்கள் சோம்பேறிகளாக நாள் கழிக்க நேர்ந்தது ; அல்லது வறுமைக் கொடுமையின் காரணமாக வீட்டைவிட்டு வெளியேறி அகப்பட்ட வேலை செய்ய வேண்டியதாயிற்று. ஆயிரக்கணக்கான தறிகாரர்கள் உள் நாட்டு சாவ்கார்களுக்கும், வெளி நாட்டு ஆலை முதலாளிகளுக்கும் ஏக காலத்தில் அடிமைப்பட்டதன் பயனாகத் தங்கள் பரம்பரைக் கைத்தொழிலைக் கைவிட்டு விவசாயத்தையோ, அதனினும் நிலையில்லாத வேறு பிழைப்பையோ கைக்கொள்ளலானார்கள். கிராம சமுதாய வாழ்க்கையின் அடிப்படை நிலை குலைந்து கவிழ்ந்தது. இவ்வளவு விளைவுகளில் எதையும் மிஸ்டர் வாட்ஸன் எண்ணிப்பார்க்கவில்லை. கிரேட் பிரிட்டன் லுங்கிகள், வேஷ்டிகள், புடவைகள், காலிகோக்கள் முதலியவற்றை இந்தியாவுக்கு அனுப்பி நல்ல லாபம் பெறலாமென்பது ஒன்றுதான் அவர் தெளிவாகக் கண்ட விஷயம். ஆனால் தமது உண்மை நோக்கம் இன்னதென்பதை மறைப்பதற்கும் அவர் முயற்சி செய்தவரல்லர். மூடு மந்திரமின்றித் தெளிவுள்ள மொழிகளினால் அவர் கூறுவது வருமாறு :—“ இந்தியா தேசத்தில் வசிக்கும் மக்கள் தொகையில் 20 கோடிப் பேர் ஆவர். அவர்களில் பெரும்பான்மையோர் மிகக் குறைவான உடையே தரிக்கிறார்களென்றாலும், ‘ அவர்கள் எல்லாருக்கும் உடுக்கத் துணி தருவதென்பது இலேசான காரியமன்று. ஆதலின் இந்தியா இங்கிலாந்துக்கு மகத்தான சந்தையாகக் கூடும் என்பதில்

சந்தேகமில்லை. இத்தகைய சந்தையாயிருந்துகொண்டே அது உள் நாட்டுத் துணிகளையும் செலவு செய்யக்கூடும். ஏனெனில், இவ்வளவு கோடிக்கணக்கான ஜனங்களில் ஒரு பகுதியாருக்கு நாம் துணி கொடுப்ப தாயிருந்தாலும் லங்காஷயரின் தறிகளை இரு மடங்காக்கவேண்டும். இத்தகைய நிலைமை இனி ஏற்படலாமென்றுதான் நான் சொல்கிறேன். தற்போதுள்ள நிலைமை இதற்கு முற்றும் மாறானது. இப்போது இந்தியா மிகவும் சொற்பமாகத்தான் நம்முடைய துணிகளை வாங்கி வருகிறது."

## "மகத்தான சந்தை."

மிஸ்டர் வாட்ஸன் கோரியதுபோல் இந்தியா பிற்காலத்தில் இங்கிலாந்துக்கு "மகத்தான சந்தை" ஆயிற்று என்பது அனைவரும் அறிந்த விஷயம். இந்த மாறுதலின் காரணமாக இந்தியாவின் தொழில்களெல்லாம் ஆக்கம் குன்றி நலிய, இந்தியத் தொழிலாளிகள் அன்னிய வியாபாரக் கொடுமைக்கு இரையாகித் துன்பத்திலாழ்ந்து வருந்த வேண்டியவர்களாயினர். ஆனால் இவை பிற்காலத்து நிகழ்ச்சிகள். அப்போதோ இந்தியாவை அதிகமாகச் சாமான் வாங்கச் செய்வதெப்படி என்பது பெரிய பிரச்னையாயிருந்தது. 1866-ல் அன்னிய வியாபாரியின் பேராசையைப் பூர்த்தி செய்யுமளவுக்கு இந்தியா பரதேசித் துணி வாங்கவில்லை. இராட்டைத் தொழில் இன்னும் அடியோடு அழிந்துவிடவில்லை. ஆங்காங்கே அபூர்வமாகவேனும் இராட்டையின் ஒலி கேட்டது. இராட்டை நூலுக்கு நாட்டில் போதிய கிராக்கியும் இருந்து வந்தது. "காதுக்கு இன்னிசை போல் கண்ணுக்கு இன்பமளிக்கும் அழகிய வர்ண வேலைப்பாடுகள் அமைந்த துணிகள்" நெய்த தொழிலாளர் இன்னும் சிலர் ஆங்காங்கு இருந்து வந்தார்கள். சந்தேரி, ஆரணி முதலிய இடங்களில் முன் பணம் கொடுப்போருக்கு இன்னமும் மஸ்லின்கள் நெய்து தரப்பட்டன. நயமான நாட்டுத் துணிகளுக்குக் கிராக்கி பெரிதும் குறைந்துவிட்டதாயினும் ஆங்காங்கு உள்ளூர் மனிதர்களின் ஆதரவினால் அத்தொழில் முழுதும் அழியாமல் பாதுகாக்கப்பட்டு வந்தது. ஹைதராபாத்துக் கருகிலுள்ள நாராயணபேட்டை முதலிய இடங்களில் டாக்கா மஸ்லின் நூலைப் போன்ற நயமான நூல் நூற்கப்பட்டு வந்ததாகவும், ஓயாது தண்ணீர் தெளித்து ஜாக்கிரதையாக மூடி வைக்கப்பட்டிருந்த அறைகளில் இந்த நூல் நூற்றார்களென்றும் காப்டன் மெடோஸ் டேலர் எழுதி வைத்திருக்கிறார். நயமான கை நூலும் துணியும் சோழமண்டலத்துக் கடற்கரையிலும் ஓரளவு கிடைத்து வந்தது. மத்திய மாகாண அரசாங்கத்தார் 1867-ல் பருத்தித் தொழிலைப் பற்றி வெளியிட்ட அறிக்கையில், அகோலா, ஜப்பல்பூர், நாகபுரி ஆகிய இடங்களில் நடந்த கண்காட்சிகளுக்கு மிக மெல்லிய மஸ்லின் துணிகள்

வந்திருந்தனவென்று குறிப்பிட்டிருக்கின்றனர். இத்தகைய அதி நய மான நூல் மிகவும் குறைவாகவே உற்பத்தியாயிற்று. ஆனால் முரட்டுத் துணி வகைகளிலும், சித்திரக்கரைகள் போட்ட தினுசுகளிலும் நாட்டுத் துணியே இன்னும் தலைமை வகித்து வந்தது. சித்திர வேலை செய்த துணிகளை இந்தியாவைவிட இங்கிலாந்து மலிவாக உற்பத்தி செய்ய முடியாதென்று மிஸ்டர் போர்ப்ஸ் வாட்ஸன் கருதினார். இருந்தபோதி லும் ஆங்கிலத் தொழிற்சாலைக்காரர்கள் அச்சித்திர வேலைகளை நன்கு ஆராய்ந்து தெரிந்துகொள்வதால் பய னடையலாமென்று அவர் சிபார்சு செய்தார். மிக நேர்த்தியான சித்திரைக் கரைகள் அமைந்த இந்தியத் துணிகளை நெய்வதற்கும், அவற்றில் பூ வேலை செய்வதற்கும் நீண்ட காலம் பயின்ற விரல்களின் அற்புதத்திறமை இன்றியமையாததா யிருந் தது. இத்தகைய துணிகளுக்குக் கிராக்கி பெருமிதமாக இருந்திருக்க முடியாது. ஆங்காங்கு உள்ளூர் தனவந்தர்களின் ஆதரவு பெற்றே இவ் வருங்கலை நடந்து வந்திருக்கவேண்டும். ஆனால் பாமர ஜனங் களுக்குத் தேவையான முரட்டுத் துணிகளைப் பொறுத்தவரையில் உள் நாட்டுத் தொழிலை இன்னமும் தோற்கடிக்க முடியவில்லை. இராட்டை யும், கைத்தறியும் உற்பத்தி செய்த முரட்டுத் துணிகள் அயல் நாட்டுத் துணிகளைவிட மலிவாகவும் உறுதியாகவும் இருந்தன. அவற்றைப் பாமர ஜனங்கள் பெரிதும் விரும்பினார்கள். இது சம்பந்தமாக ஒரு முக்கியமான விஷயத்தை மிஸ்டர் போர்ப்ஸ் வாட்ஸன் தமது புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அமெரிக்க உள் நாட்டு யுத்தத்தின்போது பருத்தி விலை மிக அதிகமாகிவிட்டபடியால், இந்தியாவில் உற்பத்தியான முரட் டுத் துணிகளின் விலை அதே வகையைச் சேர்ந்த அயல் நாட்டுத் துணி களின் விலையைப் போல் இரு மடங்காகி விட்டதாயினும், இந்திய ஏழை மக்கள் சுதேசித் துணிகளையே விரும்பினார்கள் என்று அவர் கூறுகிறார். உள் நாட்டுத் துணிகளின் உறுதிப்பாடே இதற்குக் காரணமாயிருக்க வேண்டுமென்று சொல்லவேண்டியதில்லை.

## 1870-ம் ஆண்டில் மத்திய மாகாண நிலைமை

இதே உண்மையை மத்திய மாகாண அரசாங்க உத்தியோகஸ்தர் களும் கவனித்திருக்கிறார்கள். "வெகுநாள் நீடித்து உழைக்கும் முரட்டு நாட்டுத் துணியை ஆலைத் துணியினால் ஓட்ட முடியவே யில்லை. மேற்படி நாட்டுத் துணி சுதேசி வண்ணானின் தோய்ப்புக்கு நிற்கிறது. வெயில், மழை, குளிர் எல்லாவற்றிற்கும் உதவுகிறது" என்று மிஸ்டர் ரிவட் கார்னக் தீர்மானமாகச் சொல்கிறார். மத்திய மாகாணத்தில் வாரந் தோறும் நடந்த பல சந்தைகளில் சிம்பூரில் நடந்த ஒரு சந்தையைக் குறித்து அவர் எழுதியிருப்பதாவது :— "முரட்டு நாட்டுத் துணி இங்கு

விற்கப்படும் முக்கியமான பண்டங்களில் ஒன்று. டேட் என்னும் சாதியாரால் இத்துணி உற்பத்தி செய்யப்படுகிறது. அவர்களே நூல் நூற்றுக் கைத்தறியில் நெய்கிறார்கள். இத்துணி மிகவும் உறுதியாக நிற்கிறபடியால், பீரார் விவசாயிகள் இதைப் பெரிதும் விரும்புகிறார்கள்- பார்வைக்கு அழகாயிருப்பினும் அவ்வளவு உறுதியில்லாத ஆங்கிலத் துணிகள் அவர்களுக்குச் சரிப்படுவதில்லை. முரட்டு நாட்டுத் துணியின் விலை சமீபத்தில் ஏறியிருந்தும் விவசாயிகள் முன்னைவிட அதிகமாக அத்துணியையே வாங்குகிறார்கள்." மொத்தம் இந்தச் சந்தையில் இருந்த 1114 கடைகளில் 521 துணிக் கடைகளாகும். இவற்றுள் ஐந்து கடைகளிலில்தான் பரதேசி ஜவுளிகள் விற்கப்பட்டன. டேட் சாதியாரின் முரட்டுத் துணிகள் 350 கடைகளிலும், "கோஷ்டி" களின் நயமான துணிகள் நூற்றுக்கு மேற்பட்ட கடைகளிலும் விற்கப்பட்டன. டேட் சாதியார் கொண்டு வந்த துணியை யெல்லாம் விற்றுவிட்டு, அங்கு விற்பனைக்கு வந்திருந்த 25 வண்டி பஞ்சிலிருந்து அடுத்த வாரத்துக்குத் தங்களுக்கு வேண்டிய பஞ்சு வாங்கிச் சென்றார்களென்று மிஸ்டர் கார்னுக் எழுதி வைத்திருக்கிறார். மெல்லிய நூல் நூற்றல், மெல்லிய துணி நெசவு இவை சம்பந்தமாகவும் நமக்கு உத்தியோக முறை விவரம் கிடைத்திருக்கிறது. அகோலாவில் நடந்த கண் காட்சியைப்பற்றி மிஸ்டர் ரிவட் கார்னுக் விவரித்துள்ளார். அக்காட்சியில் மிக நயமான கை நூல் வைக்கப்பட்டிருந்தது என்றும், "அந்நூலைப் பார்த்தவர்களை அது பழைய நாட்டு இராட்டையில் கையினால் நூற்கப்பட்ட நூல் என்று நம்பச் செய்வது மிகவும் பிரயாசையாயிருந்தது" என்றும் அவர் கூறுகிறார். மேற்படி கண் காட்சியில் இருந்த ஒரு நூல் கண்டை நிறுத்துப் பார்த்ததில் ஒரு ராத்தல் எடைக்கு 117 மைல் நீளமுள்ள நூல் இருந்ததாகத் தெரியவந்தது. ஆகவே இது 245 நம்பருக்குச் சிறிது மேற்பட்ட நூலா யிருக்கவேண்டும். மெல்லிய நூல் நூற்றவர்கள் நல்ல பருத்தியாகப் பார்த்து வாங்குவதில் மிக்க கவலை செலுத்தினார்கள். விதையுடன்கூடிய பருத்தியே எப்போதும் அவர்கள் வாங்கினார்கள். பருத்தியை மிஷினில் அரைக்காமல், அதன் துசும்புகளுக்கு எவ்விதத் தீங்கும் விளையாவண்ணம் கையினாலேயே விதைகளை நீக்கினார்கள். முப்பதாம் நம்பருக்குக் கீழ்ப்பட்ட சாதாரண நூலுக்கு மிஷினில் பருத்தி அரைக்கப்பட்டுப் பஞ்சு கொட்டிகளால் கொட்டித் தரப்பட்டது. இவ்வாறு நயமான நூல், முரட்டு நூல் இரண்டும் நூற்கப்பட்டு வந்தபோதிலும் தொழிலுக்கு அபாயம் நெருங்கியேயிருந்தது. அயல் நாட்டுத் துணிகள் நாடெங்கும், முக்கியமாக ரயில் பாதை போடப்பட்ட இடங்களிலெல்லாம் உள் நாட்டுத் தொழிலை நெருக்கி வந்தன. 1863-ம் ஆண்டிலிருந்து 1867-ம் ஆண்டு வரையில் மத்திய மாகாணத்தில் அயல்

நாட்டுத் துணி வரவு அதிகமாகி வந்தபோதிலும், அதைவிட அம் மாகாணத்தில் உற்பத்தியாகி வெளி மாகாணங்களுக்குச் சென்ற துணி அதிக மென்பதைப் பின் வரும் புள்ளி விவரங்கள் நன்கு விளக்கும் :—

| வருஷம். | நாட்டுத் துணி ஏற்றுமதி (மணங்கு.) | பரதேசித் துணி இறக்குமதி (மணங்கு.) |
|---|---|---|
| 1863—64 | 75,362 | 22,591 |
| 1864—65 | 54,277 | 58,496 |
| 1865—66 | 55,052 | 29,070 |
| 1866—67 | 52,893 | 58,402 |

1868—69-ம் ஆண்டின் மத்திய மாகாண அரசாங்க கெஜட்டில் சில ஜில்லாக்கள் சம்பந்தமான புள்ளி விவரங்களும் காணப்படுகின்றன. அவை வருமாறு :—

| ஜில்லா. | இறக்குமதி. நாட்டுத் துணி | இறக்குமதி. இங்கிலீஷ் துணி | ஏற்றுமதி. நாட்டுத் துணி | ஏற்றுமதி. இங்கிலீஷ் துணி |
|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| ஆர்வி | 53,994 | 32,650 | 25,625 | 16,300 |
| தியோலி | 1,23,281 | 13,722 | 3,790 | ... |
| ஹிங்கிங்காட் | 2,59,706 | 44,613 | 1,77,114 | 26,161 |

பர்ஹம்பூர் நகரமும், பர்ஹம்பூர் ஜில்லாவும் ஜவுளி வியாபாரத்திற்குப் பெயர் பெற்றிருந்தன. இவ் விடங்களின் வியாபாரத்தைக் குறித்த புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை யாயினும் தறிகாரர்கள் மாதம் ரூ. 5 முதல் ரூ. 10 வரையில் சம்பாதித்தார்களென்றும், இதைத் தவிர அவர்களுடைய குடும்பத்தார் நூற்றலிலும், சாயம் போடுதல் முதலிய வேலைகளிலும் பணம் சம்பாதித்தார்களென்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. தொழிலாளிக்கு வேறு வேலை எதுவும் இல்லாமற்போனால் அவன் சாதாரண சேலைகளும் புடவைகளும் நெய்தான். இத்துணிகளுக்கு எப்போதும் கிராக்கி யிருந்ததோடுகூட, இவற்றிற்கு அதிக மூல தனமும் தேவையில்லாமலிருந்தது. “நெசவுகாரர்களின் குடும்பத்தினரும் மற்றக் குடும்பத்தார்களும் நூல் நூற்கிறார்கள். டேட் சாதியாரால் தான் மிகச் சிறந்த நூல் நூற்கப்படுகிறது. சாதாரண நூல் நாடெங்குமுள்ள எல்லா வகுப்பு ஸ்திரீகளும் நூற்கிறார்கள். சாதாரண முரட்டு நூல்தான் இப்போது அதிகமாய் நூற்கப்படுவதாகவும், நயமான நூலுக்குக் கிராக்கி நாளுக்குநாள் குறைந்து வருவதாகவும் தெரியவருகின்றன” என்பதாக மேற்படி அரசாங்க கெஜட்டில் கூறப்பட்டிருக்கிறது.

## பம்பாயின் நிலைமை

பம்பாய் மாகாணத்தில் நிலைமை இவ்வளவு திருப்திகரமா யில்லை. சில ஜில்லாக்களில் நூற்றல் தொழில் குற்றுயிரா யிருந்தது. மற்றும் சில ஜில்லாக்களில் அடியோடு மாய்ந்துவிட்டது. ஆமதாபாத்தில் ஆலைகள் ஏற்பட்டதின் காரணமாக குஜராத்தில் கைநூலுக்குக் கிராக்கி மிகவும் குறைந்துபோயிற்று. காண்டேஷ் பிரதேசத்தில் ஏழை ஸ்திரீகளின் முக்கிய ஜீவனோபாயமாக விருந்த இராட்டைத் தொழில் அடியோடு மறைந்தது. ஆனால் இன்னமும் சூரத், தார்வார் இந்த ஜில்லாக்களில் மட்டும் பட்டணங்களிலும் சரி, கிராமங்களிலும் சரி, ஏறக்குறைய பெண்மக்கள் எல்லாரும் நூல் நூற்று வந்தார்கள். குடும்பத் தேவைகளுக்காக மட்டு மன்றி விற்பனைக்கும் நூல் நூற்கப்பட்டது. முரட்டுத் துணிகள் நெய்வதற்கும், கட்டில்களுக்கு நாடா பின்னுவதற்கும், கயிறு திரிப்பதற்கும் நூலை உபயோகித்தார்கள். கிராமவாசிகள் முரட்டுத் துணியைத் தவிர வேறெதுவும் அணிவதில்லை. நாட்டுக் கைத் துணியின் உறுதிப்பாட்டை உத்தேசித்தும், மாறுதலிலுள்ள வெறுப்பினாலும் பட்டணவாசிகளிலும் ஸ்திரீகள் பலர் நாட்டுத் துணியே உடுத்தி வந்தார்கள். பெண்கள் பெரும்பாலும் தினம் ஐந்து மணி நேரத்திற்குமேல் நூற்றார்கள். விதை, தூசி அல்லது இலை ஒன்று கூட இராமல் பஞ்சு மிக ஜாக்கிரதையாகச் சுத்தம் செய்யப்பட்டது.

## வங்காளத்தின் நிலைமை

மெட்விகாட் என்பவர் 1870-ம் வருஷத்திற்குச் சில வருஷங்களுக்கு முன்னால் கைத்தறியைப்பற்றி ஒரு புத்தகம் எழுதினார். அக்காலத்தில் வங்க நாட்டில் சொந்த உபயோகத்திற்காக மட்டுமே பருத்திப் பயிர் செய்யப்பட்டதாக அப்புத்தகத்தில் அவர் எழுதியுள்ளார். "கிராமத்துக் கடைகளில்கூட விற்பனைக்குப் பருத்தி வைக்கப்படுவதில்லை. அவரவர்கள் கொல்லையில் விளைந்த பருத்தியைத் தாங்களே நூற்று அருகிலுள்ள நெசவுகாரனிடம் கொடுத்துத் துணியாக நெய்து தங்கள் குடும்ப உபயோகத்துக்கு வைத்துக்கொண்டார்கள்" என்று அவர் கூறுகிறார். ஒரு காலத்தில் உலகப் பிரசித்தி பெற்றிருந்த டாக்கா மஸ்லின் தொழில் மான்செஸ்டரின் போட்டியால் ஏற்கனவே அழிந்து போய்விட்டது. அப் போட்டியின் காரணமாக இன்னும் பல விடங்களில் இப்போது நெசவுத் தொழில் அழிந்துகொண்டு வந்தது. நெசவுத் தொழிலாளிகள் அதி விரைவாக விவசாயத் துறையில் புகுந்து வந்தார்கள். இதே காலத்தில் பஞ்சாப்பின் நிலைமையைப்பற்றி எழுதியுள்ள ஸர் பேடன் பாவெல் என்பார் அம்மாகாணத்தில் எல்லா விடங்களிலும் பல வகுப்பாருக்கும் தேவையான முரட்டுத் துணிகளைத் தறிகாரர்நெய்துவந்தன ரென்று குறிப்பிட்டிருக்கிறார்.

## சென்னையில் நெசவுத்தொழில்

பொதுவாக 1870-ம் ஆண்டுக்குச் சமீபத்தில் இந்தியாவின் உள்நாட்டுப் பகுதிகளில் ஜனங்கள் முரட்டுக் கதரைப் பெரிதும் உபயோகப்படுத்திவந்தார்களென்று தெரிய வருகிறது. இராட்டை நூல் எங்கும் ஓரளவு காணப்பட்டதாயினும் அதன் அழிவு காலம் தொடங்கிவிட்டதென்பதும் தெளிவாகத் தோன்றலாயிற்று. இதனால் கைத்தறி நெசவுத் தொழிலும் பாதிக்கப்படாமற் போகவில்லை. 1870-ம் ஆண்டில் சென்னை ரிவினியூ போர்டார் அப்போதிருந்த கைத்தறிகளுக்குக் கணக்கு எடுத்தார்கள். அந்தக் கணக்கையும், 1921-ம் ஆண்டு ஜனக்கணிதியின்படி தெரியவரும் புள்ளி விவரங்களையும் ஒப்பிட்டுப் பாத்தால், 1870-ம் வருஷத்துக்குப் பின்னர் இந்த ஒரு மாகாணத்தில் கைத்தறிகாரர்கள் எத்தனைபேர் தொழிலிழந்தார்கள் என்பது நன்கு தெரியவரும்.

| வருஷம். | சென்னை மாகாணத்தின் ஜனத்தொகை. | தறிகள். | கிராமங்களில். | பட்டணங்களில். | என்ன நூல்? |
|---|---|---|---|---|---|
| 1870 | 3 கோடி | 2,79,220 | 2,20,015 | 59,205 | அயல்நாட்டு நூல் மூன்றில் ஒரு பங்கு. மற்றது ராட்டை நூல். |
| 1921 | 4 கோடி 10 லட்சம் | 1,69,403 | விவரம் கிடைக்கவில்லை. | | எல்லாம் அன்னிய நூல் அல்லது ஆலை நூல். |

இவ்வாறு ஒரு மாகாணத்தில் மட்டும் ஏறக்குறைய ஒரு லட்சம் தறிகள் குறைந்து விட்டனவென்று ஏற்படுகிறது. இதே காலத்தில் ஜனத்தொகை அதிகமாகி யிருக்கிறதென்பதையும் கவனிக்கவேண்டும். 1911-ம் வருஷத்து ஜனக்கணிதி அறிக்கை எழுதிய மிஸ்டர் சாடர்டன் என்பார், தறிகாரர்களின் தொகை 1870-ம் வருஷத்தி லிருந்தது போலவே ஏறக்குறைய இருந்து வருகிறதென்றும், ஆனல் அவர்களில் பெரும் பாலோர் வயிறு வளர்ப்பதற்கு முன்னைவிட அதிகமாக உழைக்க

வேண்டி யிருக்கிறதென்றும் கூறி யிருக்கிறார். அவருடைய முடிவு முற்றும் தவறானதாகும். ஜனக்கணித அறிக்கைகளில் "தொழில்" என்ற தலைப்பில் தரப்படும் பிழைபட்ட விவரங்களை ஆதாரமாகக்கொண்டு அவர் இவ்வாறு முடிவு செய்துள்ளார். தறிகளின் தொகை மிகுதியும் குறைந்து போயிருப்பதை அவர் கவனிக்கவில்லை. தொழிலின் உண்மை நிலைமையைத் தறிகளின் தொகையைக்கொண்டு தீர்மானிப்பதே சரியான முறையாகும். நெசவுத் தொழிலாளிகளில் மிகப் பெரும்பான்மையோர் கிராமங்களிலேயே வாழ்ந்து வந்தார்கள். அவர்களில் பலர் தங்கள் பரம்பரைக் கைத்தொழிலைக் கைவிட நேர்ந்த தென்பதில் சந்தேகமே யில்லை. மற்றும் ஒரு பகுதியார் பட்டணங்களுக்குச் சென்று அங்குள்ள பண லேவாதேவிக்காரர்களிடம் கடன் வாங்கித் தொழில் செய்து அவர்களுக்கே அடிமை யானார்கள். இன்னும் அநேகர் பட்டணங்களுக்கும், காப்பி, தேயிலைத் தோட்டங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் கூலி வேலை செய்து பிழைக்கச் சென்றனர் என்று தெரிய வருகிறது. நாட்டில் ஏற்பட்ட மாறுதலினால் பெரிதும் கஷ்டத்துக் குள்ளானவர்கள் சென்னை மாகாணத் தறிகாரர்களேயாவர். இம்மாகாணத்தில் கைத்தறி நெசவு செய்வோர் இன்னும் இருக்கிறார்களென்றால், இங்கு வசிக்கும் ஸ்திரீ புருஷர்களுக்குள்ளே ஆலைத்துணி அணியும் வழக்கம் அதிகம் பரவாதிருப்பதே அதற்குக் காரணமாகும். அன்னியத் துணியினால் மட்டு மன்றி, அன்னிய நூலினாலும் தொழிலாளிகளுக்குத் துன்பமே விளைந்தது. அன்னியத் துணி இறக்குமதி அவர்களுடைய பிழைப்பிலேயே மண்ணைப் போட்டது. அன்னிய நூல் அல்லது ஆலை நூலோ அவர்கள் இரக்கமற்ற சாவ்காரர்களின் கையில் சிக்கிக்கொண்டு துன்புறுவதற்குக் காரணமாயிருந்தது.

கைத்தறி நெசவு ஆக்கங் குன்றியதற் குரிய காரணங்களை வெகு தூரம் தேடிப்போக வேண்டியதில்லை. சென்னை அரசாங்கத்தின் 1879-ம் வருஷத்திய நிர்வாக அறிக்கையில் அவை கூறப்பட்டிருக்கின்றன. மதுரையில் நெசவுத் தொழிலின் நிலைமையைப் பற்றி அவ்வறிக்கையில் காணப்படும் ஒரு பகுதி வருமாறு:— "ஆங்கிலத் துணிகளின் இறக்குமதியினால் சுதேசி நெசவுத் தொழில் எவ்வாறு பாதிக்கப் பட்டிருக்கிறதென்பதை விளக்க ஒரு விநோதமான உதாரணம் எடுத்துக் காட்டலாம். மதுரை நகரிலுள்ள நெசவுகாரர்கள் தாங்கள் நெய்த துணியைத் தாங்களே உடுத்திக் கொள்ளுதல் மிக அபூர்வமாயிருக்கிறது. பொதுவாகச் சொன்னால், நெசவுத் தொழிலில் நாளுக்கு நாள் லாபம் குறைந்து வருகிற தென்பதில் சந்தேகமில்லை. இதன் காரணங்களை அறிதல் கஷ்டமன்று. வெளி நாட்டு ஆலை நூல் இறக்குமதியாகத் தொடங்கியதற்கு முன்னால் சுமார் 2000, 3000, குடும்பங்கள் நூல் நூற்கு

தொழில் செய்து பிழைத்து வந்ததாகத் தெரியவருகிறது. இந்தத் தொழில் இப்போது அடியோடு நின்று போயிற்று. மற்றும், சரிகை இறக்குமதியாகத் தொடங்கியதற்கு முன்னால் 500 முஸ்லிம் குடும்பங்கள் சரிகை உற்பத்தி வேலையில் பிழைத்து வந்தன. தற்போது பத்து குடும்பங்களே அவ்வேலை செய்து வருவதாகத் தெரிகிறது. இரண்டொரு வருஷங்களுக்கு முன்பு கூடத் துணிகளுக்குவேண்டிய சாயப் பொருள்கள் உள்ளூரிலேயே தயார் செய்யப்பட்டு வந்தன. இப்போது பம்பாய்ச் சாயம் வந்து இத்தொழிலையும் அழித்து விட்டது. இவ்வாறு பல தொழில்கள் அழிந்து போகவே, எல்லாரும் நெசவு ஒன்றிலேயே ஈடுபட்டார்கள். எனவே, அத்தொழிலில் லாபம் மிகவும் குறைந்து விட்டது." நெசவுக் கூலி மிகவும் குறைந்துபோனபடியால் நெசவுகாரர்களில் பலர் "விவசாயத் துறையில் புகுந்தார்கள். மற்றும் பலர் வண்டி மாடு வைத்துக் கொண்டு புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு ஆற்றிலிருந்து மணல் கொண்டடித்துப் பிழைப்பதாகத் தெரிய வருகிறது." இன்றைய தினங் கூட, சேலம் ஜில்லா நாட்டுப்புறங்களைச் சேர்ந்த திறமை வாய்ந்த தறிகாரர்கள் திரிசிராப்பள்ளியில் வண்டி இழுப்பதைக் காணலாம்.

## பருத்தி ஏற்றுமதி

எந்தக் காரணங்களினால் இராட்டைத் தொழில் அடியோடு அழிந்ததோ, அதே காரணங்களினால் கைத்தறிகளின் தொகை பெரிதும் குறையலாயிற்று. இந்தக் காலத்திலேதான் ஜனங்கள் பருத்தியை ஒரு வியாபாரப் பொருளாகக் கருதலானார்கள். குடும்ப வாழ்வில் பருத்தியின் முக்கியம் மறைந்து, அது ஏற்றுமதி செய்வதற்கோ ஆலைகளுக்கு விற்பதற்கோ மட்டும் உரிய பொருளாக எண்ணப்படலாயிற்று. குடும்ப உபயோகத்திற்கு நூல் நூற்றல் நின்றுபோனதினால் சில விநோதமான பலன்கள் ஏற்பட்டன. 1866-ம் வருஷத்திற்குப் பிறகு முப்பது வருஷங்களில் பருத்தி சாகுபடிப் பிரதேசம் மூன்று மடங்கு அதிகமாயிற்று. ஆனால் குறிப்பிட்ட சிற்சில இடங்களிலேயே அது மிகுதியாகப் பயிர் செய்யப்பட்டது. ஏற்கனவே பருத்தி விளைந்து வந்த பல இடங்களில் அதைப் பயிர் செய்தலை நிறுத்தி விட்டார்கள். வேறு சில இடங்களில் மற்றப் பயிர்களுக்குப் பதிலாகப் பருத்தி சாகுபடி செய்யத் தொடங்கினார்கள். ஏற்கனவே ஏராளமாகப் பருத்தி விளைந்து கொண்டிருந்த வங்காளத்தில் இப்போது பருத்தி கிடைப்பதே அரிதாகி விட்டது. மத்தியமாகாண அரசாங்கத்தின் 1866-ம் வருஷத்து கெஜட்டில் பின் வரும் விவரம் காணப்படுகிறது:— "வார்தா ஜில்லாவிலும், பீராரிலும் ஏற்கனவே பருத்தி விளைவு உண்டாயினும் இப்பொழுது பருத்தி சாகுபடி ஏராளமாகப் பெருகி விட்டது. இது காறும் உணவு தானியங்கள் விளைந்த வயல்கள் பலவற்றில் இப்போது பருத்தி விதைக்

கப்படுகிறது. நாகபுரியிலும் சொற்ப அளவில் இந்த மாறுதல் நிகழ்ந்திருக்கிறது. இங்கே பருத்தி சாகுபடி ஏறக்குறைய இருமடங்காகியிருக்கலாம்." ஆடுமாடுகளுக்கு மேய்ச்சல் தரையாயிருந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை இப்புதிய பயிர் கொள்ளை கொண்டது. வியாபாரிகள் போட்டியிட்டுக் கொண்டு பருத்திக்கு அதிக விலை கொடுத்து வாங்கியபடியால், விவசாயிகள் அறுவடையாவதற்கு முன்பே மகசூலை விற்றுவிடத் தொடங்கினார்கள். இவ்வழக்கத்தைப் பரப்புவதற்கு அரசாங்கமும் உதவி செய்தது. இது மட்டுமன்று. அமெரிக்க யுத்தத்தின் காரணமாக அங்கிருந்து பருத்தி வரவு நின்ற காலத்தில், லங்காஷயருக்கு ஏற்றுமதி செய்வதற்கென்று இந்தியாவில் பருத்தி சாகுபடியை அதிகமாக்க அரசாங்கத்தார் பெருமுயற்சி செய்தார்கள். லங்காஷயரைப் பொறுத்தவரையில் இந்த முயற்சி பயன்படவில்லை. ஏனெனில் லங்காஷயர் ஆலைகளுக்கு வேண்டிய நீளத் துசும்புள்ள பருத்தி இந்தியாவில் உற்பத்தி செய்ய முடியவில்லை. எனினும் அம்முயற்சியின் பயனாக இந்தியாவில் பருத்தியின் விலை பெரிதும் அதிகமாயிற்று. அதற்குப் பிறகு, பருத்தியை ஏற்றுமதி செய்வதற்கான பொருளாகவே ஜனங்கள் கருதலானார்கள். இராட்டைத் தொழிலின் அழிவு பல உள் நாட்டுப் பருத்தி வகைகளின் அழிவுக்கும் காரணமாயிற்று. ஏனெனில் விவசாயிகள் அதிக மகசூல் தரக்கூடிய, அதிக விலைக்கு விற்கக்கூடிய வகைகளையே பயிர் செய்யலானார்கள். 1870-ம் வருஷத்திற்குப் பிறகு, இங்கிலாந்து மறுபடியும் பிற தேசங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்காகவே இந்தியாவினிடம் பருத்தி வாங்கிற்று. விரைவில் ஜப்பானிலும், சீனத்திலும் இந்தியப் பருத்திக்குப் புதிய கிராக்கி ஏற்பட்டது. நாட்டில் உண்டாகி வந்த ஆலைகளும் அதிகமாய்ப் பருத்தி வாங்கிக்கொள்ளலாயின. ஆனால் இந்தியாவைப் பருத்திப் பயிர் சம்பந்தமான சோதனைகள் நடத்துவதற்குரிய பண்ணையாக இங்கிலாந்து கருதுவது இன்னமும் நின்றபாடில்லை. தற்போது இங்கிலாந்து அமெரிக்காவையும், எகிப்தையுமே பருத்திக்குப் பெரிதும் நம்பியிருக்கிறது. எனினும் இந்தியாவில் லங்காஷயர் கதிர்களுக்கேற்ற நீளத் துசும்புப் பருத்தி விளைவிக்கலாமென்னும் ஆசையை அது விட்டொழித்து விடவில்லை. கிரேட் பிரிட்டன் அமெரிக்கப் பருத்தியை நம்பியிராமல் செய்வதற்கு வழி கண்டுபிடிப்பதற்கென்றே 1909-ல் இந்தியப் பருத்திக் கமிட்டி நியமிக்கப்பட்டது. இக்கமிட்டியின் முன்பு தரப்பட்ட சாட்சியங்களிலிருந்து, நீளத் துசும்புள்ள பருத்தி சாகுபடியினால் இந்திய விவசாயிகளுக்கு அதிக லாபமில்லையென்று தெரிய வந்தது. ஆயினும், கமிட்டியார், அத்தகைய பருத்தி விளைவிப்பதற்கு வழி கண்டுபிடிக்க வேண்டுமென்று முடிவு செய்தார்கள். லங்காஷயரின் நன்மைக்காக இப்போது பஞ்சாப்பிலும் சிந்து மாகாணத்திலும் பருத்தி சாகு

படிச் சோதனைகள் நடந்து வருகின்றன. அதே நோக்கத்துடன் சென்னை மாகாணத்திலும் சிற்சில இடங்களில் பருத்தியின் தரத்தை அபிவிருத்தி செய்ய முயற்சி செய்து வருகிறார்கள். இவ்விஷயத்தில் பிரிட்டனின் தேவைகளைப் பூர்த்தி செய்தல் இந்தியாவின் கடமையென் பதாக நாளது வரையில் கருதப்பட்டு வருகிறது. சமீபத்தில் 1919-ம் வருஷத்தில் நியமிக்கப்பட்ட தொழிற் கமிஷன் அறிக்கையிலும் இவ் விஷயம் காணப்படுகிறது. நீளத் துசும்புள்ள பருத்தி சாகுபடியைப் பற் றிக் குறிப்பிடுங்கால் "உலகின் துணித் தொழிலுக்கும், முக்கியமாக கிரேட் பிரிட்டனின் துணித் தொழிலுக்கும், இந்த விஷயம் மிக அவசர மான தொன்றாகும். சோதனைகளின் முடிவை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கவும் முடியாது" என்று அவ்வறிக்கை கூறுகிறது.

## ரயில் பாதைகள் செய்த தீங்கு

இந்தியாவை அன்னியத் துணிவாங்கும் "மகத்தான சந்தை"யாகவும், பருத்தி ஏற்றுமதி செய்யும் தேசமாகவும் ஆக்குவதற்கு இந்திய அரசாங்கம் செய்த முயற்சிகள் பல. அவற்றுள் ஒன்று ரயில் பாதை நிர்மாணமாகும். ரயில் பாதைகள் போட்டதனால் பருத்திவியாபாரமும் துணி வியாபாரமும் எவ்வாறு பாதிக்கப்பட்டன வென்பதைக் கூறாவிடில் இந்த வரலாறு பூர்த்தியாகமாட்டாது. டல்ஹௌஸி பிரபு இந்திய ரயில் பாதைகளைப் பற்றித் தமது பெயர் பெற்ற அறிக் கையை எழுதியபோது ரயில் போடுவதின் உண்மையான நோக் கத்தைக் குறித்து மூடு மந்திரம் செய்தாரில்லை. இந்தப் புதிய போக்கு வரவு சாதனத்தின் மூலமாக இந்தியப் பருத்தியை இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்வதும், பிரிட்டிஷ் துணிகளை இந்தியாவின் உட்பிரதேசங் களுக் கெல்லாம் கொண்டுபோய் ஏராளமாய்ப் பரப்புவதும் மிகவும் எளிதாகுமென்று அவர் தெளிவாகத் தெரிவித்திருந்தார். ஜி. ஐ. பி. ரயில் பாதைக்குக் காரண புருஷரான ஜான் சாப்மான் என்பவர் 1851-ம் வருஷத்தில் ஒரு புத்தகம் எழுதினார். இந்தியப் பருத்தியை இங்கிலாந் துக்குக் கொண்டுபோதல் எளிதாகும் வண்ணம் எப்படி இந்தியாவில் ரயில் பாதைகள் அமைப்பது என்பதே அப்புத்தகத்தின் உள்ளுறை யாகும். அவர் புத்தகம் எழுதிய காலத்தில் "நாட்டில் விளைந்த பருத்தி யில் இருபதில் ஒரு பங்குதான் ஏற்றுமதியாகிக் கொண்டுவந்தது. 100 கோடி ராத்தல் முதல் 300 கோடி ராத்தல் வரை உள் நாட்டிலேயே செலவழிந்தது. மொத்தம் ஏற்றுமதி 15 கோடிக்குமேல் இல்லை." ஆனால் ரயில் பாதை போட்ட பின்னர் இந்நிலைமை அதி விரைவாக மாறியது. பருத்தி விலை அதிகமானதுடன் ஏற்றுமதி பன்மடங்காகப் பெருகியது. 1843-ம் வருஷத்தில் பருத்தி விலை ராத்தல் $1\frac{1}{2}$ அணுவா யிருந்தது. 1851-ல் விலை 2 அணுவுக்கு ஏறிற்று. இன்னும் 12 வரு

ஷங்களுக்குப் பிறகு ராத்தல் விலை 3 அணு ஆகிவிட்டது. ரயில் பாதைகளின் மற்ருெரு நோக்கமும் நன்கு நிறைவேறியது. பிரிட்டிஷ் சாமான்களை இந்தியாவின் மூலை முடுக்குகளுக் கெல்லாம் கொண்டு போய் உள் நாட்டுக் கைத்தொழில்களின் நாசத்தைப் பூர்த்தி செய்வதற்கு அவை சாதனமாயிருந்தன. ரயில் பாதைகள் உண்டாக்கிய பொருளாதாரப் புரட்சியினுல் தேசத்திற்குத் தீங்கு எதுவும் நேரவில்லையென்றும், நாட்டின் வியாபாரத்துக்கு அவை நன்மையே செய்தனவென்றும் சொல்லப்படுகின்றன. இவ்வாதத்தின் பொய்மையை எளிதில் நிரூபித்துவிடலாம். ரயில் பாதைகளினுல் விளைந்த தீங்கை மிஸ்டர் எச். கே. காரன்வெல் என்பவர் நன்கு மதிப்பிட்டுக் கூறியிருக்கிருர். இந்தியாவில் நிகழ்ந்த பொருளாதாரப் புரட்சியையும், இங்கிலாந்தின் பொருளாதாரப் புரட்சியையும் ஒப்பிட்டு அவர் எழுதியிருப்பதாவது :— "இங்கிலாந்தின் பொருளாதாரப் புரட்சியானது உள் நாட்டிலேயே எழுந்த சக்திகளினுல் ஏற்பட்டது. எனவே சொற்பகாலக் குழப்பத்திற்குப் பின்னர் புதியதோர் அமைதி நிலை உண்டாயிற்று. பணம் போடுவதற்குரிய பழைய துறைகளை இழந்துவிட்ட முதலாளிகள் அதற்குப் புதிய துறைகளைக் கண்டார்கள். பழைய தொழில்களை இழந்த தொழிலாளிகளுக்கு இன்னும் பெரிய புதுத் தொழில்கள் கிடைத்தன. ஆனுல் இந்தியாவின் பொருளாதாரப் புரட்சி இத்தகையதன்று. அங்கே மேல் வகுப்பார் இராஜ்ய நிர்வாகிகளாகவும், போர்வீரர்களாகவும், அரசாங்க அதிகாரிகளாகவும் பெற்றிருந்த வருமான மூலங்களை யெல்லாம் இழந்துவிட்டார்கள். பதிலுக்குப் புதிய சம்பாத்தியத் துறைகள் அவர்களுக் கேற்படவில்லை. நாடெங்கும் பழைய தொழில்கள் அன்னிய நாட்டுப் போட்டியினுல் அழிந்து வருகின்றன. புதிய தொழில்கள் ஏற்படவில்லை. 'தேசத்தை யதேச்சா வியாபாரத்துக்குத் திறந்துவிடுதல்' என்று சொல்லிக் கொண்டு புதிய போக்கு வரவு சாதனங்கள் (ரயில் பாதைகள்) ஏற்படுத்துவதற்காக விவசாயிகளிடம் 3 கோடி பவுன் வரி வசூல் செய்யப்பட்டது. ஆனுல் மேற்படி போக்கு வரவு சாதனங்கள் அந்த திக்கற்ற ஜனங்களின் பணத்தை மேலும் மேலும் பறிப்பதற்கே உதவி செய்தன வன்றி, அவர்களுடைய துன்பத்தை நீக்குவதற்கு எவ்விதத்திலும் அநுகூலம் செய்யவில்லை."

## உணவுப் பொருள்களின் விலை யேற்றம்

**ப**ருத்தி விலை ஏறியபோது உணவு தானியங்களின் விலையும் ஏறி வந்தது என்பதை நினைவில் வைக்கவேண்டும். சென்ற சில வருஷங்களில் பருத்தி சாகுபடி அளவு மிஞ்சி அதிகமாகி வந்திருக்கிற தென்பதைப் பின் வரும் புள்ளி விவரங்கள் நன்கு காட்டும் :—

| வருஷம். | பருத்தி சாகுபடி (லட்சம் ஏக்கர்) | உணவு தானியம். (லட்சம் ஏக்கர்) |
|---|---|---|
| 1892—93 | 89 | 1867 |
| 1920—21 | 153 | 1996 |
| 1924—25 | 264 | 2100 |

ஜனத் தொகை அதிகமாவதற்குத் தகுந்தாற்போல் உணவுப் பயிர் சாகுபடியும் வளர்ச்சி யடைந்திருப்பதாகக் காணப்படலாம். ஆனால் 1892-ம் ஆண்டிலேயே இந்திய மக்களுக்குப் போதிய உணவு தானியம் விளையவில்லை யென்பதை மறந்துவிடக்கூடாது. இப்போதும் அதே நிலைமைதான் இருந்து வருகிறது. ஆகவே பருத்தி முதலிய வியாபாரப் பயிர்களின் சாகுபடி அதிகமாகி வருவதால் நாட்டுக்குத் தீமையே உண்டாகும். பருத்தி, சணல் முதலியவற்றைப் பசிக்கு உணவாக உட்கொள்ள முடியாதென்று ஜனங்கள் கண்டு தவிக்கும்படியான சந்தர்ப்பங்கள் நேரிட்டிருக்கின்றன. பருத்தி வியாபாரம் ஒரு சூதாட்டம் போல் ஆகி விட்டது. இந்தியாவின் மூலை முடுக்குகளிலெல்லாம் இந்தப் பைத்தியம் பரவிவிடவே நாளுக்குநாள் பருத்தி சாகுபடி அதிகமாகி வருகிறது.

## கிராமங்களின் அழிவு

இந்தியாவின் பொருளாதார வாழ்க்கையில் கிராமங்களின் முக்கியம் குறைந்து பட்டணங்கள் முக்கியம் பெற்றன. கிராம வாழ்வு அடியோடு சீர்குலைந்தது. ஒரு வியாபாரப் பட்டணம் அபிவிருத்தி யடைந்ததென்றால், கிராமங்களிலே நூற்றுக் கணக்கான வீடுகள் பாழாயின. இராட்டினம் என்று அழிந்ததோ அன்றே கிராமத்தின் அழிவும் தொடங்கலாயிற்று. பிரிட்டிஷ் துரைத்தனம் ஏற்பட்டதின் பயனாகவே இராட்டை அழிந்த தென்பதை முன்னமே விவரித்திருக்கிறோம். அந்நிய வியாபாரிகளின் பேராசைக்கும், கொடுமைக்கும் இரையாகி அவ் வருங் கலை மடிந்தது. இராட்டினங்கள் பரண்மீது ஏறின; அல்லது அடுப்பில் வைத்து எரிக்கப்பட்டன. பரதேசித் துணியை, முக்கியமாக பிரிட்டிஷ் துணியை, எவ்விதத் தங்குதடையுமின்றி நாட்டிற்குள் வர விட்டதனாலும், தொழிலாளர்களுக்கு இழைக்கப்பட்ட பல கொடுமைகளினாலும் அப்புராதனத் தொழில் இறந்துபட்டது. போக்குவரவுக்கும், வியாபாரத்துக்கும் ஏற்பட்ட புதிய வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ள அதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. எனவே, முடிவு இப்படித்தான் ஆகும் என்பது எதிர்பார்க்கக்கூடியதேயன்றோ? 1806-ம் ஆண்டிலேயே காமன்ஸ் ஸபை அங்கத்தவராகிய ஓர் ஆங்கிலேயர் தற்போதுள்ள நிலைமையை எதிர்பார்த்தா ரென்று வில்ஸன் என்னும் சரித்திராசிரியர் குறிப்பிட்டுள்ளார். "இந்தியாவிலிருந்து மூலப் பொருள்கள் மட்டும் ஏராள

மாகக் கொண்டு வரப்பட்டால் நான் எதிர்பார்க்கும் காலம் விரைவிலேயே வரக்கூடும். அப்பொழுது இந்தியாவின் சுதேசிகள் தங்கள் சொந்தப் பருத்தியினல் ஆன உடைகளையே அணிவார்கள். ஆனல் அப்பருத்தியைத் துணியாக்குவதற்குரிய கூலி, தரகுக் கூலி, போக்கு வரவுக் கூலி, மற்றும் வியாபாரச் செலவுகள் ஆகிய எல்லா லாபமும் கிரேட் பிரிட்டனே அடையும்" என்று அவ்வாங்கிலேயர் கூறினராம். இவருடைய தீர்க்க தரிசனம் இன்று அதி ஆச்சரியமான முறையில் முழுதும் பலித்திருக்கிற தன்றோ? இந்தியாவில் ஏற்பட்ட பிரிட்டிஷ் அரசாங்கம் உள் நாட்டுக் கைத்தொழிலைப் பாதுகாக்கும் முறையைக் கைக்கொண்டிருப்பின், இராட்டினம் மேஞட்டின் மிகச் சிறந்த இயந்திர சாதனங்களுடனும் போட்டியிட்டுச் சமாளித்துக்கொண்டிருக்கும். ஆனல் இந்தியாவின் தலை விதி வேறு விதமாயிருந்தது. இந்தியாவைக் கைப்பற்றியவர்கள் கோடிக் கணக்கான ஏழை மக்களுடைய துன்பத்தின்மீது பிரிட்டிஷ் வியாபாரத்தை நிலைநாட்டத் தீர்மானித்தார்கள். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படுவதின் பயனுக ஏழைக் குடியானவர்கள் அன்றன்று பசி ஆறுவதற்கு ஒரு பிடி சோறு தவருது பெறுவார்கள் என்று பர்க் முதலிய ஆங்கிலேயர் ஒரு காலத்தில் எதிர்பார்த்தனர். ஆனல் அவர்கள் எதிர்பார்த்ததற்கு நேர்மாருன பயன் விளைந்திருக்கிறதென்பது இன்றைய தினம் தெளிவாய் விளங்குகிறது. பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படுவதற்கு முன்னல் இந்தியக் குடியானவனின் சட்டியில் இருந்த ஒரு பிடி சோறும் அவ்வாட்சியின் பயனுகக் கானல் நீர் போல் மறைந்து போய்விட்டது.

மூன்றும் அத்தியாயம்

# புத்துயிர் முயற்சி

இருபதாம் நூற்றுண்டின் ஆரம்பத்துக்கு நாம் வரும்போது, பாரத நாட்டில் அன்னியத் துணியும், சுதேச ஆலைத் துணிகளுமே எங்கெங்கும் நிறைந்திருப்பதைக் காண்கிறோம். இராட்டைத் தொழில் என்பது அடியோடு அழிந்துவிட்டது. அபூர்வமாக எங்கேனும் இராட்டையில் நூற்கப்படின், அழிவு எவ்வளவு மகத்தானதுஎன்பதை உணர்த்துவதற்கு மட்டுமே அது பயன்பட்டது. ஒரு காலத்தில் ஜனங்களால் பெரிதும் விரும்பப்பட்ட அழகிய கைநூல் துணிகள் இப்போது எங்கும் கிடைப்பதில்லை. கிராமத் தொழிலாளிகள் சுருசுருப்பாக வேலை செய்யும் காட்சியை நாம் காண்பதில்லை. உலகிலேயே தொழில் பெருத்த தேசமாயிருந்த பாரதம் இப்போது தொழிலில் மிகத் தாழ்ந்த நாடாகிவிட்டது. இந்தியா பிறநாடுகளுக்குத் துணி அனுப்பிய காலம் போய், ஏராளமான பரதேசித் துணிகளை இறக்குமதி செய்யலாயிற்று. முரட்டுத் துணி, நயமான துணி, வெள்ளைத் துணி, வர்ணத் துணி முதலிய எல்லாவகைத் துணிகளும் ஏராளமாக இறக்குமதியாகத் தொடங்கின. அயல் நாட்டு முதலாளிகள் கொள்ளை கொள்ளையாக லாபங் கொண்டு போவதற்குத் தேசம் இடமாயிற்று. பிரபல அரசியல் வாதிகள் பலர் ஏழைக் குடிசைகளுக்கு நேர்ந்த துன்பத்தைப் பற்றி எழுதினர்கள், பேசினர்கள். ஆனால் அவர்களில் யாரும் பழைய இராட்டைத் தொழிலுக்குப் புத்துயிர் தரும் விஷயமாகப் பிரஸ்தாபிக்கவில்லை. நவீன பொருளாதாரக் கொள்கைகள் பரவியதன் காரணமாக, இராட்டைத் தொழிலைத் திரும்ப உயிர்ப்பிக்கலாமென்னும் எண்ணமே எவருக்கும் உண்டாகவில்லை. பழைய காலத்து அநாகரிகக் கருவியான இராட்டை இந்தக் காலத்துக்குச் சிறிதும் சரிப்பட்டு வராதென்றும், எனவே அதன் அழிவைக் குறித்து வருந்துவதால் சிறிதும் பயனில்லையென்றும், தற்கால நிலைமைக் கேற்ப நவீன இயந்திர சாதனங்களின் உதவி கொண்டு புதிய சுதேசித் தொழில்களை ஏற்படுத்தி வளர்க்கவேண்டுமென்றும் சொல்லப்பட்டன.

## இராட்டை இயக்கம்

சுதேசிக் கிளர்ச்சி தேச நிலைமையை ஜனங்கள் உள்ளபடி உணர்ந்துகொள்ளச் சந்தர்ப்பம் அளித்தது. தத் தம் இயல்புக்கும், கால தேச நிலைமைகளுக்கும் ஏற்பவே தாங்கள் வளர்ச்சி பெற முடியுமென்றும், தங்களுக்கு ஒவ்வாத அயல் நாட்டு நாகரிகத்தைக் கைக்கொண்டு

முன்னேற்ற மடைய நினைப்பது வீண் பிரமை யென்றும் ஜனங்கள் உண ரத் தொடங்கினார்கள். தன்னம்பிக்கை, தற்சார்பு ஆதிய கொள்கைகள் நாடெங்கும் பரவின. நமது சொந்தக் கலைகளையும், கைத்தொழில்களை யும் உயிர்ப்பித்தலைப் பற்றிச் சிந்தனை உண்டாயிற்று. கலைப்பிரியர்களான மிஸ்டர் ஹாவெல், ஆனந்த குமாரசாமி முதலியோர், கைத்தறி நெசவுக்கு ஆதரவு அளிக்கவேண்டியதின் அவசியத்தைப் பலமாக வற்புறுத்திப் பிர சாரம் செய்தார்கள். மற்றபடி, நாட்டு மக்களின் கவனமெல்லாம் ஆலைத் தொழிலுக்கு உதவி செய்வதிலேயே ஈடுபட்டிருந்தது. அத்தொழிலைப் பாதுகாப்பதற்காகச் சட்டங்கள் செய்யவேண்டுமென்றும், இறக்குமதி வரிகள் விதிக்கவேண்டுமென்றும் யோசனைகள் கூறப்பட்டன. பொரு ளாதார முன்னேற்றம் சம்பந்தமாக வெளியான எல்லாப் பிரசுரங்களி லும் இந்த விஷயம் விவாதிக்கப்பட்டிருந்தது. இராட்டையைப் பற்றி மட்டும் பிரஸ்தாபமே ஏற்படவில்லை. இந்திய தேசிய வாழ்க்கையில் இராட்டைக்கு இடமுண்டுபண்ணியவர் மகாத்மா காந்தியே யாவர். இராட்டைத் தொழிலுக்குப் புத்துயிர் தரும் யோசனை அவராலேயே முதன்முதலில் கூறப்பட்டது. காந்தியடிகள் அடிக்கடி ஆத்ம சோதனை யில் ஈடுபடும் இயல்புடையவர்; கோடிக் கணக்கான ஏழைகளைப் பற்றியே எப்போதும் சிந்தித்துக்கொண்டும், அவர்களுடைய துன்பங்களைத் தாமும் பகிர்ந்து அநுபவிக்க ஆவல்கொண்டும் இருப்பவர். இத்தகைய ஒருவருடைய சிந்தை இராட்டையின் மீது சென்றது இயல்பேயன்றோ? ஆரம்பத்தில் ரஸ்கின், டால்ஸ்டாய் முதலியோருடைய நூல்களைப் படித்த போது, கோடிக் கணக்கான பாமர ஜனங்களுக்குத் தகுந்த ஒரு தொழில் தேவையென்பதை அவர் உணர்ந்திருத்தல் கூடும். தற்போது மக்கட் குலத்தைப் பீடித்திருக்கும் நோய் எத்தகையது, அதற்கேற்ற மருந்து எது என்பதை அவர் தமது ஆத்ம ஒளியின் உதவிகொண்டு அறிந்திருக்க வேண்டும். சர்வ ஜனங்களாலும் கைக்கொள்ளக்கூடிய ஒரு தொழில் அவசியமென்று அவர் சிந்தித்துச் சிந்தித்துக் கடைசியாக, ஜனத்திரளின் வறுமைப் பிணியைப் போக்க வல்ல நன் மருந்து இராட்டினம் ஒன்றே என்பதாக முடிவு செய்திருக்கவேண்டும். முதன்முதலாக, இராட்டி னத்தைப் பற்றிய குறிப்பு, மகாத்மா எழுதிய "இந்திய சுயராஜ்யம்" (1908) என்னும் நூலில் காணப்படுகிறது. அந்நூலில் வக்கீல்களையும், வியாபாரிகளையும், ஆலை முதலாளிகளையும் நூல் நூற்குமாறு அடிகள் பணித்துள்ளார். பொருளாதாரச் சட்டங்களைக் காட்டிலும் கருணை நெறி பெரியதென்றும், ஆனால் அக் கருணை நெறி காரிய சாத்தியமான தாயு மிருக்கவேண்டு மென்றும் அவர் எடுத்துக் காட்டி, இராட்டையில் இவ்விரண்டும் பொருந்தியிருப்பதாக வற்புறுத்தியுள்ளார்.

தேசிய வேலைத் திட்டத்தில் இராட்டினம் தற்போது ஒரு முக்கிய மான இடம் பெற்று விட்டதென்பது அனைவரும் அறிந்த விஷயம்.* ஆனால், உண்மையிலேயே இராட்டையின் மூலம் தேச க்ஷேமம் உண்டாகக்கூடுமா? கதர் இயக்கம் காரிய சாத்தியமானதா? நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு அதனால் உபயோக முண்டா? அது தேச நலத்துக்கு இன்றியமையாததா? இதுபோன்ற கேள்விகளுக்கு அளிக்கப்படும் விடைகளைப் பொறுத்தே இராட்டை இயக்கம் வெற்றி பெறுதல் கூடும். பொருளாதார சாஸ்திரத்தின் முக்கிய தத்துவம் என்ன? தேசத்தில் உள்ள பொருளுற்பத்திக்குரிய சாதனங்களையெல்லாம் நன்கு பாதுகாத்து அவற்றை முழுதும் பயன்படுத்திக் கொள்ளுதலே என்று கூறலாம். ஆனால் இதுமட்டும் போதுமா? பொருளுற்பத்தி செய்வதைவிட, அதை ஜனங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முறையில் உற்பத்தி செய்வதே முக்கியமானதாகும். ஜனங்களுடைய தேவைகள் அவர்களுடைய வாழ்க்கை இலட்சியங்களையும்,

---

* 1920-ம் வருஷம் நடந்த விசேஷ காங்கிரஸில் "ஆடவர், பெண்டிர், குழந்தைகள் அனைவரும் கட்டுப்பாட்டுக்கும் தன்னலத்தியாகத்துக்கும் அறிகுறியாக இராட்டையில் நூற்றல், கைத்தறி நெசவு, கதர் அணிதல் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும்" என்று தீர்மானிக்கப்பட்டது. அதே வருஷத்தில் நாகபுரியில் நடந்த காங்கிரஸ் மேற்படி தீர்மானத்தை உறுதிப்படுத்தியது. 1921-ம் ஆண்டில் பெஜவாடாவில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் 20 லட்சம் இராட்டைகள் சுழலச் செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அவ் வருஷத்தின் பிற்பகுதியில் டில்லியில் நடந்த கூட்டத்தில், தொண்டர்கள் கட்டாயமாக நூல் நூற்க அறிந்திருக்க வேண்டுமென்றும், சட்ட மறுப்பைக் கைக்கொள்வதற்காகத் தயாரிக்கப்படும் பிரதேசங்களில் 100க்கு 60 பேர் அங்கேயே உற்பத்தியான கதர் அணிந்திருக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டன. மகாத்மா காந்தி சிறையிலிருந்து விடுதலை யடைந்த பிறகு, 1924-ம் வருஷம் ஜூன் மாதத்தில் நடந்த ஆமதாபாத்கூட்டத்தில், காங்கிரஸ் ஸ்தாபனங்களில் தேர்தல் பதவி வகிக்கும் ஒவ்வொருவரும் தினம் அரைமணி நேரம் நூற்கவேண்டுமென்றும், சமமான நன்கு முறுக்கேறிய நூல் 2000 கஜம் மாதந்தோறும் அகில இந்தியக் கதர் போர்டுக்கு அனுப்பவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டன. அவ்வருஷக் கடைசியில், காங்கிரஸில் வாக்குரிமை பெறுவதற்கு நூல் நூற்றல் நிபந்தனையாக விதிக்கப்பட்டது. தற்போது அகில இந்திய சர்க்கா சங்கத்துக்கு இந்த நிபந்தனை இருந்து வருகிறது. காங்கிரஸில் தற்போது அங்கத்தினர் கட்டாயமாகக் கதர் அணிய வேண்டுமென்றும், இஷ்டப்பட்டவர்கள் நூல் சந்தா செலுத்தலாமென்றும் விதிக்கப்பட்டிருக்கின்றன.

காலதேச நிலைமைகளையும் பொறுத்தவை. உண்மையில், எத்தகைய பொருளாதார முன்னேற்ற முயற்சியும், ஜனங்களுடைய தேசீய வாழ்வையும், சமூக வாழ்வையும் அடியோடு புரட்டி விடுவதாயிருத்தல் கூடாது. ஜனங்கள் எந்த நிலைமையில் வாழ்கிறார்களோ, அந்த நிலைமையைக் கூடிய வரையில் அநுசரித்தே பொருளாதார முயற்சிகள் இருத்தல் வேண்டும். மக்களுடைய மனோபாவங்களையும், சன்மார்க்க இலட்சியங்களையும் கவனியாமல் அவர்களுடைய பொருளாதார முன்னேற்றத்துக்காகச் செய்யும் முயற்சி நன்மை தருவதாகாது. எனவே, ஒரு தேசத்தின் மக்களுக்கு நலந்தரும் விஷயம் வேறொரு தேசத்தாருக்குப் பொருந்த வேண்டுமென்னும் அவசியம் இல்லை. உதாரணமாக, தற்போது உலகில் உள்ள சிற்சில தேசங்களின் ஜனங்கள், சுகமாகவும் சௌகரியங்களுடனும் வாழ்க்கை நடத்துவது எப்படி என்று யோசித்து வருகிறார்கள். ஆனால் நம் நாட்டைப் போன்ற சில நாடுகளின் ஜனங்களுக்கு எப்படி உயிர் வாழ்வதென்பதே பெரிய பிரச்னையாயிருக்கிறது. இந்தியாவிலுள்ள பெரும்பாலான குடும்பங்களில் எப்படி உயிர் வாழ்வதென்பதுதான் பெருங்கவலை. கிராமங்களில் குடிசைகளில் வாழும் கோடிக்கணக்கான மக்களுக்கு நாம் இந்தக் கவலையில்லாமல் செய்துவிட்டோமாயின், இந்தியாவின் பொருளாதாரப் பிரச்னையைத் தீர்த்து வைத்தவர்களாவோம். அப்போது தேச க்ஷேமத்தைப் பற்றிக் கவலைப்படுவதற்கே அவசியமில்லாமற் போகும். ஆகவே ஜனங்களுக்குத் தன்னம்பிக்கை உண்டுபண்ணி, அவர்களுடைய உழைப்புத் திறமையை முழுதும் உபயோகப்படுத்தி, பயனுள்ள பொருள் உற்பத்தி செய்விப்பதே நமது வருங்கால முன்னேற்றத்திற்கு வழியாகும். பலர் கஷ்டப்பட, ஒரு சிலர் பெரும் பொருள் சேர்த்தால் மட்டும் போதாது. அதனால் தேசம் நன்மை யடைந்ததாகச் சொல்ல முடியாது. ஜன சமூகம் முழுவதும் கூட்டுறவு முறையைக் கைக்கொண்டு பரஸ்பர உதவியின் மீது க்ஷேமமடையவேண்டும். அதுதான் உண்மையான தேச நலமாகும். ஆகவே, ஜனங்களை அவர்களுடைய நன்மைக்கும், விருப்பத்துக்கும் விரோதமான முறையில் வேலை செய்யும்படி கட்டாயப்படுத்தாமல், அவர்களுக்கு விருப்பமான வேலையின்மூலம் தேசத்தின் மொத்த வருமானத்தை அதிகமாக்கி, அதையும் நியாயமான முறையில் பகிர்ந்து கொடுக்க ஏற்பாடு செய்தால், அதுவே தேச நலத்திற்குரிய சிறந்த பொருளாதார முயற்சியாயிருக்கும்.

## இராட்டைத் தொழிலுக்கு ஆட்சேபங்கள்

இத்தகைய விரிந்த நோக்கத்துடன் பார்க்கும்போது, இராட்டைத் தொழில் தேச நலத்திற்குப் பெரிதும் சாதகமான தென்பதை நாட்டின் சிறந்த அறிஞர்கள் பலர் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். எனி

னும், இது சம்பந்தமான அபிப்பிராயங்கள் பெரிதும் வித்தியாசப்படு கின்றன. இராட்டை வெறும் மரக்கட்டை யென்றும், அரசியல் நன்மை எதுவும் அதனல் விளையாதென்றும் சிலர் கருதுகிருர்கள். பொருளாதாரத் துறையில் கூட அதன் உபயோகத்தைப் பற்றிச் சந்தேகப்படுவோர் இல் லாமற் போகவில்லை. மகாகனம் சீனிவாச சாஸ்திரியார் முதலியோர் அதனல் பொருளாதார நன்மையும் இல்லையென்று கருதுகிருர்கள். இது உண்மையா? இராட்டை இயக்கம் காரியத்தில் பயனற்ற வெறும் பிரமைதான? அல்லது அதனல் தேசத்திற்குச் சிறந்த நன்மை உண்டா கக் கூடுமா? தேசமக்கள் இராட்டையின்மீது கவனம் செலுத்துவது அவசியமா? இவ்விஷயமாக ஆராய்ச்சி தொடங்கும்போது இராட்டைத் தொழிலுக்குப் பொருளாதார நிபுணர்களும் மற்றவர்களும் கூறும் ஆட் சேபங்களை முதலில் கவனித்தல் நலமாயிருக்கும். இராட்டைத் தொழிலை உயிர்ப்பிப்பதற்கு விரோதமாய் இது காறும் கூறப்பட்டிருப்பவைகளை யெல்லாம் ஆராய்ந்து பார்த்தால், பின்வரும் ஆட்சேபங்களே முக்கிய மானவை யென்று தெரியவரும் :— (1) இராட்டையில் நூற்றல் முழு நேரமும் வேலை செய்து கூலிபெறக் கூடிய தொழிலாக முடியாது; மிகச் சொற்ப அளவில் ஒரு துணைத் தொழிலானல் பெரிய காரியம். (2) அப்படி அது முழு நேரத் தொழிலாயிருந்தால் கூட, அதைவிட அதிக வருமானமும், அதிக சௌகரியமும் உள்ள வேறு தொழில்கள் ஏழைகள் கைக்கொள்வதற்கு இருக்கின்றன. (3) இராட்டையின் மூலம் தேசத்தின் பணம் மீதமாகுமென்று விவகாரத்துக்காக வைத்துக் கொண்டாலும் அது மிகச் சொற்பமாயிருக்கும். (4) இராட்டை உப யோகமான ஒரு தொழிலாயிருப்பினும் அது ஆலைகளுடன் போட்டியிட்டு நிலைத்திருக்க முடியாது. இந்த ஆட்சேபங்களை யெல்லாம் வரிசைக் கிரமமாக நாம் ஆராய்ச்சி செய்து பார்ப்போம்.

## முதல் ஆட்சேபம்

இராட்டையில் நூற்பதினல் மற்றத் தொழில்களில் கிடைப்பது போன்ற முழு நாள் கூலி கிடைக்குமென்பதாக அதிதீவிர இராட்டை பக்தர் கூடச் சொன்னது கிடையாது. இராட்டையில் நூற்றுச் சம் பாதிக்கும் கூலி ஒரு நாளைக்கு மூன்றணுவுக்குமேல் போகாதென்றே சொல்லிவிடலாம். ஆனல் பஞ்சம் ஏற்படாமல் தடுப்பதற்கு இராட்டி னம் ஒரு சிறந்த சாதனம் என்பது நிச்சயம். பஞ்சகாலத்தில் அரசாங்க வேலைகளுக்குக் கொடுக்கும் கூலி 2 அணுதான். எனவே, அந்த அளவில் இராட்டினத்தின் பயனைப்பற்றி எவரும் மறுத்துக் கூறுவதற்கில்லை. ஆனல் தேசத்திலுள்ள கோடிக் கணக்கான விவசாயிகளுக்கும் மற்ற ஜனங்களுக்கும் இராட்டை ஒரு நல்ல துணைத் தொழிலாயிருக்க முடி யுமா? அதன் மூலம் அவர்களுடைய வருமானம் தக்க அளவு அதிக

மாகுமா? இது சம்பந்தமாகத்தான் அபிப்பிராய பேதங்களும், வாதப் பிரதிவாதங்களும் ஏற்படுகின்றன.

ஆனால் விவாதத்துக்கே இடமில்லாத சில உண்மைகள் உண்டு. அவற்றை முதலில் குறிப்பிடுவோம். இந்தியப் பாமர ஜனங்களின் மகத்தான வறுமை அத்தகைய உண்மைகளுள் ஒன்று. இந்திய ஜனங்களின் சராசரி வருமானத்தைக் கணக்கிட தாதாபாய் நௌரோஜி முதன்முதலில் முயன்றார். அதன் பின்னர் பொருளாதார நிபுணர்கள் பலர் வெவ்வேறு காலங்களில் இந்தியர்களின் சராசரி வருமானத்தைப் பற்றி மதிப்புப் போட்டிருக்கிறார்கள். அவற்றின் விவரம் கீழே காண்க :—

| | பெயர். | வருஷம். | மொத்த வருமானம் (கோடியில்) | தலா வருமானம் ரூபாய் |
|---|---|---|---|---|
| (1) | தாதாபாய் நௌரோஜி | 1867—68 | 340 | 20 |
| (2) | 1882-ம் வருஷத்து வரவு செலவு அறிக்கை | 1881 | 525 | 27 |
| (3) | வில்லியம் டிக்பி | 1898 | 429 | 17·5 |
| (4) | லார்டு கர்ஸான் | 1901 | 675 | 30 |
| (5) | ஆசிரியர்கள் பி.எ. வாடியா, ஜி. என். ஜோஷி | 1913—14 | 1210 | 44 |
| (6) | ஆசிரியர்கள் ஷா, கம்பட்டா | 1900—14 | 1106 | 36 |
| | | 1914—22 | 1862 | 58·5 |
| | | 1900—22 | 1380 | 44·5 |
| | | 1921—22 | 2364 | 74 |
| (7) | ஸர் எம். விசுவேசுவரய்யா | 1911 | | 36 |
| | | 1919 | | 45 |
| (8) | பிரபுல்லா சந்திர கோஷ் | 1922 | | 51·8 |
| (9) | ஆசிரியர் வி. ஜி. காலே | | | 40-48 |
| (10) | டாக்டர் பாலகிருஷ்ண | 1911—12 | 539 | 21 |
| (11) | பிண்ட்லே ஷர்ராஸ் * | 1921 | 2598 | 107 |
| | | 1922 | 2668 | 116 |

* மிஸ்டர் பிண்ட்லே ஷர்ராஸ் பெரிதும் மிகைப்படுத்தி மதிப்புப் போட்டிருக்கிறார். அவருடைய கணக்கெல்லாம் கொஞ்சமும் ஆதாரமற்றவை. தேசத்தின் விவசாய விளைபொருள்களின் பெறுமானத்தை அவர் போன்ற மற்றப் பொருளாதார நிபுணர்களின் மதிப்புக்குமேல் இரண்டு மடங்காக அவர் மதிப்பிட்டிருக்கிறார். விவசாயத்துக்குரிய செலவுபோக நிகரவருமானம் என்னவென்று அவர் பார்க்கவில்லை. பல

தர்ம நியாயமாக மதிப்புப் போட்டிருப்பவர் எவரும் இந்தியர்களின் தலா வருமானத்தை 50 ரூபாய்க்குமேல் மதிப்பிடவில்லை. * உலகிலேயே இந்தியாவைப் போன்ற ஏழைத்தேசம் வேறு கிடையாதென்பதை எல்லாரும் ஒப்புக்கொள்கிறார்கள். இந்திய ஏழை மக்களின் நிலைமை நினைத்தால் நடுக்குறச் செய்வதாகும். இந்தியாவில் மொத்தம் நூறு ஜனங்கள் வசிப்பதாக வைத்துக்கொண்டால், இவர்களில் ஒருவர் தேசத்தின் செல்வத்தில் மூன்றில் ஒரு பங்குக்குமேல் அநுபவிப்பதாக ஆசிரியர் ஷா அபிப்பிராயப்படுகிறார். இத்தகைய பெருஞ் செல்வர்களை அண்டிப் பிழைப்பவர் எல்லாரையும் சேர்த்துக் கணக்கிட்டாலும் மூன்றில் ஒரு பங்கு செல்வம் ஜனத்தொகையில் 100ல் 5 பங்கு பேரால் அநுபவிக்கப்படுகிறது என்பதில் சந்தேகமில்லை. மற்றும் மூன்றில் ஒரு பங்கு செல்வத்தை ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கு பேர் அநுபவிக்கிறார்களென்று அவர் மதிப்பிடுகிறார். எனவே, தேசத்தின் பெருஞ் செல்வர்களும் நடுத்தர வகுப்பாரும் சேர்ந்து நாட்டின் மொத்த வருமானத்தில் ஏறக்குறைய 100க்கு 70 வீதம் அடைந்து விடுகிறார்கள். பாக்கியுள்ள 100க்கு 60 ஜனங்களுக்கு தேசவருமானத்தில் 100க்கு 30 வீதந்தான் கிடைக்கிறது. இவர்கள் பெரும்பாலும் கிராமவாசிகளான குடியானவர்களாவர். இதிலிருந்து இந்தியாவின் ஏழை மக்களுக்கு வருஷத்தில் 20 அல்லது 25 ரூபாய்தான் மொத்த வருமானம் கிடைப்பதாக ஏற்படுகிறது. அவர்களுடைய வாழ்க்கை நிலைமை எப்படியிருக்குமென்று சொல்லவும் வேண்டுமோ? வயிறு நிறைய உணவும், மற்றும் வாழ்கைக்கு இன்றியமையாத வசதிகளும் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. கோடிக்கணக்கான ஜனங்கள் ஓயாத பட்டினிக் காளாகியிருக்கிறார்கள். அவர்களுடைய சமூக வாழ்வும், ஒழுக்க நிலையும் நாளுக்குநாள் சீர் கேடுற்று வருகிறது. இந்தியாவில் நாலு கோடி ஜனங்கள் தங்கள் வாணாள் முழுதும் வயிற்றுப் பசியுடனேயே காலந்தள்ளுகிறார்கள் என்று பல வருஷங்களுக்கு முன்பு ஸர் வில்லியம் ஹண்டர் மதிப்பிட்டார். இவ்வாறாகப் போதிய உணவின்றி மெலியும் ஜனங்களின் தொகை வருஷாவருஷம் பெருகிக்கொண்டே வருகிறது. இந்நிலைமையில் மரண விகிதம் அதிகமாயிருப்பதற்குக் கேட்க

---

வருஷங்களின் புள்ளி விவரங்களை எடுத்துச் சராசரியும் பார்க்கவில்லை. ஒரே ஒரு வருஷத்தின் புள்ளி விவரங்களை ஆதாரமாகக் கொண்டே கணக்கிட்டிருக்கிறார். விவசாயமல்லாத வேறு துறைகளில் கிடைக்கும் வருமானத்தை, எவ்வித ஆதாரமும் காட்டாமல், விவசாய வருமானத்தில் 100க்கு 40வீதம் 883கோடி ரூபாய் என்று 'குத்து மதிப்பா'கப் போட்டிருக்கிறார்.

* இந்தியாவின் தலாவருமானத்தை பிறநாடுகளின் வருமானத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தியாவில் எத்தகைய கொடிய தரித்திரம் குடி

வேண்மோ? இங்கிலாந்தில் மரண விகிதம் 14·6; ஜப்பானில் 21·9 இந்தியாவிலோ 33·4. இந்நாட்டுக் கிராமவாசிகளின் கொடிய வறுமையே, மரண விகிதம் இவ்வளவு பயங்கரமாகப் பெருகியிருப்பதற்குக் காரணமாகும். 1918-ம் வருஷத்தில் தோன்றிய இன்புளூயன்ஸா சுரம் மட்டும் 80 லட்சம் ஜனங்களின் உயிரைக் கொள்ளை கொண்டது. ஏழை மக்களின் வறுமையே அவர்களுடைய யமன் என்பதில் சந்தேகமில்லை. நாளுக்குநாள் அவர்களுடைய வருமானம் குறைந்து வருகிறது. இடையில் பஞ்சங்கள் தோன்றிவிட்டால் அவர்கள் தப்பிப் பிழைப்பதற்கு எவ்வித ஆதரவும் கிடையாது. 1800-ம் வருஷத்திலிருந்து 1825-ம் வருஷம் வரையில் ஆறு பஞ்சங்களும், பின்னர் 1850 வரையில் இரண்டே பஞ்சங்களும் தான் இந்தியாவில் ஏற்பட்டன. ஆனால் 1851-ம் வருஷத்திலிருந்து 1900 ஆண்டு வரையில் மொத்தம் 24 பஞ்சங்கள் நேர்ந்தன. தேசத்தின் பயங்கரமான மரண விகிதத்துக்குக் காரணமாயிருக்கும் இப்பஞ்சங்கள் நாளுக்குநாள் ஜனங்களின் வறுமை அதிகமாகி வருகிறதென்பதையும் உணர்த்துகின்றன.

## விவசாயத்தில் வருஷம் முழுதும் வேலை யுண்டா?

பாரத மக்களில் மிகப் பெரும்பான்மையோர் கிராமங்களில் வசிப்பவர்கள். ஜனத்தொகையில் நாலில் மூன்றுபேர் நிலத்தை நம்பியே பிழைப்பவர்கள். பழைய காலத்தில் விவசாயிகளுக்குத் துணைத் தொழிலாக இருந்தவையெல்லாம் இப்போது மறைந்து போயினபடியால் அவர்களுக்கு வருஷ முழுவதிலும் விவசாயத்தில் வேலையிருப்பதில்லை. ஆகவே மிகுதியான நேரத்தை அவர்கள் வேலையின்றிச் சோம்பிக் கழிக்க வேண்டியவர்களாயிருக்கின்றனர். இந்த நிலைமைகளையெல்லாம் நாம் மனதிற்

---

கொண்டிருக்கிறதென்பதை உடனே அறியலாம். யுத்தத்திற்கு முன்னிருந்த நிலைமை பின்வருமாறு:—

| தேசம். | வருமானம். (பவுனில்) | ரூபாயில் |
|---|---|---|
| இங்கிலாந்து | 50 | 750 |
| அமெரிக்கா ஐக்யநாடு | 72 | 1,080 |
| ஜெர்மனி | 30 | 450 |
| பிரான்ஸு | 38 | 570 |
| இதாலி | 23 | 345 |
| கானடா | 40 | 600 |
| ஆஸ்திரேலியா | 54 | 810 |
| ஜப்பான் | 6 | 90 |
| இந்தியா | 2·4 | 36 |

கொண்டு பார்ப்போமாயின் தேசமக்களின் மகத்தான வறுமைக்கும், அவ் வறுமையின் கொடுமை நாளுக்குநாள் அதிகமாகி வருவதற்கும் வேறு காரணந் தேடமாட்டோம். தேசத்தின் மொத்த ஜனத்தொகையில் 100க்கு 71 பேர் வீதம் விவசாயம் செய்து பிழைப்பவர்களென்று 1921-ம் வருஷத்து ஜனக் கணிதியிலிருந்து தெரியவருகிறது.* ஆனால் இந்த 100க்கு 71 பேரில் எல்லாரும் நிலத்தில் வேலை செய்பவர்களல்லர்; வீட்டில் உட்கார்ந்து நிலத்தின் வருமானத்தைக்கொண்டு வாழ்க்கை நடத்துபவர்களும் அவர்களில் உண்டு. விவசாயத் தொழிலாளி வகுப்பாரின் தொகை நாளுக்குநாள் அதிகமாகி வருவது பெரிதும் சிந்தனைக்குரியதாகும். "நிலமில்லாத விவசாயத் தொழிலாளிகள் பெருகுவது பொருளாதாரத் துறையில் ஒரு பெரும் அபாயத்துக்கு அறிகுறி. எற்கனவே ஜன நெருக்கம் மிகுதியாயுள்ள ஜில்லாக்களிலும், அடிக்கடி பஞ்சம் வந்துகொண்டிருக்கும் மாகாணங்களிலுமே மேற்கூறிய வகுப்பார் பெரிதும் அதிகமாகி வருகின்றனர்" என்று 1921-ம் வருஷத்து ஜனக் கணிதி அறிக்கையில் காணப்படுகிறது. சாதாரண காலங்களில் கூட விவசாயத் தொழிலாளி பெரிதும் கஷ்ட ஜீவனம் செய்கிறான். இந்தியாவில் பயிர்த்தொழில் பெரும்பாலும் சொற்ப குடித்தனக்காரர்களால் சிறு அளவிலேயே நடத்தப்பட்டு வருகிறது. பெரிய பண்ணைகள் வைத்து

---

* இந்தியாவில் பட்டணங்களின் ஜனத்தொகையையும் கிராமங்களின் ஜனத்தொகையையும் ஒப்பிட்டுப்பார்த்தால் ஓர் உண்மை தெரியவரும். பின்வரும் புள்ளி விவரங்கள் 1921-ம் வருஷத்து ஜனக்கணிதி அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டன :—

| | | |
|---|---|---|
| 1. | இந்தியாவின் மொத்த ஜனத்தொகை | 31,89,42,480 |
| 2. | கிராமங்களின் ஜனத்தொகை | 28,64,76,205 |
| 3. | பட்டணங்களின் ஜனத்தொகை | 3,24,75,276 |
| 4. | மொத்தம் கிராமங்கள் | 2,316 |
| 5. | மொத்தம் பட்டணங்கள் | 6,85,665 |
| 6. | பட்டணங்களில் குடியிருப்புள்ள வீடுகள் | 67,65,014 |
| 7. | கிராமங்களில் குடியிருப்புள்ள வீடுகள் | 5,84,33,375 |

இந்தியாவில் நகரங்களின் பெருக்கம் மிகவும் மெதுவாகவே ஏற்பட்டு வருகிறது. 1891-ம் வருஷத்தில் பட்டணங்களின் ஜனத்தொகை மொத்த ஜனத்தொகையில் 100க்கு 9.5 வீதம் இருந்தது. 1921-ல் இது 10.2 வீதமாயிற்று. அதாவது 30 வருஷங்களில் பட்டணங்களின் ஜனத்தொகைவிகிதம் 100க்கு 1 வீதங்கூட அதிகமாகவில்லை. அளவுக்கு மிஞ்சிப் பட்டணங்கள் பெருகுவது இந்தியாவின் இயல்புக்கு மாறுபட்டதாகக் காணப்படுகிறது.

விவசாயம் செய்தல் மிகவும் அபூர்வம்; ஜனத்தொகை பெருகிவிட்டபடியாலும், பழைய ஏக குடும்ப முறை சிதைந்துபோனபடியாலும், நாடெங்கும் நிலங்கள் துண்டு துண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒரே குடியானவனுக்குச் சொந்தமான நிலங்கள்கூட அங்கொரு வயலும் இங்கொரு வயலுமாகச் சிதறிக் கிடப்பதால் பயிர்த் தொழில் மிகவும் கஷ்டமாவதுடன், பிரயாசைக்குத் தகுந்த லாபம் கிடையாது. பிரிட்டிஷ் இந்தியாவில் மொத்தம் விவசாயம் செய்யப்படும் பூமி $22\frac{1}{2}$ கோடி ஏக்கராவாகும். அதாவது விவசாயத்தினல் பிழைக்கும் ஜனங்களுக்கு சராசரி தலைக்கு ஓர் ஏக்கரா கூட இல்லை. உதாரணமாக, பீஹாரில் ஜன நெருக்கம் மிகுதியுள்ள பிரதேசங்களில் குடியானவர்கள் சராசரியில் அரை ஏக்கராவுக்கும் குறைவாகப் பயிர் செய்கிறார்கள். சென்னை மாகாணத்தின் ரயத்வாரி பிரதேசங்களில் ஓர் ஏக்கராவுக்குமேல் ஐந்து ஏக்கரா வரையில் உள்ள பண்ணைகளே அதிகம். தக்ஷிண தேசத்து கிராமங்களைப் பற்றி டாக்டர் மான் எழுதும்போது 100க்கு 60 பங்குக்கு மேற்பட்ட பண்ணைகள் ஐந்து ஏக்கரா நிலத்திற்கும் குறைந்தனவே யென்று சொல்லுகிறார்.* வங்காளத்தில் 1921-ம் வருஷத்து ஜனக்கணிதி அறிக்கை எழுதிய மிஸ்டர் தாம்ஸன் என்பார், அம்மாகாணத்தில் மொத்தம் சாகுபடி செய்யப்படும் நிலமானது விவசாயத் தொழிலாளிகளுக்குச் சராசரியில் தலைக்கு $2\frac{3}{4}$ ஏக்கரா வீதம் கூட வரவில்லையென்று ஒப்புக்கொண்டிருக்கிறார். அஸ்ஸாமிலும், ஐக்ய மாகாணத்திலும் பண்ணைகள் முறையே 3 ஏக்கராவும் $2\frac{1}{2}$ ஏக்கராவும் உள்ளவை. தேச முழுவதும் இதே நிலைமை குடிகொண்டிருப்பதால் விவசாயிகளுக்கு வருஷ முழுவதிலும் பயிர்த் தொழில் வேலை இருக்க முடியாது. இவ்வுண்மை அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட தொன்றாகும். வேண்டுமானல் அரசாங்க அறிக்கைகளிலிருந்தே இதற்கு ஏராளமான அத்தாட்சிகள் எடுத்துக் காட்டலாம். உதாரணமாகச் சிலமட்டும் இங்கே குறிப்பிடுகிறோம்.

---

* "பிரிட்டிஷாருக்கு முந்தைய காலத்திலும், பிரிட்டிஷ் ஆட்சியின் ஆரம்ப நாட்களிலும் சாதாரணமாகப் பண்ணைகள் ஒன்பது அல்லது பத்து ஏக்கரா நிலத்துக்குமேல் அடங்கியனவாயிருந்தன. இரண்டு ஏக்கராவுக்கும் குறைவான பண்ணையே கிடையாது. இப்போது பண்ணைகளின் தொகை இருமடங்காகிவிட்டது. மிராசுதாரர்களில் 100க்கு 81 பேர் பத்து ஏக்கராவுக்குக் குறைவான நிலமுடையவர்கள். 100-க்கு 60 பேருக்கு மேல் 5 ஏக்கராவுக்கும் குறைவான நிலமுடையவர்கள்" என்று டாக்டர் மான் "தக்ஷிண கிராமம் ஒன்றில் நிலமும் தொழிலும்" என்னும் புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.

1921-ம் வருஷத்து ஜனக்கணிதி அறிக்கையில் மிஸ்டர் எட்யே ஐக்ய மாகாணத்தைப் பற்றி எழுதுங்கால் கூறுவதாவது :—"ஜனத் தொகையில் பெரும்பகுதியார் விவசாயிகள். இங்கே விவசாயம் என்பது இங்கிலாந்தில் நடக்கும் பண்ணை வேலையைப் போன்ற தன்று. சாதாரணமாக இரண்டு விதை தெளி, இரண்டு அறுவடை, எப்போதேனும் மழை பெய்யும்போது களையெடுப்பு, மூன்று முறை தண்ணீர் இறைப்பு இவ்வளவுதான் வேலை. இத்தகைய விவசாயத்தில் சொற்ப காலத்திற்கு மிக்க கடுமையான வேலையிருக்கும். மற்ற நாளெல்லாம் தூங்க வேண்டியதுதான். வானம் பார்த்த சில பகுதிகளில் ஒவ்வொரு சமயம் வருஷம் முழுவதுமே வயல் வேலை இல்லாமற் போய்விடும். இத்தகைய காலங்களை ஜனங்கள் பெரும்பாலும் சோம்பி யிருந்தே கழிக்கிறார்கள்." மத்தியமாகாண ஜனக்கணிதி அறிக்கையில் மிஸ்டர் ஹௌடன் ஏறக்குறைய இதே விஷயத்தைச் சொல்கிறார் :—"ஜனங்களில் பெரும்பான்மையோரின் ஜீவனோபாயமாயிருக்கும் விவசாயத்தில் வருஷ முழுவதும் வேலை இருப்பதில்லை. இம்மாகாணத்தின் பல பகுதிகளிலே மழைகாலத்தின் இறுதியில் பயிர் செய்யப்படும் ஒரே ஒரு சாகுபடிதான் முக்கியமானது. இந்தப் பயிர் அறுவடையாகி விட்டால் பின்னர் மறுபடியும் மழைகாலம் துவங்கும் வரை வேலைப் பஞ்சம் குடிகொண்டிருக்கிறது." வங்காள ஜனக்கணிதி அறிக்கையில் மிஸ்டர் தாம்ஸன் சொல்வதாவது:—"இரண்டேகால் ஏக்கராவுக்கும் குறைவான பூமியைப் பயிர் செய்வதில் ஒரு மனிதனுக்கு வருஷத்தில் சில நாட்களுக்குமேல் வேலையிருக்க முடியாது. நிலத்தை உழுது நடும்போதும் பின்னால் அறுவடை செய்யும் போதும் குடியானவன் நன்றாக உழைத்து வேலை செய்கிறான். ஆனால் மற்றக் காலமெல்லாம் அவனுக்கு வேலை மிகச் சொற்பம்; வேலையே கிடையாதென்றும் சொல்லலாம்."

மிஸ்டர் கால்வெர்ட் என்பவர் தாம் எழுதியிருக்கும் "பஞ்சாப்பின் செல்வமும் க்ஷேமமும்" என்ற புத்தகத்தில் இதே விதமான முடிவுக்குத் தான் வந்திருக்கிறார். "பஞ்சாப்பில் சாதாரணமாக ஒரு விவசாயி பன்னிரண்டு மாதத்திலும் செய்யும் வேல்யைக் கணக்கிட்டால் 150 முழு நாள் வேலைக்கு மேல் இராது" என்று அவர் மதிப்பிட்டுள்ளார். இவ் விஷயத்தைப் பற்றி அதிகம் விரித்துக் கூறவேண்டுவதில்லை. குடியானவனுக்கு—முக்கியமாகத் தண்ணீர்ப் பாசனம் இல்லாத புன்செய்ப் பிரதேசங்களில் உள்ள குடியானவனுக்கு—வருஷத்தில் ஆறுமாதம் வேலை கிடையாதென்பது நிச்சயம். அவன் வீட்டு ஸ்திரீகளோ களையெடுப்பதற்கும் அறுவடைக்குமே அவனுக்கு உதவி செய்கிறார்கள். மற்றப்படி வருஷத்தில் பெரும் பகுதியான காலம் அவர்கள் வீணில் கழிக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். வேலையில்லாமல் போக்கும்

வீண் பொழுது, புருஷர்களைவிட ஸ்திரீகளுக்கு அதிகம். மேலும் குடியானவனுடைய உழைப்புக்குத் தகுந்த பலன் கிடைப்பது வான மழையைப் பொறுத்திருக்கிறது. பெரும்பாலும் அவனுக்கு விவசாயமே ஒரு சூதாட்டமாயிருந்து வருகிறது. அவ்வாட்டத்தில் கெலிப்பும் தோல்வியும் மழை பெய்வதையோ, பொய்ப்பதையோ பொறுத்தவை. இந்நிலைமையையும், மேற்கூறிய வேலையில்லாத் திண்டாட்டத்தையும் சேர்த்துப் பார்த்தால் தேசத்தின் பாமர ஜனங்கள் கொடிய வறுமையில் மூழ்கித் தான்புறுவதின் காரணம் தெளிவாக விளங்கும். விவசாயிகளுக்கு வருஷத்தில் ஆறுமாதம் வேலையே இல்லை. மற்ற ஆறுமாதத்தில் வேலை கிடைக்குமென்பதும், வேலை கிடைப்பினும் செய்த வேலைக்குப் பலன் கிடைக்குமென்பதும் நிச்சயமில்லை. இத்தகைய நிர்க்கதிக்கு அடிப்படையா யிருக்கும் துரதிர்ஷ்டமான நிலைமை யாதெனில், ஜனங்களுக்கு விவசாயத்தை யன்றி வேறு நிலையான துணைத் தொழில் ஒன்று இல்லாமையே யாகும். ஜனங்களின் க்ஷேமத்தில் கவலையுள்ள எவரும் இவ்வுண்மையை அசட்டை செய்ய முடியாது. வீண் போகும் நேரத்தில் செய்யக்கூடிய ஒரு துணைத் தொழிலுக்கு ஏற்பாடு செய்யாமல் மற்றப்படி ஜனங்களின் பொருளாதார முன்னேற்றத்துக்காகச் சொல்லப்படும் யோசனை எதுவும் சிறிதும் பயனற்றதாகவே முடியும்.

## இராட்டையே தக்க சாதனம்

இந்திய விவசாயிகளின் நிலைமையைக் குறித்து ஆராய்ச்சி செய்ததிலிருந்து நாம் அறிந்துகொண்ட தென்ன? அவர்களுடைய கொடிய வறுமையைப் போக்குவதற்கு உடனே ஏதேனும் செய்தாக வேண்டும். உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத உணவும் உடையும் அவர்கள் பெறுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அவர்கள் வீணுக்கும் நேரத்திற்கு வேலை கொடுப்பதினால் மட்டுமே இதைச் செய்ய முடியும். அவ்வாறு அவர்களுக்கு அளிக்கும் துணைத் தொழில் எத்தகையதாயிருக்க வேண்டுமென்று சற்றே கவனிப்போம். வேறு லாபகரமான வேலை ஏதேனும் கிடைத்தால் அதை மேற்கொள்வதற்கு இத்துணைத் தொழில் இடையூறாயிருக்கக் கூடாது. சாதாரணமாய் வயல் வேலை செய்வது போக ஒழிந்திருக்கும் காலங்களிலும், வயல் வேலையே இல்லாமற்போகும் பஞ்ச காலங்களிலும் அத்தொழில் நினைத்தபோது செய்யக் கூடியதா யிருக்க வேண்டும். சொந்த வீட்டில் செய்யக்கூடிய குடிசைத் தொழிலாயிருக்க வேண்டும். ஆண்மக்கள் மட்டுமென்றிப் பெண்கள், குழந்தைகள் முதலியோராலும் கைக்கொள்ளக் கூடியதாயிருக்கவேண்டும். குடியானவனுடைய குடும்ப வருமானத்தை அதிகப்படுத்தும்படியாகக் கூடிய வரையில் லாபமுள்ளதாயு மிருக்கவேண்டும். சாதி, பரம்பரை வழக்கம் முதலிய கார

ணங்களினால் எவரும் ஆட்சேபிக்கத் தக்கதா யிருத்தல் கூடாது. இவ்வளவு நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யும் துணைத் தொழில் இராட்டையில் நூற்றல் ஒன்றேயாகும். இன்றுவரை அழியாதிருக்கும் நமது பழைய கிராம சமுதாய ஏற்பாட்டிற்கு அது முற்றும் பொருத்த முடையது. தேசத்தின் எந்தப் பகுதியி லுள்ளவர்களும் அதைக் கைக்கொள்ளலாம். எவ்வளவு பெருந்திரளான ஜனங்களுக்கும் அதில் வேலையுண்டு. அதைக் கற்றுக்கொள்ள விசேஷப் பயிற்சி தேவையில்லை. அதிக சாமர்த்தியம் வேண்டியதில்லை. ஏழை எளியவர்களும், படிப்பில்லாதவர்களுமான பெருந்திரளான நமது கிராமவாசிகள் ஒழிந்த காலங்களில் செய்யக்கூடிய துணைத் தொழில் இராட்டையைத் தவிர வேறு கிடையாது. அலகாபாத் விவசாயக் கல்லூரியைச் சேர்ந்த மிஸ்டர் ஹிக்கின்பாதம் என்பார் சமீபத்தில் வரி விகித விசாரணைக் கமிட்டியின் முன்பு சாட்சியங் கூறுகையில், நிலத்தினால் எவ்வளவு பேரைக்காப்பாற்ற முடியுமோ அதைவிட ஜனத்தொகை பெருகிவிட்டதென்று கூறி, இந்த அதிகப்படி ஜனங்களுக்குப் பிழைப்புத்தரக்கூடிய சரியான கிராமத் தொழில் முறை இல்லாதது குறித்து வருத்தந் தெரிவித்தார். ஏராளமான மனிதர்கள் நிலத்தை நம்பியே பிழைக்க வேண்டியவர்களா யிருக்கிறார்கள் என்றும், ஆனால் வருஷத்தில் பாதி நாட்களே அவர்களுக்குப் பயிர்த்தொழில் வேலை யிருக்கிறதென்றும், பாக்கி நாட்களில் செய்யக்கூடிய கிராம கைத்தொழில்களை ஏற்படுத்தி அபிவிருத்தி செய்வதுதான் அவர்களுடைய முன்னேற்றத்துக்குரிய பரிகாரமாகுமென்றும் அவர் கூறினார். ஆகவே விவசாயிகளுக்குத் தக்கதொரு துணைத் தொழில் வேண்டு மென்பதும், ஆனால் அத்தொழில் ஏற்கனவே அவர்களுக்கு விவசாயத்தினால் கிடைத்துவரும் உரிமைகளையும் நன்மைகளையும் பறித்து விடுவதாயிருத்தல் கூடாதென்பதும் தெளிவாகத் தெரிய வருகின்றன.

## மிஸ்டர் தாம்ஸனின் யோசனை

மேற் கூறியவற்றி லிருந்தே, ஆலைத் தொழில் அபிவிருத்தியினால் கிராம விவசாயிகளின் வறுமைக்குப் பரிகாரம் ஏற்படாது என்பதும் தெளிவாகின்றது. வேறு வழி யொன்றும் இல்லாமற் போனாலன்றிக் குடியானவர்கள் ஆலைகள் உள்ள நகர்ப் புறங்களுக்கு வேலை தேடிச் செல்லுதல் சாத்தியமான காரியமன்று. இவ்விடத்தில், வங்காளத்து ஜனக்கணிதி உத்தியோகஸ்தரான மிஸ்டர் தாம்ஸன் கூறும் யோசனையை நாம் சற்றே கவனிக்கவேண்டும். "குடியானவனுக்கு அவனுடைய கிராமத்துக் கருகிலேயே தொழில் ஏற்படுத்திக் கொடுப்பதுதான் தக்க பரிகாரமாகக் கூடும்" என்றும், "இராட்டைப் பிரசாரம் செய்பவர்களுக்குள் அறிவாளிகள் இம்முறையில்தான் வாதம் செய்கிறார்கள்; அந்த

அளவில் அது பொருத்தமானதே" என்றும் மிஸ்டர் தாம்ஸன் ஒப்புக் கொள்கிறார். ஆனால் இவ்வளவுடன் அவர் இராட்டையின் சார்பாகப் பேசுவதை நிறுத்தி, அவ்வாறு பேசியதனால் நேர்ந்துவிட்ட துரோகத்துக்குப் பிராயச் சித்தம் செய்வதைப்போல் இராட்டையின் பயனற்ற தன்மையை நிரூபிப்பதற்காகக் குதர்க்கத்தில் தலைப்படுகிறார். "வங்காளக் குடியானவன் நிலத்தில் சொற்பமாக உழைத்து அதிக பலன் அடைந்து வழக்கமானவன். ஆதலின் அதிக காலமும் உழைப்பும் செலவிட்டுச் சொற்ப பலன் அடையக்கூடிய துணைத் தொழில் எதையும் அவன் விரும்பிக் கைக்கொள்ளமாட்டான். இராட்டை பொருளாதார விதிகளுக்கிசைந்த தொழிலாகுமென்று நம்புவதற்குச் சிறிதும் இடமில்லை. ஆனால் கைத் தறிகளின் விஷயத்தில் அத்தகைய நம்பிக்கைக்கு இடமுண்டு" என்று அவர் சொல்கிறார். ஆனால் கைத்தறித் தொழிலுக்கு விசேஷத் தேர்ச்சி வேண்டுமாதலாலும், இன்னும் அதிலுள்ள பல கஷ்டங்களினாலும் அத்தொழில் அதிகமாய்ப் பரவுவதற்கு இடமில்லை யென்பதை அவர் ஒப்புக்கொண்டே தீர வேண்டியிருக்கிறது. எனவே கடைசியாக நகைக்கத்தக்க ஒரு யோசனை கூறி முடித்திருக்கிறார். யாரேனும் பரோபகாரி ஒருவர் முன் வந்து நாட்டுப்புறத்தில் கிராமவாசிகளுக்கு வேலை தருவதற்காக ஒரு சணல் ஆலை எற்படுத்த வேண்டுமென்பதே அந்த யோசனை! ஒரு சணல் ஆலை மட்டுமென்று—நூறு ஆலைகள் எற்படுத்திய போதிலும் வங்காளம் ஒரு மாகாணத்திலேனும் கிராமவாசிகளின் துயரத்தைப் போக்கிவிட முடியுமா? ஒரு நாளும் முடியாது. கிராமவாசிகள் பழைய வழக்க பழக்கங்களில் பற்றுள்ளவர்களென்றும், சொந்த கிராமங்களிலிருந்து வெகுதூரம் சென்று வேலை செய்ய அவர்களுக்கு விருப்பமிருப்பதில்லை யென்றும் மிஸ்டர் தாம்ஸன் ஒப்புக்கொள்கிறார். இவ்விரண்டு உண்மைகளையும் ஒப்புக்கொள்ளின், குடியானவர் பெருந்தொகையினர் ஒழிந்த காலங்களில் செய்யக்கூடிய துணைத் தொழில் இராட்டையில் நூற்றலைத்தவிர வேறொன்றிருப்பதாக நினைக்கவே முடியாது. மிஸ்டர் தாம்ஸனின் வாதம் அவருடைய வாய் மொழியினாலேயே அடிபட்டுப் போகிறது. சணல் ஆலையில் லாபம் வராதென்றும், நஷ்டத்துக் கிடமுண் டென்றும் அவரே கூறுகின்றார். இராட்டையின் மேன்மைக்கு இதுவே சிறந்த அத்தாட்சியாகும். குடியானவனுக்கு இராட்டையில் கிடைக்கும் வருமானம் சொற்ப மாயிருக்கலாம். ஆனால் விவசாயத்தில் அவனுக்குக் கிடைக்கும் நிகர ஆதாயம் என்ன? எக்கரா பூமிக்கு 15 ரூபாய்க்கு மேல் இல்லை. ஆகவே வீட்டில் நினைத்தபோது நூற்பதினால் கிடைக்கும் சொற்ப வருமானம் அவனுக்குப் பெரிதாகவே இருக்கும். உண்மையில் இராட்டையைத் தவிர அவனுக்கு வேறு கதியே கிடையாது.

## கதர் வேலையில் அறிந்த உண்மைகள்

கதர் வேலை நடக்கும் ஸ்தலங்களிலிருந்து கிடைத்துள்ள சில விவரங்களைக்கொண்டு மேற்கூறிய உண்மையைச் சோதித்துப் பார்க்கலாம். இனிமேல் சொல்லப் போகும் வாதங்களுக்கு அவ்விவரங்கள் உறுதியான அஸ்திவாரமா யிருக்கும். பீஹார், சென்னை, பஞ்சாப் முதலிய மாகாணங்களில் கிராமத்துப் பெண்மக்கள் இத்தொழிலை விரைவாக மேற்கொண்டு வருகிறார்கள். அவ்விடங்களில் நூல் நூற்கும் ஸ்திரீ ஒருத்தி சராசரியில் வாரத்துக்கு எட்டணா முதல் பத்து அணா வரையில் சம்பாதிப்பதாகத் தெரியவந்திருக்கிறது. வயல் வேலை இல்லாத காலங்களிலேயே பெண்கள் நூல் நூற்பதாக வைத்துக் கொள்வோமானால், அவர்களுக்குக் கிடைக்கும் வருஷ வருமானம் கதிர் ஒன்றுக்கு 20 அல்லது 25 ரூபாய்க்கு மேல் இருக்க முடியாது. ஆனால் அவர்களுடைய சாதாரண குடும்ப வருமானம் எவ்வளவு சொற்பம் என்பதைக் கவனித்தால், மேற்படி 20 அல்லது 25 ரூபாய் அவர்களுக்கு எவ்வளவு பெரிது என்பதை அறிந்து கொள்வோம். தமிழ் நாட்டில் கதர் வேலை நடக்கும் பிரதேசங்களில் சில கிராமங்களின் நிலைமையைக் குறித்து விரிவாக ஆராய்ச்சி செய்ததில் பின்வரும் விவரங்கள் தெரியவந்தன :—

| கிராமம் | இராட்டைகள் | இராட்டையில் வருஷ வருமானம் | விவசாய வருமானமும் மற்ற வருமானங்களும் | 100 க்கு எவ்வளவு ? |
|---|---|---|---|---|
| **புதுப்பாளையம் வட்டம்** | | | | |
| 1. உப்புபாளையம் | 25 | 460 | 3360 | 13% |
| 2. செம்பாம்பாளையம் | 29 | 450 | 3065 | 16% |
| 3. புளியம்பட்டி | 20 | 346 | 2650 | 13% |
| 4. சித்தலந்தூர் | 25 | 375 | 2150 | 17½% |
| 5. புதுப்பாளையம் | 25 | 336 | 2398 | 14% |
| **கானூர் வட்டம்** | | | | |
| 6. குமாரபாளையம் | 60 | 1398 | 9009 | 15½% |
| 7. செல்லம்பாளையம் | 14 | 242 | 2190 | 11% |
| **ஊத்துக்குழி வட்டம்** | | | | |
| 8. வேலம்பாளையம் | 25 | 401 | 1400 | 28½% |
| 9. பாப்பாம்பாளையம் | 68 | 1205 | 5220 | 23% |
| 10. செம்பாம்பாளையம் | 14 | 372 | 2672 | 14% |

கிராமங்களின் மொத்த வருமானத்தை எடுத்துக்கொண்டு பார்த்தால், மற்ற எல்லாத் துறைகளிலும் கிடைக்கும் வருமானத்தைப்போல்

100க்கு 12 முதல் 20 விகிதம் வரையில் இராட்டையினுல் கிடைத்திருப்பதாய் வெளியாயிற்று. வீட்டு வேலையும் வயல் வேலையும் செய்து ஒழிந்த நேரங்களிலேயே ஸ்திரீகள் நூல் நூற்ருர்கள். அவர்களில் எவரும் அதைச் சலிப்பான வேலையாகக் கருதவில்லை. தனிப்பட்ட குடும்பங்களின் விஷயத்தில் இன்னும் ஆச்சரியமான பலன்கள் தெரியவந்தன. ஒன்றுக்குமேல் இராட்டை சுழன்ற குடும்பங்கள் சிலவற்றிற்கு விவசாய வருமானத்தில் பாதி வருமானம் இராட்டை மூலம் கிடைத்தது. வேறு வேலை எதுவும் செய்யத் தகுதியில்லாத வயது முதிர்ந்த ஸ்திரீகளும் குழந்தைகளுங் கூட இராட்டையில் நூற்றுக் குடும்பத்துக்கு உபயோகமாயிருத்தல் சாத்தியமாயிற்று. இது முக்கியமாகக் குறிப்பிடத்தக்கதாகும். சாதாரண காலங்களிலேயே இராட்டை பெரிதும் பயன்பட்டதென்ருல், காய்ச்சல் காலங்களிலும் பஞ்ச காலங்களிலும் அதன் முக்கியம் மிகவும் அதிகமாயிருந்தது. தேசத்தின் மற்ற பாகங்களிலும் தண்ணீர்ப் பாசனம் இல்லாத புன்செய்ப் பிரதேசங்களில் மேற்கூறியவை போன்ற சோதனைகள் நடத்தினுல், இதே விதமான பலன்களும் அநுபவங்களும் வெளியாகும் என்பதில் ஐயமில்லை. ஆகவே விவசாய வருமானத்துக்கு இராட்டை வருமானம் தக்க துணையாகிற தென்பது தெளிவாக ஏற்படுகின்றது. தேசத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் தகுதியானதும், இவ்வளவு நல்ல பலன்கள் தரக்கூடியதுமான தொழில் வேறென்றிருப்பதாகத் தெரியவரவில்லை. குடியானவனுக்கு உதவி மிக அவசியமாகத் தேவை. ஏதேனும் ஒரு நல்ல துணைத் தொழிலின் மூலம் அவனுக்குத் தக்க உதவி யளித்தாலன்றி நாளுக்குநாள் வளர்ந்து வரும் வறுமையிலிருந்தும், கடன் சுமையிலிருந்தும் அவன் மீளுதல் அரிது.

## இராட்டைக்குத் தேவையுண்டா ?

“ இராட்டை முதலிய பழைய கைத்தொழில்களையும் கர்நாடக வியாபார முறைகளையும் நவீன இயந்திரக் கருவிகள் புதிய போக்குவரவு சாதனங்கள் முதலியவை அழித்துவிட்டது உண்மையே. ஆனுல் அதே சமயத்தில் அக்கருவிகளும் சாதனங்களும் ஜனங்களுக்குக் கணக்கில்லாத புதிய உத்தியோகத்துறைகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றனவே ” என்று கேட்கலாம். ஆனுல் இது உண்மை யன்று. அதற்கு மாருக வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்குநாள் கடுமையாகி வருவதைத்தான் நாம் கண்கூடாகக் காண்கிரும். விரைவில் அது தீர்க்க முடியாத பிரச்னையாகி விடலாமென்றும் தோன்றுகிறது. பழைய நாட்டுக் கைத்தொழில்கள் எல்லாம் அடியோடு அழிந்துவிட்டன. புதிய இயந்திர சாதனங்களைக்கொண்டு ஏற்பட்டிருக்கும் தொழில்களோ ஜனங்களில் பத்தில் ஒரு பங்கு பேருக்கு மேல் வேலை கொடுக்க முடியவில்லை. ஏழை விவசாயி

களுக்கு ஏதேனும் கதிமோக்ஷம் பிறக்கு மென்பதற்கு அறிகுறியே காணோம். தேசமக்கள் பொதுவாக நிர்க்கதியான நிலைமையில் இருக்கிறார்கள். ஜனக்கணிதி அறிக்கையில் ஜனங்களின் தொழில்களைக் குறித்துக் காணப்படும் புள்ளி விவரங்களைச் சற்றே கவனித்தால் இது சம்பந்தமான சந்தேகங்கள் எல்லாம் நிவர்த்தியாகிவிடும் :—*

| | தொழில் அல்லது உத்தியோகம். | ஜனத்தொகையில் நூற்றுக்கு இவ்வளவு பேர் அதில் ஈடுபட்டவர்கள். |
|---|---|---|
| 1. | விவசாயம் | 70·9% |
| 2. | ஆலைத்தொழில்கள் | 1% |
| 3. | வியாபாரம் | 6% |
| 4. | போக்குவரவு | 2% |
| 5. | நிர்வாக உத்தியோகம் | 2% |

விவசாயம் என்ற தலைப்பின் கீழ் வருபவர்களில் 100க்கு 45 பேர் உழைப்பாளிகள்; மற்றவர்கள் அவர்களைச் சார்ந்து வாழ்பவர்கள். மேலே காட்டிய ஐந்து இனங்களைச் சேர்ந்தவர்களைத் தவிர மற்றவர்களெல்லாம் நிலையான ஜீவனோபாயம் இல்லாதவர்க ளாவர். இவர்களில் பெரும் பாலோர் "வீட்டு வேலையும் வேறு பயனில்லாத வேலையும்" செய்பவர்கள் என்று ஜனக்கணிதி அறிக்கை கூறுகின்றது. உண்மையில் இவர்கள் சோம்பலில் காலங்கழிப்பவர்கள் என்றே சொல்லிவிடலாம். 1921-ம் வருஷத்து ஜனக்கணிதியின் புள்ளி விவரங்களையும், 1911-ம் வருஷத்துப் புள்ளி விவரங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் மொத்த ஜனத்தொகையின் பெருக்கத்தைவிட விவசாயத்தில் பிழைப்பவர்களின் பெருக்கம் சிறிது துரிதமா யிருந்து வருவதைக் காணலாம். கைத்தொழில்கள் பெரிதும் குறைந்திருக்கின்றன. முக்கியமாக, நெசவுத் தொழிலாளி

* 1921-ம் வருஷத்தில் இந்திய ஜனங்களின் தொழில்களைப் பற்றி இன்னும் விரிவான விவரங்கள் கீழே காண்க :—

| | | |
|---|---|---|
| அ. மூலப்பொருள் உற்பத்தி | ... | 231,194,403 |
| I. தாவரங்கள் பிராணிகள் | ... | 230,652,350 |
| 1. மேய்ச்சல் தரையும் விவசாயமும் | ... | 229,045,019 |
| 2. மீன் பிடித்தல், வேட்டையாடுதல் | ... | 1,607,331 |
| II. தாதுப் பொருள்கள் | ... | 542,053 |
| 3. கனிகள் | ... | 398,968 |
| 4. கற்பாறைகள் | ... | 74,945 |
| 5. உப்பு முதலியன | ... | 68,140 |

கள், குயவர்கள், தச்சர்கள், கன்னுர்கள் ஆகியவர்கள் தொகையில் மிகவும் குறைந்து போயிருக்கிறுர்கள். கிராம சமுதாயங்களில் பயிர்த் தொழில் செய்வோனைச் சார்ந்து பிழைக்கும் கூட்டத்தார் நாளுக்குநாள் பெருகி வருகிறுர்கள். இவர்கள் சாதாரணமாய் நிலத்தின் வருமானத்

| | | | |
|---|---|---|---|
| ஆ. | கைத்தொழில் பொருள் உற்பத்தியும் விநியோகமும் | ... | 55,612,694 |
| III. | தொழில்கள் | ... | 33,167,108 |
| 6. | துணி நெசவு | ... | 7,847,829 |
| 7. | தோல் பதனிடுதல் | ... | 731,124 |
| 8. | மரம் | ... | 3,613,583 |
| 9. | உலோக சாமான் | ... | 1,802,208 |
| 10. | பாலாடை, நெய் | ... | 2,215,041 |
| 11. | இரசாயனப் பொருள்கள் | ... | 1,194,263 |
| 12. | உணவு தயாரித்தல் | ... | 3,100,361 |
| 13. | உடை தயாரித்தல் | ... | 7,425,213 |
| 14. | மர சாமான்கள் | ... | 27,065 |
| 15. | கட்டிட சாமான்கள் | ... | 1,753,720 |
| 16. | போக்கு வரவு சாதனங்கள் அமைத்தல் | ... | 52,793 |
| 17. | மின்சாரம் முதலிய சக்திகளின் உற்பத்தி | ... | 24,881 |
| 18. | மற்ற சில்லரைத் தொழில்கள் | ... | 3,378,937 |
| IV. | போக்கு வரவு சாதனங்கள் | | |
| 19. | ஆகாயப் போக்கு வரவு | ... | 629 |
| 20. | தண்ணீர் மூலம் போக்கு வரவு | ... | 745,399 |
| 21. | சாலைகள் | ... | 2,145,949 |
| 22. | ரயில்வேக்கள் | ... | 1,232,672 |
| 23. | தபால், தந்தி, டெலிபோன் | ... | 207,405 |
| V. | வியாபாரம் | | |
| 24. | பாங்கிகள் | ... | 993,492 |
| 25. | தரகு | ... | 242,628 |
| 26. | ஜவுளி வியாபாரம் | ... | 1,286,277 |
| 27. | தோல் வியாபாரம் | ... | 283,862 |
| 28. | மர வியாபாரம் | ... | 227,667 |
| 29. | உலோகப் பொருள் வியாபாரம் | ... | 641,688 |
| 30. | பானை, சட்டி, செங்கல், ஓடு | ... | 62,498 |

-தைக் கொண்டே வாழ்க்கை நடத்த வேண்டியவர்களா யிருக்கின்றனர். தேச மக்களில் ஏறக்குறைய பத்து பேருக்கு ஒன்பது பேர் வீதம் நேர் முகமாகவோ, மறை முகமாகவோ விவசாயத்தினுல் ஜீவனம் செய்கின்றனர். வேலை எதுவும் இல்லாமல் அவர்கள் வீணுகக் கழிக்கவேண்டிய நேரம் ஏராளமா யிருக்கிறது. இயந்திரத் தொழில்கள் இதுவரையிலும் ஜனத்தொகையில் நூற்றில் ஒருவருக்கே பிழைப்பு அளித்து வந்திருக்கின்றன. இன்னும் பத்து அல்லது இருபது வருஷகாலம் அவை இடைவிடாத வளர்ச்சி பெற்ற போதிலும் வேலை வேண்டி அலைவோரில் ஒரு சிறு பகுதிக்குமேல் ஏற்றுக்கொள்ள முடியாது. இராட்டினத்தைத் தவிர வேறு கைத்தொழில்களின் வளர்ச்சிக்காக எவ்வளவுதான் சாதனங்

| | | |
|---|---|---|
| 31. | இரசாயனப் பொருள்கள் ... | 120,028 |
| 32. | ஹோட்டல்கள் முதலியன ... | 706,332 |
| 33. | மற்ற உணவுப் பண்டங்களின் வியாபாரம் | 9,282,651 |
| 34. | உடை வியாபாரம் ... | 284,868 |
| 35. | மர சாமான் வியாபாரம் ... | 173,188 |
| 36. | கட்டிட சாமான் வியாபாரம் ... | 76,810 |
| 37. | போக்கு வரவு சாமான் வியாபாரம் ... | 331,900 |
| 38. | அடுப்பெரிக்கும் பொருள்கள் ... | 519,296 |
| 39. | சுகபோக சாமான்கள், கலைப் பொருள்கள், புத்தகங்கள் ... | 459,868 |
| 40. | மற்ற சில்லரை வியாபாரம் ... | 3,048,570 |
| இ. | போது நிர்வாகமும் மற்ற உத்தியோகங்களும் ... | 9,846,050 |
| VI. | பாதுகாப்பு | |
| 41. | சைன்யம் ... | 2,181,597 |
| 42. | கடற்படை ... | 571 |
| 43. | ஆகாயப்படை ... | 1,033 |
| 44. | போலீஸ் ... | 1,422,610 |
| VII. | | |
| 45. | பொது நிர்வாக உத்தியோகங்கள் ... | 2,643,882 |
| VIII. | மற்ற உத்தியோகங்கள் ... | 5,020,571 |
| 46. | மதம் ... | 2,452,614 |
| 47. | சட்டம் ... | 336,510 |
| 48. | வைத்தியம் ... | 659,583 |
| 49. | உபாத்திமை ... | 805,228 |
| 50. | எழுதும் தொழில், கலைகள், விஞ்ஞானம் | 761,636 |

கள் செய்து கொடுத்த போதிலும், தற்போது துணைத்தொழில் தேவையாயிருக்கும் ஜனங்களில் நூற்றில் ஒருவருக்குக் கூடச் சமீபகாலத்தில் அவற்றினால் பிழைப்பு ஏற்பட முடியாது. இராட்டைத் தொழில் அழிந்ததினால் ஏற்பட்ட குறைவு இன்று வரை பூர்த்தி செய்யப்படவில்லை. அந்தத் தொழிலையே மீண்டும் உயிர்ப்பித்து அதனுடன் தொடர்பு கொண்ட மற்றத் தொழில்களுக்கும் புத்துயிர் அளித்தாலல்லது மேற்படி குறைவு பூர்த்தியாகமாட்டாது. சென்ற சில வருஷங்களின் அநுபவம் இராட்டைத் தொழிலுக்கு மிக்க தேவையிருந்த தென்பதை நன்கு நிரூபித்து விட்டது. அதை மேற்கொண்ட கிராமவாசிகள் பின்னர் அதைக் கைவிட்டதே இல்லை. அதைவிட லாபகரமான தொழில் எதுவும் அவர்களுக்குக் கிடைத்தாலன்றோ அதைக் கைவிடப்போகிறார்கள்? சிற்சில இடங்களில் நிர்வாகக் குறைபாடுகளின் காரணமாக இராட்டை வேலையை நிறுத்திவிடவேண்டி வந்த போதெல்லாம், நூற்கும் ஸ்திரீகள் அதைப் பெரும் விபத்தாகவே கருதினார்கள். மறுபடியும் தங்களுக்கு நல்ல காலம் எப்போது பிறக்கும், எப்போது நூல் நூற்கலாம் என்பதாக அவர்கள் எண்ணி ஏங்கினார்கள்.

## நூற்றலும் விவசாயமும்

இராட்டைத் தொழில் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றத்துக்கு இடையூறாயிருப்பதாகவும், விவசாயத்துக்குக் கூட அது ஒரு தடையே யென்றும் சொல்வோர் சிலர் இருக்கின்றனர். ஏழைக் குடியானவனின் கதிக்காகக் கண்ணீர் வடிப்பதாய்க் காட்டிக் கொள்ளும் அரசாங்கத்தினரும் அடிக்கடி இப்படிச் சொல்வதுண்டு. அறிவாளிகளான

---

ஈ. சில்லரை

| | | |
|---|---|---|
| IX. | | |
| 51. | சொத்தின் வருமானத்தைக் கொண்டு காலட்சேபஞ் செய்வோர் ... | 479,835 |
| X. | | |
| 52. | வீட்டு வேலை ... | 4,570,151 |
| XI. | | |
| 53. | நன்கு விவரிக்கப்படாத தொழில்கள் | 11,098,566 |
| XII. | பயனற்ற தொழில்கள் | |
| 54. | சிறைக்கூடம், பைத்தியக்காரர் விடுதி, பிச்சைக்காரர் விடுதி இவற்றில் வசிப்போர் ... | 145,467 |
| 55. | பிச்சைக்காரர், நாடோடிகள், விபசாரிகள் | 3,020,680 |
| 56. | மற்ற பயனில்லாத தொழில்கள் ... | 87,358 |

தேச ஊழியர்கள் வீணான இராட்டை முயற்சியில் தலையிடுவதற்குப் பதிலாக விவசாய அபிவிருத்தியில் கவனம் செலுத்த வேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். இராட்டை மற்றத் துறைகளில் முன்னேற்றத்துக்குக் குறுக்கே நிற்பதாகச் சொல்லும் வாதம் பொருளற்றதென்பதை எளிதில் நிரூபித்து விடலாம். உண்மையில் இராட்டைத் தொழில் குடும்பத்துக்கு ஒரு நிலையான ஜீவனாதாரமளிப்பதால் மற்ற எல்லா முன்னேற்ற முயற்சிகளுக்கும் அதனால் சாதகமே யுண்டு. இதைப் பற்றி விரித்துக் கூறுவதற்கு முன் விவசாயத்தைப் பற்றியே இன்னும் சிறிது நுட்பமாகக் கவனிப்போம். 1921-22ல் இந்தியாவின் விவசாய நிலைமையைப் பற்றிய புள்ளி விவரங்கள் பின் வருமாறு:—

| | ஏக்கரா |
|---|---|
| 1. 1921-22ல் ஸர்வே செய்தபடி விஸ்தீரணம் | 66,66,19,000 |
| 2. கிராமக் கணக்குகளில் உள்ளபடி விஸ்தீரணம் | 66,35,08,000 |
| 3. காடுகளின் விஸ்தீரணம் | 8,54,19,000 |
| 4. சாகுபடிக்கு வரக்கூடிய தரிசு நிலங்கள் | 15,11,73,000 |
| 5. சாகுபடிக்குப் பயனில்லாத நிலங்கள் | 15,31,78,000 |
| 6. நிலம் வளம் பெறுவதற்காகத் தரிசு போடப்பட்ட நிலங்கள் | 5,05,54,000 |
| 7. மானாவாரி சாகுபடி | 22,31,84,000 |
| 8. நீர்ப்பாசன சாகுபடி | 4,77,90,000 |

தேசத்தின் மொத்த விஸ்தீரணத்தில் சுமார் மூன்றில் ஒரு பகுதி சாகுபடிக்கு வந்திருக்கிறது. இனி சாகுபடிக்கு வரக்கூடிய தரிசு நிலம் தற்போது சாகுபடியாகும் நிலத்தில் மூன்றில் இரண்டு பங்குதான். இதுவும் மிக்க மட்டதரமான நிலமாயிருக்கவேண்டுமென்பது வெளிப்படை. இந்தத் தரிசு நிலம் முழுவதையும் சாகுபடிக்குக் கொண்டுவந்தாலும் நாட்டிலுள்ள விவசாயிகளுக்குத் தலைக்கு அரை ஏக்கரா நிலந்தான் சராசரியில் அதிகமாக முடியும். ஆனால் மேற்படி தரிசு நிலத்தைச் சாகுபடிக்குக் கொண்டுவருவது இலேசான காரியமன்று. காடு திருத்தி நிலத்தைப் பண்படுத்தவும், மற்றக் கருவிகள் உழவுமாடுகள் முதலியவை வாங்கவும் ஏராளமான மூலதனம் வேண்டும். அரசாங்கம் உதவி செய்தாலன்றி இந்தியக் குடியானவனுக்கு இவ்வளவு பணம் ஒரு காலும் கிடைக்காது. மேலும், தரிசு நிலத்தைப் பண்படுத்தும் வேலை இன்றைய தினம் தொடங்கினாலும் நிலம் விளையத் தொடங்குவதற்கு இரண்டு, மூன்று தலைமுறைகள் ஆகும். 1907-ம் வருஷத்திலிருந்து 1921-ம் வருஷம் வரையில், 15 வருஷங்களில், மானாவரி சாகுபடியான பிரதேசம் 21 கோடி ஏக்கராவிலிருந்து 22 கோடி 30 லட்சம் ஏக்கராவுக்குத்தான்

உயர்ந்திருக்கிறது. அதாவது வருஷத்தில் ஏறக்குறைய பத்து லட்சம் ஏக்கரா வீதம் அதிகமாகியிருக்கிறது. வருங்காலத்தில் அபிவிருத்தி இதைவிடத் துரிதமா யிருக்க முடியாது. நிலங்கள் சிறுசிறு பகுதிகளாகப் பிரிந்துகிடக்கும் காரணத்தினால் பெரிய அளவில் விவசாயம் நடத்த அதிக இடமில்லை என்பதை முன்னமே கவனித்திருக்கிறோம். மேலும், நிலத்திற்கு ஓய்வென்பதே கொடாமல் இடைவிடாது சாகுபடி செய்து வருவதால் நாளுக்கு நாள் வளங் குன்றி விளைவு குறைவாகி வருகிறது. லாபத்துடன் சாகுபடி செய்யக்கூடிய நிலங்களெல்லாம் வெகு காலமாகப்பயிர் செய்யப்பட்டே வருகின்றன. குடியானவர்களிடம் மூலதனம் இல்லாத காரணத்தினால் உயர்ந்த உரங்கள் போட்டு நல்ல விளைவு பெறுதல் சாத்தியமாயில்லை. விவசாயிகளின் வறுமையினால் நிலத்துக்கு எருப்போட முடிவதில்லை. எருப்போடாமையினால் விளைவு குறைவாகிறது. விவசாயத்துக்கு இன்றியமையாத உரங்கள் நாட்டில் பலவகையிலும் நஷ்டமாகிவருவது அனைவரும் அறிந்த விஷயமே. தேசத்தின் பல பகுதிகளில் அடுப்பெரிப்பதற்குப் போதிய விறகு அகப்படாத காரணத்தினால் மாட்டுச் சாணத்தை வரட்டி தட்டி அடுப்பெரிக்கின்றார்கள். நிலத்துக்குப் பெரிதும் வளமளிக்கக்கூடிய உரம் இவ்வழியில் ஏராளமாக வீணாகின்றது. எண்ணெய் விதைகள், பலவகைத் தானியங்கள், ஆடு மாடுகளின் எலும்பு, தோல் முதலியவைகளும் வருஷந்தோறும் ஏராளமாக வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகி வருகின்றன. இவையெல்லாம் மிகச் சிறந்த எருவாகும்.

இந்த நஷ்டத்தில் ஒரு பகுதிகூட வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் இரசாயன உரங்களால் ஈடுசெய்யப் படுவதில்லை. வருங்காலத்தில் விவசாய அபிவிருத்தி மூன்று விஷயங்களைப் பொறுத்திருக்கிறது. முதலாவது, நீர்ப்பாசன வசதிகளின் அபிவிருத்தி; இரண்டாவது, நல்ல உரங்கள் கிடைத்தல்; மூன்றாவது, இப்போதைவிடச் சிறந்த சாகுபடி முறைகளைக் கையாளுதல். இந்த மூன்றும் சமீபகாலத்தில் நடக்கக் கூடியவைகள் அல்ல. நீர்ப்பாசனம் அதிக அபிவிருத்தி அடைவதற்கு இடமேயில்லை. தற்போது தொடங்கப் பட்டிருக்கும் நீர்ப்பாசனத் திட்டங்கள் எல்லாம் நடந்தேறினாலும் புதிதாக 90 லட்சம் ஏக்கராவுக்கு மேல் பாய்ச்சல் சாகுபடிக்குக் கொண்டுவர முடியாது. சென்ற சில ஆண்டுகளில் விவசாய அபிவிருத்தி முயற்சிகள் எவ்வளவோ நடந்திருக்கின்றன. ஆனால் அவற்றினால் கிடைத்துள்ள பலன்கள் மிகச்சொற்பம். சென்ற பத்து வருஷ முயற்சியின் பயனாக விவசாய வருமானம் 3¼ கோடி ரூபாய்தான் அதிகமாகி யிருக்கிறதென்று மக்கென்னா என்பவர் மதிப்பிட்டிருக்கிறார். இந்தியாவின் விவசாய விளை பொருள்களின் மொத்த பெறுமானம் 1000 கோடி ரூபாய் என்பதை எண்ணிப்பார்க்கும்

போது மேற்படி அபிவிருத்தி எவ்வளவு சொற்பம் என்பது தெரியவரும். இவ்வாறு வருமான வளர்ச்சி மிகவும் சொற்பமாயிருக்கையில், குடியானவர்களின் கடன் சுமைமட்டும் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. இந்திய விவசாயிகளின் கடன் மொத்தத்தில் 300 கோடி ரூபாய் இருக்குமென்று 1911-ம் வருஷத்தில் ஸர் எட்வர்ட் மக்ளகான் மதிப்பிட்டார். இது மிகவும் குறைந்த மதிப்பெனினும், அதைப்பற்றி நாம் இங்கு விவாதிக்கவேண்டியதில்லை. அன்றைவிட இன்றையதினம் நிலைமை மோசமாகியிருக்கிறதென்பது நிச்சயம். கடன்சுமை பெரிதாகிக்கொண்டேயிருக்கிறது. கடனுக்குச் செலுத்தவேண்டிய வட்டி குடியானவர்களைத் தலைதூக்கமுடியாமல் நசுக்கிவருகிறது. இன்றைய தினம் தேசத்தின் விவசாய நிலைமை இதுதான். இந்நிலைமையின் விளைவு யாது? கோடிக்கணக்கான ஜனங்கள் எப்போதும் அரைப்பட்டினியாகவே உயிர்வாழ்கிறார்கள். நாடு தற்போதுள்ள நிலைமையில் விவசாய அபிவிருத்தி மிகவும் மெதுவாகவே ஏற்படமுடியும். இராசாங்கத்துக்கு வரி கொடுப்பதற்கும், வியாபாரப் பொருள்கள் உற்பத்தி செய்வதற்குமே நிலம் ஏற்பட்டதென்று கருதும் அன்னிய அரசாங்கத்தின் கீழ் விவசாயம் துரிதமாய் அபிவிருத்தியடைவதற்கு இடமில்லை. குடியானவர்களுக்கு விவசாய நிபுணர்களின் புத்திமதியும், ஆலோசனையும் அவசியமேயாகும். இத்தகைய உதவியெல்லாம் கிடைத்தபோதிலும் சாகுபடி வேலையில்லாத காலங்களில் குடியானவன் என்னசெய்வது என்னும் பிரச்னை இருந்தே தீரும். குடியானவனும் அவனுடைய குடும்பத்தாரும் தங்கள் சொந்தக் குடிசையில் செய்யக்கூடிய ஒரு தொழிலைக் கண்டு பிடித்தே யாகவேண்டும். கஷ்டகாலங்களில் ஜீவனோபாயமாகக் கூடியதாயும், வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒருபொருளைத் தருவதாயும் அத் தொழில் இருத்தல்வேண்டும். இராட்டையில் நூற்றல் அத்தகைய தொழிலாகு மன்றோ? இந்த அம்சத்தில்தான் இராட்டை விவசாயத்துக்கு ஒரு சிறந்த துணையாகின்றது. ஒரு வீட்டில் ஒரு புதிய இராட்டை ஏற்பட்டதென்றால் அது அந்தக் குடும்பத்துக்குப் புதிய நிலம் கொஞ்சம் சேர்ந்ததுபோ லாகும். மழை பெய்தாலும், பெய்யாவிடினும் இராட்டை வருமானத்துக்கு எவ்வித ஆபத்தும் கிடையாது.

## வருமானம் போதுமா?

ஆகவே, இராட்டைத்தொழிலை உயிர்ப்பித்தல் ஜீவாதாரமான ஒரு தேவையைப் பூர்த்திசெய்த லாகுமென்று ஏற்படுகிறது. இங்கே மற்றொரு கேள்வி எழுதல்கூடும். இராட்டைத் தொழிலில் கிடைக்கும் வருமானம் போதுமா? தேசத்தின் மொத்த வருமானம் அதனால் தகுந்த அளவில் பெருகமுடியுமா? இந்தக் கேள்விகளைப் பற்றிச் சிறிது ஆராய்

வோம். இராட்டை இயக்கம் வெற்றியடைந்தாலும் அதனால் மீதமாகும் தொகை மிகவும் அற்பமாயிருக்கும் என்று நிரூபிக்க ஸ்ரீமான் காலே முயன்றிருக்கிறார். இராட்டைத் தொழிலில் கிடைக்கக்கூடிய வருமானம் முழுவதையும் ஜனங்கள் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தால் தலைக்கு ஒரு ரூபாய் ஆறு அணாத்தான் கிடைக்குமென்று அவர் கூறுகிறார். இது மிகவும் பிழைபட்ட வாதமாகும். பொருளாதார தத்துவங்களை யொட்டியே பார்த்தாலும் அவருடைய வாதத்தில் தவறுகள் இருக்கின்றன. இராட்டை இயக்கத்தினால் தேசத்திற்குக் கிடைக்கக் கூடிய லாபம் அன்னியத் துணிகளுக்காக இப்போது நாட்டை விட்டு வெளியேறும் பணம் மட்டுமன்று. அவ் வன்னியத் துணிகளை நாடெங்கும் கொண்டுபோய் விற்பதில் ஏற்படும் போக்குவரவுச் செலவுகள் மீதியாகும். பருத்தி விளைவிக்கும் விவசாயிகளுக்கு ஏற்றத்தாழ்வுகள் அதிகமில்லாமல் நிலையான கிராக்கி உள்நாட்டிலேயே இருந்துவரும். அன்னியத்துணி வியாபாரத்தில் இப்போது போடப்பட்டிருக்கும் ஏராளமான மூலதனம் வேறு செல்வ உற்பத்திக்குரிய தொழில்களில் போடுவதற்குக் கிடைக்கும். இந்த அம்சங்களை யெல்லாம் ஸ்ரீமான் காலே கவனிக்கவில்லை. இதுமட்டுமல்லாமல், இராட்டையைப் போலாவது, அதைவிட அதிகமாக வாவது பலன் அளிக்கக்கூடிய வேறு தொழில் எதுவும் இல்லையென்பதையும் அவர் மறந்துவிட்டார். கிராமவாசிகள் வீண்போக்கும் நேரத்தில் செய்யக் கூடியதும், இராட்டையைவிட அதிக தேசிய வருமானம் தரக்கூடியதுமான ஒரு தொழில் இருக்கும்பட்சத்தில் ஸ்ரீமான் காலேயின் வாதத்திற்குப் பொருள் உண்டு. இந்தியாவின் கிராம வாழ்க்கைக்கும், சமுதாய நிலைமைக்கும் இராட்டைத் தொழில் பெரிதும் இசைந்ததாகும். அது எளிதில் பயிலக்கூடிய தொழில்; மூலதனம் தேவையில்லாதது; கிராமத்தில் ஒழிவுள்ள காலங்களில் நினைத்தபோது வீட்டிற்குள் செய்யக்கூடிய தொழில் அது ஒன்றுதான். அத்தொழிலில் ஏராளமான வருமானம் இல்லாவிட்டாலும் குடியானவனின் நிலைமைக்கு அவன் பெரிதெனக் கருதக்கூடிய அளவு வருமானம் உண்டு. இராட்டைப் பணத்தை மீத்துவைத்துக்கொள்வதினால் அவன் பஞ்சகாலங்களில் அரை வயிற்றுக் கஞ்சியேனும் குடித்துப் பிழைக்கலாம் என்னும் மனோதைரியம் பெறக்கூடும். தேசிய நோக்குடன் கவனித்தால் இராட்டை புதிய செல்வம் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு பெரிய சாதனமாகும். தேசத்தின் செல்வம் இடைவிடாது வெளியேறுவதன் மூலம் நாளுக்கு நாள் தேசம் வறுமை வாய்ப்படுவதை அது தடுக்கும். தனி மனிதனுக்கும் அதனால் பெரிதும் நன்மையுண்டு. சிலருக்குப் பெருஞ் செல்வத்தை யளித்துப் பலரைப் பட்டினிபோடும் ஆலைத்தொழில்களைப் போலல்லாமல் இராட்டைத் தொழில் தர்ம நியாயமாகச் செல்வத்தைப்

பகிர்ந்து கொடுக்கும். ஏழைகளின் பொருள் நிலையும் சமூக அந்தஸ்தும் அதனால் உயரும்.

## விளையும் நன்மைகள்

இராட்டைத் தொழிலை உயிர்ப்பிப்பதினால் விளையக்கூடிய நன்மைகளை இங்கே சுருக்கமாக எடுத்துக் காட்டுவோம்:

(1) நாட்டில் பெரும்பாலான குடியானவர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் வருஷத்தில் மூன்று மாதம் முதல் ஆறு மாதம் வரையில் எவ்வித வேலையுமின்றி வீண் காலம் போக்குகிறார்கள். அவர்களுக்கு இராட்டை சிறந்த துணைத் தொழிலாகும். பஞ்சகாலங்களில் ஜனங்கள் நூற்றலையே முழுநேரத் தொழிலாகக்கொண்டு ஜீவனம் நடத்தலாம். ஆகவே இராட்டைத்தொழில் வீண் போகும் நேரத்தை வேலையில் பயன்படுத்திச் செல்வ உற்பத்தி செய்வதாகும்.

(2) நாட்டின் செல்வத்தில் குறைந்தபட்சம் 60 கோடி ரூபாய் வெளி நாடுகளுக்குச் செல்லாமல் நிற்கும். ஜனங்களின் கைத்திறமையும், உற்பத்தி சக்தியும் துருப்பிடித்து நாசமாகாமல் பயன்படும்.

(3) இராட்டைத் தொழிலினால் உற்பத்தியாகும் துணி வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களில் ஒன்று.

(4) அதை எளிதில் கற்றுக்கொண்டு தேர்ச்சி பெறலாம். ஆண், பெண், குழந்தைகள் அனைவரும் செய்வதற் கேற்றது.

(5) எல்லாருக்கும் தகுந்த தொழில் அது ஒன்றுதான். அத்துடன் தேசிய செல்வத்தைப் பெருமிதமாக அபிவிருத்தி செய்யக் கூடியது.

(6) வேறு லாபகரமான தொழில் செய்வோர் அதை நிறுத்திவிட்டு இராட்டை சுற்றவேண்டியதில்லை. சும்மாயிருக்கும் நேரங்களிலும் வேலையில்லாத் திண்டாட்டம் நேரும் காலங்களிலும் செய்வதற்கே அது ஏற்பட்டது.

(7) "நாம் நிர்க்கதி யானவர்கள்" என்னும் எண்ணத்தினால் சோர்வு கொண்டிருக்கும் ஜனங்களுக்கு இராட்டை சோர்வைப் போக்கி ஊக்கமளிக்கும். நாட்டில் நிலையான, இடைவிடாத முன்னேற்ற முயற்சிகள் நடப்பதற்கு வேண்டிய தேசிய உற்சாகம் அதனால் ஏற்படும்.

## ஆசிரியர் ஷாவும் இராட்டையும்

இந்தியாவில் பொருளாதாரப் பிரச்னை என்பது முக்கியமாக கிராமத்தைப் பொறுத்ததேயாகும். கிராமங்களில் வசிக்கும் ஏராளமான ஜனங்களிடம் தற்போது வீணாய்க்கிடக்கும் பொருளுற்பத்தி சக்தியைத் தக்கபடி பயன்படுத்தினால், இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்

துக்கு அதைவிடச் சிறந்த சாதனம் வேறிருக்க முடியாது. பம்பாயைச் சேர்ந்த ஆசிரியர் கே. டி. ஷா என்பார் தாம் எழுதிய வெவ்வேறு இரண்டு புத்தகங்களில் இராட்டையைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். முதல் புத்தகத்தில் அவர் இராட்டையையும் கைத்தறியையும் சேர்த்துக் குழப்பியுள்ளார். இதனால் அவர் தமது ஆற்றலுக்கே ஒரு குறைவை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். பின்னால் எழுதிய புத்தகத்திலும் அவர் இராட்டையைத் தாக்கியுள்ளார். விவசாயிகளுக்குத் துணைத் தொழிலாக ஓரளவு அது உபயோகமுள்ளதென்பதை அவர் ஒப்புக்கொண்டு மேலே சொல்வதாவது :—“நிலத்தினால் எவ்வளவுபேரைக் காப்பாற்ற முடியுமோ அதைவிட அதிகமாயுள்ள ஜனங்களை விவசாயத்திலிருந்து திருப்புவதற்காக அரசியல்வாதிகள் இந்தக் கருநாடக, லாபமற்ற தொழிலை வற்புறுத்துகிறார்கள். நிர்க்கதியான மனப்பான்மைக்கே இது அறிகுறியாகும்.” இராட்டை இயக்கத்துக்கு ஆசிரியர் ஷா குறிப்பிடும் நோக்கம் கிடையவே கிடையாது என்று இதற்கு உடனே பதில் சொல்லிவிடலாம். ஜனங்களை நிலத்திலிருந்து திருப்பும் எண்ணமே நமக்கில்லை. நிலந்தான் ஜனங்களுக்கு முக்கிய ஜீவனோபாயமா யிருந்து வரவேண்டும்.

ஆனால் நிலத்தில் செய்வதற்கு வேலை இல்லாதபோது ஜனங்கள் இராட்டை சுற்றி ஏதோ கொஞ்சம் சம்பாதிக்கலாமென்பதே இயக்கத்தின் கருத்து. இராட்டைக்குப் பதிலாக மேற்படி ஆசிரியர் விந்தையான யோசனைகள் சில சொல்லியிருக்கிறார். அஸ்ஸாமில் தேயிலைத் தோட்டங்களை அபிவிருத்தி செய்யவேண்டுமென்றும், பீஹாரிலும் பர்மாவிலும் காடுவளர்த்தல், சுரங்கத்தொழில் முதலியவற்றை அபிவிருத்தி செய்யவேண்டுமென்றும், இதுபோன்றே பிறமாகாணங்களில் வேறு தொழில் முயற்சிகள் தொடங்க வேண்டுமென்றும் அவர் சொல்கிறார். இந்தத் திட்டங்களை யெல்லாம் நாம் ஒப்புக்கொள்வதாயிருந்தாலும் அவற்றை நடத்திவைக்கப் பல வருஷங்களாகும். மேலும் அவை எவ்வாறு இராட்டைக்குப் பதிலாக உபயோகப்படக்கூடும் என்பது விளங்கவில்லை. சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரையில் இயந்திரத் தொழில் அபிவிருத்திக்கு எந்தத் துறையிலும் இடமில்லை யென்று ஆசிரியர் ஷா கண்டு, சென்னை வாசிகளில் ஒரு பகுதியார் பர்மாவுக்கு வேலை தேடிச் சென்று அங்கேயே நிலைபெற்று விடவேண்டுமென்று யோசனை கூறுகிறார். அவருடைய வாதம் எவ்வளவு நகைக்கத்தக்க தென்பதை இந்த யோசனையே நன்கு காட்டுகின்றது. முற்காலத்தில் பைத்தியங் கொண்ட முஸ்லிம் சக்கரவர்த்தி ஒருவன் தன்னுடைய தலை நகரை டில்லியிலிருந்து தௌலதாபாத்துக்கு மாற்றிய சம்பவத்தையே ஆசிரியர் ஷாவின் யோசனைக்கு உவமையாகச் சொல்லலாம்.

## ஆலையுடன் போட்டியிட முடியுமா ?

நவீன இயந்திர சாதனங்கள் அமைந்த ஆலைகளுடன் போட்டியிட்டு இராட்டைத் தொழில் முன்னுக்கு வரக்கூடுமா என்பதைக் குறித்து இனி நாம் கவனிக்கவேண்டும். ஓரம்சத்தில் கதருக்கும் ஆலைத்துணிக்கும் போட்டியே கிடையாதென்று சொல்லிவிடலாம். இராட்டையில் நூற்றல் வீட்டில் சமையல் செய்வதை யொத்ததாகும். அதில் வியாபாரப் போட்டி ஏற்படுவதற்கு இடமில்லை. பணத்தினால் வீட்டுச் சமையலை எப்படி நிறுத்த முடியாதோ, அதுபோல் இயந்திரத்தினால் வீட்டுக்கு நூற்றலையும் நிறுத்த முடியாது. வேறோர் அம்சத்தில் ஆலைத்துணிக்கும் கதருக்கும் போட்டி ஏற்படலாம். நூற்றல் தொழிலை உயிர்ப்பிப்பதின் முக்கிய நோக்கம் என்னவென்பதை இங்கே கவனிக்கவேண்டும். தேசத்தில்—முக்கியமாக கிராமங்களில்—வீணாகிக்கொண்டிருக்கும் பொருள் உற்பத்தி சக்தியைப் பயன் படுத்துவதே அந்நோக்கமாகும். இராட்டை அழிந்தபோது ஜனங்கள் கையை யிழந்தவர்கள் போலானார்கள். அதை அவர்களுக்குத் திருப்பிக் கொடுப்பதே தற்போதைய இயக்கத்தின் நோக்கம். ஆகவே இராட்டினம் இயந்திர சக்தியுடன் போட்டியிட்டு வெற்றியடைய முடியுமா * என்னும் கேள்விக்குப் பதில், நாடெங்கும் நூற்றலை உயிர்ப்பிக்க முடியுமா என்பதைப் பொறுத்திருக்கின்றது. தேசத்தில் நூற்றல் தொழிலுக்குரிய வசதிகள் ஏராளமாக உண்டென்பது வெளிப்படை. அவற்றில் முக்கியமானவை வருமாறு:—

(1) நூற்றலுக்கு வேண்டிய மூலப் பொருளாகிய பருத்தி நூற்பவர்களின் சொந்த வயலிலேயே பெரும்பாலும் விளைகின்றது. அப்படியில்லாவிட்டாலும் வீட்டுக்கு வெகு சமீபத்தில் வாங்கிக்கொள்ளலாம்.

---

* இது சம்பந்தமாக 1922ஆு மார்ச்சு மீ 8உ "எங் இந்தியா" வில் ஸர் டேனியல் ஹாமில்டன் தெரிவித்த அபிப்பிராயம் கவனித்தற்குரியதாகும் :—

"தற்கால முறையில் பொருளுதவி மட்டும் செய்தால் இராட்டையும் கைத்தறியும் இயந்திர சக்தியுடன் போட்டியிட்டு வெற்றிகொள்ள முடியுமென்று நான் கருதுகிறேன். இந்தியாவின் கிராம வாழ்க்கையில் எனக்குள்ள சொந்த அநுபவத்தைக்கொண்டு இதைச் சொல்கிறேன். காரணம் என்னவென்றால், தற்போது கிராமங்களில் வருஷத்தில் நாலு மாதம் ஜனங்கள் வீண் பொழுது போக்குகிறார்கள். எனவே, இந்த நாலுமாத வேலைக்குக் கூலியே கிடையாதென்று வைத்துக்கொள்ளலாம். இப்படி வீணாகும் காலத்தில் நூல் நூற்றுத் துணி நெய்தால் அத்துணியின் விலை மூலப் பொருளாகிய பருத்தியின் விலையே யாகும். இதைவிட மலிவாக யாராவது துணி விற்க முடியுமா ?"

(2) இராட்டினம் மிக சாதாரணமான கருவியாகையால் அதைச் சொந்த ஊரிலேயே செய்துகொள்வதும், செப்பனிடுவதும் சாத்திய மானவை.

(3) இராட்டையை ஓரிடத்திலிருந்து ஓரிடம் எளிதில் கொண்டு போகலாம். எந்த இடத்திலும், எந்த நேரத்திலும், வயது முதிர்ந்தவர் கள், குழந்தைகள் உள்பட எல்லாரும் அதில் வேலை செய்யலாம்.

(4) இராட்டையில் நூற்றல் சிரமமாகத் தோன்ருது; அலுப்பு உண்டாக்காது. நினைக்கும்போது அதை நிறுத்திவிடலாம்.

(5) தேர்ச்சிபெற்றவர்கள் சாதாரண இந்தியப் பருத்தி வகைகளைக் கொண்டும் மிக நயமான நூல் நூற்றுவிடலாம்.

(6) இராட்டையில் உற்பத்தியாகும் நூல் அதைச் செய்பவர் களுக்கும் அண்டை அயலார்களுக்கும் உபயோகமான பொருளாகும். ஆதலின் அதைச் செலவு செய்வதில் அதிக கஷ்டமிராது.

(7) இந்தியாவின் மூலை முடுக்குகளிலும்கூடப் பரம்பரையாகத் தொழில்செய்து கைத்திறமை பெரிதும் வாய்ந்த நெசவுகாரர்கள் இருக் கிருர்கள்.

ஆகவே இக்குடிசைத் தொழிலின் வளர்ச்சிக்கு வேண்டிய அநு கூலங்கள் நாட்டில் ஏராளமாயிருக்கின்றன. தேசத்திலுள்ள வீடுகள் எல்லாவற்றிலும் அத்தொழிலைக் கைக்கொள்ளுதல் சாத்தியமான காரியமா என்பதைத்தான் இனி விரிவாக ஆராய்ச்சி செய்யவேண்டும்.

## கைராட்டை, கைத்தறிகளின் கணக்கு மதிப்பு

கதர் இயக்கம் சமீபகாலத்தில் ஓரள வேனும் வெற்றி தருமென எண்ணுவதற்கு நாட்டில் போதிய தறிகளும் இராட்டினங்களும் இருக் கின்றனவா என்பதை முதலில் கவனிக்கவேண்டும். இது சம்பந்தமாக உத்தேச மதிப்புப் போடலாமேயன்றித் திட்டமான கணக்கு எதுவும் சொல்வதற்கில்லை. தற்போது வேலைசெய்துகொண்டிருக்கும் இராட் டினங்களைக்கொண்டு இது விஷயமான முடிவு எதுவும் செய்தல் சரியா காது. பஞ்சாப், தமிழ்நாடு, ஆந்திரம், பீஹார், கர்நாடகம், இராஜபுதனம் ஆகிய மாகாணங்களில் இராட்டை இயக்கத்தின் வளர்ச்சிக்கு அளவில் லாத வசதிகள் இருக்கின்றன. அநுபவமுள்ள கதர்த்தொண்டர்கள் தேசமுழுவதிலும் குறைந்த பட்சம் 50 லட்சம் இராட்டினங்கள் இருப் பதாக உத்தேச மதிப்பிட்டிருக்கிருர்கள். இந்தக் குறைந்த மதிப்பையே நமது ஆராய்ச்சிக்கு ஆதாரமாக வைத்துக்கொள்ளலாம். பிரதிதினமும் சராசரியில் நாலு அல்லது ஐந்துமணிநேரம் வேலை செய்தால் ஒவ்வோர் இராட்டினத்திலும், சுமார் பதினைந்து நம்பருள்ள நூலில், ஒவ்வொன்று 840 கஜங்கொண்ட இரண்டு சிட்டங்கள் கிடைக்கும். அதாவது வரு

ஷத்தில் கதிர் ஒன்றுக்கு 48 ராத்தல் நூல் உற்பத்தியாகுமெனக் கொள்ள லாம். ஒரு ராத்தல் நூலுக்கு நான்கு சதுரகஜம் துணிவீதம் மேற்படி நூலைக்கொண்டு 192 சதுரகஜம் துணி நெய்யலாம். இந்த வீதப்படி கணக்கிட்டால், மேற்கூறிய 50 லட்சம் இராட்டைகளும் சேர்ந்து வருஷத்தில் 96 கோடி கஜம் துணிக்கு வேண்டிய நூல் உற்பத்திசெய்யும். இது இந்தியாவில் இறக்குமதியாகும் அன்னியத்துணியில் ஏறக்குறைய மூன்றில் இரண்டுபங்கு ஆகின்றது. 1922-23ம் வருஷத்தில் மொத்தம் 157 கோடி கஜம் அன்னியத்துணி இந்தியாவில் இறக்குமதியாயிற்று. இவ்வாறு தேசத்தில் தற்போதுள்ள இராட்டினங்கள் எல்லாம் தினம் நாலு மணி நேரம் சுழன்றாலும் தற்போது வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் துணியில் ஒரு பெரும் பகுதியை உற்பத்தி செய்து விடலாமென அறிகிறோம். ஆகவே நல்லவேலை மட்டும் செய்தால் வருங்காலத்தில் எவ்வளவு மகத்தான பலன்கள் கிடைக்க இடமிருக்கிறதென்று சொல்லவும் வேண்டுமோ? கைத்தறிகளைப்பற்றிய வரையில் நமக்குச் சிறிது நிச்சயமான கணக்கு கிடைத்திருக்கின்றது. கைத்தறி நெசவுகாரர்கள் இயந்திர நெசவுடன் மிக்க பிடிவாதத்துடன் போட்டியிட்டுத் தங்கள் தொழிலைக் காப்பாற்றி வந்திருக்கிறார்களென்பது அனைவரும் அறிந்த உண்மை. இன்றையதினங்கூட இந்தியாவில் 60 லட்சம் ஜனங்களுக்குக் கைத்தறி ஜீவனோபாயமா யிருந்து வருகிறதென்றால் அந்தத் தொழில் எவ்வளவு ஜீவசக்தி பொருந்தியதென்பதை ஒருவாறு அறியலாம். நமது தேசத்தில் பதினோரு மாகாணங்களில் உள்ள கைத்தறிகளுக்கு 1921-ம் வருஷத்து ஜனக்கணிதி அறிக்கையில் கூடியவரை திட்டமான கணக்கு காணப்படுகிறது:—

| | மாகாணம் | | தறிகள் |
|---|---|---|---|
| 1. | ஆஜ்மீர் | ... | 1587 |
| 2. | அஸ்ஸாம் | ... | 4,21,367 |
| 3. | வங்காளம் | ... | 2,13,886 |
| 4. | பீஹார், ஒரிஸ்ஸா | ... | 1,64,592 |
| 5. | பர்மா | ... | 4,79,137 |
| 6. | டில்லி | ... | 1,667 |
| 7. | சென்னை | ... | 1,69,403 |
| 8. | பஞ்சாப் | ... | 2,70,507 |
| 9. | பரோடா | ... | 10,857 |
| 10. | ஹைதராபாத் | ... | 1,15,434 |
| 11. | இராஜபுதானம் | ... | 89,741 |
| | | மொத்தம் | 19,38,178 |

பீரார், மத்தியமாகாணம், ஐக்கியமாகாணங்களில் உள்ள தறிகளின் கணக்கு மேலேயுள்ள ஜாபிதாவில் சேர்க்கப்படவில்லை. அவற்றை நீக்கி விட்டுப்பார்த்தாலும் தேசத்தில் மொத்தம் 20 லட்சம் தறிகள் இருப்ப தாக ஏற்படுகிறது. ஒவ்வொரு தறியும் சாதாரணமாய் வருஷத்தில் 1500 சதுர கஜம் துணி உற்பத்தி செய்யக்கூடும். ஆயிரம் சதுர கஜமே உற்பத்தி செய்வதாக வைத்துக்கொள்ளினும் மொத்த உற்பத்தி தற் போது வெளி நாட்டிலிருந்து இறக்குமதியாகும் துணியைவிட அதிகமா யிருக்கும். ஆகவே கதர் இயக்கத்தை நாடெங்கும் பரப்பி வெற்றி பெறச் செய்வதற்குப் போதிய கைத்தறிகளும், இராட்டினங்களும் தேசத்தில் இருக்கின்றன வென்று ஏற்படுகிறது. இவற்றினும் முக்கியமானது தொழில் செய்வதற்குரிய கைத்திறமையாகும். அதுவும் நாட்டில் போதிய அளவு இருக்கிறது. நூற்பவர்களையும் நெசவுகாரர்களையும் சேர்த் தமைத்து வேலை துவங்கிவிட்டால் அவர்கள் அதிவிரைவில் தங்கள் பழைய கைத்திறமையை மீண்டும் பெற்று விடுவார்கள். அப்போது இராட்டை-கைத்தறிகளின் மூலம் நாட்டிற்குவேண்டிய துணிகளை யெல்லாம் தயாரித்தலும் அசாத்தியமாகாது.

## தலைசிறந்த தொழில் நிலைமை

இராட்டை இயக்கத்தை நடத்துவதற்கு நாட்டில் ஏராளமான வசதிகள் உண்டு என்பதை மேலே கவனித்தோம். அவற்றைத் தக்கபடி பயன்படுத்தி வெற்றி பெறுவதற்குத் தற்போது மூலதனம் அவசியமா யிருக்கிறது. ஆனால் அதைவிட முக்கியமாக வேண்டியது இராட்டை யைப் பரப்புவதற்கு ஒரு திறமையான ஸ்தாபனமாகும். மூன்று, நான்கு தலை முறைகளுக்கு முன் நின்றுபோன இந்தக் கிராமத்தொழிலை மீண் டும் நாம் உயிர்ப்பிக்கவேண்டுமானால், அந்தக்காலத்தில் என்ன நிலைமை களின் கீழ் அது நடந்துவந்ததென்பதை ஆராய்ந்து அத்தகைய நிலைமை களை இப்பொழுதும் உண்டு பண்ண முயலவேண்டும். சரக்கு உற்பத்தி யும் சரக்குக்குக் கிராக்கியும் ஒன்றுக் கொன்று அனுசரணையாயிருந்து வந்தது தான் கைத்தறி கைராட்டைத் தொழில்களின் மேன்மையா கும். உற்பத்தி அதிகமாகிக் கிராக்கியில்லாமல் போவதும், கிராக்கி அதிகமாயிருந்து உற்பத்தி குறைவாயிருப்பதும் இல்லை. உற்பத்தியை யும் கிராக்கியையும் ஒழுங்குபடுத்துவதற்கு ஏராளமான மூலதனமோ, விஸ்தாரமான மத்தியஸ்தாபனமோ அவசியமாயிருந்ததில்லை. பணக் கார வீட்டுப்பெண்கள் குடும்பத்தின் தேவைக்காகவும், பொழுதுபோக் கிற்காகவும் நூல் நூற்றார்கள். ஏழை வகுப்புஸ்திரீகள் வீட்டின் உப யோகத்திற்கும் விற்பனைக்கும் நூற்றார்கள். வீடுகளில் வேண்டிய அளவு பருத்தி சேகரித்து வைக்கப்பட்டது. எனவே மூலப்பொருள்

சேரிகத்து வைக்கவும் விநியோகிக்கவும் முதலாளி ஸ்தாபனம் ஒன்று தேவையாயில்லை. நூற்பவர்களும் தறிகாரர்களும் அண்டை அயலில் வசிப்பவர்களாகவே இருந்தனர். தறிகாரர்கள் பெரும்பாலும் நூற்பவர்களிடம் நேராக நூல் வாங்கிக்கொண்டார்கள். கந்துக்கடையில் கடன் வாங்கவேண்டிய அவசியமே அவர்களுக்குக் கிடையாது. தொழிலாளிக்குத் தன் சரக்குக்கு ஏற்படக்கூடிய கிராக்கி நன்றாய்த் தெரியும். அதற்கேற்ப அவன் சரக்கு உற்பத்திசெய்வான். இத்தகைய நிலைமைகளின் கீழ்த் தொழிலாளிகள் அனைவரும் பூரண சுதந்திரத்துடன் தங்கள் விருப்பம்போல் வேலை செய்து வந்தார்கள்.

மேற்கண்ட நிலைமையை மறுபடியும் ஏற்படுத்துவதே நமது முயற்சிகளின் நோக்கமாயிருத்தல் வேண்டும்.* இந்நோக்கம் நிறைவேறுவதற்கு, இராட்டையில் நூற்றல் அடியோடு அழிந்துபடாமல் இன்னமும் கொஞ்சம் தலை காட்டிக்கொண்டிருக்கும் பிரதேசங்களைக் கண்டு பிடித்து அந்த இடங்களில் அதை அபிவிருத்தி செய்ய விசேஷப் பிரயத்தனம் செய்தல் வேண்டும். பற்பல மாகாணங்களிலும் இராட்டைத் தொழில் இன்னமும் நடந்து வரும் இடங்கள் இருக்கின்றன. அந்தந்த இடங்களின் நிலைமைக்கேற்ப மத்தியஸ்தாபனங்களைக் கூடிய வரையில் குறைத்துக் கொண்டு வேலை நடத்தவேண்டும். உதாரணமாக, அஸ்ஸாம் மாகாணத்தில் நவகாங் என்னுமிடத்தில் இப்போது கூடப் பருத்தி கொடுத்துத் துணி வாங்குதல் வழக்கமாயிருந்து வருகிறது. கொடுக்கும் பருத்தியில் பாதி துணியாகத் திரும்பிவரும். மற்றப்பாதியைப் பருத்தி அரைத்தல், கொட்டுதல், நூற்றல், நெய்தல் ஆகிய எல்லாவற்றிற்கும் கூலியாக எடுத்துக்கொள்வார்கள். இவ்வளவு வேலைகளும் சாதாரணமாக ஒரே வீட்டில் செய்யப்படுகின்றன. இது தான் மிகச் சிறந்த நிலைமை என்பதில் சந்தேகமில்லை. இதற்கடுத்த படியில், ஆந்திர தேசத்திலும் தமிழ் நாட்டில் சில விடங்களிலும் பருத்தி அரைத்தல் முதல் நூல் நூற்றுப் பாவுபோடுதல் வரையில் எல்லாம் நூற்பவர்களின் குடிசைகளில் செய்யப்படுகின்றன. பின்னர், பாவுபோட்ட நூல் சந்தையில் விற்கப்படுகிறது. நெசவுகாரர்கள் மேற்படி நூலை வாங்கித் தங்கள் வீடுகளில் நெசவு செய்வார்கள். அஸ்ஸாம் மாகாணத்தில் ஒவ்வொரு வீடும் ஒரு நெசவுத் தொழிற் சாலையா யிருப்பது போன்ற அபூர்வ நிலைமை நாட்டின் மற்றப் பகுதிகளில் ஏற்படுமென்று எதிர்பார்க்க முடியாது. நூலைப்பாவு போடாமலே சிட்டங்களாகவோ உருண்டைகளாகவோ விற்கும் வழக்கம் தென்னிந்தியாவின் பல பகுதிகளிலும்,

---

* இது வருங்காலத்தில் ஏற்படுத்த வேண்டிய நிலைமையையே குறிக்கும். தற்போதைக்கு இராட்டைத்தொழிலைப் பரப்பும் முயற்சியில் மத்தியஸ்தாபனம் இருத்தல் கூடாதென்பது இதன் பொருளன்று.

பீஹார், பஞ்சாப் மாகாணங்களிலும் இருந்து வருகிறது. இன்னும் சில விடங்களில் நூற்பவர்களே பஞ்சு கொட்டிக் கொண்டபோதிலும் எழ்மைத்தனத்தினால் தாங்களே பருத்தி சேகரித்து வைத்துக் கொள்ளவோ, சந்தையில் கொண்டுபோய் நூல் விற்கவோ அவர்களால் முடிவதில்லை. நடுவில் சிலர் ஏற்பட்டு இவர்களுக்குப் பருத்தி கொடுத்து நூற்ற நூலை வாங்கிக் கொள்கிறார்கள். நூற்பவர்கள் பஞ்சு கூடத் தாங்களே கொட்டிக் கொள்ளாமல் நூற்றல் மட்டும் செய்தல் கடைசி தரமான நிலைமையாகும். உள்ளூர்ப் பஞ்சு கொட்டி அவர்களிடம் பஞ்சுத்திரிகள் கொடுத்து நூல் வாங்கிக் கொள்கிறான். இவ்வளவு நிலைமைகளிலும் நூற்கும் தொழில் தேசத்தில் ஆங்காங்கு இன்னமும் நடந்து வருகிறது. ஆனால் எங்கும் நிலையான தொழில் என்று சொல்லக்கூடிய அளவுக்கு அது பெரிதாக நடைபெறவில்லை. அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள நிலைமைகளையும் வழக்கங்களையும் அநுசரித்து, கூடிய வரையில் தொழிலாளிகளுக்கும் துணிவாங்குவோருக்கு மிடையே இடைஸ்தாபனங்களைக் குறைத்து, இராட்டை இயக்கத்தை அமைக்க முயற்சி செய்ய வேண்டும்.

## சொந்தப் பஞ்சினால் நூற்றல்

இந்தத் துறையில் முதன் முதலாகச் செய்யவேண்டிய முயற்சியாதெனில் நூற்பவர்கள் தங்களுக்கு வேண்டிய பஞ்சைத் தாங்களே சேர்த்துவைத்துக்கொள்ளும்படி செய்வதேயாகும். இராட்டைத் தொழிலை இந்த அடிப்படையின்மீது அமைத்தால்தான் அது நிர்ப்பயமாக நிலை பெற்று நிற்கமுடியும். நூற்பவர்களில் பெரும்பாலோர் தங்கள் சொந்த நிலத்தில் பருத்தி சாகுபடி செய்பவர்களாகவோ அல்லது பருத்திக்காடுகளில் கூலி வேலை செய்பவர்களாகவோ இருப்பார்கள். அவர்களில் சிலர் பருத்தியாகவே கூலி பெறுகிறார்கள். பருத்தி விளைவு இல்லாத பிரதேசங்களில் நூற்பவர்களின் தொகை மிகவும் சொற்பமாகவே இருக்கும். சில பகுதிகளில் நூற்பவர்கள் பருத்தி சேர்த்துவைத்துக்கொள்ள முடியாத வண்ணம் அவ்வளவு ஏழைகளாயிருக்கிறார்கள் என்பது உண்மையே. இத்தகையவர்களுக்குக் கொஞ்சகாலம் வரையில் உதவி செய்தல் அவசியமே யாகும். எனினும் நூற்பவர்களே தங்களுக்கு வேண்டிய பருத்தி சேகரித்து வைத்துக்கொள்ளும் ஏற்பாட்டில் பல அனுகூலங்கள் இருக்கின்றன. முதலாவது பருத்தி சேர்த்துவைப்பதற்காகப் பெருந்தொகையான மூலதனம் போடுதல் அவசியமில்லாமற் போகும். தேச முழுவதிற்கும் வருஷத்தில் 50, 60 கோடி ரூபாய் பெறுமான துணி உற்பத்தி செய்யவேண்டுமானால், அதன் பொருட்டு ஆரம்பத்தில் பருத்தி வாங்கிக் கையிருப்பில் வைப்பதற்கு மட்டும் பல

கோடி ரூபாய் மூலதனம் வேண்டும். மேற்கூறிய ஏற்பாட்டில் இந்த மூலதனத்திற்குத் தேவையில்லாமல் போவதுடன் இன்னும் இது சம்பந்தமான சிப்பந்திச் சம்பளம், வாடகை, இன்ஷியூரன்ஸ் முதலிய பல செலவுகளும் மீதியாகும். இந்தச் செலவுகளெல்லாம் தற்போது நூற்பவர்களின் கூலி குறைவதற்கு ஏதுவாயிருக்கின்றன. இவை மறைந்தால் அவர்களுடைய கூலி அதிகமாகுமென்று சொல்ல வேண்டுவதில்லை. மேற்படி நிலைமையை உடனே ஏற்படுத்துவது சாத்திய மில்லாம லிருக்கலாம். ஆயினும் பருத்தி ஏராளமாகச் சேர்த்து வைப்பதற்கு அவசியமில்லாமற் போகும் வண்ணம் இப்பொழுதிருந்தே முயற்சி செய்துவர வேண்டும். முதலாளிகளோ, மத்தியஸ்தாபனங்களோ பருத்தி சேர்த்து வைத்துக்கொண்டு நூற்பவர்களுக்குக் கொடுத்து நூல் உற்பத்தி செய்வதில் மற்றொரு பெரிய குறைபாடு இருக்கிறது. பருத்தி விலையில் ஏற்றத் தாழ்வுகளினால் அப்போது தொழில் பாதிக்கப்பட ஏதுவுண்டு. உதாரமாக, 1923-ம் வருஷத்தில் பருத்திவிலை திடீரென்று ஏறியபோது கதர் உற்பத்தி செய்த முதலாளிகள் பலர் உற்பத்தியைக் குறைத்துக்கொண்டனர். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் நூற்பவர்களுக்கு வேலையில்லாமல் போய்விடும். நூற்பவர்களே பருத்தி சேர்த்துவைத்துக்கொள்ளும் பட்சத்தில் இத்தகைய வேலை யில்லாத் திண்டாட்டம் ஏற்படுவதற்கே இடமிராது. மகசூல் காலத்தில் பருத்தி சேகரித்துக்கொள்வோர் நூற்கும் கூலியுடன் பருத்தி அரைக்கும் கூலியும் பெறுவார்கள். பருத்தி விதைகளும் அவர்களுக்கு லாபமாகும். இது விவசாயிகளுக்கு எவ்வளவு உபயோகமாயிருக்குமென்று சொல்ல வேண்டியதில்லை. பருத்தி விலை ஏறினால் நூற்பவர்கள் நூலை விற்கும்போது அந்த லாபத்தைச் சேர்த்துப் பெறுவார்கள். பருத்திவிலை இறங்கும் பட்சத்தில் அந்தக் காலத்தில் அவர்கள் தங்கள் சொந்த உபயோகத்துக்கு வேலை செய்துகொள்ளலாம். எப்படிப் பார்த்தாலும் நூற்பவர்களுக்கு இந்த ஏற்பாட்டினால் லாபமே உண்டு. எனவே நூற்பவர்களின் நன்மையை முன்னிட்டே அவர்கள் மூலப் பொருளுக்குப் பிறரை நம்பியிராத நிலைமை ஏற்படுத்தத் தீவிரமான பிரசாரம் செய்ய வேண்டும். ஆரம்பகாலத்தில் நூற்பவர்களில் மிகவும் ஏழைகளா யுள்ளவர்களுக்காகப் பருத்தி சேகரித்து வைத்திருந்து அவ்வப்போது கொடுத்து உதவுதல் அவசியமாயிருக்கலாம். ஆனல் இந்த வழக்கத்தை நீடித்து நடத்திக்கொண்டிருந்தால் நூற்பவர்கள் சுதந்திரமற்றவர்களாய்ப் பிறரை நம்பியிருக்கும் நிலைமையே ஸ்திரமாகிவிடும். பருத்தியையும் ஓர் உணவுப்பயிராகக் கருதுமாறு நூற்பவர்களுக்குப் பயிற்சி யளிக்கவேண்டும். உண்ணும் உணவைப்போல் உடுக்கும் ஆடையும் முக்கியமானதன்றே? நூற்பவர்கள் பருத்தியையும் உணவுப்பயிரைப்போல் கருதி, உணவுப் பொருள்களை வருஷமுழுவதிற்

கும் சேர்த்துவைத்துக் கொள்வதுபோன்று பஞ்சையும் சேர்த்துவைத்துக் கொள்ளத் தொடங்கிவிடுவார்களானால், அவர்கள் இடைமனிதர்களை நம்பியிராமல் சந்தைகளில் நெசவு காரர்களிடமே நேரில் நூல் விற்று முழு லாபமும் அடைவார்கள். இதுவே முற்காலத்திலிருந்த நிலைமையாகும்.

நூற்பவர்களே பருத்தி சேர்த்துவைத்துக்கொள்ளும் வழக்கம் ஏற்பட்டு விட்டால் நூலின் தரத்தில் உடனே பெரும் அபிவிருத்தி உண்டாவதைக் காணலாம். சொந்தப் பருத்தியைக்கொண்டு நூற்பவர்கள் அதில் சிறிதும் வீணாகாத வண்ணம் சர்வ ஜாக்கிரதையுடன் நூற்கள். அவர்கள் சுதந்திரமாக வேலை செய்வதால் பிறருடைய வலுக்கட்டாயத்துக் குட்படாமல் உயர்ந்த விலைக்குத் தங்கள் நூலை விற்க முடியும். எனவே நூலின் தரத்தில் அவர்கள் பெரிதும் கவனம் செலுத்துவார்கள். பருத்தியைக் கவலையுடன் அரைத்துச் சுத்தம் செய்வார்கள். சொந்தப் பருத்தியாதலால் அதைக்கூடிய வரையில் குறைவாகச் செலவழிக்கவும், அதேசமயத்தில் நூலுக்கு நல்ல விலைபெறவும் முயலுவார்கள். இவ்விருப்பத்தினால் தூண்டப் பெற்று அவர்கள் மிக நயமான நூல் நூற்பார்கள். தற்போது வழக்கத்திலுள்ளதுபோல் நூற்பவர்களுக்கு அவ்வப்போது பருத்திகொடுத்துக் கூலிக்கு நூற்கச் செய்யும் முறையில் நூலின் தரம் குறையாமலிருப்பதற்கு எவ்விதத் தூண்டுதலுமில்லை. நூற்பவர்கள் கூலியிலேயே கருத்தாயிருப்பார்கள். வேலையில் சிறிதும் சிரத்தையில்லாத இயந்திரங்களைப்போல் அவர்களும் ஆகிவிடுவார்கள். உதாரணமாக இங்கே சில புள்ளி விவரங்களைக் கவனிப்போம். திருப்பூர் பிரதேசத்தில் தற்போதுள்ள நிலைமையையும், நாம் மேற்கூறியதுபோல் நூற்பவர்கள் சுதந்திரமாக வேலை செய்யத் தொடங்கிவிட்டால் ஏற்படக்கூடிய நிலைமையையும் ஒப்பிட்டுப்பார்ப்போம்.

### தற்போதைய நிலைமை

ஒருராத்தல் நூலின் விலை

| | | | | |
|---|---|---|---|---|
| 12-ம் நம்பர் நூல் ரூ 1 0 0 | விவரம் | | | |
| | கருங்கண்ணிப்பஞ்சின் விலை | 0 | 9 | 6 |
| | நூற்கும் கூலி | 0 | 5 | 0 |
| | மத்தியஸ்தாபனச் செலவுகள் | 0 | 1 | 6 |

### சொந்தப்பருத்தி நூற்றல்

| | | | | |
|---|---|---|---|---|
| 12-ம் நம்பர் நூல் ரூ 0 13 6 | | | | |
| | விதைப்பருத்தியின் விலை | 0 | 7 | 6 |
| | பஞ்சுகொட்டும் கூலியும் நூற்கும் கூலியும் | 0 | 6 | 0 |

நூலில் தரம் உயர்ந்ததா யிருந்தால் கூலி இன்னும் அதிகமாய்க் கிடைக்கும். அத்துடன் $2\frac{1}{2}$ ராத்தல் பருத்தி விதையும் நூற்பவர்களுக்கு லாபம்.

மேலேயுள்ள புள்ளி விவரங்கள் உத்தேசமாகச் சொல்லப்படுவன வல்ல. அவை அநுபவத்தில் தெரியவந்தனவாகும். நூற்பவர்கள் பருத்தி சேர்த்து வைத்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டால் அது ஒன்றினலேயே நூல் விலேயும், துணி விலேயும் பெரிதும் குறைந்துவிடும். இதன்காரண மாக முன்னேவிட நூலும் துணியும் அதிகமாய் விற்கும். நூற்பவர் களின் வருமானமும் அதிகமாகும். அவர்கள் சுதந்திரத்துடன் தங்கள் நன்மைக்கும் தேச நன்மைக்கும் வேலே செய்து தேசிய வாழ்க்கையில் தங்களுக்குரிய உயர்பதவியை யடைவார்கள். இத்தகைய நிலைமையில் கதர் உற்பத்தி செய்வோர், அதை வாங்கி யணிவோர் எல்லாருக்கும் லாபமுண்டு.

## பருத்தியில் சிக்கனம்

பருத்தியைச் சிக்கனமாக உபயோகப்படுத்துவதினலும் பல நன் மைகள் விளையக்கூடும். இதுசம்பந்தமாக மெல்லிய நூலும், நடுத்தர நூலும் உற்பத்தி செய்யும் விஷயத்தைக் கவனமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். நூலின் நயம் அதன் நம்பர் மூலமாகக் குறிப்பிடப்படுகின்றது. ஒரு ராத்தல் நூலில் 840 கஜங்கொண்ட எத்தனை சிட்டங்கள் உண்டோ அத்தனை நம்பர் என்று நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு ராத்தல் 20சிட்டங்கள் கொண்டதாயிருந்தால் அது 20-ம் நம்பர் நூல்; 40 சிட்டங்கள் கொண்ட தாயிருந்தால் 40-ம் நம்பர் நூல். பருத்தி எந்த தரத்தைச் சேர்ந்ததா யிருந்தாலும் நூற்பவர்கள் விருப்பம்போல் நயமாகவோ, தடியாகவோ நூற்றுவிடலாம் என்று எண்ணுவது தவருகும். ஒவ்வொரு வகைப் பருத்தியையும் இவ்வளவு நம்பர் வரையில்தான் நூற்கலாம் என்ற அள வுண்டு. அதற்குமேல் சிறிது நயமாக நூற்ருலும் நூல் உறுதியற்று நெசவுக்குப் பயன்படாமற் போய்விடும். ஆலேகளுக்குப் பொருந்தும் அளவு முறைகள் கைராட்டைக்குப் பொருந்தமாட்டா. ஆலேகளில் நூற்கப்படுவதற்குமுன் பஞ்சு பலவகை மாறுதல்களுக் குள்ளாவதால், அங்கே பத்து அல்லது பன்னிரண்டு நம்பருக்குமேல் நூற்க முடியாத பஞ்சைக்கொண்டு கைராட்டையில் 20 நம்பர் வரைக்கும் நூற்கலாம். இராட்டையில் நூற்பவர்கள் பஞ்சுத் துசும்புகளே மிக ஜாக்கிரதையாகக் கையாளுவதால், ஆலேகளில் முரட்டு நூல் நூற்பதற்கே தகுந்ததென்று கருதப்படும் குட்டைத் துசும்புப் பருத்தி வகைகளேக் கொண்டு இராட்டை யில் மத்திய தரமான நூல் நூற்றுவிடலாம். நீளத் துசும்புள்ள பருத்தியா

யிருந்தால் நூற்பவர்களுக்கு அநுகூலம் இன்னும் அதிகம். நீளத் துசும் புள்ள உயர்தரப்பருத்தியிலிருந்து முரட்டு நூல் நூற்றலும், மெல்லிய நூலுக்கு தகுதியற்ற மட்டரகமான பருத்தியிலிருந்து நயமான நூல் நூற்றலும் தவறே யாகும். இவ்விருவகைத் தவறுகளும் நிகழாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.* நல்ல பருத்தியிலிருந்து முரட்டு நூல் நூற்றல் தண்டனைக்குரிய குற்றம் என்று அர்த்த சாஸ்திர விதி ஒன்று கூறுகிறது. இந்தச் சிறந்த விதியை நாடெங்கும் கதர்த் தொண்டில் ஈடுபட்டிருப்போர் ஞாபகத்தில் பதித்து வைத்துக்கொள்ளுதல் அவசியம்.

## நடுத்தர நூலும் மெல்லிய நூலும்

ஸ்ரீ சதீஷ்சந்திர தாஸ் குப்தா, தாம் எழுதிய "காதி நூல்" என்னும் புத்தகத்தில், பத்தாம் நம்பருக்கு மேற்பட்ட நூல் நூற்கலாமா வென்பது குறித்து ஆராய்ச்சி செய்திருக்கிறார். அவர் கூறுவதாவது:— "எத்தனை நம்பர் நூல் நூற்கவேண்டுமென்பது குறித்துப் பெரிதும் கவனஞ் செலுத்தி ஆலோசிக்கவேண்டும். உயர்ந்த நம்பர் நூல் நூற்பதில் பிரமை அதிகம் உண்டாகி யிருக்கிறது. உயர்ந்த நம்பர் நூல் நாம் நூற்கப் புகுதல் பைத்தியக்காரத்தனமாகவே முடியும். நமது நோக்கம் என்ன? தேசமக்களில் 100க்கு 90 பேரான கிராமவாசிகளைத் தங்களுக்கு வேண்டிய நூலைத் தாங்களே நூற்றுக்கொள்ளும்படி செய்வதே யாகும். உயர்ந்த நம்பர் நூலில் மோகம் கொள்ளுதல் இந்த நோக்கத்துடன் பொருந்தாது. நூலின் நம்பரை 6 லிருந்து 10 க்கும், 10 லிருந்து 20 க்கும் உயர்த்தும்பொருட்டு மெல்லிய நூல் நூற்றுக்காட்டுதல் உதவியாயிருக்கலாம். ஆனல் இவ்விஷயத்தின் வேறு பல அம்சங்களையும் நாம் கவனிக்கவேண்டும். உயர்ந்த நம்பர் நூல் நூற்பதற்குச் சாதாரணமாய்க்

---

* குறிப்பிட்ட பிரதேசத்தில் விளையும் பருத்தியைக் கொண்டே அங்கு எத்தகைய நூல் நூற்கப்படுவது வழக்கம் என்பதைக் கண்டு பிடித்து விடலாம். ஆனல் இப்போதுள்ள நிலைமையில் அதைக் கண்டு பிடிக்க முடியாது. உதாரணமாக புசானன் விசாரணை நடத்திய காலத்தில் கோயமுத்தூர் ஜில்லாவில் பெரும்பாலும் நாடன் பருத்தியே விளைந்து கொண்டிருந்தது. தற்போது அங்கு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காகக் கருங்கண்ணி, கம்போடியா பருத்தி வகைகள் ஏராளமாக விளைகின்றன. குடியானவர்கள் முரட்டு நூல் நூற்பதற்கு நாடன் பருத்தி பெரிதும் ஏற்றது. இப்போது நூற்கும் தொழில் புத்துயிர் பெற்றிருக்கிறபடியால் விரைவில் நாடன் சாகுபடியும் அதிகமாகுமென்று எதிர் பார்க்கலாம்.

கிடைப்பதைக்காட்டிலும் உயர்தரப் பருத்தி தேவை. அதற்குப் பிரயாசை அதிகம். நூல் உற்பத்தி சொற்பமாகவே யிருக்கும். நூலை நெய்வதிலும் கஷ்டம் உண்டு. பணச் செலவு அதிகமாகும். உயர்ந்த நம்பா நூல் நூற்பதில் உள்ள இவ்வளவு பிரதிகூலங்களையும் கவனிக்கவேண்டும்.”
இந்தக் கொள்கையில் ஓரளவு உண்மை யுண்டாயினும் இதை நன்கு ஆராய்தல் அவசியமாகும். ஸ்ரீ தாஸ் குப்தா சொல்வதுபோல் நூல் உற்பத்தி அதிகமாவது ஒன்றே நமது நோக்கமாயிருக்கவேண்டுமோ? அல்லது நூலின் தரம் அபிவிருத்தி யடைவதும் அவசியந்தானோ? இது விரிவான ஆராய்ச்சிக் குரிய விஷயம். நூலின் தரமும் முக்கியமே யென்று ஒப்புக்கொள்ளும் பட்சத்தில், மத்திய தர நூல் நூற்றலும் மெல்லிய நூல் நூற்றலும் நமது இயக்கத்தில் ஓரளவு இடம் பெறுதல் நியாயமாகும்.

நடுத்தர நூலும், மெல்லிய நூலும் நூற்பதில் இயல்பாக ஏற்படக் கூடிய இரண்டொரு இடையூறுகளை நாம் கவனிக்கவேண்டும். முதலாவது, அத்தகைய நூல் நூற்பதற்குப் பருத்தியும் உயர்தரமா யிருக்க வேண்டும். தேசத்தின் சில பகுதிகளில் உயர்தரப் பருத்தி கிடைக்காமற் போகலாமென்பது முதல் இடையூறு. ஆனால் இது விலக்க முடியாத இடையூறன்று. இராட்டை புத்துயிர் பெற்று நாடெங்கும் பரவும்போது அதைப் பின்தொடர்ந்து நல்ல பருத்தி வகைகளும் பயிர் செய்யப்படு மென்று எதிர்பார்த்தல் மிகையாகாது. இதையல்லாமல் வேறு சில குறைபாடுகளும் இருக்கின்றன. இவற்றுள் முக்கியமானது, நூல் நயம் அதிகமாக ஆக நூற்கும் வேகம் குறைந்து விடுகிறதென்பதேயாம். அதாவது ஓர் இராட்டையில் முரட்டு நூல் எவ்வளவு உற்பத்தி செய்யக் கூடுமோ அதைவிடக் குறைவாகவே நயமான நூல் உற்பத்தி செய்ய முடியும். நூல் நயமாக ஆக மொத்தத்தில் துணி உற்பத்தியும் குறைந்து விடுகிறது. இராட்டையில் முரட்டு நூலும், நடுத்தர நூலும், மெல்லிய நூலும் நூற்பதின் பயன்களைப் பின்வரும் ஜாபிதாவில் காணலாம். ஓர் இராட்டை தினம் 8 மணி நேரம் வீதம் 30 நாளில் 240 மணி நேரம் சுழன்றதாக வைத்துக்கொண்டு இந்த ஜாபிதா தயாரிக்கப்பட்டிருக்கிறது.

| நூலின் நம்பர். | நூற்கும் வேகம் மணிக்கு எவ்வளவு கஜம்? | 240 மணி நேரத்தில் மொத்தம் நூல் உற்பத்தி. | நெய்யும் துணியில் பாவு, ஊடை இழைகள் சதுர அங்குலத்திற்கு எவ்வளவு? | துணி உற்பத்தி சதுர கஜம். | பருத்தியின் கிரயம். ராத்தல். | விலை. | ஒரு சிட்டத்திற்கு நூற்கும் கூலி. | மொத்தம் நூற்கும் கூலி. | நெசவுக் கூலி விகிதம். சதுர கஜத்திற்கு. | சதுர கஜம் துணி உற்பத்திக்கு மொத்தச் செலவு (மத்திய ஸ்தாபனத்தின் செலவு சேர்க்காமல்). |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | 7 | 8 | 9 | 10 |
| 8 | 500 | 120,000 | 56 | 58 | $18\frac{3}{4}$ | 9 4 0 | 0 0 $4\frac{1}{2}$ | 3 6 0 | 0 1 6 | 0 5 3 |
| 10 | 500 | 120,000 | 64 | 50 | $15\frac{2}{3}$ | 8 8 0 | 0 0 5 | 3 6 0 | 0 1 6 | 0 5 3 |
| 15 | 450 | 108,000 | 77 | 37 | 9 | 5 10 0 | 0 0 $5\frac{1}{2}$ | 3 10 0 | 0 2 0 | 0 5 3 |
| 20 | 420 | 100,800 | 92 | $28\frac{1}{2}$ | 6 | 4 0 0 | 0 0 6 | 3 12 0 | 0 2 6 | 0 6 0 |
| 25 | 400 | 96,000 | 100 | 25 | 4 4/7 | 3 8 0 | 0 0 $6\frac{1}{2}$ | 3 13 0 | 0 2 9 | 0 6 9 |
| 30 | 375 | 90,000 | 110 | 22 | 3 6/7 | 2 14 0 | 0 0 7 | 3 15 0 | 0 3 0 | 0 7 0 |
| 40 | 350 | 84,000 | 128 | $17\frac{1}{2}$ | $2\frac{1}{2}$ | 1 14 0 | 0 0 8 | 4 2 0 | 0 3 6 | 0 7 9 |
| 50 | 320 | 76,800 | 142 | $14\frac{1}{2}$ | 1 27/35 | 1 8 0 | 0 0 9 | 4 5 0 | 0 4 0 | 0 10 0 |
| 60 | 300 | 72,000 | 154 | $12\frac{1}{2}$ | 1 9/21 | 1 2 0 | 0 0 10 | 4 11 0 | 0 4 0 | 0 11 6 |

மேற்கண்ட ஜாபிதாவில், நூற்பதைத் தொழிலாகக்கொண்டு செய்வோரிடையே சாதாரணமாயுள்ள நூற்கும் வேகம் தரப்பட்டிருக்கிறது. இப் புள்ளி விவரங்கள் சென்னை அரசாங்கத்தின் நெசவுத்தொழில் நிபுணரான மிஸ்டர் அமல்ஸாத் தந்திருக்கும் விவரங்களுடன் ஏறக்குறையஒத்திருக்கின்றன. கைத்தறி நெசவைப்பற்றி அவர் ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டிருக்கிறார்.* அதில் 30, 40 நம்பர் நூல்களுக்கு அவர் இன்னும் அதிகவேகமே குறிப்பிட்டிருக்கிறார். ஆயினும் இத்தகைய உத்தேச திட்டங்களில் தவறு நிகழாதிருக்கும்பொருட்டு மேற்படி ஜாபிதாவில் சிறிது குறைத்தே போடப்பட்டிருக்கிறது. நூற்கும் கூலியை நூலின் நீளத்தைக்கொண்டு நிர்ணயிக்கும் முறை கையாளப்பட்டிருக்கிறது. தற்போது கதர்வேலை நடக்கும் இடங்களிலெல்லாம் தரப்பட்டுவரும் கூலி விகிதமே எல்லா நம்பர்களுக்கும் போட்டிருக்கிறோம். தமிழ் நாட்டில் நடுத்தரமான நூல் ரூபாய்க்கு 16 முதல் 18 சிட்டங்கள் வரையில் வாங்கப்படுகின்றன. இதன்படி கணக்கிட்டாலும் ஜாபிதாவில் கண்ட கூலிவிகிதமே ஏற்படும். 40-ம் நம்பருக்கு மேற்பட்ட நூல் இப்போது அபூர்வமாயிருப்பதால் விலையும் மிகவும் அதிகமாகத்தான் இருக்கும். ஆனால் இந்நிலைமை நீடித்திருக்கமுடியாது. பொந்தூரிலும் கஞ்சத்திலும் நூற்கப்படும் மெல்லிய நூலின் விஷயம் வேறு. இவ்விடங்களில், டாக்காவில் முற்காலத்தில் செய்ததுபோல் மிகவும் பிரயாசைப்பட்டுப் பஞ்சை சுத்தம் செய்து நன்றாக முறுக்கேற்றி நூற்கிறார்

---

* மிஸ்டர் அமல்ஸாத் இந்தத் துண்டுப்பிரசுரத்தில் இராட்டை இயக்கம் பொருளாதாரத் துறையில் வெற்றிபெறாது என்று நிரூபிக்க முயன்றிருக்கிறார். "கை நூல் சமமாயில்லை; போதிய முறுக்கில்லை; ஆதலின் ஆலை நூலைவிட அது மட்ட மானது. எனவே ஆலை நூலைப்போல் அதை சுலபமாக விற்கமுடியாது" என்பதுதான் இராட்டை இயக்கத்துக்கு அவருடைய முக்கிய ஆட்சேபம். உண்மையில் இது ஓர் ஆட்சேபமேயன்று; நூலின் தரத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டுமென்று எச்சரிக்கை செய்வதேயாகும். எண்பது, தொண்ணூறு வருஷங்களுக்கு முன்னால் நாடெங்கும் கை நூலே பிரபலமாயிருந்தது. எத்தனையோ நூற்றாண்டுகளாகக் கைநூலால் நெய்த துணிகள் உடைநயத்துக்கும், உறுதிப்பாட்டிற்கும் பெயர்பெற்றிருந்தன. வருங்காலத்திலும் இராட்டையில் இவ்வளவு மேல்தரமான நூல் உற்பத்தியாகக் கூடும். மிஸ்டர் அமல்ஸாத்தின் பார்வைக்கு வந்த கை நூல் போதிய முறுக்கின்றி நெசவுக்குத் தகுதியற்றதா யிருந்ததைக்கொண்டு இராட்டைத் தொழிலே பயனற்றதென்று வாதிக்க முற்படுதல் விளையாட்டுத்தனமே யல்லாது வேறில்லை.

கள். பொந்தூர் நூலுக்கு இங்கே குறிப்பிட்டிருப்பதைவிட அதிக கூலி கொடுக்கலாம். ஆனால் தற்போது சொற்பமாகவே உற்பத்தியாகும் அந் நூலுக்குக் கிராக்கி அதிக மிருப்பதால் அதன் விலையும் அதிகமாகி யிருக் கிறதென்பதில் சந்தேகமில்லை.

## உற்பத்தி குறைவும் செலவு மிகுதியும்

மேற்கண்ட ஜாபிதாவைப் பார்த்ததும் முதலில் தெளிவாகத் தெரியவரும் விஷயம் என்ன ? நூல் நயமாக ஆக உற்பத்தி குறைவாகிற தென்பதே. குறிப்பிட்ட நேரத்தில் பத்தாம் நம்பர் நூல் நூற்றால் அதைக்கொண்டு எவ்வளவு துணி உற்பத்தி செய்யக்கூடுமோ அதில் நாலில் ஒரு பங்குதான் 60-ம் நம்பர் நூற்றால் உற்பத்தி செய்ய முடியு மென்று ஏற்படுகிறது. இதைக்கொண்டு முரட்டு நூல் நூற்பதுதான் லாபகரமானதென்று எளிதில் கூறிவிடலாம். ஸ்ரீமான் லக்ஷ்மிதாஸ் புருஷோத்தமர் 1921ஆ செப்டம்பர்மாதத்தில் "எங் இந்தியா" வில் எழுதிய ஒரு கட்டுரையில் மெல்லிய நூல் நூற்கக்கூடாதென்பதற்கு இந்தக் காரணத்தைத்தான் சொல்லியிருக்கிறார். ஆனால் மெல்லிய நூல் நூற்பது சம்பந்தமான மற்றும் இரண்டொரு விஷயங்களைக் கவனித் தால் ஜாபிதாவில் கண்ட அளவு காரியாம்சத்தில் உற்பத்தி குறைவதில்லை யென்பது நன்கு விளங்கும்.

(1) முதலாவதாக, உயர்ந்த நம்பர் நூல் நூற்பதற்கும், அதை நெய் வதற்கும் கூலி அதிகம் கொடுத்தபோதிலும், மொத்தத்தில் துணியின் உற்பத்திச் செலவு மிகுதியாக ஏறிவிடுவதில்லை. அதாவது உற்பத்தி குறைகின்றதாயினும், அதற்கேற்பச் செலவு அதிகமாவதில்லை. இந் நிலைமையில் கதர் வியாபாரி ஒருவர் நயமான துணி உற்பத்தி செய்ய விரும்புவாரா, முரட்டுத் துணி உற்பத்தி செய்ய விரும்புவாரா என்பதைக் கவனிக்கவேண்டும். குறைந்த கூலி கொடுத்து பத்தாம் நம்பர் நூலி னால் 50 கஜம் துணி விரைவாக உற்பத்தி செய்தலைவிட, கூலி அதி கம் கொடுத்து 20-ம் நம்பர் நூலினால் 28½ கஜம் துணி உற்பத்தி செய் யவே அவர் விரும்புதல் இயல்பு. ஏனெனின், முரட்டுத் துணியைவிட நயமான துணியை விற்பது சுலபமாயிருக்கும். விற்பனை அதிகமாகும் போது தம் கீழ் வேலை செய்யும் இராட்டைகளைப் பெருக்கி நூல் உற் பத்தியை அதிகப்படுத்தவும் அவருக்குத் தூண்டுதல் ஏற்படும். ஆகவே முதல் பார்வைக்கு, நடுத்தர நூல் நூற்பதால் துணி உற்பத்தி குறையு மென்று தோன்றினாலும், அனுஷ்டானத்தில் இது அவ்வளவாக ஏற் படாது. மேலும் சில பகுதிகளில் நயமான நூல்தான் உற்பத்தி செய்ய முடியும். தென்னிந்தியாவில் இத்தகைய பிரதேசங்கள் சில இருக்கின் றன. தலைமுறை தலைமுறையாக மெல்லிய நூலும், நடுத்தர நூலுமே

நூற்றுப் பழகியவர்களுக்கு இப்போது முரட்டு நூல் நூற்பதே கஷ்டமாயிருக்கும். அந்த இடங்களில் வழங்கும் இராட்டையின் அமைப்பு, பஞ்சுகொட்டிச் சுத்தம் செய்யும் முறைகள் முதலியவை முரட்டு நூல் உற்பத்திக்குத் தகுதியற்றவையா யிருக்கலாம். இதற்காக, மெல்லிய நூலும், நடுத்தர நூலும் ஏராளமாக உற்பத்தியாகக்கூடிய அப்பிரதேசங்களை அசட்டை செய்தல் சிறிதும் சரியாகாது; தேச நன்மைக்கு விரோதமான காரியமேயாகும்.

## பருத்தி விலையும் முரட்டு நூலும்

(2) கதர் உற்பத்தியில் பருத்தியின் விலை ஒரு முக்கியமான அம்சம். பருத்தி விலை யேறினால் முரட்டுத் துணிகளின் விலை உடனே அதிகமாகிவிடும்; ஆனால் மெல்லிய துணிகளின் விலையில் அவ்வளவு அதிக ஏற்றம் ஏற்படாது. உதாரணமாக, பஞ்சு விலை ராத்தலுக்கு 4 அணா அதிகமாகிறதென்று வைத்துக்கொள்வோம். இதனால், பத்தாம் நம்பர் நூலினால் நெய்த துணியின் விலை கஜத்துக்கு 1 அணா 4 பை அதிகமாகிவிடும். ஆனால் 20 நெம்பர் நூல் துணியும், 40-ம் நம்பர் நூல் துணியும் முறையே கஜத்துக்கு ஒன்பது பை, ஏழு பை வீதந்தான் அதிகப்படும். சொந்தப் பருத்தி சேர்த்து வைத்துக்கொண்டு நூற்பவர்கள் பருத்தி விலை ஏறும் காலங்களில் உயர்ந்த நம்பர் நூல் நூற்பதற்கே முயலுவார்கள். கதர் உற்பத்தி செய்யும் வியாபாரிகளும் முரட்டு நூலைக்காட்டிலும் நடுத்தர அல்லது உயர்தர நூல் வாங்குவதற்கே விரும்புவார்கள்.

## நூற்கும் வேகமும் கூலி கொடுக்கும் முறையும்

(3) கைப்பழக்கத்தினால் நூற்கும் வேகம் அதிகமாகும்போது நடுத்தர நூல் உற்பத்தியும் மிகுதியாகும். அப்போது நூற்பவர்களின் மொத்த வருமானத்தில் குறைவு செய்யாமல் சிட்டத்திற்குக் கொடுக்கும் கூலியைக் குறைத்துவிட இயலும். மத்திய தர நூல் நூற்கும் வேகத்தில் அபிவிருத்தி உண்டு பண்ணமுயலுதல் பெரிதும் அவசியம். இதுசம்பந்தமாக நூற்பவர்களுக்குக் கூலி கொடுக்கும் முறையையும் சிறிது ஆராய்ச்சி செய்யவேண்டும். நூலின் நீளத்தைக்கொண்டு கூலி கொடுப்பதில் பல அநுகூலங்கள் இருக்கின்றன. இம்முறையினால் நூலின் தரம், அளவு இரண்டும் மதிப்பிடப்படுகின்றன. குறைந்த நேரத்தில் உயர்ந்த நம்பர் நூல் நூற்று அதிக கூலி பெறவேண்டுமென்னும் தூண்டுதல் நூற்பவர்களுக்கு அதனால் ஏற்படுகிறது. இம்முறையில் நூற்பவர்கள் வியாபாரிகளை மோசம் செய்வதற்கு இடமேயில்லை. நூலை எடை போட்டு வாங்கினால் தரத்தைப்பற்றிக் கவனிக்க முடியாது. எனவே நூற்பவர்கள் நல்ல நூலையும், மட்டமான நூலையும் கலந்து கொடுத்துவிட முயல்வ

தற்கு அம்முறையில் இடமுண்டு. அதிலும் கதிரில் சுற்றியபடி எடுத்த உருண்டைகளாக நூல் வாங்கும்பட்சத்தில், இன்னும் மோசம் அதிகம். அடியில் சுற்றிய நூலெல்லாம் தடிமனாகவும் மேற்புறத்தில்மட்டும் மெல்லிய நூலாகவும் இருக்கலாம். இத்தகைய மோசம் கண்டுபிடிக்கப்படாமலே இருந்த காரணத்தினால்தான், ஏராளமாகக் கதர் உற்பத்தியாகிக் கொண்டிருந்த ஒரு ஸ்தலத்தில் பெருத்த நஷ்டங்கள் ஏற்பட்டுக் கதர் வேலையையே அங்கு நிறுத்திவிடும்படியான நிலைமை நேர்ந்துவிட்டது. ஆனால் நூலின் நீளத்தைக்கொண்டு கூலி கொடுக்கும் முறை மிகவும் மட்டதரமான நூலுக்கு மட்டும் அவசியமில்லை. நடுத்தர நூலுக்கும், உயர்தர நூலுக்கும்தான் அது பெரிதும் உதவியாயிருக்கும். முரட்டு நூலை நிறை போட்டும், நயமான நூலைச் சிட்டக்கணக்கிலும் விற்பது தேசத்தில் வழக்கமாயிருந்து வருகிறது. பத்தாம் நம்பர், பன்னிரண்டாம் நம்பர் நூல் வகைகளுக்குச் சிட்டம் போடும்படி வற்புறுத்துதல் அநாவசியம். மேலும் நூற்பவர்கள் எடைபோட்டு நூல் விற்பது வழக்கமாயிருந்துவரும் இடங்களில் அந்த முறையை மாற்ற முயலுதல் உசிதமாயிராது.

## மெல்லிய நூல் நூற்றலும் சொந்த முயற்சியும்

(4) நடுத்தர நூலும், உயர்ந்த நம்பர் நூலும் நூற்பதில் அதிகமான லாபம் அடையக் கூடியவர்கள் சொந்த உபயோகத்திற்கு நூற்பவர்களேயாவர். ஒருவன் ஒரு வருஷ முழுவதிலும் 240 மணி நேரம் நூல் நூற்றானாயின் நெசவு அழுத்தமுள்ள மெல்லிய துணி அவனுடைய தேவைக்குப்போதிய அளவு கிடைத்துவிடும். இதற்காக அவனுக்காகும் செலவு மிகவும் சொற்பமாகவே இருக்கும். ஆலைத்துணிகளைவிடக் கதரிலுள்ள பெரிய அநுகூலம் இந்த ஏற்பாட்டில்தான் உண்டாகின்றது. அதாவது ஒருவன் தினந்தோறும் முக்கால் மணி நேரம் வேலை செய்து வருவானாயின் மிகவும் சொற்பமான செலவில் அவனுக்கு வேண்டிய துணிகள் கிடைத்துவிடும். நூற்பதற்குக் கூலி இல்லையென்றால், துணி உற்பத்திக்கு ஆகக்கூடிய செலவு விகிதம் வருமாறு:—

| நூல் நம்பர். | ஒரு சதுர கஜம் துணிக்குச் செலவு. | | |
|---|---|---|---|
| 8 | 0 | 4 | 5 |
| 10 | 0 | 4 | 3 |
| 15 | 0 | 4 | 6 |
| 20 | 0 | 4 | 9 |
| 25 | 0 | 4 | 6 |
| 30 | 0 | 5 | 0 |

| நூல் நம்பர். | ஒரு சதுர கஜம் துணிக்குச் செலவு. |
| --- | --- |
| 40 | 0 5 0 |
| 50 | 0 5 3 |
| 60 | 0 5 6 |

ஆகவே, சொந்த உபயோகத்திற்கு நூற்பவர்களுக்கு எல்லா நம்பர்களுக்கும் ஏறக்குறைய துணி உற்பத்திச் செலவு ஒன்றாகவே யிருக்கின்றது. மிஸ்டர் டாலண்ட்ஸ் என்பவர் பீஹார் ஜனக்கணிதி அறிக்கையில் ஒரு விந்தையான விஷயம் கூறியிருக்கிறார். நூற்றலுக்குக் கூலியே இல்லையென்று வைத்துக்கொண்டாலும் அன்னியத் துணி அல்லது ஆலைத்துணியைவிடக் கதர் கிராக்கியாயிருக்குமென்று அவர் சொல்லுகிறார். இக்கூற்று முற்றிலும் அசம்பாவிதம் என்பது வெளிப்படை. இந்தியாவில் ஐந்துபேருள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் ஓர் இராட்டை தினம் $2\frac{1}{2}$ மணி நேரம் சுழன்றால் துணி விலைக்கு வாங்குவதற்கு அவசியமே இராது. இத்தகைய நோக்கத்துடன் சொந்த உபயோகத்துக்கோ, குடும்ப உபயோகத்துக்கோ நூற்பவர்கள், எந்த நம்பர் நூல் நூற்றால் குறைந்த நேரத்தில் தங்களுக்கு வேண்டிய துணி கிடைக்குமோ அந்த நம்பர் நூற்பதே இயல்பாகும். அவகாசம் அதிகமுள்ள பணக்கார வகுப்பார் பொழுது போக்காக உயர்ந்த நம்பர் நூல் நூற்கலாம். அவ்வளவு அவகாசமில்லாத குடியானவர்கள் முதலியோர் முரட்டு நூல் நூற்றுக் கொள்ளலாம். 1806-ம் ஆண்டில் இந்தியாவில் இதே விதமான நிலைமை தான் இருந்து வந்ததாக டாக்டர் புசானன் சொல்கிறார். ஆனால் அப்போது குடியான வகுப்பாரிலும் பலர் நடுத்தர நூலும், உயர்தர நூலும் ஏராளமாக நூற்று வந்தார்கள். இவை யெல்லாவற்றையும் யோசிக்கையில், இருபதாம் நம்பருக்குக் கொஞ்சம் மேற்பட்ட நூல் தான் தேசத்திற்குப் பொதுவான தரமாகு மென்று நாம் முடிவு செய்யலாம். நாட்டில் உற்பத்தியாகும் கதர் சராசரியில் இந்த நம்பருக்கு வருமானால் லாபகரமாயிருக்கு மென்பதில் சந்தேகமில்லை. இதிலிருந்து, உற்பதியாகும் நூல் முழுதும் இருபதாம் நம்பர் நூலாகத்தான் இருக்க வேண்டுமென்று ஏற்படாது. மொத்த உற்பத்தி சராசரியில் இந்தத் தரத்துக்கு வந்தால் போதுமானது.

## சந்தையில் நூல் விற்பனை

குடிசைக் கைத்தொழில் எதுவும் பொருளாதாரத்துறையில் வெற்றி பெறவேண்டுமானால், அதிக மூலதனம், பெரிய மத்தியஸ்தாபனம் முதலியவைகளின் உதவி கொண்டு அது நடைபெறுதல் கூடாது. ஆங்காங்கு உற்பத்தியாகும் சாமான்கள் கூடியவரை அந்தந்த இடங்களி

லேயே விற்றுப் போய்விடவேண்டும். இந்தப் பொருளாதாரதத்துவம் இராட்டைத் தொழிலுக்கும் பொருந்தும். இத்தகைய நிலைமை ஏற்படுவதற்கு முதற்படி நூற்பவர்கள் தங்களுக்குத் தாங்களே பருத்தி சேகரித்துக்கொள்வதுதான் என்று மேலே கூறினோம். அதன் இரண்டாவது படி, நூற்பவர்களும் நெசவுகாரர்களும் கூடி நேரில் பேரம் நடத்திக்கொள்வதாகும். முற்காலத்தில் இதற்காக வாரந்தோறும் நூல் சந்தைகள் நடந்துவந்தன. அச்சந்தைகளை உயிர்ப்பிக்க முயலவேண்டும். இப்போதுகூடத் தென்னிந்தியாவின் சில பகுதிகளில் நூற்பவர்கள் நூல் விற்கும் வழக்கம் விரைவாகப் பரவிவருகிறது. இயக்கத்தின் ஆரம்பத்திலிருந்த நிலைமையைவிட இது ஒருபடி முன்னேற்ற மென்பதில் சந்தேகமில்லை. ஆனால் நூற்பவர்களும் நெசவுகாரர்களும் சந்தையில் நேருக்கு நேர் சந்தித்து நூல் விற்றல் வாங்கல் செய்யும் நிலைமை ஏற்படுவதற்கு இன்னும் பல படிகள் தாண்டியாகவேண்டும். தேசத்தின் பெரும்பகுதிகளில் கதரே ஜனங்களின் சாதாரண உடையாகும் வரையில் அந்நிலை ஏற்படுதல் கஷ்டந்தான். ஆனால் அத்தகைய நிலைமையின் கீழேயே இடை மனிதர்களுக்குத் தேவையில்லாமலிருக்கும். தற்போது கதர் வியாபாரிகள் உபயோகமான காரியமே செய்துவருகிறார்கள். நூற்பவர்கள், நெசவு காரர்கள், பருத்திவியாபாரிகள், கதர் அணியும் ஜனங்கள் ஆகியவர்களைக் கதர் வியாபாரிகள் தற்போது பிணைத்து நிற்கிறார்கள். ஆனால் நூல் சந்தைகள் ஏற்படக்கூடிய காலம் நெருங்க நெருங்க இவர்கள் தாங்களாகவே மறைந்துவிட வேண்டியதாயிருக்கும். நூற்பவர்களும், நெசவுகாரர்களும் அதிகமாய்ச் சந்தித்துப் பழகுங்கால் நூலின் தரமும் விரைவாக அபிவிருத்தியடையும். அத்தகைய நிலைமையின்கீழ் நெசவுத்தொழிலாளிகள் கதர் இயக்கத்தில் இப்போதைவிட அதிக கவனம் செலுத்துவார்கள்.

## நூல்விலை விகிதம்

நூற்பவர்கள் சொந்தப் பருத்தியைக்கொண்டு நூற்று நூல் விற்கும் இடங்களிலும், நூற்பவர்களே பஞ்சுகொட்டிக்கொண்டு நூற்கும் இடங்களிலும் வழங்கும் நூல் விலை விகிதம், மேற்படி வேலைகளெல்லாம் தனித்தனியாக நடக்கும் இடங்களில் வழங்கும் நூல் விலையைவிடக் குறைவாயிருப்பது அநுபவத்தில் தெரியவந்திருக்கிறது. இதைப் பின்வரும் புள்ளி விவரங்களினால் நன்கறியலாம்:—

| இடம். | நூல் நம்பர். | ராத்தல் விலை. | கூலி கொடுக்கும் முறை. | ஷரா. |
|---|---|---|---|---|
| நாகலாபுரம் (கர்நூல்) | 20 | 1—10—0 | பாவுக்கணக்கு | நூற்பவர்கள் சொந்தப்பருத்தியைக் கொண்டு நூற்றுப் பாவு போட்டு விற்கிறார்கள். |
| திருப்பூர் (கோயமுத்தூர்) | 10—12 | 1—0—0 | நிறை | நூற்பவர்களே பஞ்சு கொட்டிக் கொள்கிறார்கள். |
| அம்ரீலி (குஜராத்) | 6—10 | 1—4—0 | ,, | எல்லாம் தனித்தனி வேலை. |
| கவிகேரி (சித்தூர்) | 8—10 | 1—4—0 | ,, | ஷை |

முதல் இரண்டு ஸ்தலங்களிலும் பஞ்சு கொட்டும் கூலியும் நூற்பவர்களைச் சேர்கின்றது. பிந்தைய இரண்டிடங்களிலும் பஞ்சு கொட்டிகளுக்குத் தனியாகவும், நூற்பவர்களுக்குத் தனியாகவும் கூலிகொடுக்க வேண்டியிருக்கிறது. அவ்விடங்களில் நூல் விலை அதிகமாயிருப்பதின் காரணம் இதுவேயாகும். கூடிய வரையில் நூற்பவர்களைக் கொண்டே எல்லா வேலையும் செய்வித்துத் தனிச் செலவுகள் இல்லாமற் பண்ணுவது நமது நோக்கமாயிருக்கவேண்டும்.

## நூற்றல் தொண்டு

அன்னியத் துணி இறக்குமதியை நிறுத்துவதே நமது இலட்சியமாகும். இதற்காகத் தடை வரி போடும் உரிமை நம் கையில் இல்லை. எனவே, அரசாங்கத் தடை வரிக்குப் பதிலாக நாமே வலியத் தடை ஏற்படுத்திக் கொள்வதே கதர் இயக்கத்தின் கருத்து. எனவே, இயக்கத்தின் ஆரம்பத்தில் அதன் வளர்ச்சிக்குரிய காரியங்களை சிரத்தையுடன் செய்தல் நமது கடமையாகும். தேசத்தில் கதரபிமானத்தைப் பரப்புதல் மட்டும் போதாது. அவ்வியக்கத்துக்கு சகாயத்தொகைகள் நல்கியும், வேறு விதங்களிலும் உதவி செய்யவேண்டும். தற்போது கதரணிவோர் அனைவரும் வேறு துணிகளைவிடச் சிறிது அதிக விலை கொடுத்தே கதர் வாங்குவதால் இயக்கத்துக்கு சகாயத்தொகை அளித்தே வருகிறார்கள்.

அரசாங்கத்தார் விரோத பாவத்தை விட்டு இத்தொழிலைப் பாதுகாக்க முன்வராதிருக்கும் வரையில், தேசமக்களில் உயர் வகுப்பாரும் மத்திய வகுப்பினரும்தான் பரோபகார சிந்தையுடன் அதை ஆதரித்துக் காப்பாற்றி வரவேண்டும். ஆனால் கதர் இயக்கத்தைத் திறப்பட வளர்க்கக் கூடிய தலை சிறந்த உதவி யாது ? ஒவ்வொருவரும் தேசத்தொண்டெனக் கருதித் தாமே நூல் நூற்றல் தான். இதன் மூலம் கதர் உற்பத்தி அதிகமாகிறது ; அதே சமயத்தில் அதன் விலையும் மலிகின்றது. கதர் மலியச் செய்வதற்கு ஒரே ஒரு வழி கதர் உற்பத்தியை அதிகமாக்குவதே யாம். தனிப்பட்ட மனிதர்கள் செய்யும் சிறு முயற்சிகள் மொத்தத்தில் எவ்வளவு மகத்தான பயன்கள் தரக்கூடுமென்பதற்கு நூற்கும் தொண்டு ஒரு சிறந்த உதாரணமாகும். ஒவ்வொருவரும் தத்தமக்கு நூல் நூற்றுக் கொண்டால் எல்லாரும் எல்லாருக்கும் சகாயத்தொகை அளிப்பது போல் ஆகின்றது. இயக்கத்துக்காகப் பெருந்தொகை பணமளிப்பதை விட இது சிறந்த நன்கொடையாகும். ஏனெனில், இம்முறையினால் பெரிய மூல தனம் போட்டு மத்திய ஸ்தாபனங்களை ஏற்படுத்துதல் அவசியமில்லாமற்போகும் ; எவ்வளவோ செலவுகள் மீதியாகும். இம் முறையினால் மொத்தத்தில் கதர் உற்பத்தி அதிகமாவதோடு தேசமெங்கும் அது பரவி நிற்கும். இடையில் தடைப்படாமல் கதர் உற்பத்தி நடந்து கொண்டிருக்கும். தொண்டுக்காக நூற்பவர்கள் மெல்லிய நூல் ஏராள மாக நூற்று விடலாம். அப்போது அத்தகைய நூலின் விலை குறைந்து நியாயமான அளவுக்கு வந்துவிடும்.

## சில்லரை விற்பனைக்கு உதவி

கதர் இயக்கத்துக்கு வேறு வகை உதவிகளும் செய்யக்கூடும். தற்போது அகில இந்திய சர்க்கா சங்கத்தார் சில்லரையாக விற்கப்படும் கதரின் பேரில் வியாபாரிகளுக்குச் சொற்ப உதவித்தொகை அளித்து வருகிறார்கள். வியாபாரிகள் கதரில் அதிக மூலதனம் போடவும் விற் பனையில் ஊக்கம் கொள்ளவும் இத்தகைய உதவி தூண்டுகோலாயிருக்கும். ஆனால் இதனாலேயே கதர் உற்பத்தி மிகுதியும் பெருகிவிடுமென்று எதிர் பார்ப்பதற்கில்லை. சொற்ப மூலதனம் போட்டுத் தொழில் நடத்தும் வியாபாரிகளுக்கு இதனால் சிறிது லாபம் ஏற்படலாம். பெரிய வியாபாரி கள் தங்கள் தொழிலில் ஏற்படக்கூடிய நஷ்டங்களுக்கு இதை ஓரளவு பாதுகாப்பாகக் கருதலாம். கதரின் உற்பத்தி விலையை விட விற்கும் விலை நிரம்ப அதிகமாகி விடாமல் நிர்ணயிக்கப்படுவதற்கும் இது சகாயமாயிருக்க லாம். எனினும் நல்லபயன் ஏற்படவேண்டுமானால் உதவித்தொகை தாராள மாயிருக்கவேண்டும். சந்தைகளில் நூல் விற்பதைப்போல் கதர் விற்கவும் ஏற்பாடுசெய்தல் அவசியம். கிராமச் சந்தைகளில் கதர் கொண்டுபோய்

விற்பதற்காக வியாபாரக் கமிஷனாகவோ வேறு வகையிலோ உதவி அளித்தல் பெரிதும் பயன்தருவதாகும். ஜன நெருக்கமுள்ள பட்டணங்களில் கதர் விற்பனை செய்வது சுலபமாயிருக்கலாம். ஆனால் கதர் இயக்கம் என்றும் பட்டணங்களையே நம்பி யிருக்கமுடியாது. முடிவில் கிராமங்களிலே தான் கதருக்குப் பெரிய சந்தை ஏற்பட்டாகவேண்டும். இதற்கு இடைவிடாத பெருமுயற்சி அவசியமாகும். கிராமங்களில் ஒரு முறை தேசாபிமான உணர்ச்சி உண்டாகிவிட்டால் அது இலேசில் மாறாது. ஆதலின் கிராமத்துக் குடியானவர்கள் தொழிலாளிகளிடையே தேச பக்தியை வளர்ப்பதையே நோக்கமாகக்கொண்டு வேலைசெய்யும் தொண்டர்களுக்குத் தக்க உதவி அளித்தல் வேண்டும். கிராம கதர் விற்பனைத் தொண்டர் வெற்றிபெற வேண்டுமானால் அவர் வியாபாரியா யிருந்தால் மட்டும் போதாது; தேசியப் பிரசாரகராயு மிருத்தல்வேண்டும்.

## நூற்பவர்களுக்கு உதவி

கதர் விற்பனைக்கு உதவியளிப்பதைப்போல் நூற்பவர்களுக்கும், நெசவுகாரர்களுக்கும் நேராகப் பயன்படக்கூடிய வகையில் உதவித் தொகைகள் கொடுக்கலாம். நூற்பவர்களுக்குக் கொடுக்கும் உதவியானது கதர் உற்பத்தியையும் உபயோகத்தையும் அதிகப்படுத்துவதா யிருக்க வேண்டும். நூற்பவர்கள் தாங்கள் நூற்ற நூலில் ஒரு பகுதியைத் தங்கள் உடைகளுக்கே பயன் படுத்திக்கொள்ளும் முறையில் இந்த உதவியளிக்கலாம். உதாரணமாக, தானே பஞ்சு சேகரித்து வைத்துக்கொண்டு நூற்கும் ஒரு ஸ்திரீக்கு அவளுடைய சொந்த உபயோகத்திற்காக 12 சதுர கஜம் துணி இலவசமாகவோ, அல்லது பாதி கூலிக்கோ நெசவு செய்து கொடுக்கலாம். ஏற்கனவே, சொந்தப் பஞ்சு சேகரித்துக்கொண்டு நூல் நூற்று விற்பவர்கள் உள்ள பிரதேசங்களில் இத்தகைய சோதனை நல்ல வெற்றியளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. நூற்பவர்கள் 20 அல்லது 30 ஆயிரம் பேர் இவ்வுதவியை ஏற்றுக்கொள்ள முன்வந்தால், மிகக் குறைந்த நிர்வாகச் செலவில், ஒரு லட்சம் அல்லது ஒன்றரை லட்சம் ரூபாய் பெறுமான கதர் உற்பத்தி செய்து விற்பனையும் செய்தாகிவிடும். இந்த ஏற்பாட்டில் நூற்பவர் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படும் உதவி தலைக்கு 10 அல்லது 12 அணாவுக்குமேல் போகாது. ஆரம்பத்தில் மூலதனம் ரூ 15,000 முதல் ரூ 22,500 வரையில் தான் வேண்டியதா யிருக்கும். நூற்பவர்கள் மனதில் அவர்களுக்கு மற்றவர்கள் செய்யும் உதவியைத் தாங்களும் செய்துகொள்ள வேண்டுமென்னும் எண்ணம் உண்டு பண்ணுதல் அவசியம். தற்போது கதர் இயக்கத்தினால் பிழைத்து வரும் நூற்பவர்களில் பலர் இயக்கத்தின் கருத்தை உணர்ந்துகொள்ளா மலே யிருக்கிறார்கள். இன்னும் அவர்கள் ஆலைத்துணியோ அன்னியத்

துணியோதான் அணிந்து கொள்ளுகிறார்கள். குடும்பத்திற்கு வேண்டிய துணிகளுக்குத் தாங்களே நூற்றுக்கொள்ளும் பழைய வழக்கத்தை அவர்கள் மீண்டும் கைக்கொள்ளுமாறு செய்யவேண்டும். நமது இயக்கத்தில் பெரிதும் பலவீனமான அம்சம் இதுவேயாகும். ஆதலின் இது சம்பந்தமாக விசேஷ கவனம் செலுத்தி இக்குறைபாட்டைப் போக்குதல் அவசியம். முன்போல் நூல் நூற்றல் வீட்டு வேலைகளில் ஒன்றாகிவிட்டால் கதர் எவ்வளவு முரடாயிருந்தாலும் அதன் மீது பற்று உண்டாகிவிடும். ஆதலின் கிராமங்களில் கதர் இயக்கம் வேரூன்றவேண்டுமானால் இயக்கத்தின் அடிப்படையாயுள்ள நூற்பவர்களும், நெசவுகாரர்களும் அதில் சிரத்தை கொள்ளுமாறு செய்யவேண்டும்.

## நெசவுகாரர்களுக்கு உதவி

நூற்பவர்களின் விஷயத்தில் கூறியவை நெசவுகாரர்களுக்கும் பொருந்தும். கைத்தறி நெசவுகாரன் நமது தேசியச் செல்வப் பெருக்கிற்கு முக்கிய காரண புருஷனாக வெகு காலமா யிருந்து வருகிறான். விவசாயத்திற்கு அடுத்தபடியாக நாட்டில் முக்கியமான தொழில் கைத்தறி நெசவேயாகும். கைத்தறி நெசவில் 60 லட்சம் ஜனங்கள் பிழைத்து வருகிறார்கள். மொத்தம் தேசத்திற்கு வேண்டிய துணியில் நாலில் ஒரு பங்கு இன்னமும் கைத்தறிகளே கொடுத்து வருகின்றன. ஆலைகளில் உற்பத்தியாகும் துணியில் முக்கால்பங்கு கைத்தறிகளில் உற்பத்தியாகி வருகின்றது. உதாரணமாக 1923-ம் ஆண்டில் இந்தியாவில் மொத்தம் 430 கோடி கஜம் துணி செலவழிந்தது. அவ்வருஷத்தில் கைத்தறிகள் 110 கோடி கஜம் துணி உற்பத்தி செய்ததாக மதிப்பிடப்பட்டது. இவ்வளவு பெரிய குடிசைத் தொழிலின் முக்கியத்தை நமது படித்த வகுப்பார் இன்னும் நன்றாக அறிந்து கொள்ளவில்லை. இத்தொழிலை இன்னும் நல்ல நிலைக்குக் கொண்டுவந்து அதை இராட்டினத்துடன் சேர்த்துப் பிணைத்து விடுவதிலேதான் இந்தியாவின் கதி மோக்ஷம் இருக்கிறது. கைத்தறியும் கைராட்டினமும் ஒன்றை யொன்று சார்ந்து நிற்பனவாகும். தேசத்தின் சில பகுதிகளில் தறிகாரர்கள் இதை உணர்ந்திருக்கிறார்கள். எனினும் இராட்டை நூல் நெய்வதென்றால் இன்னமும் அவர்கள் தயங்குகிறார்கள். இதன் காரணம் இராட்டை நூலினிடம் அவர்கள் எவ்வகையிலாவது வெறுப்புக் கொண்டிருப்பதன்று. புதிய இயக்கம் எவ்வளவு தூரம் நிலைத்து நிற்குமென்பது குறித்து அவர்களுக்கு உறுதி ஏற்படாததே காரணம். இவ்வியக்கத்தை அவர்கள் இன்னமும் தங்களுக்குச் சம்பந்தமில்லாத தொன்றைப் போலவே கருதுகிறார்கள். இராட்டையின் மூலமாகக் கிராமங்கள் வளம் பெறுவதற்கு உதவி செய்தால் தான் தாங்களும் கிராமத் தொழிலாளிகள் என்ற முறையில்

செழிப்படையலா மென்பதை அவர்கள் இன்னும் உணரவில்லை. தற்போது அவர்கள் இருவகையான அடிமைத் தனத்துக்கு ஆளாகி யிருக்கிறார்கள். ஒரு புறத்தில் அன்னிய தேசத்து முதலாளி அல்லது உள்நாட்டு ஆலை முதலாளிக்கும், மற்றொரு புறத்தில் தங்களுக்கு வட்டிக்குப் பணங்கொடுக்கும் சாவ்காருக்கும் அவர்கள் கட்டுப்பட்டுக் கிடக்கிறார்கள். இராட்டை இயக்கம் பரவுவதன் மூலமாகவே இந்த இருவகையான அடிமைத் தனத்திலிருந்து தாங்கள் விடுதலையடையலா மென்பதை அவர்கள் இன்னமும் அறியவில்லை. தங்கள் வருமானம் குறைவதற் கேதுவான மற்றும் பல விஷயங்களையும் அவர்கள் கவனிக்கவில்லை. நெசவுகாரர்களின் உண்மையான மிச்சம் வருஷந்தோறும் குறைந்து கொண்டே வருகின்றது. நாடெங்கும் தறிகளின் தொகை குறைந்து வருவதொன்றே இதற்குப் போதிய அத்தாட்சியாகும். தறிகாரர்களுக்குச் சொந்த மூலதனம் கிடையாது. ஆதலின் யாராவது முதலாளிகளையே அவர்கள் சார்ந்திருக்க வேண்டி வருகிறது. ஏராளமான மூலதனமும் பிற வசதிகளும் உள்ள அன்னிய ஆலைகளுடனும் உள்நாட்டு ஆலைகளுடனும் அவர்கள் போட்டியிட வேண்டி யிருக்கிறது. முற்காலத்தில் அவர்கள் சுதந்திரமாகத் தொழில் செய்தபோது தங்கள் துணிக்கு உரிய விலை வற்புறுத்தி வாங்கக் கூடியவர்களா யிருந்தார்கள். இப்போது அந்த நிலைமை மாறிவிட்டது. கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் நெசவுகாரர்களுக்குப் பொருளுதவி செய்யலாமென்று சிலர் சொல்கிறார்கள். இது நல்ல யோசனையே யென்றாலும், அதனால் சொற்ப அநுகூலம் ஏற்படலாமேயன்றி அடிப்படையில் நிலைமை சீர்ப்பட்டுவிடாது. நெசவுகாரர்கள் முக்கியமாய் வேண்டுவது என்ன? தங்களுக்கு மேலும் மேலும்வேலை; தங்கள் குடும்பத்தாரும்வேலை செய்வதற்குரிய வசதிகள்; எப்போதும் இடைவிடாது வேலை இருந்து கொண்டிருக்குமென்னும் நம்பிக்கை—இவை தான். இராட்டை இயக்கத்தில் அவர்களுக்கு இந்த அநுகூலங்களெல்லாம் இருக்கின்றன. கிராமத்தில் இராட்டையின் ரீங்காரம் கேட்கத் தொடங்குங்கால் தறிகாரனுக்கு எந்தக் காலத்திலும் வேலைக்குக் குறைவில்லை. நெய்த துணியை விற்பதற்கும் அவன் கஷ்டப்படவேண்டி யிராது. ஏனெனில் பெரும்பாலும் அக்கம்பக்கத்திலுள்ளவர்களே அவன் துணியை வாங்கிக் கொள்வார்கள்.

சென்னை அரசாங்கத்தைச் சேர்ந்த மிஸ்டர் அமல்ஸாத் போன்றவர்கள், நெசவுக்கு முன்னால் செய்யவேண்டிய பாவு போடுதல், கஞ்சி போடுதல், நூல் சுற்றுதல் முதலியவைகளுக்குச் சிறு இயந்திரக் கருவிகளை ஏற்படுத்திக்கொடுக்க யோசனை செய்கிறார்கள். ஆனால் இம்முயற்சியினால் தறிகாரர்கள் உண்மையில் நன்மை யடையமாட்டார்

கள். தற்போது பாவு போடுதல் முதலிய வேலைகளில் தறிகாரனுடைய குடும்பத்தார் அவனுக்கு உதவி செய்கிறார்கள். மேற்படி இயந்திரக் கருவிகளினால் இவர்களுக்கு வேலையில்லாமல் போவதைத் தவிர வேறு பயன் விளையாது. நெசவுகாரனின் உண்மையான வருமானம் ஏற்கனவே மிகவும் குறைந்து விட்டது. முற்காலத்தில் சாயம் போடும் வேலை முழுதும் நெசவுகாரர்களாலேயே செய்யப்பட்டு வந்தது. இப்போது அவர்களுக்கு அந்த வேலை இல்லாமற்போய் விட்டது. நூல் சுற்றுதல், கஞ்சி போடுதல் முதலியவற்றையும் அவர்களிடமிருந்து பறித்துக்கொண்டால் பெரும்பாலோர் மிகுதியும் கஷ்டமடைவார்களென்பதில் சந்தேகமில்லை. இதற்கு மாறாக, இராட்டை உயிர்ப்பிக்கப்படுவதால் அவர்களுக்கு மேலும் மேலும் வேலை இருந்து கொண்டே யிருக்கும். இராட்டையே நெசவுகாரர்களின் கதி மோக்ஷமாகும். அவர்களுடைய வருமானம் இராட்டையினால் நிச்சயம் விருத்தி யடையும். இயந்திரக் கற்களினிடையே அகப்பட்டதுபோல், மேலே ஆலைகளுக்கும் கீழே லேவாதேவிக்காரர்களுக்கும் நடுவில் அவர்கள் இப்போது நசுக்கப்பட்டு வருகிறார்கள். இந் நிலைமையிலிருந்து அவர்கள் தப்பி உய்வார்கள். நெசவுகாரர்கள் மனம் வைத்து முயன்றால் இராட்டையை ஆதாரமாகக்கொண்டு ஒரு பெரிய கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தி விடலாம். நாளடைவில் இராட்டைத் தொழிலை அவர்கள் தங்கள் சொந்தத் தொழிலாகவே செய்து கொள்ளலாம். உதாரணமாக, திருப்பூர் பிரதேசத்தில் ஒவ்வொரு தறிக்கும் சராசரி 25 ரூபாய் வீதம் நெசவுகாரர்கள் கதர் இயக்கத்தில் போட்டிருக்கிறார்கள். இந்த முறையை இன்னும் நன்றாக அபிவிருத்தி செய்தால் நெசவுகாரர்கள், நூற்பவர்கள் இருசாராருக்கும் பெருநன்மை விளையுமென்பதில் சந்தேகமில்லை. இதனால் கிராமங்களில் கதர் உற்பத்தி ஸ்திரமான நிலைமை எய்தும். தறிகாரர்கள் இப்போது செய்வதுபோல் கிராமங்களை விட்டோட முயற்சி செய்ய மாட்டார்கள். இத்தகைய நிலைமை ஏற்படும் வரையில் நெசவுகாரர்களுக்கும் இராட்டை நூலை நெசவுக்கு எடுத்துக் கொள்ளும்படி தூண்டுவதற்காக ஏதேனும் உதவி யளித்துவரலாம். ஒரு தறி இவ்வளவு கஜம் கதர் நெய்தால் அதற்கு ஏதோ ஒரு தொகை நன்கொடை யளிப்பதென்னும் ஏற்பாட்டைச் சில விடங்களில் சோதனையாக நடத்திப் பார்க்கலாம். ஆனால் இராட்டை இயக்கம் வேகமாகப் பரவுவதினாலும், பிரசாரத்தினாலுமே கை நூலை நெய்வதற்கான வசதிகள் ஆங்காங்கு ஏற்பட்டுவிட்டால் மேற்கண்டவாறு நன்கொடையளித்தல் கூடத் தேவையா யிராது.

## போலிக்கதர்

தேசத்தின் சில பகுதிகளில் போலிக்கதரை எப்படி யொழிப்பதென்பது பெரிய பிரச்னையாகிவிட்டது. ஆலைகளும், முரட்டு ஆலைநூல் உபயோகிக்கும் கைத்தறி நெசவுகாரர்களும் போலிக்கதர் உற்பத்தி செய்து வருகிறார்கள். கவனமாகப் பரிசோதித்தால் போலிக் கதரைக் கண்டுபிடித்து விடலாம். ஆனால் இதனால் மட்டும் இம்மோசத்தை அடியோடு தடுத்துவிட முடியாது. அத்தாட்சிப்பத்திரம் கொடுக்கும் முறையும் ஓரளவுதான் பயன் படக்கூடும். கதர் உற்பத்தியாகும் இடத்திலேயே அதைத் தூய்மை செய்வது தான் உண்மையான பாதுகாப்பாகும். நூல் உற்பத்தியில் எவ்வித மோசமும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளாவிடின் இத்தீமையை அடியோடு விலக்க முடியாது. குறிப்பிட்ட பிரதேசத்தில் நெசவுகாரர்களாலோ, வியாபாரிகளாலோ மோசம் நடைபெறுவதாகத் தெரிய வருமானால் அதைத் தடுப்பதற்குப் பின்வரும் விவரங்களைச் சேகரிப்பது மிகவும் அநுகூலமாயிருக்கும் :— (1) அந்தப் பிரதேசத்தில் எவ்வளவு இராட்டைகள் வேலை செய்கின்றன ? அவை எவ்வளவு நூல் உற்பத்தி செய்ய முடியும் ? (2) நூல் வெளியிலிருந்து வருவதுண்டா ? அப்படியானால் எங்கிருந்து வருகிறது ? (3) நெசவுகாரர்களின் வழக்க பழக்கங்கள் ; அவர்களுடைய தொழில் அமைப்பின் நிலைமை. (4) குறிப்பிட்ட பிரதேசத்திலிருந்து வியாபாரிகள் வெளியூர்களுக்குக் கதர் அனுப்புவதுண்டா ? அப்படியானால் எவ்வளவு ? முடிவாகப் பார்த்தால் நெசவுகாரர்களைச் சரியான கட்டுக்குள் கொணர்வது மூலமாகவே ஆலை நூல் கலவாமல் தடுக்க முடியும். ஆனால் இது போன்ற தொல்லை இயக்கத்தின் ஆரம்பத்தில் தாற்காலிகமாக ஏற்படுவதேயாகும். இயக்கம் வலிமை பெற்று வளர்ச்சியடைய யடைய, அது தானே மறைந்து போகும்.

## கண் காட்சிச்சாலைகளும் பயிற்சிக் கூடங்களும்

வெளியிலிருந்து கிடைக்கும் உதவிகளைக் கொண்டே ஓர் இயக்கம் நீண்டகாலம் செழித்துவளர முடியாது. உள்ளிருந்தே பெறும் வலிமையினாலும் போஷணையினாலுமே எந்தத் தொழிலும் நீடித்து நடக்கக்கூடும். இராட்டைத் தொழில் நாடெங்கும் உயிர்ப்பிக்கப் படுவதற்கு அவசியமான பண்டைக்கால நிலைமை எல்லா அம்சங்களிலும் மீண்டும் ஏற்படுதல் அசாத்தியமா யிருக்கலாம். அதன் சில அம்சங்கள் தற்காலத்திற்கு உபயோக மில்லாமலு மிருக்கலாம். வேறு சில அம்சங்களை அபிவிருத்தி செய்தல் அவசியமாதல் கூடும். வேலை முறையைக் கஷ்டமாக்காமல் இராட்டையின் வேகத்தையும், பஞ்சு கொட்டும் வில்லின் சக்தியையும் சிறிதளவே அதிகப்படுத்தக் கூடுமானாலும் அதனால் இயக்கத்துக்கு எவ்வளவோ நன்மை உண்டென்று சொல்லவேண்டியதில்லை.

மேற்படி கருவிகளைப்பற்றியும் அவை வேலை செய்யும் முறையைப் பற்றியும் ஆங்காங்கு ஆராய்ச்சி நடத்தப்படவேண்டும். இது சம்பந்தமாகச் செய்யப்படும் அபிவிருத்திகளைத் தனித்தனியாகப் பார்த்தால் அவை அற்பமாகத் தோன்றலாம். ஆனால் அவற்றினால் விளையும் மொத்த பலன் பெரிதாயிருக்கும். உதாரணமாக, இராட்டையின் கதிரைக் கொஞ்சம் அபிவிருத்தி செய்வதால் நாடெங்குமுள்ள இராட்டைகளின் வேகம் சிறிதளவு அதிகமாகி மணிக்கு 50 கஜம் நூல் அதிகமாய் உற்பத்தியாவதாக வைத்துக்கொள்வோம். அப்படியானால், நாட்டில் மொத்தம் ஒரு லட்சம் இராட்டை தற்போது சுழல்வதாக வைத்துக்கொண்டாலும், நாளொன்றுக்கு 1400 ராத்தல் நூல் அதிகமாய் உற்பத்தியாகும். பஞ்சுகொட்டும் முறையில் சொற்ப அபிவிருத்திகள் செய்வதினாலும் இவ்வளவு நல்ல பயன்கள் அடையலாம். நாட்டிலுள்ள கை வில் ஒவ்வொன்றும் சிறிது அதிகமாய்ப் பஞ்சு கொட்டுமாயின் அதற்கேற்ப நூற்றலும் அதிகமாகும். நூல் நூற்பவர்களே பஞ்சு கொட்டிக்கொள்வது தான் உத்தமம். அதனால் அவர்களுக்குக் கூலி அதிகம் கிடைப்பதுடன் நூலின் தரமும் நன்றாயிருக்கும். ஆதலின் இவ்வழக்கம் இப்போதில்லாத இடங்களிலும் அதைப்பரப்ப முயலவேண்டும். மெல்லிய நூலும் நடுத்தர நூலும் நூற்பதில் பஞ்சுகொட்டுதல் மிக முக்கியமானதாகிறது. எனவே 'கிராமங்களில் வேலைசெய்யும் தொண்டர்கள் பஞ்சு கொட்டுதலில் பயிற்சி பெற்றிருந்தால் எவ்வளவு உபயோகமாயிருக்குமென்று சொல்ல வேண்டுவதில்லை. எல்லா ஜில்லாக்களிலும் உடனே பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துதல் சாத்திய மில்லாம விருக்கலாம். எனினும், ஒவ்வொரு மாகாணத்திலும் இராட்டை வேலை நடக்கும் பிரதேசங்களுக்குப் பயிற்சிபெற்ற தொண்டர்களை அனுப்பி அங்குள்ளோருக்குப் பஞ்சு அரைத்தல், பஞ்சுகொட்டுதல், நூற்றல் இவற்றில் பயிற்சி பெற வசதிகள் அளித்தல் அவசியமாகும். இதற்குரிய முயற்சி உடனே தொடங்கிவிடவேண்டும். இத்துடனே ஒவ்வொரு மாகாணத்திலும் நிரந்தரக் கண்காட்சிச்சாலை (மியூஸியம்) ஒன்று அமைக்கவும் ஏற்பாடு செய்தல் அவசியம். இக்காட்சிச்சாலைகளில் எல்லாவகையான பருத்தி, நூல், துணி இவைகள் வைக்கப்படவேண்டும். இவை சம்பந்தமான பரிசோதனைகள் நடத்துவதற்கு மட்டுமன்றி வியாபாரிகளுக்கும் இத்தகைய கண்காட்சிச்சாலை மிகவும் உபயோகமாயிருக்கும். வருஷந்தோறும் நாம் செய்த தவறுகளையும், அவ்வாறே அபிவிருத்திகளையும் அக்காட்சிச்சாலையின் மூலம் எளிதில் கண்டறிந்து தவறுகளுக்குப் பரிகாரந்தேடலாம். இத்தகைய தொழிற் காட்சிச்சாலைகளைத் தாற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ அமைப்பதினால் பெரும் பயன் விளையுமென்பதில் சந்தேகமில்லை.

## கைராட்டையும் ஆலைத்தொழிலும்

இது காறும் கூறியவை சமீபகாலத்தில் இராட்டைத் தொழிலின் வளர்ச்சியைப் பற்றியனவாகும். இனி, இராட்டைத்தொழிலையும் ஆலைத் தொழிலையும் சற்றே ஒப்பிட்டு ஆராய்வோமானால் தேசம் 'முந்தைய தையே விரும்பி ஏற்கவேண்டியதன் காரணங்கள் யாவை என்பது நன்கு விளங்கும். இவ்விரு தொழில்களும் முற்றும் வெவ்வேறு வகைப் பட்டவை. ஆலைத்தொழில் அதிக மூலதனம் போட்டுச் சொற்ப தொழிலாளரைக்கொண்டு ஏராளமான துணி உற்பத்தி செய்வதை நோக்க மாகக் கொண்டது. இராட்டை இயக்கமோ மூலதனத்தைக் குறைத்து மேலும் மேலும் தொழிலை விஸ்தாரமாகப் பரப்புவதை நோக்கமாகக் கொண்டது. பெரும் பிரதேசத்தில் சம அளவாக மழை பெய்வதை யொத்தது இராட்டை இயக்கம். ஆலைத் தொழிலோ ஒரு நதியின் குறுக்கே அணைபோட்டு ஜலத்தைத் தேக்கி அதில் ஒரு பகுதியை விவசாயத்துக்கு உபயோகப்படுத்துவதை யொக்கும். வெவ்வேறு நோக்கங்கொண்ட இத்தொழில்களின் வளர்ச்சியும் வெவ்வேறு வழியிலேயே நிகழும்; பொருளாதாரத்துறையில் அவற்றின் பயன்களும் மாறுபட்டனவாகும்.

## ஆலைகளின் அபிவிருத்தி

மேற்கண்ட இருவகைத் தொழில்களில் எது தேசநன்மைக் குகந்தது என்பதை நாம் ஆராயப்புகுவதற்கு முன்னால், இந்தியாவில் ஆலைத் தொழிலின் ஆரம்பத்தைப்பற்றியும் வளர்ச்சியைப்பற்றியும் சிறிது கவனித்தல் அவசியம். அப்போதுதான் ஆலைகளினால் தேசத்தின் தேவைகளை எந்த அளவில் பூர்த்திசெய்யமுடியும், அவற்றினால் எவ்வளவு தூரம் நன்மை விளையும் என்று தெரிந்து கொள்ளலாம். முதன் முதலில் 1838-ம் ஆண்டில் கல்கத்தாவில் பருத்தி ஆலை ஏற்பட்டது. எனினும் 1853-ம் வருஷத்தில் பம்பாயில் முதல் ஆலை ஸ்தாபிக்கப்பட்ட பிறகுதான் இந்தியாவில் ஆலைத்தொழில் முக்கியமடைந்த தென்று சொல்லலாம். இந்த முதல் ஆலையில் 5000 கதிர்கள் வேலைசெய்தன. அன்னியத் துணிப் போட்டியினால் அழிந்து வந்த பழைய குடிசைத் தொழிலுக்கு ஆலைகளினால் ஒருவாறு ஈடுசெய்யலாமென்று அக்காலத்தில் கருதப்பட்டது. இந்தப் புதிய தொழிலுக்கு ஆரம்பகாலத்திலேயே ஒரு பெரிய நெருக்கடியுண்டாயிற்று. அப்பொழுது அமெரிக்காவில் நேர்ந்த உள்நாட்டுப் போர் காரணமாகப் பருத்தி விலை அசாத்தியமாக உயர்ந்தது. ஒரு சமயம் 784 ராத்தல் கொண்ட ஒரு பாரம் பருத்தியின்விலை 600 ரூபாய் வரைக்கும் ஏறிற்று. ஆனால் அந்த யுத்தத்திற்குப் பின் பருத்தி விலை மீண்டும் நிலவர மடைந்தபோது ஆலைகள் பெருகலாயின. 1882-ம்

ஆண்டுக்குள் 62 ஆலைகள் ஏற்பட்டுவிட்டன. அவற்றில் 16,54,103 கதிர்களும், 15,116 தறிகளும் இருந்தன. மொத்தம் 53,624 தொழிலாளிகள் வேலை செய்தார்கள். அக்காலத்திலேயே லங்காஷயர் முதலாளிகள் இந்திய ஆலைத் தொழிலுக்கு விரோதமான கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். அதன் பயனாக இந்தியாவில் அன்னியத் துணிக்கு விதிக்கப்பட்டுவந்த இறக்குமதிவரிகளெல்லாம் ரத்து செய்யப்பட்டன. அப்படியும் இந்திய ஆலைகள் செழித்தோங்கிவந்தன. இதற்குள்ளாக அவை வெளிநாடுகளுக்குக்கூட நூலும் துணியும் அனுப்ப ஆரம்பித்து விட்டன. பிந்தைய வருஷங்களில் அபிவிருத்தி இன்னும் துரிதமாக ஏற்பட்டு வந்தது. 1880-ம் ஆண்டிலிருந்து 1924-ம் ஆண்டுவரையில் ஆலைகளின் அபிவிருத்தியைப் பின் வரும் புள்ளி விவரங்களினால் நன்கறியலாம்.:—

| வருஷம். | ஆலைகள். | மூலதனம். | கதிர்கள். | தறிகள். | தொழிலாளர். |
|---|---|---|---|---|---|
| 1883-84 | 74 | 81,677,250 | 1,895,284 | 16251 | 61835 |
| 1893-94 | 138 | 113,300,840 | 3,539,681 | 29392 | 130570 |
| 1903-04 | 206 | 154,878,050 | 5,167,608 | 45281 | 186144 |
| 1913-14 | 264 | 215,023,050 | 6,620,576 | 96668 | 260847 |
| 1923-24 | 333 | சுமார் 40 கோடி | 7,927,938 | 144794 | 343876 |

சென்ற நாற்பது வருஷகாலத்தில் ஆலைத்தொழில் அடைந்திருக்கும் வளர்ச்சியைக்குறித்து விரித்துக்கூற வேண்டியதில்லை. அது எத்தனையோ இடையூறுகளுக்கும் ஆபத்துகளுக்கும் ஈடுகொடுத்து முன்னேற வேண்டியிருந்தது என்று குறிப்பிடுதலே போதுமானது. முக்கியமாக லங்காஷயரின் பொறாமை, அதன்பயனாக ஏற்பட்ட எதிர்வரி, பம்பாயில் கொள்ளை நோய் பரவியபோது சிறிது காலம் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருந்த கிராக்கி, மழையில்லாத வருஷங்களில் பருத்தி கிடைப்பதில் உண்டான கஷ்டம், அடிக்கடி மாறிவந்த நாணயப்பரிவர்த்தனை விகிதங்கள் ஆகிய இவை யெல்லாம் ஆலைத் தொழிலின் வளர்ச்சிக்குப் பாதகமாயிருந்தன. எனினும் ஆலைகள் நிதானமாக அபிவிருத்தியடைந்துவந்தன. 1913-14-ம் வருஷத்தில் 68,27,73,000 ராத்தல் நூலும், 150 கோடி கஜம் துணியும் ஆலைகள் உற்பத்திசெய்தன. பத்து வருஷத்திற்குப் பிறகு 1922-23-ல் 70,58,48,000 ராத்தல் நூலும், 172½ கோடிகஜம் துணியும் உற்பத்தி செய்யப்பட்டன. மகாயுத்தத்தின்போது ஆலைகளுக்கு உற்பத்தியைப் பெருக்க நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. லங்காஷயர் துணி இறக்குமதி அப்போது குறையவே உள் நாட்டு ஆலைத்துணி அதிகம் செலவழிவதற்கு இடமுண்டாயிற்று. ஆனால் இந்த அநுகூலத்தினால் பூரண பயன் அடைய முடியாவண்ணம் ஒரு பிரதி கூலமும் இருந்தது. புதிய ஆலைகள் ஸ்தாபிக்க இயந்திரங்

கள் தருவித்தல் இயலாதாயிற்று. இது எங்ஙனமாயினும் மகாயுத்தம் ஏற்பட்ட பிறகு இந்திய ஆலைகளுக்கு இந்தியாவிலேயே துணி விற்க அதிக வசதி யிருந்த தென்பதில் சந்தேகமில்லை. பத்து வருஷ காலத்தில் ஆலைகளின் துணி உற்பத்தி 100க்கு 40வீதம் பெருகிவிட்டது.

சராசரி வருஷ உற்பத்தி

| | | | |
|---|---|---|---|
| 1913 முதல் 1915 வரை | 1916 முதல் 1918 வரை | 1919 முதல் 1921 வரை | 1922 முதல் 1924 வரை |
| 117 கோடி 20 லட்சம் கஜம் | 154 கோடி 40 லட்சம் கஜம் | 155 கோடி 70 லட்சம் கஜம் | 167 கோடி கஜம் |

இந்தியாவில் செலவழியும் நூலில் 100க்கு ·92 வீதம் இந்திய ஆலைகளிலேயே தற்போது உற்பத்தியாகின்றது. ஆலைகளில் மொத்தம் உற்பத்தியாகும் துணி அன்னிய நாட்டிலிருந்து இறக்குமதியாகும் துணியை விடப் பெறுமானத்தில் குறைந்ததாயினும் அளவில் சிறிது அதிகமாகும். இது மொத்தம் தேசத்தில் உபயோகிக்கப்படும் துணியில் 100க்கு 25 வீதத்துக்கு வருகின்றது. எனினும், கிரேட் பிரிட்டனின் ஆலைத் தொழிலுடன் ஒப்பிட்டால் இந்திய ஆலைகள் மிகச்சொற்பமாகும். 1921-ம் ஆண்டின் இறுதியில் ஆங்கில நாட்டு ஆலைகளில் 10 கோடி கதிர்களும், 790,000 தறிகளும் வேலை செய்தன. அதாவது இந்திய ஆலைகளில் உள்ளதைப்போல் 10 மடங்கு கதிர்களும் 7 மடங்கு தறிகளுமாகும். எனவே, பிரிட்டிஷ் ஆலைத் தொழிலுடன் இந்தியாவின் ஆலைத் தொழிலை ஒப்பிடுவதற்கே இடமில்லை. இருந்தபோதிலும் இத்தொழிலை அபிவிருத்தி செய்தால் கைத்தறி, கைராட்டினங்களை உயிர்ப்பிக்கச் செய்யும் முயற்சியைக் காட்டிலும் நல்ல பயன்கள் விளையுமென்றும், தேசத்தின் செல்வ நிலை விருத்தியடையுமென்றும் கருதுவோர் சிலர் இருக்கிறார்கள். இவர்கள் கொள்கையை நன்காராய்தல் அவசியமாகும். கைராட்டையினாலும், கதர் உற்பத்தியினாலும் தேசத்திற்கு அதிக நன்மை விளையுமா, அல்லது ஆலைகளின் பெருக்கத்தினாலேயே நாடு அதிக நலம் பெறுமாவென்பதைக் கண்டு பிடித்தல் வேண்டும். இவ்வாறு இவ்விருவகைத் தொழில்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது எல்லாத் தொழில் முயற்சிகளுக்கும் அத்தியாவசியமான நாலைந்து அம்சங்கள் ஆராய்தற்குரியன. தொழிலுக்கு மூலதனம் எவ்வளவு தேவை? வளர்ச்சியடைய எத்தனை காலம் ஆகும்? உற்பத்திச் செலவு என்ன ஆகும்? தேசத்திற்கு மொத்தத்தில் ஏற்படக் கூடிய ஆதாயம் எவ்வளவு? கடைசியாக, ஜனங்களின் சமூக வாழ்க்கையில் உண்டாகக் கூடிய பலாபலன்கள் யாவை? இந்த அம்சங்களையெல்லாம் தனித்தனியாகவும் ஒருங்கு சேர்த்தும் சிந்தித்து முடிவு செய்தல் அவசியம்.

## வேண்டும் மூலதனம்

மூதலில் மூலதனத்தையும், தொழில் வளர்ச்சிக்குரிய காலத்தையும் எடுத்துக் கொள்வோம். தற்போது இந்தியாவிலுள்ள ஆலைகளின் மூலதனம் 40 கோடி ரூபாய். இதைக்கொண்டு 70 கோடி ராத்தல் நூல் உற்பத்தி செய்யப்படுகிறது. அதாவது வருஷத்தில் கதிர் ஒன்றுக்குச் சராசரியில் 100 ராத்தல் நூல் உற்பத்தியாகிறது. இங்கே இந்திய ஆலைகள் சராசரியில் எத்தனை நம்பர் நூல் நூற்கின்றன என்பதைக் கவனிக்கவேண்டும். 1922-23ம் வருஷக் கணக்கை எடுத்துக்கொண்டு ஆராய்ந்தால் மொத்தம் உற்பத்தியாகும் நூலில் 100க்கு 13 பங்கு 10-ம் நம்பருக்குக் குறைந்ததென்றும், 100க்கு 56 பங்கு 10லிருந்து 20-ம் நம்பர் வரை உள்ளதென்றும், 28 பங்கு 21 முதல் 30-ம் நம்பர் வரை உள்ளதென்றும், பாக்கி 3 பங்கு நூல் தான் 30-ம் நம்பருக்கு மேற்பட்டதென்றும் தெரியவருகின்றன. எனவே, சராசரியில் 15 முதல் 18-ம் நம்பர் வரை உள்ள நூல் ஆலைகளில் உற்பத்தியாவதாக நாம் வைத்துக் கொள்ளலாம். இராட்டையில் 15-ம் நம்பர் நூல் நூற்றால் ஒரு நாளைக்கு (எட்டு மணி நேரம் வேலை செய்து) ¼ ராத்தல் நூற்கலாமென்பதை ஏற்கனவே அறிந்துள்ளோம். சராசரிக்கு இது வருஷத்தில் 80 ராத்தல் நூல் ஆகிறது. பத்தாம் நம்பர் நூல் நூற்றால் ஒவ்வோர் இராட்டையும் வருஷத்தில் 120 அல்லது 130 ராத்தல் உற்பத்தி செய்யக்கூடும். இங்கு நாம் உயர்ந்த நம்பர் நூலையே எடுத்துக்கொண்டு ஆராய்வோம். அங்ஙனமாயின், தற்போது ஆலைகளில் உற்பத்தியாகும் 70 கோடி ராத்தல் நூல் நூற்பதற்குத் தேசத்தில் 90 லட்சம் இராட்டைகள் முழு நேரம் வேலை செய்தால் போதுமென்று ஏற்படுகிறது. இதற்கு வேண்டிய மூலதனம் எவ்வளவு என்பது இப்போது கேள்வி. இவ்வளவு இராட்டைகளும் புதிதாகவே செய்ய வேண்டுமென்றாலும் ஏற்கனவே ஆலைகளுக்குச் செலவழிந்திருக்கும் தொகையில் பத்தில் ஒரு பங்குக்கு மேல் ஆகாது. ஆனால் இதற்குத் தேவையேயில்லை. தேசமெங்கும் லட்சக்கணக்கான பழைய இராட்டினங்கள் இருக்கின்றன. அவை பெரும்பாலும் குடியானவர்களின் வீடுகளிலேயே இருக்கின்றன. அந்த இராட்டைகளைச் சுழலச் செய்வதற்கு, வெளி நாடுகளிலிருந்து இயந்திரங்கள் தருவிப்பதற்கு வேண்டியதுபோல் பெருந்தொகையான மூலதனம் தேவையில்லை. மேலும் ஆலைகளுக்குப் பருத்தி வந்து சேர்வதற்கும், இன்ஷியூரன்ஸ் முதலியவைகளுக்கும் ஏராளமான செலவாகிறது. கிராமங்களில் வேலை செய்யும் இராட்டைகளுக்கு, தொழில் ஒழுங்காக அமைக்கப் பெற்றுவிட்டால், இத்தகைய செலவு எதுவும் ஆகாது. நூற்பவர்களின் சொந்த வீடுகளிலேயே பஞ்சு கிடைக்கும். அல்லது அந்தந்த கிராமத்தின் வாரச் சந்தையில் பருத்தி வாங்கிக் கொள்ளலாம்.

மகாயுத்தத்திற்கு முன்னால் ஆலைகளில் ஒரு கதிரும் ஒரு தறியும் ஏற்படுத்துவதற்குச் சராசரியில் முறையே ரூ 65ம், ரூ 900மும் ஆகிவந்தன. யுத்தத்திற்குப் பின்னர் இவை முறையே ரூ 100க்கும், ரூ 1100க்கும் ஏறிவிட்டன. அதாவது இராட்டை ஒன்றுக்கு வேண்டியதைப்போல் 25 மடங்கு மூலதனம் ஓர் ஆலைக்கதிர் அமைப்பதற்குத் தேவை! இரண்டிலும் நூல் உற்பத்தி யறக்குறைய ஒன்றுதான். ஆலைக் கதிரை இன்னும் அதிக வேலை செய்யப் பண்ணலாமென்பது உண்மையே. முக்கியமாக உயர்ந்த நம்பர் நூல் நூற்பதில் ஆலைக் கதிருடன் கைராட்டை போட்டியிட முடியாது. உதாரணமாக, இருபதாம் நம்பர் நூல் இராட்டையைப் போல் இரண்டு மடங்கு ஆலைக்கதிரில் உற்பத்தி செய்யலாம். எனினும் இரண்டுக்கும் ஆகும் செலவில் மலையும் மடுவும் போன்ற வேற்றுமை இருப்பது வெளிப்படை. ஆலையில் ஒரு கதிர் அதிகமாக்குவதற்கு வேண்டிய பணத்தைக் கொண்டு கிராமங்களில் இருபது, இருபத்தைந்து இராட்டைகள் வரையில் சுழலச் செய்து விடலாம். ஆலைக்கதிருக்குச் சொன்னவை ஆலைத் தறிக்கும் பொருந்தும். ஆலைத்தறி ஒன்று சராசரி வருஷத்தில் 12,000 கஜம் துணி உற்பத்தி செய்கிறது. கைத்தறியில் 1200 கஜந்தான் உற்பத்தியாகும். ஆனால் கைத்தறியின் விலை ரூ 20 தான். ஆலைத்தறிக்கோ ரூ 1100 செலவாகும். ஆகவே ஒரே அளவு மூலதனம் போட்டுத் தொழில் நடத்தினால் ஆலைக் கதிரைப்போல் கைராட்டை 24 மடங்கும், ஆலைத் தறியைப்போல் கைத்தறி $4\frac{1}{2}$ மடங்கும் பலன் கொடுக்குமென்று தெரியவருகிறது.

## ஆலைத்தொழிலின் வருங்காலம்

கிடைக்கும் பலன்கள் எப்படியிருந்தாலும், ஆலைத் தொழிலைத்தான் எளிதில் வளர்ச்சியுறச் செய்யமுடியுமென்றும், ஆகையினால் அதிலேயே கவனம் செலுத்தவேண்டுமென்றும் சிலர் சொல்லலாம். ஆலைத் தொழில் இது காறும் வளர்ந்து வந்திருப்பது உண்மையே. ஆனால் இனி மேலும் அது வளர்வதற்கு எவ்வளவுதூரம் இடமுண்டு என்பது நன்கு சிந்திப்பதற்குரியதாகும். சென்ற சில வருஷங்களில் ஆலைகள் ஏற்றுமதி வியாபாரத்தை இழந்துவிட்டன. எனினும், இந்தியாவில் அன்னியத்துணிகளை அடியோடு ஒழித்து உள்நாட்டு வியாபாரம் முழுவதையும் ஆலைகள் கைப்பற்றிக்கொள்ள உத்தேசித்தால், அவை வளர்ச்சி பெறுவதற்கு நிரம்ப இடமுண்டென்று சொல்லலாம். ஆனால் இது சாத்தியமா என்பது கேள்வி. அன்னியத்துணிக்கும், இந்திய ஆலைத்துணிக்கும் விலையிலுள்ள வித்தியாசம் ஆலைகளின் வளர்ச்சிக்குப் பாதகம் செய்யவில்லை யென்று வைத்துக்கொள்வோம். பரதேசித் துணியை அடியோடு விலக்கவேண்டுமானால் தற்போது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி

யாகும் 150 கோடி கஜம் துணியும் 5 கோடி 80 லட்சம் ராத்தல் நூலும் இந்திய ஆலைகளில் அதிகமாக உற்பத்தி செய்யப்படவேண்டும். நூல் உற்பத்தி இவ்வளவு அதிகரிப்பதற்கு ஆலைக்கதிரின் வேகம் விருத்தி யடைந்து வருஷத்தில் 120 அல்லது 150 ராத்தல் நூல் நூற்பதாக வைத்துக்கொண்டாலும் முப்பது அல்லது நாற்பது லட்சம் கதிர்கள் அதிகமாகவேண்டும். ஆலைத்தறிகளும் இரட்டிப்பு மடங்கு ஆகவேண் டும். சமீப காலத்தில் இவை நடந்தேறக்கூடிய காரியங்களா? சென்ற பத்து வருஷங்களின் அநுபவத்தை உத்தேசிக்கையில் இது பெரிதும் சந்தேகத்துக்கிடமென்றே காண்கின்றது. 1913-ம் வருஷத்திலிருந்து பத்து வருஷகாலத்தில் ஆலைகளின் அபிவிருத்தியையும் அதற்குமுந் தைய காலத்தில் அவற்றின் வளர்ச்சியையும் சற்று ஒப்பிட்டுப் பார்ப் போம்.

| வருஷம். | ஆலைகள். | கதிர்கள். | தறிகள். |
|---|---|---|---|
| 1888-89 | 109 | 2463642 | 22156 |
| 1898-99 | 174 | 45463342 | 37228 |
| 1909-10 | 245 | 6142551 | 80171 |
| 1913-14 | 264 | 6620576 | 96668 |
| 1914-15 | 255 | 6598108 | 103311 |
| 1915-16 | 267 | 6675688 | 108417 |
| 1916-17 | 267 | 6670162 | 110812 |
| 1917-18 | 269 | 6614269 | 114805 |
| 1918-19 | 264 | 6590918 | 116094 |
| 1919-20 | 263 | 6714265 | 117558 |
| 1920-21 | 255 | 6752474 | 117953 |
| 1921-22 | 271 | 6814223 | 128314 |
| 1922-23 | 289 | 7245119 | 137238 |

ஆரம்பகாலத்தில் அபிவிருத்தி அதிக துரிதமாயிருந்திருக்கிறதென் பதை மேற்கண்ட புள்ளிவிவரங்களிலிருந்து அறிகிறோம். 1913-ம் வருஷத்திற்குப்பிறகு அபிவிருத்தி விகிதம் மிகவும் குறைவாகிவிட்டது. கதிர்களின் தொகை அநேகமாய் ஒரு மாதிரியாகவே இருந்து 1922 ல் தான் 4 லட்சம் அதிகமாகி யிருக்கிறது. யுத்தத்தின்போது புதிய இயந்திரங்கள் தருவிப்பதில் ஏற்பட்ட கஷ்டம் இதற்கு ஓரளவு காரண மாயிருக்கலாம். ஆனால் அந்தத் தடை இன்னும் அடியோடு நீங்கிய பாடில்லை. இயந்திரங்களின் விலை மிகவும் அதிகமாகிவிட்டபடியால் புதிய கதிர்களும், தறிகளும் ஏற்படுத்துவதற்கு ஏராளமான பணம் தேவை. நாணயப்பரிவர்த்தனை விகிதம் நமக்குப் பிரதிகூலமாயிருக்கிறது. வேறு

பல கஷ்டங்களும் உண்டு. வருங்காலத்தில் ஆலைத்தொழில் செழித்தோங்குமென்று தோன்றவில்லை. சென்ற சில வருஷங்களில் ஆலைகளின் ஆக்கம் பெரிதும் குன்றிவிட்டது. நல்ல லாபம் கிடைத்த செழிப்பான காலம் மாறி நஷ்ட முறுங்காலம் ஆரம்பமாகி விட்டதென்றே தோன்றுகிறது. 1922-ம் வருஷத்தில் ஆலைகளுக்கு அதற்கு முந்தைய வருஷத்தில் கிடைத்த லாபத்தில் பாதிதான் கிடைத்தது. 1924-ம் வருஷத்தில் பல ஆலைகளுக்கு நஷ்டம் ஏற்பட்டது. ஆலைத்தொழிலில் இப்போதேற்பட்டிருக்கும் சுணக்கம் நீங்கி முன்போல் ஆக்கம் பெறுவதற்குப் பல வருஷங்கள் ஆகலாம். இந்த நிலைமையில் வருங்காலத்தில் 1913-23 ல் ஏற்பட்ட அபிவிருத்தியைக் காட்டிலும் அதிக துரிதமான அபிவிருத்தி ஏற்படுமென்று எதிர்பார்ப்பதற் கில்லை. மேற்படி பத்து வருஷ காலத்தில் 40,000 தறிகளும் 6 லட்சம் கதிர்களும் அதிகமாகி யிருக்கின்றன. வருங்காலத்தில் இதே அளவு அபிவிருத்தி ஏற்படுமென்று வைத்துக்கொண்டாலும் ஆலைகளில் 30 லட்சம் கதிர்கள் அதிகமாவதற்குக் குறைந்தது 40 வருஷங்கள் ஆகும். துணி உற்பத்தி வருஷத்தில் 5 கோடிகஜம் வீதம் அதிகரித்து வந்திருக்கிறது. இதே அளவு அபிவிருத்தி இடையறாது ஏற்பட்டுவந்தாலும் 150 கோடி கஜம் துணி அதிகமாய் உற்பத்தியாவதற்கு இன்னும் குறைந்தது 30 வருஷங்கள் ஆகும். * மேலும் உற்பத்தியை அதிகமாக்கிக்கொண்டே வந்தால் மேற்கூறிய 30, 40 வருஷங்களிலாவது பரதேசித் துணி இறக்குமதியைத் தடுத்துவிடலாமென்று எதிர் பார்ப்பது தவறாகும். இது அவ்வளவு சுலபமான விஷயமன்று. ஆலைகளின் வளர்ச்சிக்கு அரசியல் துறையிலும், பொருளாதாரத்துறையிலும் எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன. இயந்திரங்களுக்கும், அவற்றை இயக்கும் வேலைக்காரர்களுக்கும் இந்திய ஆலைகள் அயல் நாட்டையே நம்பி யிருப்பவை. அவற்றின் வளர்ச்சிக்கு இது ஒரு பெருந்தடையாகும். உயர்ந்த நம்பர் நூலும் துணியும் உற்பத்தி செய்வதென்றால் பஞ்சுக்குங்கூட நமது ஆலைகள் பிறநாடுகளை எதிர்பார்க்க வேண்டிவரும். முதல்தரமான

---

* ஆலைகளில் இன்னும் 15 கோடி ரூபாய் மூலதனம் போட்டால் தற்போது இறக்குமதியாகும் துணியை உற்பத்தி செய்துவிடலாமென்று ஸ்ரீமான் கே. டி. ஷா மதிப்பிடுகிறார். இந்த மதிப்பு எப்படி ஏற்பட்டதென்பதற்கு அவர் ஆதாரம் ஒன்றுமே தரவில்லை. இது மிகவும் குறைந்த மதிப்பாகும். உண்மையில், இயந்திரங்களின் தற்போதைய விலையின்படி 40 லட்சம் கதிர்களும் 80,000 தறிகளும் இந்திய ஆலைகளில் அதிகமாக வேண்டுமானால் அவருடைய மதிப்புக்கு இரண்டு மடங்குக்குமேல் மூலதனம் வேண்டும்.

இயந்திரங்களும், திறமையான நிர்வாகமும் கிடைப்பதாக வைத்துக் கொண்டாலும் அன்னியத் துணி இறக்குமதியை அடியோடு நிறுத்தி விடும் வண்ணம் இந்திய ஆலைகள் வளர்ச்சி பெறுதல் இயலாத காரியம்.

## உற்பத்திச் செலவு

**து**ணி உற்பத்தியின் இரண்டு முக்கிய அம்சங்களைக் குறித்து மேலே கவனித்தோம். அதாவது ஆலைத் தொழிலுக்கு மூலதனம் எவ்வளவு வேண்டும், அதன் வளர்ச்சிக்கு எத்தனை காலம் ஆகும் என்று ஆராய்ந்தோம். இனி உற்பத்திச் செலவு, மொத்தத்தில் தேசத்துக்கு விளையும் லாபம் என்னும் மற்ற இரண்டு அம்சங்களைப்பற்றிக் கவனிப்போம். இவ்விரண்டு அம்சங்களையும் குறித்து ஒருங்கே விசாரித்தால் தான் உண்மை நிலை விளங்கும். உற்பத்திச் செலவைப்பற்றிக் கணக்குப் பார்ப்பதற்கு முன்னால் பொதுவான இரண்டொரு விஷயங்களை ஞாபகப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். முதலாவது, எந்த ஆலைத் தொழிலாயிருந்தாலும் அதனுடைய முக்கியமான நோக்கம் உற்பத்தியை மேலும் மேலும் துரிதமாகச் செய்து செலவைக் குறைப்பதாகவே இருக்க வேண்டும். உயர்தர இயந்திரங்களை ஏற்படுத்தி, எவ்வளவு குறைவான தொழிலாளர்களைக்கொண்டு அதிகமான பொருளுற்பத்தி செய்யலாமென்பதிலேயே ஆலை முதலாளியின் கருத்துப் பதிந்திருக்கும். ஆனால் குடிசைக் கைத்தொழில்களின் விஷயம் இவ்வாறன்று. இங்கு முக்கியமான நோக்கம் செலவைக் குறைப்பதல்ல; கூடுமானவரையில் செலவே இல்லாமற் செய்து விடுவதாகும். குடிசைத் தொழில்களில் சில சமயம் பொருள் உற்பத்தி செய்பவனே அதை உபயோகிப்பவனுமாவான். உதாரணமாக, ஒருவன் தன் சொந்த உபயோகத்திற்கோ, தன் குடும்ப உபயோகத்திற்கோ நூல் நூற்கும்போது துணி உற்பத்திச் செலவில் ஒரு பகுதி இல்லாமலே போகிறது. அதாவது நூல் நூற்பதற்குச் செலவே கிடையாது; நெசவுக் கூலியும் பருத்தியின் விலையும் சேர்ந்தே துணியின் கிரயமாகின்றது. சொந்தமாய் நூற்பவர்களுக்கு, எந்த நம்பர் நூலாயிருந்தாலும், துணியின் கிரயம் ஒன்றேதான் என்பதை நாம் முன்னமே கவனித்திருக்கிறோம். இந்திய ஆலைகளாகட்டும், அன்னிய ஆலைகளாகட்டும், இவ்வளவு மலிவாக ஒரு நாளும் துணி கொடுக்க முடியாதல்லவா? ஆனால் இது செலவைக் குறைக்கும் முறையன்று; செலவை அடியோடு நீக்குவது. இயந்திரங்களை அதிகமாக்கி மனிதர்களுக்குத் தொழில் இல்லாமல் பண்ணுவதன்று; மனிதர்கள் வீண்போக்கும் பொழுதைக் குடும்ப நலத்துக்குப் பயன்படுத்துவதாகும். இதுதான் கைராட்டையின் மேன்மை. அது தேசத்திலுள்ள உற்பத்தி சக்தி முழு

வதையும் பயன்படுத்தி, நாட்டு மக்களுக்குத் துணி உற்பத்திச் செலவில் ஒரு பகுதி இல்லாமலே செய்துவிடுகின்றது.

தற்போது கதர் விலையைவிட ஆலைத் துணியின்விலை குறைவாயிருக்கிற தென்பதில் சந்தேகமில்லை. கதர் இயக்கம் மிகவும் அபிவிருத்தியடைந்திருக்கு மிடங்களிலும் தற்போது 36 அங்குலம் அகலமுள்ள சாதா கதர்த் துணிக்கு உற்பத்திச் செலவு 6 அணா 6 பை ஆகின்றது. இவ்வாறே 45" அகலத்துக்கு 8 அணா 9 பையும், 50" அகலத்துக்கு 10 அணாவும், 54" அகலத்துக்கு 10 அணா 9 பையும் உற்பத்திச் செலவாகின்றது. அதே நம்பர், அதே நயமுள்ள துணிகளை ஆலைகளில் இதற்குப் பாதிச் செலவில் கூடச் செய்துவிடலாம். நூல் விலையில் உள்ள தாரதம்மியங்களைக் கவனித்தால் நிலைமை நன்கு விளங்கும்.

| நூல் நம்பர் | கை நூலின் விலை | ஆலை நூலின் விலை |
|---|---|---|
| 10 முதல் 12 வரை | 13 அணா முதல் 14 அணா வரை* | 8 அணா முதல் 10 அணா வரை |
| 20 | ரூ. 1—8 | ஒரு ரூபாய்க்கும் குறைவு |
| 30 | ரூ. 1—14 | ரூ. 1—2 க்கும் குறைவு |

நூற்றல் கூலியிலும் இத்தகைய வித்தியாசத்தைக் காணலாம். ஆலைகளில் நிர்வாகச் செலவு, முதலுக்கு வட்டி ஆகிய எல்லாச் செலவுகளும் உள்பட 10 அல்லது 12-ம் நம்பர் நூற்பதற்குச் சராசரி ராத்தலுக்கு 3 அணா கூலியாகிறது. அதே நம்பர் கை நூலுக்கு நிர்வாகச் செலவுகளைச் சேர்க்காமல் கூலிமட்டும் 4 அணா முதல் $4\frac{1}{2}$ அணா வரையில் கொடுக்கப் படுகிறது. நெசவுக் கூலியிலும் இந்த வித்தியாசம் உண்டு. ஆலைகளில் ராத்தலுக்கு 4 அணாத்தான் நெசவுச் செலவு ஆகின்றது. கைத்தறியில் கதர் நெய்பவர்களுக்கோ ராத்தலுக்கு 6 அணாவுக்குமேல்கூடக் கூலி கொடுக்கப்படுகிறது. ஆனால் இவற்றிலிருந்து கதரின் விலையைக் குறைத்தல் அசாத்தியமென்பதாக முடிவு செய்து விடக்கூடாது. நூற்றல் [illegible] ங்கு செய்வதினாலும், நெசவுத் தொழில்களுக்குக் கூலிவிகிதங்களை ஒரு[illegible] செய்வதினாலும், நூற்பவர்களைத் தாங்களே பருத்தி சேகரித்துக் கொள்ளச்[illegible] அபிவிருத்திகள் இயற்றுவதினாலும், மொத்தத்தில் கதர் உற்பத்தி அதிகமானதாலும் நிரந்தரமான சிக்கனங்கள் ஏற்பட்டுக் கதர் விலை பெரிதும் குறைவதற்கு இடமிருக்கிறது. சென்ற இரண்டு வருஷங்களில் கூட இவ் விஷயத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. 1922-ல் 36"

* ஆலைகளில் உபயோகிக்கப்படும் பஞ்சைவிட இராட்டையில் நல்ல பஞ்சைக்கொண்டு நூற்கப்படுகிறது.

கதரின் விலை கஜம் 11 அணாவாயிருந்தது. இது இப்போது 7 அணாவுக்குக் குறைந்திருக்கிறது. இவ்வாறே 45" அகலக் கதர் 12 அணாவிலிருந்து 9 அணாவுக்கும், 50" கதர் 14 அணாவிலிருந்து 10 அணாவுக்கும், 54" கதர் ஒரு ரூபாயிலிருந்து 11 அணாவுக்கும் விலையில் குறைந்து விட்டன. பருத்தி விலைக் குறைவும் இதற்கு ஓரளவு காரணமாகும். இன்னமும் உற்பத்திச் செலவு நாளுக்குநாள் குறையக்கூடுமென்று காணப்படுகின்றது. ஆனால் இதுமட்டுமன்று. விலை விகிதங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதில் துணியின் உறுதிப்பாட்டையும் கவனிக்கவேண்டும். கதர் இயக்கம் இன்னும் ஆரம்ப தசையிலேயே இருந்து வருகிறது. எனவே தற்போது உற்பத்தியாகும் கதர்த் துணிகளின் உறுதிப்பாட்டைக் குறித்துத் திட்டமாக ஒன்றும் சொல்வதற்கில்லை. எனினும் சிறிது யோசித்துப் பார்த்தால் கைவில்லினால் கொட்டிக் கையினால் நூற்றநூல் ஆலை நூலைக்காட்டிலும் உறுதியுடையதாகவே இருக்கவேண்டுமென்பது தெளிவாக விளங்கும். இந்தூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த ஒரு நிபுணர் "இராட்டை நூல்" என்னும் பெயருடன் ஒரு துண்டு பிரசுரம் வெளியிட்டிருக்கிறார். அதில் அவர் ஆலையில் நூற்கும் முறைகளையும் கையினால் நூற்கும் முறைகளையும் மிக நுட்பமாக ஆராய்ந்து தக்க ஆதாரங்களுடன் இராட்டை நூல் ஆலை நூலைவிட எல்லாவகையிலும் சிறந்தது என்று முடிவுகட்டியிருக்கிறார். முற்காலத்தில் இந்தியாவில் உற்பத்தியான கதர் அன்னியத் துணியைவிட மேம்பட்டதாயிருந்தது என்பது பிரசித்தியான விஷயம். இந்தியாவுக்கு வந்த அயல்நாட்டுப் பிரயாணிகள் ஒவ்வொருவரும் இந்தியத் துணியின் விலை மலிவைப்பற்றியும், உறுதிப்பாட்டைப் பற்றியும் எழுதிவைத்திருக்கிறார்கள். 1866-ம் ஆண்டில்கூட மிஸ்டர் போர்ப்ஸ் வாட்ஸன் என்பவர் சுதேசிக் கைநூலினாலான துணியின் மேன்மையை ஒப்புக்கொண்டிருக்கிறார். இனி வரும் காலத்திலும், கதர் இயக்கம் நிலையான அஸ்திவாரத்தின்மீது அமைக்கப்பட்டுச் சிறந்தோங்கும்போது அது மேற்கூறிய புகழுரைகளுக்கெல்லாம் உரியதாய் விளங்கு மென்பதில் சந்தேகமில்லை.

## தேசீய ஆதாயம்

கதர் உற்பத்திச் செலவையும் ஆலைத் துணி உற்பத்திச் செலவையும் மேலே ஒப்பிட்டுப் பார்த்தோம். ஆனால் இவற்றைக்கொண்டுமட்டும் அவற்றின் மேன்மை தாழ்வை நிர்ணயித்து விடுதல் முற்றுந் தவறாக முடியும். அத்தொழில்களினால் மொத்தத்தில் தேசத்துக் கேற்படும் ஆதாயத்தையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஒரு தொழிலினால் ஒரு வழியில் கிடைக்கும் லாபம் மற்றும் நூறு வழிகளில் தேசத்துக்கு நஷ்டமாகிக் கொண்டிருக்கலாம். அங்ஙனமாயின் தேசத்தின் மொத்த ஆதாயம் பெரி

தும் குறைந்துவிடுமல்லவா? ஆலைத் தொழில் விஷயத்தில் இப்படித் தான் நிகழ்ந்து வருகிறது. அத்தொழிலினால் பலவழியிலும் வெளி நாடுகளுக்குப் பணம் போய்க்கொண்டிருக்கிறது. இராட்டை, கைத் தறிகளைக்கொண்டு துணி உற்பத்தி செய்யும்பட்சத்தில் இந்தத் தேசீய நஷ்டம் ஏற்படாமல் தடுத்துவிடலாம். ஆலைத்தொழிலில் அநாவசியமான செலவினங்கள் எவ்வளவு ஆகின்றனவென்பதையும், அவற்றில் எவ்வளவு பகுதியை இராட்டைத் தொழிலினால் தடுத்துவிடக் கூடுமென்பதையும் கீழே காண்க :—

| | இனம். | செலவு. | இராட்டையில் 100க்கு எவ்வளவு மீதமாகும்? |
|---|---|---|---|
| 1. | ஆலை நூலுக்கும் துணிகளுக்கும் போக்குவரவு செலவுகள், இன்ஷியூரன்ஸ், தரகுக் கூலி | $3\frac{1}{2}$ கோடி ரூபாய் | 50% |
| 2. | 20 லட்சம் கட்டுப் பஞ்சை ஆலைகளுக்கு கொண்டு போகும் செலவு, இன்ஷியூரன்ஸ், தரகு உள்பட | $4\frac{1}{2}$ கோடி ரூபாய் | 50% |
| 3. | இயந்திர சாமான்களும் கருவிகளும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி | 50 லட்சம் ரூபாய் (1919 முதல் 22 வரை நாலு வருஷத்தின் சராசரி.) | 100% |
| 4. | எதிர் வரி (இப்போது ரத்து செய்யப்பட்டது) | 210 லட்சம் ரூபாய் | 100% |
| 5. | வருமான வரி, அதிக வருமான வரி | 50 லட்சம் ரூபாய் | 100% |
| 6. | ஸ்தல ஸ்தாபன வரிகள் | 12 லட்சம் ரூபாய் | 75% |
| 7. | நகர சபை வரிகளும், தண்ணீர்த்தீர்வையும் | 15 லட்சம் ரூபாய் | 100% |
| 8. | இயந்திரங்களின் பெறுமானக் குறைவு | 70 லட்சம் ரூபாய் | 100% |

மேற்கூறிய செலவினங்களில் 1, 2, 3, 5, 8 இனங்கள் உண்மையிலேயே தேசத்திற்குப் பெரும் நஷ்டமாகும். இவையன்றி வருஷந் தோறும் புதிய ஆலைகள் அமைப்பதற்காக ஏராளமான தொகை போய்க்

கொண்டிருக்கிறது. இந்த இனத்தில் நான்கு வருஷங்களின் கணக்கு வருமாறு:—

| 1919-20 | 1920-21 | 1921-22 | 1922-23 |
|---|---|---|---|
| 2,78,53,260 | 6,45,05,810 | 12,06,33,056 | 67,08,030 |

இயந்திரக் கருவிகளுக்கும், அவற்றை அமைத்து ஓட்டும் தொழிலாளிகளுக்கும் நமது ஆலைகள் அன்னிய நாட்டையே நம்பியிருப்பதால் அவ்வப்போது அவற்றை அபிவிருத்தி செய்வதற்கும், புதுப்பிப்பதற்கும் ஏராளமான பணம் போடவேண்டி யிருக்கிறது. ஒரு விஷயத்தை முக்கியமாகக் கவனிக்கவேண்டும். இங்கிலாந்தில் ஓர் ஆலை ஏற்படுத்தி வேலை தொடங்குவதற்கு எவ்வளவு பணம் வேண்டுமோ அதைப்போல் சரியாக இரண்டு மடங்கு இந்தியாவில் வேண்டியிருக்கின்றது. இதன்றியும், ஆலைகள் வருங்காலத்தில் எவ்வளவுக்கு அபிவிருத்தியடைகின்றனவோ, அவ்வளவுக்கு நாம் நிரந்தரமாய் அயல்நாடுகளைச் சார்ந்து வாழ்வோராகி விடுவோம். எதிர் வரி இல்லாமற்போயினும், ஆலைத் துணிகளின்மூலம் தேசத்தார் ஒரு கோடி ரூபாய் வரி செலுத்தவேண்டி யிருக்கிறது. சாமான் போக்கு வரவு, இன்ஷியூரன்ஸ், கா[illegible] இனங்களில் எழு, எட்[illegible] [illegible]பங்கு செலவாகிவருகிறது. இராட்[illegible] [illegible]தொழில் பரவினால் இதில் பெரும்பகுதி மீதமாகிவிடும். விளம்பரம் முதலிய வேறு பல செலவுகளும் இராட்டைத் தொழிலில் ஏற்படுவதற்கிடமில்லை. மொத்த தேசீய ஆதாயத்தை வேறொருவிதமாகவும் ஆராய்ச்சி செய்து பார்க்கலாம். ஆலைகளில் துணி உற்பத்திக்காகும் செலவை இனம் இனமாக ஆராய்ந்தால் அதில் எவ்வளவு பகுதி இராட்டையின்மூலம் மீதமாகும் என்பது தெரியவரும். ஆமதாபாத்திலுள்ள ஐந்து ஆலைகளுக்குச் செலவினங்கள் வருமாறு:—

| செலவினம். | குஜராத் நூல் ஆலை. | பாரத்கண்ட் பருத்தி ஆலை. | மனியூ சந்த் ஆலை. | புதிய பருத்தி ஆலை. | ராஜநகர் ஆலை. | சராசரி. |
|---|---|---|---|---|---|---|
| 1. கூலி | 15.9 | 17.6 | 16.5 | 14.8 | 21.2 | 17 % |
| 2. சாமான் | 18.3 | 8.8 | 9.7 | 11.4 | 11.2 | 12 % |
| 3. விறகு கரி | 3.6 | 4.1 | 3.4 | 3.1 | 3.6 | 3.5% |
| 4. வட்டி | 1.2 | 2.9 | 2.6 | 3.4 | —— | 2.5% |
| 5. கமிஷன் | 1.3 | 2.9 | 4.3 | 4.0 | —— | 2.5% |
| 6. வரி | 9.9 | 5.9 | 7.1 | 3.1 | 4.2 | 5.5% |
| 7. பருத்தி | 44.2 | 50.0 | 48.0 | 53.5 | 6.40 | 53 % |
| 8. பெறுமானக் குறைவு | 5.1 | 2.9 | 2.3 | 2.8 | —— | 3% |

ஆலைகளில் துணி உற்பத்திக்காகும் செலவில் 100-க்கு 15 பங்கு விறகு, இன்ஷியூரன்ஸ், தரகு, வரி, பெறுமானக்குறைவு முதலிய இனங்களுக்கு ஆகின்றது. கைத்தொழிலினால் துணி உற்பத்தி செய்வதில் நூற்றலுக்கும் நெசவுக்கும் அதிக கூலி கொடுக்கவேண்டியிருந்தபோதிலும் மேற்கண்ட அனாவசியமான செலவுகள் எல்லாம் ஏற்படாததலின் அவை தேசிய ஆதாயமாகின்றன. இந்தவழியில் ஆராயும்போது ஆலைகளைக்காட்டிலும் கைராட்டையும் கைத்தறியுமே தேசத்துக்கு லாபகரமானவை என்பது தெள்ளிதின் விளங்கும்.

## பொதுஜன நலம்

பொருளாதார ஆராய்ச்சி இத்துடன் நிற்க. கைத்தொழில்களின் உயர்வு தாழ்வுகளைப்பற்றிச் சிந்திக்குங்கால் கவனிக்கவேண்டிய மற்றோர் அம்சம் பாக்கி யுண்டு. இது மேற்கூறியவை யெல்லாவற்றினும் முக்கியமுடையதாகும். குறிப்பிட்ட தொழிலினால் பொதுவாக ஜனசமூகம் க்ஷேமமடைகின்றதா, ஜனங்களின் வாழ்க்கையில் சந்தோஷம் அதிகமாகின்றதா என்பதே அந்த முக்கியமான அம்சம். ஆலைகள் ஜனசமூகத்தில் மிகச் சிறு [illegible] வேலை கொடுக்க முடியுமென்று சொல்லவேண்டியதில்லை. தற்போது இந்[illegible] ஆலைகளெல்லா வற்றிலும் வேலைசெய்யும் தொழிலாளரின் தொகை 4 லட்சம் [illegible] மேலில்லை. தரகர்கள், சில்லரைக் கடைக்காரர்கள் முதலிய எல்லாரையும் சேர்த்தாலும், ஆலைத் தொழிலினால் பிழைப்பவர்கள் பத்து லட்சம் பேருக்குமேல் நிச்சயமாய் இருக்கமாட்டார்கள். கைத்தறியினால் இப்போதுகூட எவ்வளவுபேர் பிழைக்கிறார்களென்பதையும், இராட்டை இயக்கம் பரவினால் அது எவ்வளவுபேருக்கு ஜீவனோபாயமாகவும், துணைத் தொழிலாகவும் ஆகக்கூடு மென்பதையும் சிந்தித்துப் பார்த்தால் ஆலைகளினால் பிழைப்போரின் தொகை எவ்வளவு சொற்பம் என்பது நன்கு விளங்கும். ஆலைகள் இப்போதுள்ளதைப்போல் இருமடங்கானால்தான் என்ன பயன்? நாட்டிலுள்ள கோடானுகோடி ஏழைமக்களில் எத்தனைபேருக்கு அவற்றினால் பிழைப்பு அளிக்க முடியும்? உண்மையில் ஆலைத்தொழில் எவ்வளவுக்கு விருத்தியாகின்றதோ, எவ்வளவுக்குப் புதிய உயர்தர இயந்திரங்களும் கருவிகளும் ஏற்படுகின்றனவோ அவ்வளவுக்கு ஜனங்களின் பிழைப்புக் கெடுமே யல்லாது வேறில்லை. பார[illegible] நாட்டுக்குத் தற்போது வேண்டுவது என்ன? ஒரு சிலரின் [illegible] ஏராளமான பணஞ் சேர்ந்தால் போதுமா? தொகை எவ்வ[illegible] மாயினும் அது கோடிக்கணக்கான ஜனங்களுக்குப் பகிர்[illegible] படவேண்டியதே முக்கியமானது. வேலை யில்லா[illegible] மான ஜனங்களுக்கு வேலை வேண்டும். தேச[illegible]

ஏழைக் குடியானவர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கை நிலைமைக்கொத்த துணைத்தொழில் ஒன்று வேண்டும். இந்த நோக்கங்களை ஆலைகளின் மூலம் நிறைவேற்றி வைக்க முடியாது. எவ்வளவுதான் திறமையுடன் அவை வேலைசெய்தாலும், தாங்கள் உற்பத்தி செய்யும் செல்வத்தை நாட்டில் தர்ம நியாயமாகப் பகிர்ந்து கொடுக்க அவற்றினால் ஆகாது. துணி உற்பத்தித் தொழிலைத் தேசமெங்கும் பரப்பி லட்சக் கணக்கான ஏழைகளின் ஜீவாதாரமாகச் செய்வதற்குப் பதிலாக ஆலைகள் ஓரிடத்தில் ஏராளமாக உற்பத்தி செய்து ஒரு சிலருக்குப் பெரும் லாபம் தருவதோடு நின்றுவிடுகின்றன. இதற்குமாறாக இராட்டைத்தொழிலை உயிர்ப்பிப்பதால் விளையும் நன்மைகளைக் கவனிப்போம். இராட்டை பெருந்திரளான ஏழை மக்களைக் கொடிய வறுமையிலிருந்து காப்பாற்றும்; வேலை கிடைக்காத காரணத்தினால் சோம்பிக் காலங் கழிப்பவர்களுக்கு அது வேலை யளிக்கும்; எத்தனையோ நூற்றாண்டுகளாகத் தலைமுறை தலைமுறையாய் வந்த கைத்திறமை அழியாமல் பாதுகாத்து அதைப் பொருளுற்பத்திக்குப் பயன்படுத்தும்; கோடிக் கணக்கான ஜனங்கள் தங்கள் உடல் நலத்துக்காவது, சன்மார்க்க வாழ்வுக்காவது பாதகம் செய்யாத வேலை பெறுவார்கள். ஆலைகள் பெருக்க நகரங்களில் தொழிலாளர்கள் வசிக்கும் இடங்[illegible]வு பயங்கரமான நிலைமையிலிருக்[illegible]வனபது அனைவரும் அறிந்ததே. இவ்விடங்களில் வசிப்போர் தங்கள் உடல் நலத்துக்கும், ஒழுக்க நெறிக்கும் கேடு விளையாமல் தப்புதல் மிகவும் அருமை. கிராமக் கைத்தொழிலாளிகள் இத்தகைய பயங்கரங்களை அறியவே மாட்டார்கள். ஆலைத் தொழிலாளிகள் இயந்திரங்களுக்கு அடிமைகளாய்த் தாங்களும் இயந்திரங்களைப் போலவே வேலை செய்ய வேண்டியவர்களா யிருக்கின்றனர். தொழிற்சாலையின் பயங்கரமான சத்தமும், உழைப்பும், பிற தொல்லைகளும் சேர்ந்து நாளடைவில் தொழிலாளியின் உடல் சுகத்தை அடியோடு கெடுத்து அவனை நடைபிணமாகச் செய்துவிடுகின்றன. சமூக ஊழியத்தின்மூலம் ஆலைத் தொழிலாளிகளின் துன்பங்களை ஓரளவு போக்கலாமென்பது உண்மையே. நல்ல காற்றோட்டமுள்ள குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தும் மதுபானம் முதலிய தீயவழக்கங்களிலிருந்து விடுவித்தும் அவர்களுக்கு உதவிபுரியலாம். ஆனால் இத்துறையில் எவ்வளவுதான் செய்தாலும் [illegible]லை வேலையினால் அவர்கள் அடையும் கேடுகளை அறவே விலக்க [illegible]து. கிராமத் தொழிலாளிகளின் வாசஸ்தலம் ஆலைத் தொழிலாளி[illegible]டத்தைவிட எவ்வளவோ மேன்மை பொருந்தியதாகும். [illegible]தேக சுகமும் அவ்வாறே. கிராமத்திலுள்ள கைத்தொழி[illegible]ரகப் பெற்றாலும் அவன் திருப்தியுடன் வாழ்க்கை

ற வந்திருக்க

சுயநலமும் குறுகிய நோ

ஏற்பட்டதற்குக் காரணம். அயர்லாந்தின்

றற முயற்சியை ஆரம்பத்திலேயே அழித்துப் போட்
அவர்களே. இந்தியாவின் காலிகோ துணித்தொழிலை நசுக்கிக் கொ
வர்களும் அவர்கள்தான். இங்கிலாந்தின் ஜனங்கள் தங்களுக்கு வேண்
டிய சாமான் ஒவ்வொன்றையும் தனி உரிமைபெற்ற மேற்படி தொழிற்
சாலை முதலாளிகள் குறிப்பிட்ட விலைக்கே வாங்கவேண்டியதா யிருந்
தது." அமெரிக்காவின் சுதந்திர மகா யுத்தத்தின்போது அந்நாட்டார்
ஏறக்குறைய இதே விதமான முறையைக் கையாண்டார்கள். இதைக்
குறித்தும் சரித்திராசிரியர் லெக்கி மிகத் தெளிவாக விவரித்திருக்கிறார்:—
"முக்கியமான பட்டணங்களைச் சேர்ந்த வியாபாரிகள் இனிமேல் இங்கி
திலிருந்து எவ்வித சரக்கும் தருவிப்பதில்லை யென்றும், ஏற்கனவே
ருந்த ஆர்டர்களையும் ரத்து செய்து விடுவதென்றும் உடன்
கொண்டார்கள். ஸ்டாம்புச் சட்டம் ரத்துசெய்யப்படும்
ன் பாக்கிகளையும் இங்கிலாந்துக்கு அனு
ளித்தார்கள். இங்கிலாந்தின்